பிரமலை

சீர்திருத்தன்

1930

Y59 211PM m211,
N22 PR.
N309.
212723

JL
75924.P m211; N22.PR
N30. 9.9

செப்பனிடுபவர் பெயர் K. ...
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் செப்டம்
செப்பனிட்டு முடித்த நாள் 1996
சரிபார்க்கும் மு. பா. கையொப்பம்
ஆராய்ச்சி உதவியாளர் கையொப்பம்

150

REG. NO.—M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்

OF THE
15 MAR 1930

"கதை போல் ஒரு வருஷத்தைக் கழித்துப் போட்டோம்."

Vol. IX.] ஜனுவரி 1930 [இலக்கம் 9

## பஞ்சாங்கம்.

1930 | சுக்கில வருஷம் மார்கழிமீ 18 — ஜனுவரிமீ — சுக்கில வருஷம் தைமீ 18 | 1930

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 / 18 | 2 / 19 | 3 / 20 | 4 / 21 |
| 5 / 22 | 6 / 23 | 7 / 24 | 8 / 25 | 9 / 26 | 10 / 27 | 11 / * 28 |
| 12 / 29 | 13 / 30 | 14 / ○ தைமீ 1 | 15 / 2 | 16 / 3 | 17 / 4 | 18 / 5 |
| 19 / 6 | 20 / 7 | 21 / 8 | 22 / 9 | 23 / 10 | 24 / 11 | 25 / 12 |
| 26 / 13 | 27 / 14 | 28 / 15 | 29 / ● 16 | 30 / 17 | 31 / 18 | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager.*

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## கதையும் பாட்டும் இரண்டாவது மூன்ருவது வகுப்புக்கு வேண்டிய திட்டம்.

பூர்வகாலத்தில் நம்முடைய முன்னோர்கள் எழுதி வைத்து சென்றிருக்கிற நூல்களை சற்று உற்று நோக்குங்கால் அவைகளை முத்தமிழில் இயற்றியிருக்கின்றனர். அதாவது இயல் இசை நாடகம் என மூன்றுவகை. இவைகளில் நாடகத்தமிழில் எழுதப்பட்ட நூல்கள் அதிகம். இதனுல் நமது முன்னோர்கள் பாட்டுபாட கதையை விளக்குவதில் மிக அவா உள்ளவர்களென்று நமக்குத்தெரிகிறது. ஆகையால் இந்துக்கள் தங்கள் தெய்வங்களையும் புராணங்களையும் வெளிப்படுத்தும்போதும் நாடக ரூபமாக கற்பிக்கிருர்கள். (உம்.) மகாபாரதம், ராமாயணம் முதலியவைகள். ஆனுல் தற்போது நமது நாட்டில் நாடகத்தமிழ் நாளுக்குநாள் குன்றி வருகிறதுபோல் தெரிகிறது. எப்படியென்ருல் பலாப் பழத்தை நம்பி பிள்ளையை இழந்தவன்போல் ஆங்கிலத்தை நம்பி ஆங்கிலத்தில் பேசி பாடி தமிழ்பாட்டின்மேலிருந்த அவாவானது நாளுக்குநாள் குன்றிவருகிறதுபோல் தெரிகிறது. பிள்ளையை இழந்தமாதிரியாக நாம் எல்லாரும் ஒரு காலத்தில் போனுலும் போவோம்.

நம் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பாட்டுப்பாட கதைசொல்ல தெரியவேண்டும். இவையிரண்டும் தெரியாது இருப்பவர் உலகத்தில் மானிடர்களாக இருக்கிருேம் என்று சொல்லமுடியாது. ஆதியிலே ஆண்டவர் ஆதாமுக்கு ஆற்றுதலுக்கும் தேற்றுதலுக்கும் உண்டாக்கின பெண்களின் கூட்டத்தார்தான் நன்ருய் பாட்டுபடிக்கதெரியவேண்டும். ஆனுல் அது அப்படியிருக்க நம் நாட்டிலோ பெண்கள் கல்வி மற்ற தேசங்களைக்காட்டிலும் அதிக குறைவாக இருக்கிறது. ஆனுல் இவ்விஷயத்தில் நம்மைசூழ்ந்த பெண்கள் தேறியிருக்கிருர்கள். ஆகையால் நாம் பெண்கள் கல்வியை நம் நாட்டில் பெருப்பிக்க வேண்டும். நம் நாட்டின் தாய்மார்களெல்லாரும் கல்வி செல்விகளாக இருந்தால் அவர்களுடைய குழந்தைகள் சிறுவயதிலே பள்ளிக்குப் போகவேண்டியதில்லை. அப்படியே போனுலும் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இலகுவாயிருக்கும். சிறு வயதிலே பாட்டுப்பாட பழக்குவார்கள். அவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களைப் புகட்டுவார்கள்.

பிராமணரல்லாத பெண்களைக்காட்டிலும் பிராமண பெண்கள், ஆண்கள் பாட்டுப்பாடுவதை பிரீதியாக கொண்டாடுகிருர்கள். முக்கியமாக பிராமணப்பெண்கள் தங்கள் இல்லங்களில் இருக்கும்போது சங்கீதங்களைப் பாடியும், சங்கீதக்கருவிகளை வாசித்தும், சந்தோஷமாக இருக்கிருர்கள்.

சங்கீதம், கதை நமக்கு ஆத்ம சிநேகமென்று சொல்ல வேண்டும். எப்படியென்ருல், ஒருவன் இனிமையான குரலோடு பாட்டுப்பாடுவதனுல் அவனை சிநேகஞ்செய்ய, உபசரிக்க, மரியாதைசெய்ய, முகமலர்ச்சியுடன் பேசி, உறவாடத்தொடங்குகிருர்கள். பூர்வகாலத்தில் அநேக பெரிய மகான்கள் பாட்டுப்பாடும் வரத்தினுல் அவர்கள் ஏழையானுலும் பாட்டுப்பாடி பணஞ்சேகரித்து அதைக்கொண்டு கல்வியில் தேறியிருக்கிருர்கள். பெரியவர்களாக விளங்கியுமிருக்கிருர்கள். ஒருவனுக்கு வியாதிவந்தகாலத்தில் அவன் படுக்கையண்டை உட்கார்ந்து பாட்டுபாடும்போது அவனுடைய சுகவீனங்கள் தோனுது. சந்தோஷத்துடன் காலங்கழிக்கிருன். கதை சொன்னுலும் தன் நோவை நோக்காது கதையில் கண்ணுங்கருத்துமாயிருக்கிருன்.

கிராமங்களில் விவசாயிகளில் சிலர் சில சமயத்தில் சில விஷ ஜெந்துக்களால் கடிபட்டு வருந்தும்போது மயக்கத்திற்கு இடங்கொடாது இருக்க அவனுக்கு பஞ்சபாண்டவர் வனவாசம் முதலிய கதைகளை பாட்டாகப்பாடி விழித்திருக்கச்செய்கிருர்கள்.

சங்கீதசத்தம் சங்கீதக்கருவிகளின் சத்தம் தொனிக்கும்போது ஆடு, மாடு, பாம்பு முதலிய பிராணிகள் தங்கள் செவிகளைசாய்த்து கேட்கிறது. சிலவற்றை கேட்டு வருகிற பகுத்தறிவு இல்லாத மிருகங்களுக்கு இவ்வளவு ஆசை ஆதரிசமிருந்தால், பகுத்தறிவு உள்ளவர்களாகிய நமக்கு கதை பாட்டுகள் எவ்வளவு எவ்வளவு அத்தியாவசியமென்பதையும் நம்மை நாமே யூகித்துக்கொள்ள வேண்டியது. நம் அனைவர்மேலும் விழுந்தகடமையாக இருக்கிறது. முக்கியமாக சிறு பிள்ளைகளை கதை பாட்டுகளைக்கொண்டு அழுகையிலிருந்து நிறுத்தமுடியுமென்று நம்புகிறேன். தொட்டியிலுள்ள பிள்ளைகளை என்னுடைய அனுபோகத்திலும் அறிந்திருக்கிறேன். பெரிய கவிவாணவர்களும் தங்கள் அனுபவத்தில் கூறியிருக்கிருர்கள். அத்துடன் ஒருவன் பாடத்தெரியாமலும் பாடுவதைக்கேட்க பிரியம் இல்லாமலுமிருந்தால் அவன் துரோகி. அவனுல் ஒரு நன்மையும் உண்டாகாது என்று கூறியுள்ளார்.

சிறுவர் பள்ளிக்கு கல்வி பயிலும்படி போகிறபோது முதலாவது வகுப்பில் சேருகிருர்கள். இச்சமயத்தில் அவர்களுக்கு அதிகம் எழுதவாசிக்கத்தெரியாது. ஆனுல் கதைகள் மூலமாகவும், அபிநயப்பாட்டுக்களின் மூலமாவது கல்வி கற்பித்தால் அவர்கள் கல்வி அறிவிலும், சங்கீதத்திலும் தேர்ந்து பின்காலத்தில் மற்றவர்களுக்கு பிரயோஜனமுள்ளவர்களாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

இவர்களுக்கு இச்சிறுபிராயத்தில் கதையும் பாட்டும் எப்படி போதிப்பது என்று என் சொற்ப அறிவுக்கு தோன்றியவாறு உரைக்கிறேன். கற்பிக்கும் ஆசிரியர்களைப்பற்றிய குறிப்பு :— 1. முதலாம், 2-ம், 3-ம் படிகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் பாடும் வரமுடையவர்களாக இருக்கவேண்டும். 2. குறைந்தது ஹையர் ஹெட் பரீட்சையில் தேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். 3. சாந்தமும், பிள்ளைகளுடன் எப்போதும் முகமலர்ச்சியுடன் பேசக்கூடியவர்களாயிருக்கவேண்டும். 4. பிள்ளைகளை வளர்த்த தாய்மார்களைப்போல குணமுடையவர்களாயிருக்கவேண்டும் 5. பிள்ளைகளைப்பற்றிய அனுபோகமுள்ளவர்களாக இருக்கவேண்டும். 6. தான் பள்ளியில் படிக்கும்போது நடந்த காரியங்களை நினைக்கக்கூடியவர்களாயிருக்கவேண்டும். 7. கற்பிக்கும் காலமாத்திரமல்ல, மற்ற நேரங்களிலும் அவர்களைக்காணும்போது சந்தோஷத்துடனே பேசவேண்டும். 8. அவர்களுடன் பழகி ஒவ்வொரு பிள்ளைகளின் மனதையறிய வேண்டும்.



1. கற்பிக்கும் முறையில் பாடம் கற்பிக்கபோகுமுன் அதற்குவேண்டிய உபகாரணங்களுடன் சேகரித்து தகுந்த ஆயுதத்தோடு போகவேண்டும்.

2. 25 அல்லது 30 நிமிஷத்திற்குமேல் ஒருபாடத்தில் இருக்கக்கூடாது. உபகாரணத்தினுல் பிள்ளைகளின் மனதை கவரவும் பாடம் சித்திபெறவும் கூடும்?

3. அத்துடன் கற்பிக்கும் உபாத்தியாயரோ, உபாத்தினியோ தகுந்த அபிநயத்துடன் நடித்துக்காட்டவேண்டும், எக்கதை கற்பிக்கப்படுகிறதோ அக்கதைக்குறிய அபிநயபாட்டுகள் இருந்தால் கற்பிக்கும் ஆசிரியர் பாட்டைப் பாடி பிள்ளைகளுக்கு முன்பாக அபிநயத்துடன் நடித்துக்காட்டச் செய்யலாம். அபிநயம் கொஞ்சம் கொஞ்சமாக கற்பித்து கடைசியில் மொத்தமாக சேர்த்து பாடச்செய்யவேண்டும்.

முதலாம் இரண்டாம் வகுப்புகளுக்கு கணக்கு கையெழுத்து தவிர மற்ற பாடங்கள், கதை, பாட்டு, விளையாட்டுகளின் மூலமாக கற்பிக்கலாம். முதலாம் வகுப்புக்கு ஒரு பாடத்திற்கு சுமார் 25 நிமிஷத்திற்குமேலிருக்கக்கூடாது. இருப்பதினுல் அவ்வளவு சிலாக்கியம் ஆகாது. விளையாட்டு கதை, பாட்டு அதிகமாக இருக்கவேண்டும். இப்படியே கற்பிப்பதே உசிதமாகும். இப்படிசெய்வதினுல் பிள்ளைகளுடைய மூளையும் ஞாபகசக்தியும் எளிதில் நன்கு வளர்க்க இப்பாடம் ஓர் சிறந்த உதவியாகும்.

கீழ்காட்டிய கதைகளில் ஒரு வருஷத்திற்கு முதல் வகுப்பிற்கு சுமார் 8 கதையும், 5 சிறுபாட்டுகளும் கற்பிக்கவேண்டும் இரண்டாம் வகுப்பிற்கு வருஷத்தில் சுமார் 15 கதையும், 10 பாட்டும் கற்பித்துக்கொடுக்க வேண்டும். மூன்ரும் வகுப்பிற்கு வருஷத்தில் சுமார் 20 கதையும், 15 அபிநய பாட்டுகளும் கற்பித்துக்கொடுக்கவேண்டும். இத்துடன் கடவுள் வாழ்த்துதல் ராஜ வாழ்த்துதலும் கற்பிக்கப்படவேண்டும்

### கதையும், அபிநய பாட்டுகளுக்குறிய கதைகளும்.

1. பாலர்களின் வேலை.
2. நரியும், திராக்ஷையும்.
3. காக்கையும், குடமும்.
4. காக்கையும், வடையும்.
5. நரியும், கொக்கும்.
6. ஓனுயும், ஆட்டுக்குட்டியும்.
7. கெட்ட விளையாட்டு.
8. கேலியினுல் வரும்கேடு.
9. பொன் வாத்து.
10. எலியும், தவளையும்.
11. சிங்கமும், நான்கு எருதுகளும்.
12. குரங்கும், இரண்டு பூனைகளும்.
13. எறும்பு பாட்டு.
14. சுத்தவீரன்.
15. குல்லாவியாபாரியும், குரங்குகளும்.
16. பேராசைப்பட்ட நாய்.
17. சிங்கமும், சுண்டெலியும்.
18. கிழவனும், மகனும், கழுதையும்.
19. நான்கு புத்திரர்கள்.
20. நோய்பட்ட மான்.
21. ஆமையும், முயலும்.
22. கிளிவளர்த்த பையன்.
23. நான்கு காடிகள்.
24. முதலையும், குரங்கும்.
25. இரண்டு குமாரத்திகள்.
26. நான்கு குருடர்கள்.
27. நண்டுகளும், நரியும்.
28. ஈனுல் கடிபட்ட நரி.
29. வேடனும், புருக்களும்.
30. அடிமையும், சிங்கமும்.
31. ராஜாகேட்ட தவளைகள்.
32. கொக்கும், மீனும்.
33. ஊசி திருடின பையன்.
34. கிழவனும், மாம்பழமும்.
35. மூன்று பூனைகள் கதை.
36. வெள்ளைப்புருக்கள் கதை.
37. சின்னகோழிக்குஞ்சு கதை.
38. புருவும், கட்டெறும்பும்.
39. சிலந்திப்பூச்சி கதை.
40. தென்னைமரமும், அணிற்பிள்ளையும்.
41. குணபூசணி கதை.
42. சமுசாரியும், மகனும்.
43. சோம்பேறிப் பையன்.
44. ஆட்டிடைப் பையன்.
45. பட்டிக்காட்டானும், மேளமும்.
46. விறகுவெட்டியவன் கதை.
47. நெல் கதிர் அப்பியாசப்பாட்டு.
48. சிறுவனும், மைனுக்குஞ்சும்.

D. James Mayandi, Teacher,
A. M. Boarding School,
Tirumangalam.

## இந்திரகுலத்தார் கருமாதியின் முறை.

1. இந்திரகுலத்தில் சாதாரணமாய் வியாதிப்படுக்கையிலிருந்து மரணமடைவோருக்கு, அன்று தினம் நடக்க வேண்டிய உத்தரகிரியைகளை இதரகுலத்தாரைப் போலவே செய்து முடித்து, 7ம் நாள், 9ம் நாள் 11ம் நாள் ஆகிய ஒற்றைப்பட்ட தினங்களில், கருமாதி என்னும் கைங்கரியம் செய்து முடிக்கின்றனர். இது உலக வழக்கமே ஆனால் மற்றொரு விசேஷமானதும், இதரகுலத்தாருக்குள் ஊடாடாததுமான விபரீத செய்கை ஒன்றை இங்கு விஸ்தரிப்பது, வாசகர்களுக்கு இன்பத்தை விளைவிக்கும் என்ற ஆவலினால், அதை நினைப்பூட்ட ஆசைப்படுகிறேன். அதாவது காலரா, பிளேக், கொள்ளைநோய் ஆகிய இவ்வித வியாதிகளின் மூலமாயும், அகாரணமாய் ஆயுதத்தினாலும், தற்கொலைகளினாலும், மரணமடைவோருக்குச் செய்யும் கருமாதியானது மிகவும் ஆச்சரியமானதே.

2. மேற்கண்ட மரணங்களுக்குத் தங்களுக்குப் பிரியமான தினத்தில் 6 மாதம் சென்றோ, அல்லது ஒருவருடம் சென்றோ கருமாதி நிச்சயித்துக்கொண்டு, பற்பல ஊர்களிலிருக்கும் தங்கள் இனஜனபந்துக்களுக்கு கருமாதி லிகிதம் அனுப்புகின்றனர். அச்சமயம் இந்திரகுல பாடசாலை உபாத்தியாயர்கள், அவர்களிடம் விபரம் கேட்டு எழுதிமுடிப்பதானது. ஓர் மேஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை நடப்பதை யொக்கும். அப்படிப்பட்ட லிகிதம் எழுதிக்கொடுத்த உபாத்தியாயர்களுக்கே அதன் அருமை புலப்படும்.

3. நிற்க, குறிப்பிட்ட தினம் கிட்டியவுடன் காடுகளுக்குச் சென்று போதைப்புல்லைக் கொணர்ந்து, அதனால் ஓர் சிறு பொம்மை உண்டு செய்து, ஜவுளிக்கடையிலிருந்து மல்துணி வாங்கி வந்து அதற்கு உடுத்துகிறார்கள். பின்பு அத்தர், புனுகு, சவ்வாது முதலிய வாசனைத் திரவியங்களை அதன்மீது தெளிக்கின்றனர். வீட்டிலுள்ள சகல ஆபரணாதிகளையும் அதற்கு அணிந்து, புஷ்பங்களை ஏராளமாய்ப் புனைந்து, சந்தனத்துடன் குங்குமப்பொடியையும் கலந்து பொட்டிட்டு, வீட்டின் மத்தியில், மெத்தை தலையணை விரித்து, அதில் அந்த பொம்மையை அழகு பெற இருத்திவைத்து, எல்லாப்பெண்களும், பொம்மையைச்சூழ உட்கார்ந்து, அழுகின்றனர்.

இவ்விதம் சில நிமிஷங்கள் கழிந்தபின்னால், ஏற்கனவே அலங்கிர்தமாக கட்டப்பட்டிருக்கும் தேரின்மீது அந்த பொம்மையைக் கொணர்ந்து பிரேதத்தைப் போல் வைத்து, கயிறுகளால் கட்டி, தப்பு, தம்பட்டம், கொம்பு முதலிய வாத்தியகோஷங்களினிடையே தேரை, சுடுகாட்டிற்கு நடாத்துகின்றனர்.

ஆண்கள் தேருக்கு முன்னாலும், பெண்கள் தேருக்குப் பின்னாலும், ஆடியாடி அசைந்துகொண்டு ஊரின் எல்லைக் கடைசிவரை சென்று திரும்பி விடுகின்றனர். தேருக்கு முன்னால் சென்ற ஆண்கள் சுடுகாட்டிற்குச் சென்று, அந்த பொம்மையை எறித்துவிட்டு (போடு பணங்கள்) அதாவது வீடு ஒன்றுக்கு 4 அணா வீதம் வசூல் செய்து, கூடின தொகையை அதே இடத்தில் ஒரு பைசாவும் மீதமன்னியில் அதி டம்பமாய்ச் செலவிடுகின்றனர். அதன பின் வீட்டிற்குத்திருப்பி உருமால் கட்டு சாஸ்திரம் நடத்துகின்றனர்.

4. இப்படிப்பட்ட வழக்கம் எந்தக்குலத்திலும் நடைபெறுகிறதில்லை. சாதாரணமாய் கருமாதி சாஸ்திரம் நடத்துகின்றனர். அன்று தினத்தில் சுடுகாட்டிற்குச் சென்று பிரேதக்குழியை மெழுகி பிரேதத்திற்குடைய வாரிசுதாரர் (கொள்ளிவைத்த) தன் தலையை மொட்டையடித்து சைங்கரியத்தை முடித்து அதன் பின் உருமாள் கட்டு சாஸ்திரத்தை நடத்துகின்றனர்.

இவ்விதமாகவே இந்திரகுலத்தார் ஒவ்வொரு சாஸ்திரங்களிலும் அளவுக்கு மிஞ்சி தங்களுக்குள்ள அரும் பெரும் ஆஸ்திகளை அழித்து, கடைசியில் நிர்ப்பாக்பஸ்திதிக்கு ஆளாகின்றனர். ஐயோ பாவம்! ஆகையினாலல்லோ இதரகுலத்தவர்கள் இந்திரகுலத்தாரைப் பார்க்கிலும், ஆஸ்தியிலும், கல்வியிலும், முன்னேறி அவர்களின் மீது அதிகாரமும் செலுத்த வகை தேடுகின்றனர்.

ஆகையினால் இந்திரகுலத்தாரே! இனிமேலாவது விழித்துக்கொள்ளுங்கள். நாகரீகமான இக்காலத்தில் நாகரீகத்தையடைய நாடுங்கள். "பலதுளி பெருவெள்ளம்" என்பதை மறக்கவேண்டாம். "பொருளிலார்க் கின்பமில்லை" ஆகையால் வீண் சடங்காசாரத்திற்கு பொருளைச் செலவிடாது பொருச் சேகரியுங்கள். அப்படியானால் நீங்கள் இதரகுலத்தவர்களைப் பார்க்கிலும், மேன்மையாயும், சந்தோஷமுள்ளவர்களாயும், கன்றுகாலி, பூமி முதலியவை உடையவர்களாயும், செல்வாக்குடையவர்களாயும், ஜீவித்து, எம்பெருமானாகிய கடவுளுக்கு முன்பாகவும், காருண்ய கவர்ன்மெண்டாருக்கு முன்பாகவும், "நறகுலத்தார்" எனப் புகழப்படுவீர்கள்.

சுபம்! சுபம்!

P. V. Chinniah,
Thevaram.

---

(செப்டெம்பர் மாதத்தின் பத்திரிகையின் 36-ம் பக்கத் தொடர்ச்சி)

1929-ம்-ளு செப்டம்பர் மாதத்தின் பத்திரிகையின் பயனென்ற முடிவில் காட்டிய சிநேகம் என்பதின் கருத்து :—

தலைப்பு.

### சிநேகம் எதற்கு?

சிநேகம் எதற்கென்று, முன் தலைப்பில் கூறப்பட்ட வாக்கியம், சிநேகம் வேண்டாமென்ற அர்த்தமல்ல, யார் யாருக்கென்று கீழே கூறப்படும்.

நண்பர்களே, சிநேகம் என்பது சிறிய காரியமல்ல. இதை பெரியகாரியமென்றே சொல்லலாம். சிநேகமே அநேககாரியங்களுக்கு முதன்மையாகுமென்று, சகலருக்கும் தெரிந்தவிஷயமே! அவ்விதம் சேர்ந்து உலகத்திலிருந்த இருவரின் சரித்திரத்தை கேளுங்கள்.



அதாவது உடலும் உயிரும் ஒன்றாகயிருந்து பிரிந்தவர்கள் இவர்களே! அகிலாண்டகோடி பிர்மாண்டநாயகனாக எங்கும் விளங்காநின்ற, நமது இயேசுகிறிஸ்தும் சிநேகம் என்பதை நன்கு விளக்கிக்காட்டியிருக்கிறார். சிநேகம் பெரியகாரியமாயிருந்தாலும், அது எவ்விதத்திலும் நிலைத்திரா? பிரிந்தே தீரவேண்டும். தன்னைத் தானே அறிந்தவர்களுக்கு சிநேகம் என்பது நன்கு விளங்குமென்ற உறுதிமொழியே.

தன்னைத்தான் அறிவது எப்படியென்று சிலர் எண்ணுவதும் உலக இயற்கையே! நாம் யார் யார்? எங்கெங்கேயிருந்து வந்தோம்? யாரால் வந்தோம்? இப்போது என்னசெய்கிறோம்? பின எங்கேபோகவேண்டும்? என்பதே முக்கிய கவனிப்பு.

நமது ஆண்டவர் தம்மை அறியும்படியாக, நம்மை உலகத்தில் மானிடனாகப்படைக்க எவ்வித உபாயம் தெரிந்துகொண்டார் என்றால், தம்மால் அனுப்பப்பட்ட உயிராகிய ஆத்துமத்தை உலகத்தில் நின்று உலாவப் பூமியில் மண்ணை எடுத்து பலவித அங்கங்களுடனே தன் சாயலாக மனிதனைப்படைத்து பேசாமௌனமுடையோனாக உண்டாக்கி. அவனுடன் பேசும் ஞானவானாகிய ஆத்துமத்தைச்சேர்த்து அங்கு, இங்கு, எங்கும் உலாவும் படியாகவும், அது, இது, எது என்று பேசும் படியாகவும், நன்மை, தீமை என்று அறியும்படியாகவும், தம்மைத் தானே அறியும்படியாகவும் இவ்வுலகத்திற்கு அனுப்பி விட்டார். இதுவே இப்போது நாம் இருக்கும் இடம்.

நாம் என்னசெய்கிறோம் என்று ஆராய்வோம். ஆனால் அவ்விதம் ஆண்டவர் அனுப்பப்பட்ட மனிதர்கள், எவ்விதம் ஜீவித்தார்கள் என்று சிலர் எண்ணுவதுமுண்டு.

ஊமையனாகிய சரீரத்திற்கோ? அன்னப்பாலும் ஞானவானாகிய ஆத்துமத்துக்கோ ஞானப்பாலும் ஆகாரமாகும் என்பது யாவருக்கும் தெரிந்தவிஷயமே. ஆத்துமத்தின் சொல்லை சரீரம் கேட்கவேண்டியது அவசியமே. சரீரத்தின் பசி வேளைக்கு ஆகாரம் வாங்கிக்கொடுப்பது ஆத்துமத்தின் முக்கிய கடமையே! சரீரத்தை உழைக்கச்செய்து, அதனால் வரும் பலனை, ஆத்துமம் வாங்கி சரீரத்திற்கு கொடுக்கிறான்.

சரீரம் ஆத்துமத்தின் சொல்லைக்கேளாது. அநேக கெடுதலைகளுக்கு ஆழாக்குகிறான். ஆத்தும ஞானவானாகையினால் அவையும் பொறுத்து அதனோடு ஜீவிக்கிறான். ஆத்துமத்தின் சொல்லை, சரீரம் கேட்பானாகில் உலகில் மானிடர்களாகிய நாமள், நான், நீ, என்று பேசாது, நாம், நாமள் என்றே எப்போதும் பேசக்கடமைப்பட்டவர்களாவோம். இத்துடன் ஜாதி இரண்டொழிய வேறில்லை என்ற மூதுரை மொழிக்கு இணங்கி நடப்போம். அவ்விதம் நடப்பவர்களே முன் கூறியது போல் தன்னைத்தானே அறிந்தவர்களாவார்கள். அவ்விதம் தன்னை அறிந்தாலுஞ்சரி அறியாவிட்டாலும் சரியே? நாம் எண்ணவேண்டிய முக்கியகாரியம் இதுவே. அதாவது நாம் யார்? எங்கேயிருந்து வந்தோம்? என்ன செய்கிறோம்? எங்கேபோகவேண்டுமென்பதே.

### எங்கே போவது?

பிரிய சகோதர சகோதரிகளே! ஓர் தூக்கணங்குருவியானது தனது இருப்பிடமாகிய உயர்ந்த மரத்தில் கட்டப்பட்ட கூட்டைவிட்டு இரைபொறுக்குவதற்காக வெகுதூரம் போய்த்திரும்பி வருவதற்குமுன் எவ்வித ஆபத்துக்குள் ஆழாகியும, தான் விட்டுப்போனக்கூட்டைத் தேடி எவ்வளவு விரைவில் வருகிறதோ! அப்படியே நாமும், நமது பிதாவாகிய சர்வத்திற்கும் வல்ல சர்வேஸ்பரனிடத்திலிருந்துவந்து, இவ்வுலகத்தில் பிரயாணம்செய்து குருவிபோல் வயிற்றைக்காப்பாற்ற வந்ததுமெய்யே. இவ்வுலகத்தில் வந்து குருவி எவ்விதம் ஆபத்துகளுக்குத் தப்பியதோ, அதேபோல் நாமும் அநேக கொடிய வியாதிகளுக்கும், விஷஜெந்துக்களுக்கும் தப்பித்து கூட்டைக் குருவி தேடியதுபோல் நாமும் நம்மை அனுப்பப்பட்ட தேவாதிதேவனிடத்திற்குப் போகவேண்டியது உண்மையே!

அப்படிபோகும் காலத்தில் ஊமையனாகிய சரீரமும் ஞானவானாகிய ஆத்துமமும் சேர்ந்து போகிறதில்லை. அவ்விதம் இருவரும்பிரிந்துபோகிறது அவர்களின் இஷ்டமுமல்ல கடவுளின் கட்டளையே.

ஆத்துமமும் சரீரமும் இதற்குமேல் சேர்ந்திருந்தால் ஆத்துமத்திற்கு சரீரத்தால் அநேகவித பாவங்கள் சம்பவிக்குமென்று நமது வல்ல பிதா அறிந்தவராகையால் மண்ணால் உண்டாக்கப்பட்ட மனித சரீரமே மண்ணில் கிறக்கடவாய். என்னால் அனுப்பப்பட்ட ஆத்துமமே திரும்பி என்னிடம் வந்துசேர் என்று அழைக்கிற அத்தருணத்தில் நமது தாயார், தந்தையர், தமையர், நேயர் சுற்றத்தார்களும் நாம் கஷ்டி அடைந்தும் உருக்கமாய் உழக்கப்பட்ட ஆடுமாடுமுதல் நமது கூடவா எத்தனிப்பதுமல்ல? ஆத்துமமும் சரீரமும் எப்போதாவதும் சேர்ந்து நிலைத்திருப்பதுமல்ல? என்று எல்லோருக்கும் சொல்லாமலே நன்கு விளங்கும்.

சரீரம் செய்த அநேக துஷ்ட காரியங்களுக்காக இவ்வுலகத்திலுள்ளவர்கள் ஊமையனாகிய அப்பிரேதத்தைக் கட்டி நெருப்பில் வேகவிடுகிறார்கள். அல்லது குழிக்குள்போட்டு மண்ணால் மூடிவிடுகிறார்கள். நாம் கையினால் செய்தும், காதினால் கேட்டும், கண்ணால் பார்த்தும் இன்னும உணராத அநேகம் பேர் இருக்கிறோம் என்று இருள்நீங்கி அருள்தரும் நமது ஆண்டவர் மேலும்மேலும் கவலை கொள்ளுகிறார். எனது அன்பார்ந்த நேயர்களே சோத்தாலுண்டான சரீரமாகிய இப்பாண்டத்திற்கு துக்கமே தவிர சுகம் ஒருக்காலும் இல்லையென்று முன்னோர் மொழிவது உண்மையே. ஆதலால் இதை வாசிக்கும் எனது அறிய நண்பர்காள், நாம் இவ்வுலகத்தில் எக்காலம்வரை இருந்து எவ்விதம் ஜீவித்தாலும், கட்டாயம் ஓர் நாள் கடலலை போன்ற உலகையும், கனவு போன்ற வாழ்வையும் காற்றைப்போன்ற மூவாசைகளையும் விட்டு, உலகாளும் உயர் தேவனாகிய நம் வல்லபிதா இடத்திற்கு

போவது உண்மை என்று உரைத்த வேத வாக்கியத்தை மனதிற்கொண்டு; வருவதெல்லாம் நன்மையென்று எண்ணி ஏகோதேசமாவது பெரிய காரியமென்றும், அது சிலகாலைத்தானென்றும், ஆண்டவனருளைப்பெற, விருப்பமுற்றவர்களாகயிருப்போமாக.

மொ. ச சாமுவேல்,

கரையாம்பட்டி.

---

## கல்வி

'கண்ணுடைய ரென்பர், கற்றோர், முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாவர்'

'கல்வியினுங் கில்லை, சிற்றுயிர்க் குற்றதுணை.

'எண்ணு, மெழுத்துங், கண்ணெனத்தகும்.' எனக் கூறும் ஆன்றோர் மொழிகளுக்கிணங்க, கடலாடை புனைந்த இக்காசினியின்கண் உற்பவித்துலவும் சகல ஜீவராசிப் பொருள்களிலும் மேலானதாய் சிருஷ்டிக்கப்பட்ட மனிதப்பிறவியே உயர்ந்ததெனக் கருதப்படுகிறதுபற்றியே, அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது, கூன், குருடு, செவிடு நீக்கிப்பிறத்தலரிது. எனக் கூறப்பட்டிருக்கிறது.

உலகத்தின்கண் சாமுத்திரிகாலக்ஷணங்களமைந்த ஓர் மனிதனுக்கு கண்ணில்லையேல் (பார்வை) அம்மனிதனுக்கு உலகத்தில் சிருஷ்டி கர்த்தாவாலேற்படுத்தப்பட்ட விநோதக் காக்ஷிகளைக் கண்டானந்திக்க வியலாதோ, அவ்விதமே கல்வி யென்னும் கண் இல்லையேல் அவனுக்கு எவ்வித இடம், பொருளேவல்களிருந்தும் பயனிலாதொழிகின்றது.

மற்றும் அறம், பொருள், இன்பம், என்ற இக சாதகங்களாகிய மூவகைப் புருஷார்த்தங்களையும், நான்காவதாகிய வீடு என்னும் மோக்ஷ சாம்பிராஜ்யத்தையும் அடைவிப்பது கல்வியேயாதலால் நாம் அக்கல்வியை நன்கு பயில முயலவேண்டும்.

கல்வியானது எத்துணைபேர்களுக்குச் சொல்லிக்கொடுத்தாலும் பெரிய களஞ்சியங்களிலும், கடலிலும், முறையே நெல்லும் தண்ணீரும் அள்ள அள்ளக் குறையாததோ அதேபோலிருக்கின்றதென்று ஒப்பிடலாமென்றாலும் அவைகளும், ஒரு காலத்து, அகஸ்திய முனிவரால் சமுத்திரம் வற்றடிக்கப்பட்டதென்றும், சாதாரணமாகக் களஞ்சியத்து நெல் திருடரால் திருடிப்போக வியலுமாதலாலும் அவைகளுக்கும் ஒப்பிடக்கூடாததாயிருக்கிறது.

ஆனால், 'தொட்டனைத்தூறும் மணற்கேணி, மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு' என்ற வள்ளுவனார் குறளிற் சொல்லிய பிரகாரமும், 'கைப்பொருள் தன்னின் மெய்ப் பொருள் கல்வி' என்ற பிரகாரமும் என்றுமழியாப் பொருள் கல்வியென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் யாவரும் அறிந்த விஷயம்.

'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்னும் முதுமொழிக்கிணங்க நல்ல கல்வித்தேற்சியுற்றவருக்குச் சென்ற விடங்களிலெல்லாம் கீர்த்தியும், மரியாதையும் ஏற்படுகிறதும் தவிர உன்னத உத்தியோகங்களும் பெற்றுவருகிறார்கள். வயது, செல்வம் முதலியவற்றிற் பெரியவனாயிருந்தும் கல்வி இல்லாவிடின் அவனைக் கால்மனிதனென்றே சொல்ல வேண்டும்.

இப்பொழுதும் நம் நாட்டில் சிலருக்குக் கல்விவாசனையில்லாததனால தன் பெயரை எழுத வியலாது 'கீறல், தற்குறி' என்று கையெழுத்துப் போடும்படிசெய்து வருகிறார்கள். சில சமயங்களில் தன் பெயர்மாத்திரம் யெழுதத் தெரிந்தவர்கள் மத்தியில் சில எழுத்துக்களை விட்டுவிடுகிறார்கள். கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் சில சமயங்களில் அஜாக்கிறதையினாலும், கசடறக் கற்காததனாலும் ஏதேனும் ஓர் விஷயம் எழுதுவார்களாகில் அர்த்தம் விபரீதமாகி அகப்பட்டுக்கொண்டு முழிக்க நேரிடுகிறது.

உதாரணமாக:— ஓர் பிரபுவின் வீட்டில் ஓர் நாள் திருடர்வந்து அநேகம் பண்டம் பாத்திரங்களைக் கொள்ளையிட்டுப் போய்விட்டார்கள். அவற்றுள் புராதனமானதும், கூடுதலானதும், மிக்க அபிமானத்துடன் அனுபவித்துக் கொண்டிருந்ததுமான 'தவலை' ஒன்றும் போய்விட அவர் போலீஷார்க்கு ரிப்போர்ட் செய்தாராம். அதில் தவலை என்றெழுதவதற்குப்பதிலாகத் தலை என்றெழுதியிருந்தது. இதைக்கண்டோர் அனைவரும் அப்பிரபுவை எழனம் செய்ய, வெட்கிப்போனார்.

ஆதலால் நம் நாட்டார்க்கென்று கட்டாயக் கல்வியுரிமை ஏற்படுத்தியிருப்பதின் பயனை நன்குணர்ந்து ஆண் பெண் மக்களைப் பள்ளிக்கனுப்பி கனம் சூப்பிரண்டவர்கள் எண்ணமும், காருண்ய கவர்ன்மெண்டார் எண்ணமும் ஈடேறுமாறு செய்வீர்களென்று நம்புகிறேன்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள். இளமையில் கல்.

T. S. Venkataramier,
Teacher, Kallar Ele. School,
Thirumalapuram.

---

## தர்பார் தின கொண்டாட்டம்.

சென்ற 20 ஆண்டுகளுக்கு முன் டில்லிமா நகரில் 12-12-1911௵ பல சிற்றரசர்களும், ஜமீன்தார்களும், பல பிரபுக்களும் ஒருங்குகூடி நமது மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்களின் மகுடாபிஷேகத்தின் வைபவத்தை சிறப்பித்ததைப்போல் நாளது 1929௵ டிசம்பர்௴ 12௳ வியாழக்கிழமை காண்போர் கண் கவருமாறு திண்டுக்கல் தாலுகா பழைய கன்னிவாடி கிராமம் சொக்காபட்டி கள்ளர் ஸ்கூல் கட்டிடத்திற்கு சுண்ணாம்பு அடித்து தரையை வழித்து பல கோலங்கள் இட்டும் டெ ஸ்கூல் கட்டிடத்தின் முன் நமது அரசரின் படத்தை பல நறுமலர்களால் அலங்கரித்து பச்ச இலைகளால் மகுட தோரணங்கள் கட்டி வெகு சிலாக்கியமாக அலங்கரித்தபின் பஞ்சாயத்து மெம்பர்களும் பள்ளிக்கூட மாணவர்களும் உபாத்தியாயர்களும் கூடி பழைய உபாத்தியாயராகிய V. பாப்புவை பிரசிடெண்டாக நியமனம் செய்தபின் பள்ளிக்கூட மாணவர்களுக்கு நமது அரசரின்பேரால் பந்தயம் வைக்க உபாத்தியாயர்களின் சுறுசுறுப்பினால் பையன்கள் பலவிதமான நவீன விளையாட்டுகள் விமரிசையுடன் செய்யப்பட்டு முதன்மையான பையன்களுக்கு தகுந்த வெகுமதிகள் அளிக்கப்பட்டும் பிள்ளைகளுக்கு உற்சாகப்படுத்த சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டு கூடிய சங்கத்தாரனைவருக்கும் தாம்பூலம் முதலியவைகள் கொடுக்கப்பட்டு பிறகு அதிக பக்தியோடு இறைவன் நமது காருண்ய அரசருக்கு நீடூழி ஆயுளை அருள பல கீதங்களும் முழங்க அதிக ஆடம்பரத்துடன் பஞ்சாயத்து மெம்பர்களும் மாணவர்களும் புடைசூழ நமது அரசரின் படம் ஊர்கோலம் வந்தபின் அக்கிராசனர் சக்கரவர்த்தின்பேரால் சில விஷயங்களை எடுத்துக்கூறி கடைசியாக நமது அரசருக்கு வாழ்த்துதல் பாட்டுப் பாட வைபவம் முடிவுபெற்றது.

கணபதியியர்,

சொக்காபட்டி.

---



## தீண்டாமை.

தீண்டாமை என்பது நமது பரம்பரையில் தொன்றுதொட்டு வந்திருக்கிற ஓர் துர்ப்பழக்கம். இதை தொலைப்பது இலகுவல்ல, ஏனெனில் நமது ஔவைப்பிராட்டியார் கூறியுள்ள முதுமொழிப்படி தொட்டில் பழக்கம் சாம்டும் என்றதற்கிணங்க நமது பழக்கவழக்கங்கள் ஒழிவதென்றால் நாம் நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாக தீண்டாமை என்னும் குணத்தை விலக்கி வருவோமானால் நாம் நமக்கு கீழ்ப்பட்டவர்களென்று முன்னோர்களாலமைக்கப்பட்டவர்களை நமது சகோதரர்களைப் பாவிக்க நேரிடும். தீண்டாமை என்பதை நல்ல பொருளில் கொள்ளாமல் தீய பொருளில் அதைச் செலுத்துகிறார்கள். நாம் பிறரைத் தாழ்ந்தவர்களென்று புறக்கணிக்கப்படுதால்தான் நம் சகோதரர்கள் பலவிதத்திலும் நம் தேசத்தை தீயவழியில் நடத்துகிறார்கள். ஜாதியென்பது கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதென்று அருளினதாகத் தென்படவில்லை. ஆனால் சிலர் பிழைப்பின் பொருட்டாக மற்றவர்களை வஞ்சித்து தாங்கள் உயர்ந்தவர்களென்றும் ஏற்படுத்திக்கொண்டார்கள். அவர்கள்தான் நம் பாரதநாட்டை சீர்கெடச் செய்தார்கள் அவர்கள் தெருவழியில் நம் சகோதரன் போகக்கூடாதாம். மிருகத்திலெல்லாம் கீழ்தரமானது பன்றியென்றும் மிருகம் நரகலைத்தின்று ஆபாசப்படுத்துகிறது போகலாமென்றும், மிருகத்தைக் காட்டிலும் அறிவில் சிறந்த ஒரு மனிதன் போகக்கூடாதென்றால் என்ன விபரீதம். அன்னவன் வீட்டில் பால் வாங்கிக் குடிக்கலாமென்றும் மோரில் தண்ணீர் சேர்த்தால் தீண்டலில்லை யென்றும் சொல்லுகிறார்கள். என்ன விபரீதம் பாருங்கள் அவர்களுக்கு வேண்டியவற்றிலெல்லாம் தீண்டலில்லையாம் இவ்வித வஞ்சகமான இதிகாசங்களையும் புராணங்களையும் கட்டியிருக்கிறார்கள், இன்னும் அவர்கள் இயற்றிய மனுதர்ம சாஸ்திரத்தை வாசித்தால் விபரீதமாகவுமிருக்கும். அதுவும் அவர்கள் சுய நலத்தைச் சார்ந்ததை சொல்லியிருக்கும். நந்தனார் என்னும் பெரியார் எக்குலத்திலுத்தார் அன்னவரை அக்காலத்துப் பிராமணர்கள் கோவிலுக்குள் நுழையவிடவில்லையா? அன்னவரை ஓர் மானிடராக ஏற்றுக்கொள்ளாமல் கடவுள் நீ நீசனென்று தள்ளிவிட்டாரா? அப்படியிருக்க அந்தக் குலத்திலுதித்த ஒரு அறிஞனை ஏன் நாம் மேலாகக் கொள்ளக்கூடாது. உதாரணமாக தீண்டாமை கூடாது என்று சொல்லக்கூடியவர்கள் கேவலம் ஒரு திராவிடனைத் தன் எஜமான் என்று அழைப்பார்கள ஒரு டாக்டர் உத்தியோகம் பார்க்கிற ஒருவர் கீழ்மக்களைத் தொடுகிறதில்லையா. நாம் நம்மைவிட தாழ்ந்தவர்களைத் தாழ்த்தினால் நம்மைவிட மேலானவர்கள் நம்மைத் தாழ்த்துவார்கள் அல்லவா? நமக்கு எல்லாருக்கும் அவர் பரமதகப்பன்தான். கீழ்தர ஜாதியார் என்றால் தீட்டான காரியங்களைச் செய்கிறவனே. ஒருவன் மேல்மகனாயிருந்து தீட்டான காரியங்களைச் செய்தால் அவன் மேல்மகனா, அவன்தான் கீழ் மகன். இவ்வித அப்பியாசங்களையுடையவர்களையே நாம் தீட்டாக நினைக்கவேண்டும். கீழ்மக்களாயிருந்தும் அவர்கள் மேன்மையான குணங்களை அனுசரித்திருக்கிறவர்களை நம்மைக்காட்டிலும் மேலானவர்களென்றே நினைக்கவேண்டும். நாம் இவ் உபாத்திமை தொழில் கற்க வந்திருக்கிற நாமாவது தீண்டாமை என்னும் கள் குடியை நீக்கி மற்றவர்களையும் நம் சகோதரர்களென்று நினைத்துவருவோமானால் நாம் கற்பித்துக்கொடுக்கும் மாணவர்களுக்கு அந்த சேர்க்கை ஏற்பட்டு நம் நாடு முன்னடையும் என்பதில் சந்தேகமில்லை. நம் நாடு ஐக்கியப்பட்டிருக்காததற்கு இது ஓர் முக்கிய காரணமாகும். நம் நாடு ஐக்கியப்பட்டால் கூடிய சீக்கிரம் சுயராஜ்யமடையும் என்பதற்கு சந்தேகமேயில்லை. இதைக் கருதித்தான் நம் மகானுபாவன் மகாத்மாகாந்தியடிகள் தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று பிரசாரம் செய்துள்ளார். நாம் இனிமேலாவது விழித்துத் தீண்டாமையை நீக்கி ஐக்கியப்படும்படி பராபரன் அருள் புரிவாகவும்.

M. David Chinnasamy,
Training School, Tirumangalam.

# 1930-ம் வருஷ கள்ளர் ஸ்கூல்களின் விடுமுறை நாட்கள்.

| | | நாட்கள். | தேதி. | கிழமை. |
|---|---|---|---|---|
| 1. | போகிப்பண்டிகை .... .... | 1 | 13— 1—30 | திங்கள் |
| 2. | பொங்கல் ... .... .... | 1 | 14— 1—30 | செவ்வாய் |
| 3. | தை அமாவாசை .... .... | 1 | 29— 1—30 | புதன் |
| 4. | மகா சிவராத்திரி ... .... | 1 | 26— 2—30 | புதன் |
| 5. | தெலுங்கு வருஷப் பிறப்பு.... | 1 | 31— 3—30 | திங்கள் |
| 6. | ஸ்ரீ ராம நவமி .... .... | 1 | 7— 4—30 | திங்கள் |
| 7. | ஈஸ்டர் பண்டிகை.... ... | 6 | 17— 4—30<br>22— 4—30 | வியாழன் (முதல்) செவ்வாய் (முடிய) |
| 8. | சக்கரவர்த்தி பிறந்தினம். | 1 | 3— 6—30 | வியாழன் |
| 9. | ஸ்ரீ ஜயந்தி .... .... | 1 | 18— 8—30 | திங்கள் |
| 10. | விநாயக சதுர்த்தி.... .... | 1 | 27— 8—30 | புதன் |
| 11. | மகலாய அமாவாசை .... | 1 | 22— 9—30 | திங்கள் |
| 12. | தசரா விடுமுறை நாட்கள்.... | 9 | 24— 9—30<br>2—10—30 | புதன் முதல் வியாழன் முடிய |
| 13. | தீபாவளி .... .... .... | 1 | 21—10—30 | செவ்வாய் |
| 14. | தர்பார்தினம் .... .... | 1 | 12—12—30 | வெள்ளி |
| 15. | கிறிஸ்து ஜயந்தி — வருஷப் பிறப்பு .... .... .... | 10 | 24—12—30<br>2— 1—31 | புதன் முதல் வெள்ளி முடிய. |
| 16. | உள்ளூர் பண்டிகை .... | 5 நாட்கள் | | |
| 17. | சனிக்கிழமைகள் .... .... | 52 | ,, | |
| 18. | ஞாயிற்றுக் கிழமைகள் .... | 52 | ,, | |

கவனிப்பு:—சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வரும் பின்வரும் விடுமுறை நாட்கள் மேலே குறிக்கப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| வைகுண்ட ஏகாதசி .... .... | 1 | 11— 1—30 | சனி |
| தமிழ் வருஷப்பிறப்பு .... .... | 1 | 13— 4—30 | ஞாயிறு |
| ஆவிணி ஆவிட்டம் .... ... | 2 | 9, 10—8—30 | சனி, ஞாயிறு |
| பங்குனி உத்திரம் .... .... | 1 | 15— 3— 30 | சனி |
| வைகுண்ட ஏகாதசி .... .... | 1 | 31—12—30 | (கிறிஸ்மஸ் விடுமுறையோடு கலந்து போனது. |

1. உள்ளூர் பண்டிகைகளுக்கு பள்ளிக்கூடம் மூடப்படுமுன் மகா-ா-ா-ஸ்ரீ சூப்ரண்டு துரையவர்கள் உத்திரவு பெறவேண்டும். ஷை உத்திரவை பள்ளிக்கூடம் பார்வையிடும் உத்தியோகஸ்தர்களுக்குக் காண்பிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும்.

2. இரண்டு தினங்களுக்கு மேற்பட்டு பள்ளிக்கூடம் மூடப்படுமானால், பள்ளிக்கூடம் மூடப்படும் தேதியும் திறக்கப்பட்ட தேதியும் மகா-ா-ா-ஸ்ரீ சூப்பிரண்டு துரையவர்களுக்கு அறிவிப்பதோடு, பள்ளிக்கூடம் மேல்பார்க்கும் அதிகாரிகளுக்கும் அறிவிக்கவேண்டும்.

(Sd.) K. P. JANARDHAN RAO,
Supt. Kallar Reclamation.

Office of the Supt. Kallar Reclamation,
R. S 3/Edn./T/30.

அமெரிக்கன் மிஷன் பிரஸ், பசுமலை,—1930.

1509

REG. NO.—M. 2146

THE
# Piramalai Reformer
பிரமலை சீர்திருத்தன்.

"துன்மார்க்கர் பெருகிறுதல்பாவமும் பெருகும்; நீதிமான்களோ அவர்கள் விழுவதைக் காண்பார்கள்."

Vol. IX.] பெப்ருவரி 1930 [இலக்கம் 10

## பஞ்சாங்கம்.

1930 | சுக்கில வருஷ மார்கழிமீ 18 | பெப்ருவரிமீ | சுக்கில வருஷ தைமீ 18 | 1930

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1<br>தைமீ 19 |
| 2<br>20 | 3<br>21 | 4<br>22 | 5<br>23 | 6<br>24 | 7<br>25 | 8<br>26 |
| 9<br>27 | 10<br>28 | 11<br>29 | 12<br>மாசிமீ 1 | 13<br>2 | 14<br>3 | 15<br>4 |
| 16<br>5 | 17<br>6 | 18<br>7 | 19<br>8 | 20<br>9 | 21<br>10 | 22<br>11 |
| 23<br>12 | 24<br>13 | 25<br>14 | 26<br>15 | 27<br>16 | 28<br>17 | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager.*

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## இந்திரகுலாதிபர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

இந்திரகுலாதிபர்களே! ஏனைய ஜாதியாருக்கு கிடைத்திருக்கும் சிலாக்கியத்தைப்பார்க்கிலும் உங்கள் குலத்தவர்களுக்குக் கிடைத்திருக்கும் சிலாக்கியமானது அதிகமே. எவ்வாறெனில் கூலிவேலை செய்து கஷ்டப்பட்டுப் பிழைக்கும் ஏழைமக்களுக்கு காருண்ய கவர்ன்மெண்டார் நிலம் ஜாரிசெய்தும், பணமின்றிக் கஷ்டமடைவோருக்கு கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியிலிருந்து சொற்ப வட்டிக்குப்பணம் கொடுத்து ஆதரித்தும், ஒவ்வொரு ஊரிலும் பஞ்சாயத்து ஏற்படுத்தியும், கல்வியின் வாசனையறியாத சிறு குழந்தைகள் நல்ல அறிவையும், ஞானத்தையும் அடையும்படி ஒவ்வொரு கிராமங்களிலும் உங்கள் குலப் பிள்ளைகளுக்கென்று பிரத்தியேகமாகப் பள்ளிக்கூடங்கள் கட்டிக்கொடுத்து சம்பளமன்னியில் படிக்கும்படி செய்திருக்கும் நம் டிப்பார்ட்டுமெண்டின் உத்தியோகஸ்தர்களுக்கு நமது மனப்பூர்வமான நன்றியைச் செலுத்தவேண்டியது அவசியமல்லவா?

நிற்க! பிரமலே தேவமார்களுக்கென்ற இந்த டிப்பார்ட்டுமெண்டு ஏற்படுமுன்னதாக இவர்கள் திருட்டே தங்கள் பிழைப்பென நினைத்து அக்காரியத்தில் ஈடுபட்டு எத்தனையோபேர் ஜெயிலிலடைபட்டு கேவலப்படுவதையும், தங்கள் குடும்பத்தார் கஷ்டப்படுவதையும், அநாகரீகமாக ஜீவியம் செய்வதையும் நினைத்து காருண்ய கவர்ன்மெண்டார் இக்குலத்தார்களை முன்னேற்றி விடும்படியாக அரும், பெரும் பிரயாசங்களெல்லாம் எடுத்திருக்கிறார்களென்பது சொல்லாமலே விளங்கும்.

இக்குலத்தை முன்னேறச் செய்யவேண்டுமாகில் படிப்பே மூலக்கல் எனக்கருதி ஒவ்வொரு கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி முன்னோர்களின் பாரம்பரையான தொழிலாகிய திருட்டை அகற்றி மரியாதையாய் ஜீவியம் செய்யும்படியாக ஒவ்வொரு பெற்றோரும் தங்கள்; தங்கள் குழந்தைகளைக் கண்டிப்பாய்ப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். ஒவ்வொருபிள்ளையும், நல்ல அறிவைப்பெற்று நற்போதனையடைந்து கொள்வார்களேயாகில் அவர்களின் பின்னான ஜீவியமானது மிகவும் மேலான நிலைமை யுடைத்தாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. அவைகளுக்குக் கல்வியே மூலாதாரம்.

இதுபற்றியே நாலடியார்கள் :—

கல்லென்று தந்தை கழற அதனையோர்
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்—மெல்ல
எழுத்தோலை பல்லார்முன் நீட்டவிழியா
வழுக்கோலை கொண்டுவிடும்.

தகப்பன் தன் குழந்தையைப் பார்த்து கல்வி கற்றுக்கொள் என்று சொல்லும்போது தகப்பன் சொல்வதை அசட்டைபண்ணி படியாதுபோனவன் யாராவது ஒரு ஓலையை அவனிடம் கொடுத்து வாசி என்று சொன்னால் அவன் தடியை எடுத்துக்கொண்டு அடிக்க கோபாவேஷத்தோடு வருவானும். காரணம் படிப்பின் வாசனையறியாததினாலன்றோ. மேலும்,

கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறிவாளர் இடைப்புக்கு—மெல்ல
இருப்பினும் நாயிருந்தற்றே இராது
உரைப்பினும் நாய் குரைத்தற்று.

நல்ல அறிவாளிகள் கூடியிருக்கும் சபையில் படியாத ஒருவன்போய் உட்கார்ந்தால் அவனை நாய் உட்கார்த்திருப்பதற்குச் சமமாக எண்ணப்படும். அவன் ஏதாவது வாய் திறந்து சொல்ல ஆரம்பித்தானேயாகில் நாய் குலைப்பதற்குச் சமமாக எண்ணப்படுவானும்.

ஆகையினால் இந்திரகுலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் யாருக்குவந்த விருந்தோ என்றிராமல் தங்கள், தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு ஒழுங்காக அனுப்பி அவர்களை எவ்வளவு தூரம் படிக்கவைக்கவேண்டுமோ அவ்வளவு தூரம் படிக்கவைத்து மேலான நிலைமைக்குக் கொண்டுவருவது பெற்றோர்களின் கடமையென நினைத்து தங்கள், தங்கள் கஷ்ட நஷ்டங்களைக் கவனியாது படிக்கவைக்கவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். அவரவர்களின் படிப்பின் பலனாக மரியாதையாக ஜீவியம் செய்யவும், குலத்தின் முன்னேற்றத்தின் வளர்ச்சிக்கு ஏதுவாயிருப்பார்களென்பதற்கும் சந்தேகமில்லை.

பள்ளிக்கூட விஷயமாய் இந்திரகுலாதிபர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் ஆனமட்டும் பிரயாசையெடுத்து சிறப்பாய் நடப்பதற்கு ஏதுகரமாக ஒவ்வொருவரும் தூண்டுகோலாய் விளங்கும்படி ஆவலுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

M. S. David,
Kombay.

---

## உபாத்திமைச்சங்க வருஷாந்தரக்கொண்டாட்டம் தங்கச்சியம்மாபட்டி.

1929-ளு நவம்பர்மீ 30உ சனிக்கிழமை பிற்பகல் 2 மணியிலிருந்து 5½ மணிவரை பழனித்தாலுகா தங்கச்சியம்மாபட்டி போர்டு ஸ்கூலில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பழனிரேஞ்சு மகா-ா-ா-ஸ்ரீ டிப்டி இன்ஸ்பெக்டர் சுப்பிரமணிய அய்யர், (B.A. L.T.) அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அவ்வமயம் ஷை சங்கத்தைச்சேர்ந்த (22) உபாத்திமார்களும் சுமார் (500) பையன்களும் பிள்ளைகளும கூடியிருந்தார்கள். மற்றும் உண்டான பெரியோர்களும் வந்திருந்தார்கள்.

ஷை ஸ்கூல் மாஸ்டரும் சங்கத்தின் செக்ரட்டேரியுமாகிய தங்கச்சாமிநாடார் சந்தோஷத்துடன் எல்லோருக்கும் தாம்பூலம், சந்தனம், வாசனைகளும் பரிமாறினார்கள்.

அப்பள்ளிக்கூடம் அழகான கொட்டகையினால் விசித்திரமான படங்களாலும் வாழை, தென்னை, கமுகு முதலிய தோரணங்களாலும் அழகாக ஜோடிக்கப்பட்டது. வந்த ஆசிரியர்களுக்கும் பெரியோர்களுக்கும் தகுந்த ஆசனம் அமைத்திருந்தது. மண்டபத்தின் முன்புறம் கீத



வாத்தியங்களும். தம்பூரம், ட்ரம் முதலிய கருவிகளால் வாசிக்கப்பட்டது. அச்சமயம் கலியாணமண்டபமென்றே எண்ணியிருந்தோம். பின்பு கூட்டம் துடங்கியது.

(1) தங்கச்சியம்மாபட்டி பையன்கள் கடவுள் வாழ்த்துதலும், மகா-ா-ா-ஸ்ரீ அக்கிராசனபதியின் வரவேற்பு கீதமும் படித்தார்கள்.

(2) செக்ரட்டேரி, ரிப்போர்ட்டு வாசிக்கும்போது முக்கியமாய் உபாத்திமார்கள் மாதாந்தர மீட்டிங்குக்கு சரிவர வருவதில்லையென்றும், வருஷ சந்தா ஒழுங்காய் செலுத்துவதில்லையென்றும், கணக்குகொடுத்து மகா-ா-ா-ஸ்ரீ அக்கிராசனபதியவர்கள் இச்சமயம் இதைப்பற்றி திட்டவட்டமான ஒழுங்குசெய்யாவிடில் இனி கூட்டம் நடைபெறுவது அசாத்தியம் என்று சொல்லி முடித்தார்.

(3) பழனிக்கவுண்டன் புதூர் எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர் டேவிட் பாண்டியன் என்பவர் தங்கள் பையன்களைக்கொண்டு இங்கிலீஷ் ஸம்பாஷணையும், தமிழ் சம்பாஷணையும் நடித்துக்காண்பித்தார். அதில் அப்பையன்கள் தங்கள் அந்தஸ்துக்குத்தகுந்த உடைகளால் அலங்கரித்தும், பேசும்திறமைவாய்ந்தவர்களாகவும், செய்கை, பாவனைகளை தங்கள் ஆசிரியர் திறமையைக்காட்டினார்கள்.

(4) குட்டிலிங்கபக்கன்பட்டி கள்ளர்ஸ்கூல் மாஸ்டர் S. சார்லஸ் பழனிச்சாமித்தேவர் தன் மாணவர்களைக்கொண்டு அழகான (Drill) தேகஅப்பியாசம் காண்பித்தார். அப்பையன்கள் (Scout) சாரணரின் உடுப்புடனும், தங்கள் காலாட்டம் கையாட்டம் மற்ற உறுப்புகளின் அசைவுகள் ஒரே மாதிரியாகவும் (ட்ரம்) என்னும் கொட்டின் சத்தத்தின் மூலம் சுமார் (12) விதமான (Exercise) செய்து காண்பித்ததினால் எல்லாரும் பூரித்து கைகொட்டி சந்தோஷத்துடன் நகைத்தார்கள்.

(5) அரிப்பிள்ளைபட்டி மிஷன்ஸ்கூல் மாஸ்டர் சாமுவேல் என்பவர் தன் மாணவர்களைக்கொண்டு அழகாக கோலாட்டம் காண்பித்தார். அவர்கள் ஆட்டங்களும் பாட்டும் கேட்க அதிக உற்சாகத்தைக் கொடுத்தது.

(6) அக்கிராசனபதியின் முடிவுரை:—இக்கூட்டத்தை சுமார் (22) உபாத்திமார்கள் சேர்ந்து நடத்துகிறீர்கள். ஆனால் இதில் நான்கு கிறிஸ்தவ ஆசிரியர்மட்டும் சிறத்தையுடன் உழைத்து பங்குபெற்றிருப்பதை நினைக்க எனக்கு அதிக விசனம். மீதியான நீங்கள் இங்கு வந்ததின் நோக்கம் என்ன? வேடிக்கை பார்க்கவா? அல்லது விளையாடவா? இன்ஸ்பெக்டர் தண்டனைக்குப்பயந்தா? என்பது தெரியவில்லை.

முன்னால் இச்சங்கத்தின் செக்ரட்டேரி அவர்கள் சொன்னபடி நீங்கள் சரிவர மாதாந்தர மீட்டிங்குக்கு வாராமலும், வந்து என்ன நடைபெறுகிறது என்று அறியாமலும் இருந்த அஜாக்கிரதையால் வந்த துக்கம் பாருங்கள்; நான் இப்பழனித் தாலுகாவிலுள்ள இப்படிச் சங்கங்களுக்குப் போயிருக்கும்போது இப்படி ஒழுங்கீனம் அதிகம் தெரிகிறது. இவையெல்லாம் முன்னிருந்தவர்களில் அஜாக்கிறதை ஆகையால் இதிலிருந்த மாதாந்தர மீட்டிங்குக்கு வராத எலிமெண்டரி உபாத்திமார்களுடைய கிரான்டைக்குறைத்தும், மாதச்சம்பளம் வாங்கும் உபாத்திமார்களுக்கு அபராதம் போடவும் மேலாவுக்கு சிபார்சு செய்வேன் என்றும் கண்டித்துப்பேசினார்.

(1) ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் மாணவர்களுக்கு சம்பாஷணை கற்றுக்கொடுத்து அவர்கள் கூட்டங்களில் தங்களைப்போல் கூச்சமின்றி பேசப் பழக்கவேண்டும்.

(2) இன்னும் (Drill) தேகப்பியாசம் அவசியம் கற்பிக்கவேண்டும். அதனால், பிள்ளைகளின் வளர்ச்சிக்கும் தேக உருப்புக்கள் நன்றாய் வேலை செய்து சுகவாசியாக வாழவும் ஏதுகரமாயிருக்கும்.

(3) நவீனமான கோலாட்டங்களும், பாட்டுகளும் படிப்பித்து வைக்கவேண்டும்.

(4) நேசனல் ஆன்தம் ஏகோபித்து எல்லாரும் பாடி கூட்டம் முடிவடைந்தது.

பிள்ளைகளுக்கு பொரிகடலை, வாழைப்பழம் இவைகள் கொடுத்து, வந்தவர்களுக்கு தக்க மரியாதையுடன் தாம்பூலம் சந்தனம் கொடுக்க கூட்டம் கலைந்தது.

எல்லா உபாத்திமார்களையும் வைத்து மத்தியில் டிப்டி இன்ஸ்பெக்டருடன் ஒரு புகைப்படம் எடுத்தார்கள். இரண்டாவது பையன்களை வைத்து புகைப்படம் எடுக்க கூட்டமும் முடிந்தது. கதிரவனும் தன் வேலையை முடித்து விட்டு மறைந்ததினால் எல்லாரும் சந்தோஷத்துடன் போயினார்கள்.

இப்போது இச்சங்கமானது ஒழுங்காய் நடந்து வருகிறதினால் உபாத்திமார்கள் உற்சாகமாய் வேலை செய்வார்கள் என்று அதிகாரிகள் நம்புகின்றார்கள்.

இதே மாதிரியுள்ள சங்க செக்ரட்டேரியார்களுக்கும் உபாத்திமார்களுக்கும் தெரிவிப்பதென்னவென்றால் (1) ஆசிரியர் சங்கம் தழைத்து ஓங்கவேண்டுமானால் எல்லாமெம்பரும் ஒழுங்காய் மீட்டிங்குக்கு போகவேண்டும். இது பிள்களுக்கு ஒரு முன் மாதிரியான காரியம்.

(2) ஆசிரியர் குறிப்பிட்ட நேரத்தில் பள்ளிக்கூடம் போய் அட்டவணைப்படி பாடம் நடத்தினால் பிள்ளைகள் ஆஜர் தவராமல் இருக்கும். அவர்களுக்கு உற்சாகமாயிருக்கும்

(3) மேலும் இச்சங்கமானது இப்பொழுது இருப்பதைக்காட்டிலும் இன்னும் உற்சாகமாய் வேலை செய்யுமாயின் உபாத்திமாருக்கு இப்போதிருக்கும் அந்தஸ்தைக் காட்டிலும் இன்னும் அதிகமான அந்தஸ்தை அடைவார்கள் என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை.

ஒவ்வொருவருக்கும் இவ்வெண்ணத்தைக கொடுத்து நடத்துவதற்கு எல்லாம் வல்லபரன் அருள்புரிவாராக.

## கிராம முன்னேற்ற ஊழியம்.

கிராம ஊழியங்களிலொன்றாகிய விஷபேதியை தடுக்கும் விஷயமாய் நான் செய்த முயற்சி பின்வருமாறு:—

எல்லாச்சீருஞ்நிறைந்த எழுவம்பட்டியில் கொடிய விஷபேதி பரவ ஆரம்பித்ததை என்னூரின் ஜனங்கள் மூலமாய் அறிந்தவுடன், நம் இந்திர குலத்தேவர்களுக்கு எல்லா விஷயத்திலும் உதவி செய்யத் தயாராயிருக்கிற கனம் டட்லிதுரை அவர்களிடம் நான் சென்று செய்தியுரைக்க, அவசியஜோலிகளை சற்று அகற்றிவிட்டு, கடிதத்தின் மூலமாய் நமது ஜில்லாவின் சுகாதாரத் தலைவரிடம் கண்டு அக்கொடிய விஷபேதியை நீக்குமாறு வேண்டிய முயற்சிகள் அவரைக் கொண்டு செய்யும்படி ஏற்பாடு செய்தார்கள்.

நான் சென்று அவரைக்கண்டு, கடிதத்தைக் கொடுத்ததுமன்றி ஊரின்நிலைமையை விரிவாகச் சொன்னேன். அவர் உசிலம்பட்டியிலிருக்கும் சுகாதார இன்ஸ்பெக்டரிடம்போய் அவரை என்னூருக்குக் கூட்டிக்கொண்டு போகும்படி கடிதம் கொடுத்தார். அந்த நிமிஷமேபோய் அவரைக்கண்டு கடிதம் கொடுத்து, விஷயத்தைத் தெளிவாகச் சொன்னேன். உடனே அவரும் நானும் வேண்டிய மருந்துகளை எடுத்துக்கொண்டு அன்று சாயந்தரம் சுமார் ஆறுமணிக்கு எழுவம்பட்டியை அடைந்தோம்.

திடனழிந்த நிலைமையிலிருந்த, அவ்வூர் ஜனங்கள் எங்கள் எதிர்பாராத வரவைக்கண்ட மாத்திரத்தில் கொண்ட சந்தோஷத்திற்களவேயில்லை. பின்பு நோய் அணுகியவீடுகள்தோறும் சென்று மருந்துகள் கொடுத்து அனுசரிக்க வேண்டிய முறையைத் தனித்தனியாக உரைத்ததோடிருக்காமல், எங்களூரிலுள்ள மந்தையம்மன் கோவிலின் முன்பாக ஜனங்களைக் கூட்டி, இந்த வியாதியானது ஒட்டுவாரொட்டியென்றும், தண்ணீர், ஆகாரம் முதலியவைகளை அருந்தும்போது அவ்வாகாரத்துடன் செல்லும் கண்ணுக்குத்தெரியாத சிறு கிரிமிகள் வயிற்றினுள் சென்றவுடன் ஒவ்வொன்றும் அநேகங்களாகப் பரவுகின்றதென்றும், வியாதிகண்டவரிடம் எல்லாரும் கண்டபடி புழங்காமல் இருக்கவேண்டுமென்றும், அவருடைய வேஷ்டி, படுக்கை முதலியவைகளை சுட்டெரிக்க வேண்டுமென்றும், அவர் கொடுத்த பினையல் முதலிய மருந்துகளை, வியாதிகண்ட வீடுகளில் போடவேண்டுமென்றும், கிராமத்திலுண்டாகும் அசுத்தமான மல ஜலங்களை வெகுதூரம் சென்று கழிக்கும்படியாகவும், வீடு, தெரு முதலியவைகளை அடிக்கடி சுத்தமாகக் கூட்டிவைத்துக்கொள்ளவேண்டுமென்றும் சொன்னோம்.

பிறகு எல்லா ஜனங்களும் தண்ணீர் எடுக்கும் கிணற்றிற்குச்சென்று, அக்கிணற்றின் ஆழத்தை நிதானித்து அதிலிருக்கும், நமக்கு எதிரிகளாகிய கிரிமிகளைக் கொல்லும்படியாக மருந்து கலக்கினோம்.

பின்னிரண்டு மூன்று நாட்கழித்து, ஊரின் நிலைமையைப் பார்த்ததில், அங்குள்ளவர்கள் மேற்கூறிய இன்றியமையாத முறைகளைச் செவ்வனே அனுசரித்துவந்ததால், அந்தப் பயங்கரமான நோய் சீணதசை யடைந்து விட்டது.

ஆகையால் கிராமத்தை நல்லவழியில் செலுத்திவருகிற உபாத்தியாயர்கள், பஞ்சாயத்துக்காரர்கள், கிராம அதிகாரிகள் ஆகிய தாங்கள் ஜனங்களை மேற்கூறிய முறைகளை அனுசரிக்கும்படி செய்வதுமன்றி, ஒருக்கால் வியாதி பரவக்கண்டீர்களானுல், நம் காருண்ணிய கவர்ன்மெண்டாரால் இதற்கென்று நியமித்திருக்கும் சுகாதார உத்தியோகஸ்தர்களுக்கு உடனே தெரியப்படுத்தி அவர்கள் வந்து வேண்டிய சிகிச்சை செய்யும்படி முயற்சி எடுத்துக்கொள்வீர்களாக. கருணை நிறைந்த சுகாதார உத்தியோகஸ்தர்கள் இருக்குமிடம், மதுரை, உசிலம்பட்டி, திருமங்கலம் முதலிய இடங்களாகும். இச்சிற்றுரையை அங்கீகரிக்கும்படி தாங்களை தயவாக வேண்டிக்கொள்ளுகிறேன்.

வி. கறுவன்,
திருமங்கலம்.

---

## குழந்தைகளின் நேசன்
(தொடர்ச்சி)

மரம் எதனுல் அறியப்படும்? தன் கனியினுல் அறியப்படும். வித்து எப்படியோ, அப்படியே அதன் பலன். குரு எப்படியோ, அப்படியே வித்தை. ஆக நம் குழந்தைகள் நற்குண நற்செய்கையுடையவர்களாய் நடக்க வேண்டுமானுல், அதற்கு ஆரம்ப ஆசிரியராகிய நாமே காரணஸ்தர், "நாய்க்கு வெண்டயம் போடுவது நாயகனுக்கழகு" என்ற பழமொழிப்படி, நமது குழந்தைகள் நற்கிரியைகளில் வளர்க்கப்பட்டால், அது நமக்கே மேன்மையைக் கொடுக்கும். ஆங்கில பழமொழிப்படி Tell your friend, and I will tell your character உன் சிநேகிதன் பெயரைச் சொல்லு, அதன் பின் நான் உன் குணத்தைச் சொல்லுகிறேன் என்பது அதன் பொருள். அது போல நம்முடைய பெயரைச் சொன்னுல் நமது குழந்தைகளின் நன்னடைக்கையை யாவரும் எளிதில் சொல்லக்கூடும். உலகத்தில் பலரும் தங்கள் தங்கள் அந்தஸ்திற்கேற்றவாறு பற்பல சிநேகர்களைத் தேடிக்கொள்வதுண்டு. உதாரணமாக:

நற்றுமரைக் கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம்

என்றபடி கற்றாரைக் கற்றவரும், மூர்க்கரை மூர்க்கரும், குடிகாரரைக் குடிகாரரும், திருடரைத் திருடரும் தங்கள் ஆப்த நண்பராக்கிக் கொள்வது வழக்கம். அதுபோலவே, குழந்தைகளும் குழந்தைகளையே, தங்கள் சிநேகராக்கிக் கொள்வர்கள். நாம் அவர்களின் உண்மையான நேசராகவேண்டுமாயின், உருவில் குழந்தைகளைப் போல் ஆகாவிட்டாலும் நடக்கையில் அவர்களைப்போல் வேடந்தரிக்க வேண்டும்.

எப்படியென்னில், காடுகளில் வசிக்கும் காடை, கவுதாரி, நரி முதலிய ஜெந்துக்களைப் பிடிப்பதற்கு, குறவர்கள் அததற்குரிய வேடம் புனைந்து அவைகளைக் கைப்பற்றுகின்றனர். நாமோ சிறு குழந்தைகளைப் பிடிக்கிறவர்களாயிருக்கிறோம் அப்படியானுல் நாம் அவர்களைப்போல் வேடந்தரிப்பது நியாயமல்லவா? ஆகையால் நாம் சிறுவர்களைப்போல் தரையில் உட்கார்ந்து விளையாடும் சுபாவமுடையவர்களாயிருக்க வேண்டும். நாம் அதிகம் படித்திருக்கிறோம் என்ற எண்ணத்தை அறவே ஒழிக்க வேண்டும். பிள்ளைகளைப்போல் விளையாடுந்தன்மை உடையவர்களாயிருக்கவேண்டும். குழந்தைகளைப்போல் சதாவும் சுறு சுறுப்புடையவர்களாயிருக்க வேண்டும். நமக்குள், தரித்திரத்தினுலும், வியாதியினுலும், குடும்ப அலுவல்களினுலும், பலவித கவலைகள் நேரிடலாம். அக்கவலைகளைப் பாடசாலைக்குள் நுழையவிடாது, அப்புறப்படுத்தவேண்டும். நாம், குழந்தைகளுக்கு அதிகாரமுள்ள ஆசிரியராக இல்லாமல், ஓர் சிநேகிதனுகவும், சகோதரனுகவும் இருத்தல் வேண்டும். குழந்தைகள், பிறர் செய்வதைப்போல் தாமும் செய்யக்கூடிய சுபாவமுடையவர்களாகையால், நாம் அவர்களுக்கு முன்பாக இருதய சுத்தமும், சரீரசுத்தமும் உடையவர்களாய் இருக்கவேண்டும், குழந்தைகள் மாசற்ற தன்மை உடையவர்களானபடியினுலே, முன்னொரு காலத்தில் இரட்சகராகிய இயேசு பெருமான், குழந்தைகளை இருகரங்களாலும் அணைத்துக்கொண்டு "இந்தக் குழந்தைகளைப்போல் மனந்திரும்பாவிட்டால் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" என்று கூறினுர்.

தினந்தோறும் சுத்தமான உடைகள் தரிக்கவேண்டும் உடைகள் அசூசிப்படக்கூடிய நிறங்களாய் இருத்தல் கூடாது. குழந்தைகளுக்கு முன்பாக சுத்தமான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டும். பிள்ளைகளிடத்தில் எவ்வித காரணத்தைக் கொண்டும் பீடி, சிகரட், பொடி, சுருட்டு முதலிய இலாகிரி வஸ்துக்களை வாங்கிவரும்படி ஆக்ஞாபிக்கக் கூடாது. எக்காரணத்தை முன்னிட்டும், குழந்தைகளை ஏளனம் செய்வதும்; பட்டப் பெயர்கள் (காரணப் பெயர்) வைத்து அழைப்பதும் தப்பிதமான காரியம். நாம் அப்படிச் செய்வதால், ஏனைய மாணவர்களும் அம் மாணுக்கனை ஏளனம் செய்ய ஆரம்பிக்கின்றனர். அப்போது அம்மாணவன் வெட்கமடைந்து, பாடசாலைக்கு ஆஜராக அச்சப்படுகிறான். ஆக அம்மாணவனின் கூஷீணதிசைக்கு ஆசிரியராகிய நாமே காரணஸ்தராகிறோம். ஆகையால் நாம் குழந்தைகளின் நேசனுக இருக்க வேண்டுமேயல்லாது, அவர்களின் விரோதிகளாயிருக்கக்கூடாது. அப்படிப்பட்ட கிருபாகடாட்சத்தை எல்லாம் வல்ல இரட்சா பெருமானுகிய கடவுள்தாமே அருள் செய்வாராக.

P. V. Chinniah, Headmaster,
Thevaram.

---

## ஞானமான தீர்ப்பு.

இன்பம். (கண்ணபிரான் என்ற மெட்டு)

1 இக்கிலத்தையாளும் நீதி எங்கள் பெருமானே இந்த
ஏழையழுதேனே—உன்றன்
இணையபாத மதிலேஞாயம் கிடைக்க நாடினேனே.



2 நாங்களிருபேருமொரு வீட்டிலேயே வாழ்ந்தோம் ஒரே
நாளில் சேய்களீன்றோம்—இந்
நாட்டிலெங்கள் ஞாயந்தீர்க்க நாடியும்மைச் சார்ந்தோம்.

3 நித்திரையிற் புரளும்போதென் பக்கமீதிற் கிடந்த அவள்
புத்திரனைப் புஷ்பம்—உயிர்
நீத்துவிட்டென் பாலகனைத் தந்திரமாய்க் கொண்டாள்.

வசனம். பிரபு! நானும் புஷ்பம் என்பவளும் ஒரே வீட்டில் குடியிருந்தோம். ஒரே தினத்தில் இருவரும் ஆண்குழந்தைகள் பெற்றோம். நேற்று நித்திரை செய்யும் பொழுது தன் குழந்தையை நசுக்கிக்கொன்று விட்டு, என் குழந்தையை எடுத்துக்கொண்டு கொடுக்க முடியாது என்று சொல்லுகிறுள். எங்கள் வீட்டுக்கு ஒருவரும் வருவதில்லை. ஆகையால் சாட்சிகளும் இல்லை. சமுகம் கிருபை கூர்ந்து நியாயம் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

நீதிபதி. (புஷ்பத்தை அழைத்து) உனக்கும், இங்கே நிற்கும் வாதிக்கும், நடந்த விவகாரம் என்ன? இறந்த குழந்தை உன்னுடையது என்றும், இறவாத குழந்தை தன்னுடையதென்றும் சொல்லுகிறுளே, நீ என்ன சொல்லுகிறுய்?

புஷ்பம். (ஷை மெட்டு)
மோசக்குடி கொண்டயிவள் வேஷக்காரி ஐயே இங்கே
பேசுங்காரியம் பொய்யே—இன்பம்
குழந்தையே யிறந்ததையா குவலயத்தில் மெய்யே.

புஷ்பம் வசனம். அவள் பேசுவதெல்லாம் சுத்தப் பொய். இறந்த குழந்தைதான் அவள் குழந்தை. அதில் சிறிதும் சந்தேகமில்லை.

நீதிபதி. (சற்று யோசித்து) கொலைஞர்களே! வாருங்கள். இவர்கள் வழக்கிற்குச் சாட்சிகள் கொண்டுவர வில்லை. இருவரும், இறந்த குழந்தை தன்னுடையதல்ல என்று சொல்லுகிறுர்கள். உயிருடனிருக்கும் குழந்தைக்குத்தான் இப்போது வழக்கு. ஆகையால் அந்தப் பிள்ளையை சமபாகமாக துண்டு செய்து ஆளுக்கோர்பாகம் கொடுத்து விடுங்கள்.

(நல்வாக்கு நீ கொடடி என்ற வர்ணமெட்டு)

இன்பம்

1 ஐயோவநியாயமே அவனியில் யாபொறுப்பார்
அருமைச் சுதன்றன்னையே அழித்திடச் செய்த தீர்ப்பு.

2 பத்துமாதஞ் சுமந்த பாவியென்னுடல் மெலிந்து
புத்திரனைப் பெற்றபயன் பூமியில் வெட்டி வீழ்த்தவோ.

3 பெற்றவயிறெரிகம் பெருகிக் கொதிக்கிறதே
சற்றுமிரக்கமில்லாத் தண்டனை சகிக்கலாச்சே

4 புஷ்பந்தானே சுதனை புத்திரனுய் வைத்துக் கொள்ள
இஷ்டமுடனீந்திடுவீர் எங்கள்துரை நீதிபரா.

வசனம். பிரபு! இந்தத் தீர்ப்பு நியாயமா? என் வயிறு துடிக்கிறதே? கால்கள் தள்ளாடுகின்றனவே! தயவு செய்து பிள்ளையை வெட்டவேண்டாம். புஷ்பத்திற்கே கொடுத்து விடுங்கள். நான் சதாவும் என் கண்களால் கண்டு களிகூர்ந்து கொள்ளுவேன்.

புஷ்பம். (பாளைவாய்க் கமுகில், வர்ணமெட்டு)

1 நாயகனே என்துரையே நியாயஞ்செய்ததும் சரியே
ஞாயமாகச் சரிபாகஞ்செய்யுமே—இது
நானிலத்தி லென்றும் நீதி பெய்யுமே.

வசனம். பிரபு! தாங்கள் கூறியதே சரியான தீர்ப்பு. பிள்ளையைக் கட்டாயம் இரண்டு துண்டாக வெட்டி ஆளுக்கோர் துண்டு கொடுங்கள். இதுவே மேலானநியாயம்.

நீதிபதி.

பிள்ளையை வெட்டவேண்டாம் என்று சொல்லுகிற இன்பமே, பிள்ளையின் சரியான தாய். புஷ்பம் குழந்தையே இறந்த குழந்தை என்பதற்குச் சந்தேகமில்லை. ஆகையால் பிள்ளையை இன்பத்தினிடம் கொடுத்துவிட்டு, பிள்ளையைக் கொன்ற படுபாவியாகிய புஷ்பத்தைச் சிறையிலடையுங்கள் (என்று வேலையாட்களிடம் கட்டளையிடல்.)

பொன்னுத்தாயம்மாள், உபாத்தினி,
தேவாரம்.

---

## மாணவர் போதகம்.

1 இறைவனை வேண்டு
2 உள்ளதை உண்ணல் உயர்ந்தோர்க்கழகு
3 சுத்தவுடை தரி
4 தலைக்கெண்ணெய் பூசு
5 இஷ்டமாய்ப் புஸ்தகம் அஸ்தத்தில்வை
6 பண்புடன் பாடசாலைக்குப்போ
7 குருதனை நாடு
8 இடங்கண்டமர்
9 அன்று வேலை நன்று செய்
10 பக்கம் பாரேல்
11 நூல்களில் கோடிடேல்
12 இடம் பெயர்ந் தேகேல்
13 அசுத்தங்களை
14 பொய்யைத் தள்ளு
15 மெய்யைக் கொள்ளு
16 உத்தா வின்றி வெளியே போகேல்
17 பிறன் பொருளிச்சியேல்
18 பள்ளியில் தின் பண்ட முண்ணேல்
19 சினங்கொள்ளல் ஊனமாகும்
20 கோட்கூறல் குற்றமாகும்
21 நன்மொழி கூறல் நன்று நன்று
22 எச்சலால் எழுத்தை அழியேல்
23 பண்டமாற்றேல்
24 துஷ்ட நேசம கஷ்டமாமே
25 ஜீவஜெந்தைத் தொந்தரை செப்யேல்
26 காலந்தவறிப் பள்ளியேகேல்
27 பள்ளியில் துயிலேல்
28 சற்குங்காலங் கைவிடேல்
29 ஒப்வு நேரமே உடலுக்கப்பியாசம்
30 ஓதற்கழகு உரக்கப் பேசல்
31 நிமிர்ந் தெழுதுதல் நெடுநாள் வாழ்வு
32 குருகொண்டு மறதி தலக்கு
33 குருமரியாதை பெரும்புகழ்
34 பெரியோர்க்குச் செவிகொடு
35 நாடொரு வேடந்தரியேல்
36 குருசொல் சிரமேற்கொள்
37 கல்வியில் கவனங்கொள்
38 தனியோசனை பனிமேய்ச்சல்
39 மாதா பிதா மக்கள் பாக்யம்
40 எம்பெருமான் இங்கு தங்குக.

(மேற்கண்ட நீதிவாக்கியங்கள் உரையுடன், சிறிது சிறிதாக அடுத்த மாதமுதல் தொடரும்)

P. V. Chinniah,
Thevaram.

---

## கால்நடைகளுக்கு சூடுபோடுவதும் அவைகளின் தோலை சரியாக உரிப்பதும்.

சர்க்கார் கால்நடைகளை வைத்திருக்கும் சொந்தக்காரர்களுக்கு (1) உயிரோடிருக்கும் மிருகத்திற்கு சூடுபோடுவதினாலும், (2) இறந்துபோன மிருகத்தின் தோலை அஜாக்கிரதையாய் உரிப்பதினாலும் நேரிடும் நஷ்டத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறார்கள். இராணுவத்திற்கு வேண்டிய நல்ல தோல்களை சர்க்கார் இழப்பதோடுகூட மிருகங்களின் சொந்தக்காரர்களும் நல்ல தோலுக்கும், சூடுகளினாலும், வெட்டுகளினாலும் கெட்டுப்போன தோலுக்கும் உள்ள நாணய வித்தியாசத்தை இழந்து போகிறார்கள்.

சூடுபோடுதல்.—மிருகங்களுக்கு (1) வாதம்போலுள்ள வியாதியைப் போக்குவதற்கும் (2) ஒரு அறிகுறியாக இருப்பதற்கும் (3) திருஷ்டிபடாமல் இருப்பதற்கும் ஜனங்கள் பொதுவாய் சூடுபோடுகிறார்கள். முதல் கேசில் மிருகத்தின் உடம்பில் எங்கு நோய் இருக்கிறதோ அங்கே சூடு போடப்படுகிறது. அதாவது சாதாரணமாய் மூட்டியில்தான். அப்பொழுது தோலுக்கு சேதம் கொஞ்சம். மற்றபடி அறிகுறி கண்டுபிடிப்பதற்காகவும், திருஷ்டிபடாமல் இருப்பதற்கும் சூடுபோடும்பொழுது மிருகத்தின் முதுகிலும், பக்கங்களிலும், சில சமயத்தில் தோழிலும் இரட்டை அரைவட்ட வடிவமாய் சூடுபோடப்படுகிறது. சூடுபோடும்பொழுது கவனிக்கவேண்டிய விதிகள் என்னவென்றால் (1) காரியத்திற்கு வேண்டிய அளவுமாத்திரம் சூடுபோடவேண்டும் (2) சூடு, தோலின் ஒரு சிறு பக்கத்தில் போடவேண்டும். உதாரணமாக, கழுத்து அல்லது கழுத்தின் அடிப்புறம் இவ்விடங்களில் சூடுபோட்டால் சேதம் கொஞ்சம். சாதாரணமாக ஒரு பதனிட்டதோல் சராசரி 10 பவுன் எடையுள்ளது. அப்படிப்பட்ட தோல் சேதப்படாமல் இருந்தால் பவுன் 1க்கு $1\frac{1}{2}$ ரூபாய் விலை. சூடுபோட்டதினால் சின்னாபின்னப்பட்ட தோலுக்கு பவுன் 1க்கு 8 அணாவுக்குமேல் மதிப்பு ஓடாது. சூடுபோட்ட தோல் 15 ரூபாயிலிருந்து 5 ரூபாய்க்கு குறைந்து விடுகிறது. இந்த நஷ்டத்தை



விலக்க சொந்தக்காரர்கள் தங்கள் மாடுகளுக்கு சூடுபோடாமல் இருக்கவேண்டும். அப்படி சூடு போடவேண்டியது மிகவும் அவசியமாயிருந்தால் கழுத்திலாவது தோள்பட்டையிலாவது மிகவும் குறைந்த அளவுக்கு சூடுபோடவேண்டும்.

தோல் உரித்தல்.—மிருகத்தின் பிரேதம் சூடாயிருக்கும்போதே தோலை உரிக்கவேண்டும் அப்பொழுது மிருகத்தின் பிரேதம் முதுகு கீழ்ப்புறமாய் வைக்கவேண்டும். பிறகு கீழ்தாடையிலிருந்து அடி வால்வரைக்கும், அடிவயிற்றின் மத்தியில் நேரே தோலைக் கீறவேண்டும். மார்பிலிருந்து ஒவ்வொரு முன்கால் உட்புற மத்தியிலும் விரைப்பையிலிருந்தாவது, அல்லது பசுவாயிருந்தால் மடியிலிருந்தாவது ஒவ்வொரு பின்கால் மத்தியிலும் மற்ற கீரல்கள் போடவேண்டும். பிறகு, முதலில் பிரேதத்தின் ஒரு பக்கத்திலிருந்து தோலை உரித்தும் மற்றப் பக்கத்திலிருந்து இதே விதமாகத் தோலை உரித்தும் பிரேதத்தின் முதுகின் மத்தியிலுள்ள கோட்டுக்குக் கொண்டுவந்து தோலை முற்றிலும் உரித்து எடுத்துவிடலாம். தோலை எடுக்கையில் தோலின் உள்பக்கம் கத்தியினால் எவ்விதமான வடு அல்லது காயமும் இல்லாமல் விலக்கும்படி மிகவும் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டும். அநேகமாய் தோலை உரித்து எடுக்க ஏற்பட்ட கூலிக்காரன் தன் வேலையை சீக்கிரத்தில் முடித்துவிட வேண்டிய அவாவினால் அவசரப்பட்டு தோலின் மாமிசப் பாகத்தில் காயம்படாமல் தோலை எடுக்க போதுமான ஜாக்கிறதை எடுத்துக் கொள்ளுகிறதில்லை. அவ்விதக் காயங்களினால் தோல்களின் பெறுமானம் சூடுகளினால் எவ்வளவு குறையுமோ அவ்வளவுக்கு குறைந்து விடுகிறது. காயம்பட்டதினால் பதனிட்டபின் இத்தோலின் விலை பவுன் 1க்கு 8 அணாத்தான் ஆகிறது. அதே தோல் காயமில்லாமலிருந்தால் பவுன் 1க்கு $1\frac{1}{2}$ ரூபாய் விலை. தோலை எடுக்க போதுமான சாவகாசமும் ஜாக்கிறதையும் எடுத்துகொண்டால் இந்த வருமான நஷ்டமும், தோல் உபயோகமற்றுப்போவதும் ஏற்படாது. பம்பாயில் பண்டாரா என்னும் ஆடுமாடு அடிக்கும் தொட்டியில் நூற்றுக்கு 65 தோல்கள் காயங்களினால் சேதப்பட்டன. கூலிக்காரனுக்கு காயப்படாத தோல் 1க்கு அணா 2 இனாம் கொடுக்கிற வழக்கத்தை ஏற்படுத்தினது முதல் இப்போது நூற்றுக்கு 5 தான் சேதமாகின்றன. இறந்துபோன கால்நடைகளிலிருந்து தோல்களை உரித்து எடுக்கப் போதுமான சாவகாசமும் ஜாக்கிரதையும் எடுத்துக்கொள்ளும்படி அதைச் செய்யும் கூலிக்காரர்களைத் தூண்டவேண்டும்பொருட்டு கால்நடைகளின் சொந்தக்காரர்களும் தோல் வியாபாரிகளும் சற்று நஷ்டம் எடுத்து செலவும் செய்தாலும் கடைசியில் அவர்களுக்கு லாபமே. ஏனென்றால், இந்த ராஜதானியில் இவ்விதமாக அனாவசியமான சூடுபோடுதலினாலும், அஜாக்கிரதையான தோலுரித்தலினாலும் உண்டாகும் மாசாந்தா நஷ்டத்தை 3 லட்சம் ரூபாய்க்கு மதித்திருக்கிறார்கள்.

## விஷபேதி.

தொற்றுவியாதிகளுள் விஷபேதியை இலேசாய் கண்டுகொள்ளலாம். சுலபமான சுகாதார விதிகளைக் கைக்கொள்ளுவதினால் இலேசாய் அடக்கிவிடலாம். ஒவ்வொரு வருஷமும் இந்த ராஜதானியில் இக் கொடூரமான வியாதியால் அநேகர் மடிகிறார்கள்.

காரணம். இந்த வியாதி தண்ணீரில் உற்பத்தியாகும் வியாதி. இது கண்ணுக்குத் தெரியாத கொக்கி போன்ற விஷக்கிருமிகளால் உற்பத்தியாகிறது. அவைகள் ஜலத்தில் அதிகமாய் விர்த்தியாகும். இத் தொற்றுவியாதி பரவுவதற்கு வழக்கமாய்த் தண்ணீரே ஏதுவாகிறது. பேதி கொடூரமாய் பரவினால் அது பொதுவாக அநேகர் உபயோகிக்கிற தண்ணீராலே உற்பத்தியானது என்றும், தணியாமல் மும்முரமாய் இருந்தால் அநேக ஏதுக்களால் உண்டானது என்றும் கொஞ்சம் மட்டுப்பட்டால் எல்லாரும் உபயோகிக்கிற தண்ணீரால் அல்ல ஏதோ சில ஜனங்கள் மட்டும் உபயோகிக்கிற அசுத்த தண்ணீரால் அல்லது பேதி கண்டவர்கள் வீட்டு ஆகாரம் அவர்கள் புழங்கின தண்ணீரால் உண்டானதென்றும் தெளிவாகிறது.

இந்த வியாதியைப் பரப்புவதற்கு விசேஷ உதவியாயிருப்பது அபாயத்தை உண்டுபண்ணும் சத்துருவாகிய ஈயே. ஏனென்றால் அது பேதி கண்டவர்களின் மலத்தில் அல்லது அவர்கள் வாந்தி செய்த ஆகாரம் முதலியவற்றில் உட்கார்ந்து அந்த விஷபேதி கிருமிகளை காலில் கொண்டுபோய் நாம் உட்கொள்ளும் தண்ணீர், பால், சாப்பாடு முதலியவற்றில் போடுகிறது. இந்த விதமாக ஜனங்களுக்குள் வியாதி பரவுகிறது.

வராமல் தடுக்கும் வழி. வியாதி வந்தபின் வைத்தியப் பிரயோகம் செய்வதிலும் வராமல் தடுப்பதே உசிதம். பின் சொல்லப்படும் முறைகளை ஒழுங்காய் கைக்கொண்டால் விஷபேதியை மட்டுப்படுத்துவதுமல்லாமல், அடியோடே தொலைத்துவிடலாம்:—

I. விஷபேதி தலைவைத்த உடனே அந்த விஷயத்தை விளம்பரப்படுத்தவேண்டும். இதில் தாமதம் செய்தல் அபாயகரமானது. ஆகையால் மிகத் திறமையாய் விளம்பரம்செய்ய ஏற்பாடு செய்வதே அதிக விசேஷமான காரியம். "நமக்குக் கொடிய சத்துரு நம்முடைய பணமுடிப்பைத் திருடுகிற முடிச்சவிழ்க்கி அல்ல, நம்மைக்கொல்லும்படி துப்பாக்கியால் குறி பார்க்கிற அல்லது வாளால் வீசுகிற கொலையாளி அல்ல. விஷபேதி கண்ட சங்கதியை அதிகாரிகளுக்குத் தெரியாமல் மறைத்துவைக்கிறவனே பெரிய சத்துரு".

கிராமங்களில், கிருமமுனிசிபு விஷபேதி கண்ட சங்கதி அறிந்த உடனேயே விளம்பரப்படுத்தவேண்டும்.

II. பிரத்தியேகப்படுத்தல். பட்டணங்களில் வியாதிகண்டவர்கள், மற்றவர்களோடு கலக்காமல் பிரத்தியேகப்படுத்தும் ஒழுங்கு நன்றாய் செய்யப்படக்கூடும். ஆனால் கிராமங்களில் விஷபேதி கண்ட வீட்டில் உள்ளவர்களை மற்றவர்களோடு சேரவேண்டாம் என்றும், மற்றவர்களை, பேதிகண்ட வீட்டுக்கு அனாவசியமாய் போகவேண்டாமென்றும், பேதிகண்டவர்கள் இறந்து அல்லது சுகமாகி வெகுநாள்வரை அந்த வீட்டில் யாதொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாதென்றும் சொல்லிவைக்கலாம்.

III. வியாதிகண்ட, அல்லது கண்டதாகச் சொல்லப்படுகிற இடங்களில் உள்ளவர்கள் உபயோகிக்கும் தண்ணீரை சுடவைத்தல். ஜனங்கள் உபயோகிக்கும் நீர் நிலைகளில் குளோரின் என்ற மருந்தைக் கலக்க வேண்டும். ஆற்றுத்தண்ணீரானால் அதை இரண்டுபாகமாக்கி மேல்பாகத்தை வீட்டில் உபயோகிக்கும் தண்ணீருக்கென்று பிரத்தியேகப்படுத்தவேண்டும். ஓரங்களில் மருந்து கலக்கவேண்டும்.

கிணற்று நீர்களில் குளோரின் மருந்தைக் கலக்க வேண்டும். கிணற்றிலிருந்து தண்ணீர்மொள்ள சட்டிகளையாவது இருப்பு அல்லது பித்தளைப் பாத்திரங்களையாவது உபயோகப்படுத்தவேண்டும். அவைகளைக் கயிற்றில் கட்டி அதன் மூலமாய் கிணற்றுத் தண்ணீரை எடுத்து உபயோகிக்கவேண்டும். ஜனங்கள், உபயோகிக்கிற கண்மாய்கள், குளங்கள், கிணறுகள் முதலியவற்றில் விஷபேதி கண்டவர்கள் வீட்டிலிருந்து எந்த சாமான்களையாவது கொண்டுவந்து அசுத்தப்படுத்தாமலும் அதில் துவைக்காமலும் காவல் செய்யவேண்டும்.

IV. விஷபேதி கண்டவர்களின் மலம், வாந்தி செய்த ஆகாரம், உடுத்தியிருந்த உடுப்பு முதலியவற்றை உடனே தீ வைத்துக் கொழுத்திவிடவேண்டும். ஒரு சட்டியில் உமி அல்லது சுண்ணாம்பு போட்டு அதில், மலத்தையும் வாந்தி பொருளையும் வைத்து தீக்கொளுத்திவிடலாம்.

V. - ஜனங்களுக்கு அறிவு ஊட்டவேண்டும்.

VI. குடியிருக்கும் வீடு மகா சுத்தமாயிருக்கவேண்டும்.

VII. (1) வயிற்றோட்டம் உண்டாக்கக்கூடிய காய், கனி, கீரைகளைச் சாப்பிடக்கூடாது.
(2) உப்பைத் தாராளமாய் உபயோகப்படுத்த வேண்டும்.
(3) குடிஜலம், பால் முதலியவற்றை கொதிக்க வைக்கவேண்டும்.
(4) சுக பேதிக்கு மருந்து சாப்பிடக்கூடாது.
(5) வயிற்றோற்றத்தை உடனே நிறுத்தவேண்டும்.
(6) ஈக்கள்போஜன பானங்களில் உட்காராமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.
(7) ஆறின சாதத்தை தள்ளி சுடு சாதம் சாப்பிடவேண்டும்.

VIII. விஷபேதி அம்மை குத்திக்கொள்ளல்.

விஷபேதி பரவாமல் தடுக்க அம்மை குத்திக்கொள்ளுதல் பெரிய உதவி. கிராமத்தில் உள்ளவர்கள் யாவரும் இவ்வழியைக் கைக்கொண்டால் வியாதி மாயமாய்ப் பறந்துபோம். விஷபேதிக்காக அம்மை குத்திக்கொள்ளுதல் சுலபமாகும்.

IX. பில்லிவாக்சினேஷன். அம்மை குத்தத் தவறினவர்கள் பில்லிவாக்சினேஷன் என்ற மருந்தை உட்கொண்டால், அம்மை குத்தினதைப்போலவே வியாதி வராமல் தடுத்துக்கொள்ளலாம்.

பரிகாரம். சுகாதார இலாக்கா இன்ஸ்பெக்டர் அவர்களிடமிருந்து கிராம அதிகாரியாவது, உபாத்தியாயராவது, வேண்டிய அளவு, விஷபேதி பரிகார மருந்தை வாங்கி வைத்துக்கொள்ளலாம். வியாதிகண்ட உடனே, மருந்து பாட்டலில் கண்ட விபரப்படி கிராம அதிகாரியாவது, பொறுப்பான வேறொருவராவது மருந்தைக் கொடுக்கவேண்டும். சுகாதார இலாக்கா இன்ஸ்பெக்டரவர்கள் வரும்வரை இந்தப் பரிகாரத்தைக் கையாட வேண்டும்.

இன்னும் வேண்டிய விபரம், மருந்துகள், பூச்சியைக் கொல்லும் மருந்தாகிய பிளீச்சிங் பவுடர், துண்டுப் பிரசுரம், முதலியவைகளை அடியில்கண்டவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

| | அதிகாரிகள். | ஹெட்குவாட்டர். | சரகம். |
|---|---|---|---|
| 1. | ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தர் | மதுரை | மதுரை ஜில்லா. |
| 2. | மதுரை சுகாதார இன்ஸ்பெக்டர் | மதுரை | மதுரை தாலுகா. |
| 3. | திருமங்கலம் சுகாதார இன்ஸ்பெக்டர் | திருமங்கலம் | டிப்டி தாசில்தார். |
| 4. | ஷை உசிலம்பட்டி | உசிலம்பட்டி | டிப்டி தாசில்தார், திருமங்கலம் தாலுகா. |
| 5. | ஷை மேலூர் | மேலூர் | மேலூர் தாலுகா. |
| 6. | ஷை நிலக்கோட்டை | நிலக்கோட்டை | நிலக்கோட்டை தாலுகா. |
| 7. | ஷை பெரியகுளம் | பெரியகுளம் | தாசில்தார் டிவிஷன், பெரியகுளம் தாலுகா. |
| 8. | ஷை உத்தமபாளையம் | உத்தமபாளையம் | டிப்டி தாசில்தார், பெரியகுளம் தாலுகா. |
| 9. | ஷை கொடைக்கானல் | கொடைக்கானல் | கொடைக்கானல் தாலுகா. |
| 10. | ஷை திண்டுக்கல் | திண்டுக்கல் | தாசில்தார் டிவிஷன், திண்டுக்கல். |
| 11. | ஷை வேடசந்தூர் | வேடசந்தூர் | டிப்டி தாசில்தார் டிவிஷன், திண்டுக்கல்தாலுகா |
| 12. | ஷை பழனி | பழனி | பழனித் தாலுகா. |

மகா-ா-ா-ஸ்ரீ யல். யஸ். இராமச்சந்திரன் அவர்கள், யம்.பி., பி.பஸ்., டி.ற்றி., யம்., ஜில்லா சுகாதார உத்தியோகஸ்தர், மதுரை.



REG. NO.—M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS 14 APR 1930

''முற்கோபி மதிகேட்டைச் செய்வான்; துர்ச்சிந்தனைக்காரன் வெறுக்கப்படுவான்.''

Vol. IX.] மார்ச்சு 1930 [இலக்கம் 11

## பஞ்சாங்கம்.

| 1930 | சுக்கில௵ மாசி௴ 18 | | மார்ச்சு௴ | | சுக்கில௵ பங்குனி௴ 18 | 1930 |
|---|---|---|---|---|---|---|
| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
| 30 17 | 31 18 | | | | | 1 மாசி௴ 18 |
| 2 19 | 3 20 | 4 21 | 5 22 | 6 *23 | 7 24 | 8 25 |
| 9 26 | 10 27 | 11 28 | 12 29 | 13 30 | 14 பங் 1 | 15 2 |
| 16 3 | 17 4 | 18 5 | 19 6 | 20 7 | 21 8 | 22 9 |
| 23 10 | 24 11 | 25 12 | 26 13 | 27 14 | 28 15 | 29 ●16 |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager.*

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## மும்மூன்று பொற்பிரமாணங்களடங்கிய கட்டளைகள்.

1. நமது தினசரி ஜீவியத்தில் நாம் அநுசரிக்கவேண்டிய காரியங்கள் மூன்று: சிநேகம், தயவு, சந்தோஷம்.

2. ஒரு வர்த்தகனுக்கு அவசியமான காரியங்கள் மூன்று: உண்மை, ஊக்கம், செட்டிமை.

3. வெற்றிபெறுவதற்கு அவசியமான காரியங்கள் மூன்று: விசுவாசம், தைரியம், விடாமுயற்சி.

4. ஒரு மாணுக்கனுக்கு அவசியமான காரியங்கள் மூன்று: நோக்கம், அதை நிறைவேற்றுவதற்குரிய வழி, அதை நிறைவேற்ற வேண்டுமென்ற தீர்மானம்.

5. ஒரு கிறிஸ்தவனுக்கு அவசியமான காரியங்கள் மூன்று: வேத வாசிப்பு, ஜெபம், ஊழியம்.

6. வீட்டிலுள்ள ஸ்திரீயானவள் காட்டவேண்டிய லட்சணங்கள் மூன்று: பொறுமை, உழைப்பு, அனுதாபம்.

7. உண்மையுள்ள பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டிய காரியங்கள் மூன்று: உதாரகுணமுள்ள ஆத்மா, உழைப்புள்ள கை, பயிற்றுவிக்கப்பட்ட மனது.

8. நாம் சிரேஷ்டமாய் எண்ணவேண்டியவை மூன்று: எல்லாருக்கும் பிதாவாகிய தேவன், உலக இரட்சகரான இயேசு, நம்மை வழி நடத்தும் பரிசுத்த ஆவி.

## நீடித்த ஆயுசுக்குரிய பத்து விதிகள்.

இவற்றைக் கைக்கொள்வதினால் முதுமைப் பருவம் சீக்கிரத்தில் அண்டாதபடிக்கும் தடுக்கலாம்.

1. சூரிய வெளிச்சத்திலும் திறந்த வெளியிலும் வசிக்கப்பார். நடந்தும், வேலைசெய்தும் நாள்தோறும் தேகப்பியாசம் எடு.

2. பழம், பால், முட்டை காய்கனி வர்க்கங்களை உன் ஆகாரமாகத் தெரிந்துகொள். மாப்பண்டங்களையும் பலகாரங்களையும் நீக்கி விடு. (மாமிசம் புசிக்கிறவர்கள் வெகு காலத்திற்கு ஜீவிக்கமுடியாது.)

3. நாள்தோறும் காலையில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ்செய். வாரத்திற்கொருதரமாகிலும் சூடான ஜலத்தில் ஸ்நானம்பண்ணு.

4. நாள்தோறும் ஒரு தரம் அல்லது இரண்டு தரமாவது மலவிஜர்சனம் இருக்கும்படிப்பார். பார்ப்பதற்கு சுகதேகியாயும் நேர்த்தியாயும் காணப்படுவது யாவரும் விரும்பக்கூடியது. அப்படியானால் கோதுமை ரொட்டியையும், எல்லா பழவகைகளையும் காய் கனிகளையும் நன்றாய் சாப்பிடு.

5. இரவில் சீக்கிரம் படு; காலையில் சீக்கிரம் எழுந்திரு; நன்றாய்க் காற்றோட்டமுள்ள அறையில் படுத்துத் தூங்கு.

6. வீண் எண்ணங்கள் யாவையும் மனதை விட்டு நீக்கிப்போடு; கவலை, விசனம், தொந்தரவு இவை தேகத்தை ஒடுக்கும். மனதைத் தொந்தரவு செய்யும் காரியங்களைப்பற்றி பேசாதே. அப்படிப்பட்ட சங்கதிகளுக்கு உன் செவியைச் சாயாதே. எப்பொழுதும் சந்தோஷமாயிரு.

7. வாரத்திற்கொருமுறை மனதுக்கும் தேகத்திற்கும் இளைப்பாறுதலைக் கொடுக்கும் ஒரு புது வேலையில் உன் மனதைச் செலுத்து. உன் தேகத்திற்கு இளைப்பாறுதல் கொடு.

8. "அன்பின் ஜுவாலை உன் வீட்டில் எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கட்டும்." ஒருவர்மேல் ஒருவருக்குள்ள அன்பைக் காத்துக்கொள். மட்டான செலவு ஒழுங்கு, கீழ்ப்படிதல், உண்மை, உழைப்பு இவற்றை அதிகமாய் விருத்திபண்ணு. ஒழுங்கும் சந்தோஷமும் குடியுள்ள வீட்டில் ஆயுசு பெருகும்.

9. உஷ்ணமான அறைகளிலும், பெருங்கூட்டமுள்ள இடங்களிலும் வசிக்காதே.

10. தேவனை உறுதியாய் நம்பு. அவர் ஜீவித்தாசாருகிறாரென்றும், நமது சுகவாழ்வைக் குறித்த ஒவ்வொரு சிறிய காரியமும் அவருடைய கண்களுக்குமுன் கொண்டுவரப்படுகிறதென்றும் விசுவாசி.

(ஆரோக்கிய தூதிகை.)



## பழமொழிகள்

1 அகலவுழுவதை ஆழவுழு
2 அகல வட்டம் பகல் மழை
3 அகத்தி ஆயிரங் காய் காய்த்தாலும் புறத்தி புறத்தியே
4 அடர விதைத்து வாழவுழு
5 அடர்த்தியையன்றே பார் புழுக்கத்தைச் சென்றே பார்
6 அடங்காப் பெண்டிரைக் கொண்டவனுங் கெட்டான் அறுகங்காட்டையுழுதவனுங் கெட்டான்
7 அடிவானம் கருக்கினால் அப்போதே மழை
8 அடிக்கடி அரசன் பிரவேசித்த கிராமம் ரூபத்தையடையும்
9 அடைப்பிலாக்காடும் விடுப்பிலா வரும்
10 அடைத்தவன் காட்டைப்பார் மேய்த்தவன் மாட்டைப்பார்
11 அதிரவடித்தால் உதிரவிளையும்
12 அந்திமழை யழுதாலும் விடாது
13 அரசனோடு பகைத்த குடி யன்றேகெட்டொழியும்.
14 அருகி கத்திரியும் அமாவாசை கெல்லிரையுமாகாது
15 அழுது கொண்டிருந்தாலும் உழுதுகொண்டிரு
16 அள்ளியகார் கிள்ளியசம்பா
17 அள்ளிநட்டவேனுஞ் சம்பா கிள்ளிநட்டவேனுங் பெரு ங்காரி
18 அறிவிலே விளையுமா எருவிலே விளையுமா?.
19 அறுகுமூலைத்த கொல்லையும் அரசனோடெதிர்த்த குடியுமீடேறாது
20 அற்பசிமாதம் அழுகைத் தூத்தல் அவ்வளவும் பூச்சி
21 அற்பசி விதைப்பு அவலுக்குங்கெல் காணாது
22 அற்பசிமாதம் நட்டநடவும் ஐம்பதுவயதில் பெற்றபிள்ளையும்
23 அற்பசிமாதமிடியிடித்தால் ஆனைக்கொம்பு முளைக்கும்
24 அற்பசிமாதமிடி யிடித்தால் அடிக்கிணற்றில் அறுகு முளைக்கும்
25 அற்பசிமாதம் ஆ கறக்குமுன்னாறிரண்டு பாட்டமழை
26 அற்பசிமாதம் அடைமழை கார்த்திகைமாதங் கனமழை

(காமதேனு.)

## மறவர் மஹாஜன சங்கம்.

(பாண்டியன்)

கழுதித்தாலுகா மகாநாட்டில் மறவர் மகாஜன சங்கத் தலைவர் ஸ்ரீ ராஜாராம் பாண்டியர் அவர்களின் தலைமையின்கீழ் 26, 27, 28-5-29-ல் நிறைவேறிய தீர்மானங்கள்.

1. நமது ஜார்ஜ் சக்கரவர்த்தியும் அன்னவர் குடும்பத்தாரும் பூரண தேக சௌக்யத்துடன் நீடூழி வாழவேண்டுமென்று பிரசிடெண்டவர்களால் பிரேரேபிக்கப்பட்டு கரகோஷத்துடன் ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

2. ராஜவிசுவாசம் நிறைந்த நமது மாட்சிமைதங்கிய ஜார்ஜ் மன்னரவர்கள் பூரண சௌக்யமடைந்ததற்கு இச்சங்கம் மிக்க சந்தோஷப்படுவதுடன் இராஜகுடும்பத்தாருக்குச் சந்தோஷத்துடனும் விசுவாசத்துடனும் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

3. இக்கூட்டம் நமது ஜாதி முன்னேற்றத்திற்காக அமைக்கப்பட்டிருக்கும் மறவர் மகாஜன சங்கத்தை ஒப்புக்கொள்வதுடன், அதில் எல்லா மறவர்களும் அங்கத்தினராகச் சேரவேண்டுமென்றும், அச்சங்கத்தின் விதிகளையும் திட்டங்களையும் ஒப்புக்கொள்வதாகவும் தீர்மானிக்கிறது.

4. இம்மறவர் மகாஜன சங்கத்தின் நோக்கங்களை பூர்த்தி பண்ணிவைப்பதற்காகச் சங்கத்தின் விதிகளை அனுசரித்து கிளைச் சங்கங்கள் ஸ்தாபித்து சங்கத்தின் வேலைகளை நடத்திவர வேண்டுமெனத் தீர்மானிக்கிறது.

5. இந்த ஜில்லாவிலுள்ள ஸ்தலஸ்தாபனங்களிலெல்லாம் நமது சமூகத்தார் தேர்தல்மூலம் ஏராளமாய் பிரதிநிதித்துவம் அடையவேண்டியது. பஞ்சாயத்துக்கோர்ட்டு, யூனியன்போர்டு, தாலுகாபோர்டு, முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு, சட்டசபை முதலியவற்றில் தேர்தல் மூலம் பிரதிநிதித்துவம் அடையமுடியாத இடங்களில் நாமினேஷன்மூலம் நம்மவர்க்கென ஒரு ஸ்தானம் கொடுக்கவேண்டுமென்று காருண்ய கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்கிறது.

6. மறவர் சமூகத்தில் ஸ்கூல் பைனல் முதல் பி. ஏ. யூனிவர்சிட்டி டிக்கிரி பெற்றவர்களுக்குச் சர்க்கார் உத்தியோகங்கள் கொடுக்க வேண்டுமென்று காருண்யக் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்கிறது.

7. நமது ஜில்லாபோர்டில், காலஞ்சென்ற மாட்சிமைதங்கிய ராஜ ராஜேஸ்வர சேதுபதியவர்கள் ஸ்தானத்திற்கு நமது சங்கத்தின் பிரதிநிதியாக இருக்கும் ஸ்ரீ விஜயசாமித் தேவரவர்களை நியமிக்குமாறு ஸ்தலஸ்தாபன இலாகா மந்திரியவர்களையும், ஜில்லாப்போர்டு தலைவரவர்களையும் இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

8. நமது மறவினர்கள் நமது நாட்டில் உற்பத்தி செய்யும் கதர் உடையைச் சதாகாலமும் அணியவேண்டுமென்றும், நமது ஸ்திரீகள் சவுகாசம் ஏற்பட்ட காலங்களில் கைராட்டினம் கையாடி உள்நாட்டுக் கைத்தொழிலை விருத்திசெய்ய வேண்டுமென்றும் இம்மகாநாடு நம் சமூகத்தவரை அழுத்தமாகக் கேட்டுக்கொள்கிறது.

9. நம் குலத்தவருள் நடைபெறும் சுப, அசுபச் சடங்குகளில் அளவுக்கு மிஞ்சிய ஆடம்பரமான செலவுகளைச் செய்து நஷ்டமடைவதை அறவே ஒழித்தல்வேண்டும்.

10. பள்ளிக்கூடங்களில் நமது இளைஞர்களுக்கு விவசாயம், வியாபாரம், கைத்தொழில், சுகாதாரம் பொதுநலம், தெய்வபக்தி, சிக்கனம் இவை சம்பந்தமான படிப்புகளைக் கற்பித்துக்கொடுக்க வேண்டுமென்று காருண்ய கவர்ன்மெண்டாரையும், கல்வி இலாகா மந்திரியையும், கல்வி இலாகா ஜில்லாத்தலைவரையும், கவுன்சிலையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது. அத்துடன் ராணுவப் பயிற்சியும் முக்கியமாகக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

11. இந்தப் பிரேரேபணைகளை, சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு அனுப்பும்படியாக, மறவர் மகாஜன சங்கம் பிரசிடெண்டவர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

---

## மறவர் முன்னேற்றம்.

ஜாதிமதங்கள் நிறைந்தது இவ்விந்தியநாடு. இந்திய நாட்டில் கொஞ்சகாலமாக ஒருவிதக் கிளர்ச்சி, சமூகவாழ்விலும், மதச்சார்பாகவும் தோன்றியிருக்கிறது. இக்கிளர்ச்சி புத்தப்புதிதான கொள்கைகள் கடலெங்கும் பரவுதலால் ஏற்பட்டதாகும். சமூகங்களின் முன்னேற்றமே, இந்திய நாட்டின் முன்னேற்றம். அதனாலேயே, சமூகவிருத்திக்காக எண்ணிறந்த சங்கங்களும், ஏற்பாடுகளும் நாடோறும் நடந்தேறிவருகின்றன. ஒவ்வொரு சமூகமும் தன்தன் பாதுகாப்பின்பொருட்டும், விருத்தியின் பொருட்டும், உலகப்போக்கை யனுசரித்து, எல்லாத் துறைகளிலும் தன்னாலியன்ற வழிகளைத் தேடிக்கொள்கின்றது. இக்காலத்தில் எந்தச்சமூகம், சீக்கிரமாகச் சீர்திருத்தமடைந்து தன்னைப் பக்குவ நிலையில்வைத்துக் கொள்ளுகிறதோ, அச்சமூகத்துக்கே எல்லா நன்மையுமுண்டு. மேலேகூறிய நன்மையையடைவதற்கு சமூகங்களிடை மிகுந்த போராட்டம் நிகழ்கின்றது. குறித்த பக்குவநிலையை அடைவதற்காக, ஒவ்வொரு சமூகமும், கண்டும் கேட்டுமறியாத பெருமுயற்சிகளை இடைவிடாது செய்துகொண்டு வருகிறது. இவ்வளவு போராட்டத்திற்கிடையிலும், கால இயற்கையைக் கவனியாமல் தன்மூடத்தனமாகவிருக்கும் சமூகங்களும் நாட்டில் சிலவுண்டு. அந்த வரிசையில் முன்னே நிற்பது மறவர் சமூகம்.

மறவர் ஜாதி முன்னேற்றமடைவதென்றால் சாமான்ய காரியமல்ல. மறவர்களுக்குள் ஏற்பட்ட குறைகளோ எண்ணிலடங்காதவை. ஒன்றிரண்டு குறைகளிருந்தாலவோ, முன்னேற்றமடைவது எளிதாயிருக்கும். மறவர் சமூகவாழ்வையே அடியோடுமாற்ற வேண்டியதவசியம். சமூக நோக்கத்தைத் திருத்தினாலன்றி மறவர்களிடம் முன்னேற்றத்தை எதிர்பார்க்க வழியில்லை. ஒரு சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமானால், இரண்டு துறைகளில் ஏற்றம் பெற்றிருக்கவேண்டும். முதலாவதாக, சமூகத்தில் பெரும்பாலார் கல்வியின் பயனை யடைந்திருக்கவேண்டும். கல்விவாசனை கமழ்ந்தாலன்றி, கணக்கிலடங்காத குருட்டு நம்பிக்கைகளும் மூட பழக்கவழக்கங்களும், அச்சமூகத்தைப் பற்றி இருகப்பிணித்து, நல்வாழ்வைத்தொலைத்துவிடும். கல்வியில்லாத சமூகம் இவ்வுலகில் ஒருவித நன்மையையும் அடையப்போவதில்லை. ஒருக்கால் எதிர்பாராதபடி நன்மை கிட்டினாலும், கடைபோக, அந்நன்மையைக் காப்பாற்ற வழிதெரியாமல் அச்சமூகத்தார் திகைப்பர். கல்வி எவ்வளவு அவசியமோ, அதுபோல ஒரு சமூகத்திற்குச் செல்வமும் இன்றியமையாததாகும். கல்வியுஞ் செல்வமும், மனிதருக்கு இரு கண்களென்று கருதப்படுவதுபோல சமூக வாழ்விற்கும் இரண்டு கண்களேபோலவிருக்கின்றன. செல்வமில்லாதபோது, ஒரு சமூகத்தாருக்கு எத்துறையிலும், யாண்டும் நன்மதிப்புக்கிடையாது. 'இல்லானை இல்லாளும் வேண்டாள்' என்பது ஔவை கூற்று. அதுபோல, பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை என்று பண்டைப் பழமொழிகூறும். ஆகவே, சமூக வளர்ச்சிக்கு கல்வியுஞ் செல்வமும் இன்றியமையாதனவை என்று அறிகிறோம்.

இனி மறவர் சமூகம் மேற்கூறிய இரண்டுவகையில், எந்நிலையிலிருக்கிறதென்பதைச் சிறிது கருதி, அப்பால், அதை விருத்திசெய்வதற்கான வழிகளைப்பற்றிக் கவனிப்போம். முதலாவதாக கல்வியை எடுத்துக்கொண்டோமானால், மறவர்களில் பெரும்பாலார் கல்வி என்பதைக் கனவிலுங் கண்டறியாதவர்களாக விருக்கிறார்கள். கற்றவர்களென்று கருதப்படும் ஒரு சிறு பகுதியினருள்ளும், பெண்கள் கோலம் போடுவதுபோல் தன் பெயரைமட்டும் கோலமிட்டு எழுதக் கற்றவர்களின் தொகையே அதிகம். நன்றாகக் கணக்கிட்டுப் பார்த்தால், ஆயிரத்துக்கு மூன்றுபேர்களுக்கு அதிகம் கற்றவர்களிருக்க மாட்டார்கள். அதிலும், தற்கால நாகரீகத்துக்கும் பொருத்தமான ஆங்கிலக்கல்வி கற்றவர்களை இலகுவில் பொருக்கி எடுத்துவிடலாம். கூலிவேலை செய்து கிடைக்கும் காசுகளையும் பிறருடைய உதவியின்றி எண்ணிக்கொள்ள முடியாதென்றால் கல்வி எவ்வளவுதூரம் இச்சாதியார்களிடம் பரவியிருக்கிறதென்பதை நாம் அறிந்துகொள்ளலாம். கல்வியின் வறுமை கடினமாகவிருந்தும், அவ்வறுமைப் பிணியால் நேரிடும் கஷ்டங்களை அநுபவித்தும் மறவர்களுக்குள்ளே கற்கவேண்டுமென்ற ஆசையே இல்லை. ஆசையில்லாத போனால் கல்வி எப்படிப்பெருகும்? எவ்வளவோ பொருளிருந்தும், நல்ல மக்கட் செல்வமிருந்தும், மறவர்களில் எத்தனைபேர், கல்வியில்லாத பெருமூடர்களாக விருக்கிறார்கள், என்பதை நோக்க நமக்கு எவ்வளவு வயிற்றெரிச்சலுண்டாகிறது. வேறு எந்தச் சாதியிலாவது இவ்வளவு பரிதாபகரமான நிலையுண்டா? பரம ஏழையாயிருந்தும், பிச்சை எடுத்தேனும் கற்கவேண்டுமென்று பிரியப்படுவதையும், வழியிருந்தும்



வகையிருந்தும் வாழாயிருப்பதையும்பார்த்தால் நம்முடைய மனம் புண்படாதென்செய்யும்? பிச்சை எடுத்துக் கல்வி பயின்று பெரும் பதவியடைந்த பெரியோர்களின் சரிதங்களைக் கேட்கவில்லையா? மறவர்களிடமிருக்கும் அந்தகாரத்தை ஒரு உதாரண முகத்தால் கூறுகிறேன். என் எதிர்வீட்டான் மிகவும் ஏழை; யாதவகுலத் துதித்தோன்; அவனுடைய பையன் பள்ளிக்கூடஞ்செல்வதை நான் தினந்தோறும் என் வீட்டுத் திண்ணையிலிருந்து பார்க்கிறேன்; அப்பையனுடைய நல்லொழுக்கமும் எனக்கு நன்றாகத்தெரியும்; அவனுடைய அருள் வீசுமுகத்தையும் நான் அனவரதமும் தெரிசிக்கிறேன்; எனக்கும் ஏராளமான பொருளிருக்கிறது; இருபது வயதுள்ள ஒரு புத்திரனுமிருக்கிறான்; எதிர்வீட்டுப்பையன் பள்ளிக்கூடஞ் செல்லும்பொழுது என்னுடைய பையன் மாடுகளைப்பற்றி மேய்ப்பதற்குப் புறப்படுகிறான், காவல் காப்பதற்காக கம்பை யெடுத்துக்கொண்டு, புறப்படுகிறான்; அவன் செய்யுஞ் சில்மைகளுக்கும், களவுகளுக்கும் ஒரு கணக்கில்லை. நான் தவறினாலும், என் வாசல் முன்னின்று முறையிடுபவர் குறைவதில்லை. இவ்விரண்டு பையனுக்குமுள்ள ஏற்றபெற்றியை நான் என் கண்ணாரக்கண்டும், மனமார உணர்ந்திருந்தும், என்னுடைய மற்ற மக்களை யாவது கல்வி கற்கும்படி புத்தி தோன்றவில்லையே. இவ்வளவு நிற்சாருசியாயிருப்பதற்காக நான் யாரை நொந்து கொள்வது? மழைக்காக வேனும் நான் பள்ளிக்கூடம் ஒதுங்கினேனன்றோ எனக்கு என் புத்திரர்களையேனும் கல்வி பயிற்றுவிக்க வேண்டுமென்ற ஆசை உண்டாகும்.

மறவர்களின் கல்வி நிலையை ஒருவாறு தெரிந்து கொண்ட பிறகு, கல்வி அபிவிருத்திக்கான வழிகளெவை யென்று கவனிப்போம். முதன்மையாக, மறவர் மக்களிடை கல்வியின் அவசியத்தையும், கல்வியின் பெருமையையும், எடுத்துரைக்கவேண்டும். சமூகத்தில், கல்லறிவு படைத்து, ஊக்கமிருந்த வாலிபக் கூட்டமொன்று இவ்வருந்தொண்டை ஏற்று நடத்தவேண்டும். ஊர் ஊராய்ச்சென்று கல்வியால், ஒருவன் அடையும் நன்மையை, ஒன்றிற்குப் பலமுறை எடுத்தோதவேண்டும். பலகால் சொல்லின் பலன் கிட்டாமற்போகாது. இங்ஙனம் இத்தொண்டை வற்புறுத்துவதால் என்னுடைய நோக்கம் ஒன்றே. ஜனங்களுக்கு கல்வியின்மீது ஒரு தேட்டம் உற்பவிக்கவேண்டும். கல்வி கற்கவேண்டுமென்ற ஓர் தீராத்தாகம் ஏற்பட்டாலொழிய, கல்வியைப் பரப்புதற்காக எடுத்துக்கொள்ளும் எந்தப்பிரயாசையும் விழலுக்கிறைத்த நீர்போலாகும். கல்வியால் பிறசமூகத்தார் அடைந்த நன்மையை எடுத்துச் சொல்லும்பொழுது, மனிதன், அவ்வளவு நிர்மூடனாயிருந்தாலும் ஆசை வசப்படுவது இயற்கை. ஆசைப்பேய் பிடித்தாவது கல்வியை கற்கமாட்டானா? மேற்கூறிய வாலிபத்தொண்டர் கூட்டம் நல்ல முறையில் அமைக்கப்படவேண்டும். சுய நன்மையைக் கருதுபவர்களையும், கெட்ட எண்ணமுடையவர்களையும், அக்கூட்டத்தில் எக்காரணம்பற்றியுஞ்சேர்க்கக்கூடாது. ஏனென்றால் உலகத்தில் பொறாமை அதிகம், அதிலேயும், பாண்டியவம்சத்திலுதித்த கல்வி கலையில்லாத நம்மவரிடத்தில் அஞ்ஞானம் மட்டுக்கு மிஞ்சியிருக்கிறது. மேற்கூறிய வாலிபத்தொண்டர் கூட்டம் ஊர் ஊராய்ச்சென்று, ஒவ்வொரு பெற்றோர்களையும் தத்தம் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்படி வற்புறுத்தவேண்டும், பள்ளிக்கூடத்திற்குச் செல்லும், பிள்ளைகளின் கணக்கு ஒன்று தயாரித்து வருஷாவருஷம் கூடும் வாலிபத்தொண்டர் கூட்டத்தில் ஒவ்வொரு வாலிபத்தொண்டர் செய்த முயற்சியைப்பற்றிப் பேசவேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில், ஆங்கிலக்கல்வியின் அவசியத்தைச் சொல்லாமலிருக்கமுடியாது. தமிழ்க்கல்வி மட்டும், சிறிதளவு கற்றவர்கள் எவ்வளவு விவேகிகளாயிருந்தாலும், சமூகத்தில் வேரூன்றி வழக்கத்திலிருந்துவரும் குருட்டுக் கொள்கைகளைத் தாண்டிச்செல்லச் சக்தியற்றவர்களாகவிருக்கிறார்கள். காவல் சுதந்தரத்தை கைவிடேன் என்று மறுக்கிறார்கள். சிறுதேவதைகளுக்குக் கொடை கொடுப்பதாகக் கூறிக்கொண்டு பெரும் பணத்தை வாரி யிறைக்கிறார்கள். ஆங்கிலக்கல்வியின் பயனை ஒரு சிறிதேனும் ஒருவனடைந்தாலொழிய, இவ்வித வழக்கங்களை மறக்க முடியாது. சமூக வாழ்வை அடியோடு மாற்றக்கூடிய கல்வி ஆங்கிலக்கல்வி ஒன்றே. ஆங்கிலங்கற்றவன் எவனாவது, மேலே கூறிய கொள்கையைப் பின்பற்றுவதைக் கேட்டிருக்கிறீர்களா? இல்லையே. கலாசாலையில் சென்று, படிப்பதற்கு வழியில்லாது போயினும், சாதாரணமாகப் பேசிப்பழகுவதற்கு தகுந்த அளவேனும் ஆங்கிலக்கல்வி அவசியம். இது கூடாத காரியம் என்று பிறர் எண்ணலாம். சரியாகக் கையெழுத்துப்போடக் கற்றுக்கொள்ளாத ஒரு சமூகம் ஆங்கிலக் கல்வி கற்கும் நிலையையும், பக்குவத்தையும், அடையக்கூடுமா? பகீரதப் பிரயத்தனமாகவன்றோ தென்படுகிறது. கல்வி கற்கவேண்டுமென்ற ஆசைமட்டும், மறவர்களிடை தோன்றிவிட்டால் வழிகள் தானாகவே தோன்றிவிடும். மனவிருத்தியுண்டானால் இடவிருத்தியுண்டு என்று சொல்வதை நாம் கேட்கவில்லையா? முயற்சிமட்டும் இடைவிடாது செய்துவந்தால் ஆயிரக்கணக்காய் ஆங்கிலம் கற்ற மறவர்களை கண்ணால் காண்பது ஒரு பெரியகாரியமா?

(பாண்டியன்.)

---

## சிவில் வெடெரினரி டிபார்ட்மெண்ட், மதராஸ்,

(மிருக சிகிட்சை இலாகா.)

### அடைப்பான்.

அடைப்பான் என்ற வியாதியானது மிருகங்களெல்லாவற்றிற்கும் வரக்கூடிய ஒருவகை நோய். அது அதிசீக்கிரத்தில் கொல்லக்கூடியது. அந்த நோய்க்கு காரணம் ஒரு சிறு விஷப்பூச்சி. அப்பூச்சி மிருகத்தின் இரத்தத்தில் போய்ச்சேர்ந்து, அங்கே அதிசீக்கிரம் விருத்தியாகிறது.

அடைப்பான் நோய்க்குக் காரணமாகிய விஷப்பூச்சி சாதாரணமாக பூமியில் இருப்பதினால், அந்த நோய் மேய்கிற பிராணிகளை அநேகமாய்ப் பீடிக்கிறது; அவை கால்நடைகள், எருமை, வெள்ளாடு, செம்மறி ஆடு, குதிரை இவைகளும் மான், காட்டு எருமை முதலியவை

போன்ற காட்டு மிருகங்களும், ஒட்டகம், யானை, இவைகளுக்குக்கூட இந்நோய் வந்திருக்கிறது. நாய், பூனை, பன்றி இவைகள் இந்நோயால் பீடிக்கப்பட்டால், அதற்குக் காரணம் அடைப்பான் வியாதியினால் இறந்துபோன மிருகங்களின் மாமிசத்தை தின்பதுதான்.

அடைப்பான் வியாதியினால் இறந்த பிராணியின் மாமிசத்தை சமையல் செய்யாமல் தின்றால் மனிதனுக்கும் இந்நோய் வரக்கூடும். ஆனால் இது சாதாரணமாக "கொடும்புண்" (Malignant Pustule) என்னும் வியாதியாக ஏற்பட்டு விடுகிறது.

அடைப்பானுக்குக் காரணமாகிய விஷப்பூச்சிகள் மனிதசரீரத்தில் ஏதாகிலும் ஒருகாயம் இருந்தால் அது வழியாக உட்சென்று இவ்வியாதியை உண்டாக்கிவிடுகிறது. உதாரணமாக, அடைப்பான் வியாதியினால் இறந்த பிராணியின் தோலை உரிக்கும்போது கையில் ஏதேனும் காயமிருந்தால், அக்காயத்தின் வழியாய் விஷப்பூச்சிகள் தேகத்திற்குள் செல்லுகின்றன. இதனால் அம்மனிதன் கையில் "கொடும்புண்" (Malignant Pustule) உண்டாகும். டாக்டரைக் கொண்டு உடனே தகுந்த சிகிட்சை செய்யாமல்போனால், அக்கிருமிகள் இரத்தத்திற்குள் சேர்ந்து அம்மனிதனை கொன்றுவிடும். ரோமம் வியாபாரம் செய்யும் இங்கிலாந்து முதலிய நாடுகளில் அடைப்பான் நோய் மற்றொருவிதமாக மனிதனுக்கு வருவதுண்டு. அதற்கு "ரோமம் பிரித்தெடுப்போருக்கு வரும் ஒருவகை நோய் (Wool-sorter's disease)" என்று பெயர். அடைப்பான் நோயால் இறந்த பிராணிகளின் உடம்பிலிருந்து ரோமத்தை எடுத்து அதைத் தூசி போகும்படி உதறும்போது கிளம்பும் தூளியில் அடைப்பான் நோய்க்குக் காரணமான விஷப்பூச்சிகளும் கலந்திருக்கின்றன. அதை தொழிலாளிகள் சுவாசத்தின் வழியாய் உட்கொள்ளுவதினாலும் இவ்வகை நோய் உண்டாகிறதென்று தெரியவருகிறது. அடைப்பான் நோய் மனிதனுக்கும் வரக்கூடியதென்றும் அதனால் அதைப்பற்றி வெகு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டுமென்றும் மேற்சொல்லிய விஷயங்களிலிருந்து நமக்குத் தெரியவருகிறது. அதனால்தான் அடைப்பான் வியாதியினால் இறந்த பிராணி என்று தெரிந்து அதின் தோலை உரித்தால், அது இ.பி.கோ. 269, 270 பிரிவுகளின்படி குற்றமாகிறது.

கால்நடை, எருமை, வெள்ளாடு, செம்மறி ஆடு இவை இந்த நோயால் பீடிக்கப்பட்டால், வியாதியினால் அவஸ்படுவதுகூட நமக்குத் தெரியாமல் சீக்கிரம் இறந்துவிடுகின்றன. காலையில் மேயப்போகையில் நன்றாயிருந்து, மேயப்போன இடத்தில் வயலில் சாயங்காலம் செத்துக்கிடந்ததையும் மேய்ந்த பிறகு வீட்டுக்கு வருகையில் நன்றாயிருந்து மறுநாட்காலையில் செத்துப்போனதையும் நாம் வெகு சாதாரணமாய்க் கேள்விப்படுகிறோம். இவ்வாறு ஏற்படும் எல்லாவித சாவுகளும் அடைப்பானால் உண்டானவையென்று கருதவேண்டும். விசேஷமாக, உடம்பு அதிகமாக பெருத்தும் ஆசனவாய் முட்டியும், வாய், மூக்கு, ஆசனவாய் முதலிய இடங்களிலிருந்து ரத்தம் கலந்த நீர் வடிந்துகொண்டும் இருக்கிறவைகளும் அடைப்பான் வியாதி கண்டவையென்றே சந்தேகிக்கவேண்டும்.

ஏதாவது ஒரு பிராணி கடுமையான அடைப்பான் வியாதியினால் முதன்முதல் பீடிக்கப்படும்போது ஒருவர் பக்கத்தில் இருந்தால், பின்வரும் குணங்களை கவனிக்கலாம். முதலில் நடுக்கம் காண்கிறது. உடனே உடம்பின் சூடு 106 டிகிரி அல்லது அதற்குமேல் ஏறுகிறது. கொம்புகளும் கால்களும் சில்லிட்டு, அசைபோடுவது நின்று, கண் சிவந்து மூச்சுத்திணறிவிடும். வயிற்றுவலி உண்டாகி, ரத்தம் கலந்த சாணம் போடுவதும் வழக்கம். வயிறு பொரும ஆரம்பித்து, மூச்சு வரவரத் திணறி, மூக்குவழியாக ரத்தம் ஒழுகும். வெகு சீக்கிரத்தில் பிராணி நிற்கமுடியாமல் தடுமாறி, வியாதிகண்ட 2 மணிக்குள்ளாக கீழே விழுந்து உதைத்துக்கொண்டு செத்துவிடும்.

சிலசமயங்களில், மாடுகளுக்கு அடைப்பான் வியாதி கொஞ்சம் லகுவாயும் காணும். அப்போது மேற்சொல்லிய குணங்களிருப்பதோடுகூட, மாடு 24 மணி நேரத்திற்கு மேல்பட்டு உயிருடனும் இருக்கலாம். தொண்டை அடைப்பான் மாதிரி, தொண்டை வீக்கமும் உண்டாகலாம். ஐந்தாவது துண்டுப்பத்திரிகையில் சொல்லியபடி, இவ்வாறு உண்டாகும் வியாதி தொண்டை அடைப்பானு அல்லது அடைப்பான் வியாதியாவென்று நிச்சயம் பண்ணுவதற்கு, பிராணி செத்தபிறகு இரத்தத்தை எடுத்துப் பரிசோதிக்கவேண்டும். அவ்வாறு செய்யமுடியாதபட்சத்தில், சந்தேகமாயிருப்பவைகளை அடைப்பான் வியாதியென்றே எண்ணி செத்த பிணத்தை அப்படியே புதைத்து விடவேண்டும்.

அடைப்பான் வியாதி குதிரைகளுக்கு வந்தால், ஆடு, மாடு சாவதுபோல் அவ்வளவு சீக்கிரத்தில் இவை சாகிறதில்லை. அவைகளுக்குக் காணப்படும் குணங்களாவன: அதிக சுரம், சிவந்த கண், வயிற்றுவலி, மாடுகளுக்கு காண்பதுபோன்ற தொண்டை வீக்கம், கழுத்து வீக்கம். வெக்கை வியாதிபோல் ஒரு பிராணியிலிருந்து மற்றொரு பிராணிக்கு அடைப்பான் வியாதி சுலபமாய்த் தொத்தாமலிருப்பது, கால்நடை சொந்தக்காரர்களின் அதிர்ஷ்டமே. முன் சொல்லியபடி அடைப்பான் விஷப்பூச்சிகள் பூமியிலிருப்பதாலும் புல்வழியாய் உட்கொள்ளப்படுவதாலும் சாதாரணமாக மேய்கையில் ஒரே ஒரு மாடு அப்பூச்சிகளை உட்கொண்டு சாகலாம். இருந்தாலும், மேய்ச்சல் நிலத்தில் வெகு அதிகமாக விஷப்பூச்சிகளிருந்தால், அநேகம் பிராணிகள் சொற்ப நாட்களில் செத்துப்போகலாம்.

வைக்கோல், புண்ணாக்கு முதலியவைகள் வியாதியிருந்த இடங்களிலிருந்து வந்தால், அவைகள் மூலமாக வியாதி பரவலாம். அத்தீனியை அநேக மாடுகள் தின்றால் அவைகளுக்கெல்லாம் வெகு சீக்கிரத்தில் இந்த வியாதி காணலாம். சில வேளையில், ரயில், கப்பல் போன்ற இடங்களில் தனியாய் அடைபட்டிருக்கிற பிராணிகளில் ஒன்றுக்கு இவ்வியாதி காணக்கூடும். அப் பிராணியினின்று வடிகின்ற ரத்தம் முதலியவைகளின் மூலமாய் அநேகம் சாகலாம். அடைப்பான் வியாதியி



னால் இறந்த பிராணியின் தோலை உரிக்கக்கூடாது என்பதற்குக் காரணம் மனிதனுக்கு அதனால் அபாயம் நேரிடக்கூடுமென்பது மாத்திரமன்று; வேறு காரணமுமுண்டு. அதை விளக்கிக்காட்டுவது முக்கியமானது. அடைப்பானுக்குக் காரணமாகிய சிறு கிருமிகள், வியாதிகண்ட பிராணியின் இரத்தத்தில் இருக்கின்றனவென்றும் அவ்வியாதியினால் செத்த பிராணி முழுவதையும் கொளுத்தி எரித்துவிட்டால் அப்பூச்சிகள் முழுவதும் அழிந்துபோகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அவ்வாறு செய்யாமல் அந்தப் பிராணியை அறுத்து, அவ்விஷப்பூச்சிகளை வெளிப்படுத்தினால், காற்றினால் அவைகளின் உருவம் மாறுகிறது. அப்போது அவைகளுக்கு பினைல் (Phenyle) போன்ற சாதாரண தைலங்களின் வேகத்தைத் தடுக்க சக்தி உண்டாகிறது. வெகு கடினமான சீதோஷ்ண ஸ்திதியினால் தவிர, மற்றெவ்விதத்திலும், அவை அழிவதில்லை. இவ்விதம் உருவம் மாறின விஷப்பூச்சிகளுக்கு "ஸ்போர்" (Spore) என்று பெயர். அடைப்பான் விஷப்பூச்சிகள் பூமியிலும் தீனியிலும் இருப்பது இப்படிப்பட்ட ஸ்போர்களாகத்தான். பிராணியின் தேகத்திற்குள் சென்றவுடன், பழைய உருவத்தை மறுபடியும் அடைந்து, விருத்தியாகின்றன.

இந்நாட்டு பூமியில் அடைப்பான் ஸ்போர்கள் வெகு அதிகமாக இருப்பது எதனால் என்பது இப்போது நன்றாகத் தெரியவரும். ஒரு கிராமத்தில் ஏதாவது ஒரு பிராணி செத்தால், அது தொத்து வியாதியாயிருந்தாலும் இல்லாமல் போனாலும், அப்பிணத்தை உடனே சக்கிலியிடம் கொடுப்பது வழக்கம். அச்சக்கிலி தனக்கு எவ்விடம் சௌகரியமாயிருக்குமோ அவ்விடத்தில் அப்பிராணியை அறுத்து அதன் ரத்தம் முதலியவைகளை கீழே சிந்திவிடுகிறான். அப்பிராணி அடைப்பான் வியாதியினால் செத்திருந்தால், அந்நிலத்தில் அவ்விஷப்பூச்சிகள் வெகுநாள் தங்கியிருந்து, அங்கே மேயும் பிராணிகளுக்கு எப்போதும் அபாயகரமாயுள்ளதாயிருக்கின்றது. தவிர, நாய், நரி, கழுகு முதலியவைகள், மாமிசவகைகளை அவ்விடமிருந்து எடுத்துக்கொண்டுபோய் பக்கத்திலுள்ள நிலங்களையும் வியாதிக்கு ஆஸ்பதமாக்கிவிடுகின்றன.

பட்சிகள் சம்பந்தப்பட்டமட்டில், அவைகள் அடைப்பான் வியாதியினால் பீடிக்கப்படுவதில்லை. ஆனால் அடைப்பான் விஷப்பூச்சிகள் (Spores) எவ்விதத் தீங்குமின்றி அப்பக்ஷிகள் தேகத்தின் வழியாய்ச்சென்று, அவைகள் போடும் மலங்களினால் நிலங்களை அடைப்பான் வியாதிக்கு ஏதுவாக்கிவிடுகின்றன. ஆகையால், அடைப்பான் வியாதியினால் செத்த பிராணியை சரிவர அடக்கம் செய்யவேண்டுமானால் அப்பிராணியை செத்த விடத்திலேயே போட்டு எரித்துவிடவேண்டும். அது சரிப்படாவிட்டால், ரத்தம் முதலியவைகள் வழியில் ஒழுகாமலிருக்கும்பொருட்டு, வாய், மூக்கு, ஆசனவாய் இவைகளை பினைலில் (Phenyle) நனைத்த சணற்கூளம், ரோமம் அல்லது துணியினால் நன்றாக அடைத்து, பிராணி செத்தவிடத்தில் கிடக்கும் வைக்கோல், சாணம், மண் முதலியவைகளோடு பிணத்தைத் தகுந்த இடத்திற்குக் கொண்டுபோய் கொளுத்திவிடவேண்டும்.

அவ்வாறு கொளுத்துவதற்கு போதுமான விறகு இல்லாமல்போனால் பிணத்தை அப்படியே 6 அடி ஆழமுள்ள ஒரு குழியில்போட்டு, சுண்ணாம்பினால் மூடி, மண்ணைப் போடவேண்டும். கொட்டகை ரயில் முதலிய அடைப்பான இடங்களில் அடைப்பான் வியாதியினால் ஒரு பிராணி செத்தால், தரையை 6 அங்குல அளவுக்கு, கூடுமானால், தோண்டி அதை எரித்துவிடவேண்டும். வேறு பிராணி அதில் கட்டுவதற்கு முந்தி, மற்ற பாகங்களை பினைலைக்கொட்டி நன்றாகத் தேய்த்துக் கழுவவேண்டும்.

செத்த பிராணியை அவ்விடத்தில் உரித்திருந்தால் அவ்விஷப் பூச்சிகள் அதிக உஷ்ணத்தினால் சாகும்படி, அத்தரையில் நெருப்பைப்போட்டு எரிப்பது வெகு நலம். சில வேளையில் அடைப்பான் வியாதியினால் இறந்ததென்று தெரியாமல் பிணத்தை உரித்துவிடுவதுண்டு. ஆனால், அதன் மண்ணீரல், ரத்தம், இவ்விரண்டின் குணங்களிலிருந்து உடனே வியாதியின் தன்மையைத் தெரிந்துகொள்ளலாம். ரத்தம் தார்போல் வெகு கறுப்பாயும், சீக்கிரத்தில் கட்டியாகாமலுமிருக்கும். மண்ணீரலோ மிகவும் பெரிதாயிருக்கும்.

இவ்விரண்டு குணங்களையும் கண்டால் உடனே பிணத்தை மூடி, முன் சொல்லியபடி அடக்கஞ் செய்யவேண்டும்.

அடைப்பான் வியாதியின் சிகிச்சையைப்பற்றி யோசிப்போமானால், அது கொஞ்சமேனும் பிரயோஜனமில்லையென்பது நன்றாகத் தெரியவரும். வியாதியின் கடுமையினால், சிகிச்சை செய்வதற்கு சாதாரணமாக அவகாசமிருப்பதில்லை. கடுமையில்லாமல்போனாலும், இவ்வியாதியினால் சாகும் பிராணிகள் வெகு அதிகம். அதைக் குணப்படுத்தக்கூடிய மருந்து ஒன்றும் நமக்குத்தெரியாது.

நாம் செய்யக்கூடியதெல்லாம், என்னவென்றால், வியாதி அப்போது மாத்திரமன்றி எப்போதும் வாராமல் தடுப்பதற்கு ஏற்பாடு செய்வதுதான். அது எப்படியென்றால், முன் கூறியபடி செத்த பிராணியை தோல் உரிக்காமல் அப்படியே புதைத்துவிடுவதுதான்.

வெக்கை, தொண்டை அடைப்பான், இவ்வியாதிகளுக்கு அம்மை குத்துவதுபோல், அடைப்பான் வியாதிக்கும் அம்மையால் உண்டு. சமீபத்திலுள்ள வெடெரினரி அசிஸ்டெண்டுக்கு எழுதி அதை வரவழைத்துக்கொள்ளலாம். ஒரேமந்தையில் அநேகம் பிராணிகள் அடைப்பானால் செத்தாலும், தீனி, ஸந்தேகிக்கத்தக்கதாயிருந்தாலும், தனியாய் அடைக்கப்பட்ட பிராணிக்கு வியாதி வரும்போலிருந்தாலும், அவ்வித அம்மை குத்துவது நலம்.

F. WARE,
*Chief Superintendent,*
*Civil Veterinary Department.*

## உலக வர்த்தமானம்.

உலகத்திலுள்ள பூச்சிகளில் பட்டுப்புழு தேனீ இவ் விரண்டுமே வீடுகளில் வளர்க்கப்படக்கூடிய பூச்சிகளாம்.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கு முன் உலகத்தின் ஜனத்தொகை 100 கோடிக்குக் கீழிருந்து, இப்பொழுது ஏறக்குறைய 170 கோடிக்கு மேலாகிவிட்டது.

அமெரிக்காவில் மதுவை முற்றிலுமாக நீக்கி அதை ஒழிக்கப் பிரயாசப்பட்டதில் கடந்த வருஷம் அத்தேசத்தாருக்கு 183,000,000 பவுண் லாபமானதாம்.

அல்பான்ஸோ (King Alfonso) என்னும் ஸ்பானிய அரசன் தனக்கென்று ஒரு பொருட்காட்சிசாலை கட்டியிருக்கிறாராம். முன்னால், பற்பலசமயங்களில் அவரைக் கொலைசெய்ய யத்தனித்தபொழுது உபயோகிக்கப்பட்ட ஆயுதங்களெல்லாம் அதில் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

பற்பல இங்கிலீஸ் கலாசாலைகளில் வாசிக்கும் பெண் மாணவரின் தொகை இப்பொழுது ஏறக்குறைய 9,000. 1877-ம் ஆண்டில் அதாவது ஐம்பது வருஷங்களுக்கு முன் வாசித்த பெண்கள் 71 பேர் மாத்திரமே.

ஜப்பானில் அரசுபுரியும் ஒரு ராஜகுடும்பமானது உலகத்தில் பெரிய தனவந்தர் என்று பேர் பெற்றுள்ள ராஜகுடும்பங்களில் ஒன்றாம். அவர்களுக்கு ஏறக்குறைய 100,000,000 பவுண் பெறுமான ஆஸ்தியிருக்கிறதாம்.

கடந்த ஐந்து வருஷங்களில் இங்கிலாந்தில் நூறு வயதில் அல்லது அதற்கு மேற்பட்டு மரித்திருக்கும் ஸ்திரீகள் 439 பேராம். அதே காலங்களில் 'நூறு பிராயம் கடந்து மரித்த ஆண்கள் 112 பேர் மாத்திரந்தான்.

லண்டன் பட்டணத்தில் ஒவ்வொரு வருஷத்திலும் ஒவ்வொரு சதுரமைலுக்கு 300 டன்னுக்கு மேலாய் ஒட்டடை விழுகிறதாம். இது, பார்லிமெண்ட் கட்டடத்திற்கு மேலுள்ள கெடியாரக் கோபுரத்தின் உயரத்தைப்போல் நாலு பங்கு உயரமான சிகரம் கட்டுவதற்குப் போதுமானதாம்.

உலகத்தில் பேர்பெற்ற திரவிய சம்பன்னரான ராக்பெலர் என்றவர் தனது தொண்ணூறாவது வருஷ பிறந்தநாளை யாதொரு வீண் டம்பமின்றி கொண்டாடினார். இவர் பெரிய கோடீஸ்வரன். பாப்திஸ்த் சபையைச் சேர்ந்தவர். இந்த கோடீஸ்வரன் வருஷா வருஷம் தன் திரவியத்திலிருந்தும் நானாவித பரோபகார ஊழியங்களுக்காக 21,000,000 டாலர் தருமம் செய்து வருகிறார். அமெரிக்கா தேசத்தில் பிரக்கியாதி பெற்றவர் மூவர், ராக்பெலர், எடிஸன், போர்ட். எடிஸன் நவீன யந்திரங்களைக் கண்டுபிடிக்கும் சாஸ்திரி, போர்ட் பேர் பெற்ற என்ஜினியர்.

பர்மோசாவிலுள்ள ஒரு காட்டுஜாதியார் மனிதர்களின் மண்டை ஓட்டைக்கொண்டே வீடு கட்டியிருக்கிறார்களாம்.

காஷ்மீர் சமஸ்தானத்தைச்சேர்ந்த ராஜெளரி கிராமத்தில் ஒரு பிராமணருக்கு நாலு காலும் நாலு கையும் உள்ள ஒரு குழந்தை பிறந்திருக்கிறதாம்.

இங்கிலாந்தில் லண்டனுக்கும் நியூகாஸுக்கும் இடையில் ஓடும் பெரிய மோட்டார்பஸ் வண்டிகளில் சிற்றுண்டிக் கடைகளும், படுக்குமிடங்களும், கக்கூசுகளும் இருக்கின்றனவாம்.

குறிசொல்லுவோர்:—தூத்துக்குடி மார்க்கமாகக் குறி சொல்லிப்பிழைக்கும் தெருச் சாஸ்திரிகள் 50 பேர் கொழும்புக்கு வந்தார்கள். ஆனால் ஏதாவதொரு உத்தியோக சம்பந்தமாக அல்லாமல் இம்மாதிரி வயிற்றுப் பிழைப்புக்குப் பரதேசிகள்போல் பணஞ்சேர்க்க வருவோரை இலங்கை ஏற்றுக்கொள்வதில்லையாம்.

திண்டுக்கல்லில் ஆச்சரியப் பிறவி:— திண்டுக்கல்லுக்கு ஐந்து மைல்களுக்கப்பாலுள்ள பஞ்சம்பட்டி என்னும் கிராமத்தில் வன்னிய வகுப்பு கந்தோலிக் கிறிஸ்தவப் பெண்ணுக்கு சென்ற மாதம் விசித்திரமான குழந்தை பிறந்ததாக தெரிகிறது. அப்பெண்ணுக்கு இரட்டைக்குழந்தைகள் ஒன்றாய்ப் பிறந்ததாயும் அக்குழந்தைகளுக்கு ஒரே வயிறும் இரண்டுகால்களுமிருந்தபோதிலும் இரண்டு தலைகளும் நான்கு கைகளுமிருந்ததாயும் அக்குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் இறந்துவிட்டதாம். அந்த ஆச்சரியப்பிறவியைப் பார்க்க நூற்றுக்கணக்கான ஜனங்கள் சென்றதாயும் தெரிகிறது.

சில விநோத ஆகாரங்கள்:— அரேபியாதேசத்து ஜனங்களுக்குக் குதிரையின் மாம்சம் மிகவும் பிரியமான ஆகாரம். எகிப்துதேசத்தில் ஒட்டகத்தினுடைய சில அவயவங்கள் முக்கிய உணவாய் உபயோகம். கொச்சின், சைனா என்னும் தேசத்தவர்களுக்கு அழுகிப்போன கோழிமுட்டை அதிகப்பிரியம். தென் ஆப்பிரிக்கா கண்டத்தில் பாம்பு, எலி இவைகளை ஆகாரமாய் உபயோகிக்கின்றார்கள். க்ரீமியா, க்ரீஸ், இந்தியா, மடகாஸ்கர், சிரியா, அரேபியா முதலிய தேசங்களிலும் ஆப்பிரிக்கா முதலிய தேசங்களிலும் ஆப்பிரிக்கா கண்டத்தில் ஹாடண்டாண்ட் ஜாதியாராலும் வெட்டுக்கிளி பலவித ஆகாரங்களாக உபயோகப்பட்டு வருகிறது.

சேலம் ஜில்லா திருச்செங்கோட்டிலுள்ள நாககிரி மலையின்மீது வாழக்கல் என்ற ஒரு குன்று இருக்கின்றதாம். பிள்ளையில்லாத மாதர்கள் அதனை மும்முறை சுற்றிவந்தால் பிள்ளைப்பேறு ஏற்படுகிறதாக நம்புகின்றனர். பன்னிரண்டு திங்கள் நாகமலையைச் சுற்றிவந்தும் இப்பொழுது பலர் மக்கட்பேறடையாதிருக்கிறார்கள். என்று சேவற்கொடியோன் எழுதுகிறார்.

டாக்டர் எட்வின் ஸ்லாசன் என்பவர் இனி உயிர்களைக் கூட மருந்துகளைக்கொண்டு சிருஷ்டிக்க முடிவதோடு மனிதரின் பிறவிக்குணத்தைக்கூட மருந்துகளைக்கொண்டே மாற்றிவிடலாமெனக் கூறுகிறார். சர்க்கரையை சில முறைகளை அனுசரித்து உபயோகித்தால் பயங்கொள்ளியைக்கூட அதிக தைரியமுள்ளவனைச் செய்துவிடலாமென்று அதே டாக்டர் கூறுகிறார். மருந்துவகைகளைக்கொண்டே ஆண்களைப் பெண்களாகவும் மாற்றிவிட முடியுமென்றும், இரத்தத்தில் சில மாறுதல்கள் செய்தாலே போதுமானதென்றும் அவர் கூறுகிறார்.

---

அமெரிக்கன் மிஷன் லிறைக்ஸ் பிரஸ், பசுமலை,—1930.

1647

REG. NO.–M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

18 JUN 1930

"நன்மைக்குத் தீமை செய்கிறவன் எவனோ, அவன் வீட்டைவிட்டுத் தீமை நீங்காது."

Vol. X.] மேீ 1930 [இலக்கம் 1

## பஞ்சாங்கம்.

| 1930 | சுக்கிலவூ சித்திரைமீ 19 | | மேமீ | | பிரமோதூதவூ வைகாசி18 | 1930 |
|---|---|---|---|---|---|---|
| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
| | | | | 1 சித் 19 | 2 20 | 3 21 |
| 4 22 | 5 23 | 6 24 | 7 25 | 8 26 | 9 27 | 10 28 |
| 11 29 | 12 ○30 | 13 31 | 14 வைகா 1 | 15 2 | 16 3 | 17 4 |
| 18 5 | 19 6 | 20 7 | 21 8 | 22 9 | 23 10 | 24 11 |
| 25 12 | 26 13 | 27 ● ✲ 14 | 28 15 | 29 16 | 30 17 | 31 18 |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## உசிலம்பட்டி பாஸ்டரேட்டில் கிராம முன்னேற்ற முயற்சி.

நாம் இருக்கும் கிராமத்தை நாம் நேசித்தால் கீழே சொல்லப்பட்டவைகளில் சிலவற்றையாவது கையாடுவதினால் உதவி புரியலாம்.

I. விவசாயம்—(சர்க்கார் ஆலோசனை சொல்ல ஆவலாயிருக்கிறார்கள்.)

1. சீமைக்கலப்பைகள் உபயோகிப்பதின் பிரயோஜனம் விதைக்கலப்பை (பருத்தி முதலியவற்றிற்கு)
2. நல்ல உரங்கள் தயாரிக்கும் விதம்.
   a. பசுந்தாள் உரம்—கொழுஞ்சி, தக்கைப்பூடு, மொச்சை, அவரை, வேறெந்த கழிவு இலை தழை.
   b. குப்பை உரம்—மணல் உரம், (கோமியம்)—குழி உரம்.
   c. உப்பு உரங்கள் உபயோகிக்க ஆலோசனை,
      எழும்புத்தூள், சல்பேட் உப்பு, அம்மோனியா உப்பு, நைட்ரேட் உப்பு.
3. பொறுக்கி எடுக்கப்பட்ட விதைகளை விதைப்புக்குச் சேகரித்தல்.
4. காலா காலப் பயிர் செய்தல்.
5. சிக்கனமாக விதை பாவுதல்.

II. நல்ல மாடுகள் வளர்த்தல்— சிந்தி மாடு (பாலுக்கு) காங்கயம் மாடு (வேலைக்கு)

III. கல்வி—வாலிபர் கல்வி.

1. பள்ளிக்கூடத்தை விட்டுவிட்ட மாணவர் படித்தவைகளை உபயோகிக்கிறார்களா?
2. இராப்பள்ளிக்கூடங்கள்.
   a. வாசிப்பு— பத்திரிகை, கதை, சர்க்கார் விளம்பரம்.
   b. எழுதுதல்—கடிதம், பத்திரம், கோட்டு.
   c. கணிதம்—மனக்கணக்கு, கணக்கு, எழுதிவைக்கும் பழக்கம்.
3. வாசிப்பு சாலை.
4. பெண் கல்வி.

IV. சுகாதாரம்.

1. பள்ளிக்கூட சுத்தம்; பள்ளிக்கூட மாணவர் வீடுகள் சுத்தம், கிராம சுத்தம், கிராம பாதைகள் சுத்தம்.
2. தொற்று வியாதிகள்—வெறிநாய்கடி முதலியவைகளுக்கு மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து சிகிட்சைசெய்யத் தூண்டுதல்.
3. கால் நடைகள் வியாதிகளுக்கு மிருக சிகிட்சை தேடுதல்.
4. குஷ்டரோகம்.

V. வீட்டுக்கைத்தொழில்—கிழிந்த துணிகள் தாங்களே தைக்குதல், பாய் நெசவு பெட்டி முடைதல், கயிர் பின்னல் முதலியவை.

VI. கோழி வளர்த்தல்— சீமைக்கோழி, சாதிக்கோழி வளர்ப்பதினால் லாபம்.

VII. மதுவிலக்கு —பத்திரிகை, புஸ்தகம், நாடகம் படப்பிரசங்கம் மூலமாய் அறிவூட்டுதல்.

VIII. சாரணர்.

IX. கள்ளிக்கோட்டை ஓடுகள் உபயோகிக்க ஆலோசனை (நெருப்பு பயம்—சிக்கனவு—அழகு).

X. நாடகம். (ஆடம்பரமற்றதும் ஒரு மணி நேரத்தில் முடியக்கூடியதுமானது).

சீர்திருத்தத்திற்கான விஷயங்களின் பேரில் பள்ளிக்கூட மாணவரால் மாதம் ஒரு தடவை கிராமத்தாருக்கு நாடக ரூபமாக அறிவு புகட்டல்.

சுகாதாரம் கிராம சுத்தம், ஈ, கொசு, எலி, கொக்கிப்புழு, கூட்டுறவு சங்கம், விவசயம், மதுவிலக்கு, பெண்கல்வி முதலிய பலபொருட்களின் மேல் சிறு நாடகம் எழுதி உபயோகிப்பதோடு மற்றவர்களுக்கு உதவியாக பிரமலை பத்திரிகைக்கும் அனுப்பலாம்.

XI. பொதுக்கூட்டங்கள்—சர்க்கார் உத்தியோகஸ்தர், பக்கத்து கிராம உபாத்திமார், மற்ற பிரசங்கிமாரைக்கொண்டும் படம், சினிமா, பஜனை பிரசங்கம் முதலிய உதவிகொண்டு பொதுக்கூட்டங்கள் வைத்தல்.

XII. இதில் காட்டப்படாத மற்ற பல கிராம உதவிகள்.

XIII. கிராம பள்ளிக்கூடம்—கிராமத்தின் சந்தோஷமான இடம்—சகலத்திற்கும் மாதிரி

சுத்தம், அழகு, சாதாரண ஜோடிப்பு, மாதிரி தோட்டம், கையால் வரைந்த படங்கள், பொருட்காட்சிசாலை முதலியவைகளால் பள்ளிக்கூடம் கிராமத்தார் விரும்பும் இடமாக வைக்குதல்.

XIV. குறிப்பு:—

1. மேற்சொன்ன காரியங்கள் நமது கிராமத்தில் நடந்தேற முதலாவது பிரியம் காட்ட வேண்டும்.
2. இவைகளில் சிலவற்றையாவது செய்ய கிராமத்தாரை தூண்டவேண்டும்.
3. மற்றவர்களுக்கு முன் மாதிரியாக இருக்கும்படி நாம் செய்துவரும் காரியங்களை மற்றவர்களுக்கு சொல்லியும் வரவேண்டும்.

கிராமத்தார் நம்மை விரும்பவேண்டுமானால் அவர்களுக்கு இப்படிப்பட்ட உதவிகள் செய்வதினால் அவர்களை வசப்படுத்துவதோடு கிராமத்தையும் முன்னிலும் கொஞ்சம் அதிகம் முன்னேற்றமடையச் செய்யலாம்.

Rev. George Athishtam,

---



## BOY SCOUTS.
## சாரணச் சிறுவர்.

சென்னை நகரில் ஒரு தெருவில் ஓர் ஏழை மனிதனிருந்தான். அவன் பருத்தி ஆலையில் வேலை செய்துவந்தான். ஒருநாள் அவனுடைய மனைவியும் இரண்டுபிள்ளைகளும் சுரத்தினால் வருந்தினார்கள். அந்த ஏழைமனிதனுக்கு அவர்களை வீட்டில் வைத்துக்கொண்டு வைத்தியம் செய்ய முடியவில்லை. ஆகையால் அவன் அவர்களைச் சென்னையிலுள்ள பெரிய வைத்தியசாலைக்குக் கொண்டுபோய் அங்குள்ள வைத்தியர்களிடம் ஒப்படைத்துவிட்டு வீட்டிற்கு திரும்பிவந்தான். அந்த மனிதனுக்கு ஒரு வயதுள்ள ஒரு பெண்குழந்தையுமிருந்தது. அவன் அந்தக் குழந்தையை காப்பாற்ற என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தான். மறுநாள்முதல் அவன் வழக்கப்படி காலையில் 6-மணிக்கு ஆலையில் வேலைக்குப் போய்விடவேண்டும். சென்னையில் அறிமுகமானவர்கள் எவருமே இருக்கவில்லை. அவன் இதை எல்லாம் நினைத்து நினைத்து அந்தநாள் எல்லாம் துக்கமாய் இருந்தான்.

மறுநாள் காலையில் அவன் தன் சிறுகுழந்தையைப் படுக்க வைத்துத் தூங்கப்பண்ணினான். பின்பு பக்கத்துவீட்டு பையனிடம் வீட்டுச் சாவியைகொடுத்துவிட்டு வேலைக்குப் போய்விட்டான்.

சாவிபெற்ற பையன் பெயர், சம்பத்குமாரன். அவன் சென்னை வெஸ்லியன் கல்லூரியில் ஐந்தாம் பாரத்தில் படித்துக்கொண்டிருந்தான். அவன் சாரணர் கூட்டத்தைச் சேர்ந்தவன். சம்பத்துக்குத் தன்னிடம் சாவிகொடுத்துச் சென்ற ஏழை மனிதனின் நிலைமை தெரியவந்தது. அவன் அந்த ஏழை மனிதனுக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று.

சம்பத்துக்குச் சந்திரன் என்று நண்பன் ஒருவன் இருந்தான். சந்திரனும் சாரணர் சங்கத்தைச் சேர்ந்தவன். சம்பத் சந்திரனிடம் தன் கருத்தைத் தெரிவித்தான். அதைக் கேட்டவுடனே, சந்திரன் சம்பத்தைப் பார்த்து, 'நீ சொல்வது சரிதான். சாரணர்களாகிய நாம் மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கென்றே இருக்கிறோம். ஆனால், நாம் மற்றவர்களுக்குத் தெரியாமல் உதவி செய்யவேண்டுமே. நாம் எப்படி அந்த மனிதனுடைய வீட்டிற்குள் போகமுடியும்?' என்று கேட்டான். அதற்குச் சம்பத்து. 'சந்திரா! அந்த மனிதன் என்னிடம்தன் வீட்டுச் சாவியை கொடுத்துவிட்டுப் போயிருக்கிறான். நாம் இருவரும் அவன் வீட்டிற்குப் போவோம் அங்கே சென்று அவனுடையக் குழந்தையை மாலை $5\frac{1}{2}$-மணி மட்டும் பராமரிப்போம். அதோடு அந்த மனிதனுடைய வீட்டில் அவன் செய்யவேண்டிய காரியங்களையும் செய்வோம். சாயங்காலம் அவன் ஆறுமணிக்கு வீட்டிற்குத் திரும்பி வருவான். அவன் வருகிறதற்குள் நாம் குழந்தையை தூங்க பண்ணிவிட்டுக் கதவைப்பூட்டிக்கொண்டு வீடு திரும்பிவிடுவோம். அந்தமனிதன் வந்து நாம் செய்துவைத்தவைகளைக் கண்டு மிகவும் மனங்களிப்பான்' என்றான்.

சந்திரன் சம்பத்தின் வார்த்தைகளைக்கேட்டு அவனை மெச்சினான். பின்பு, இருவரும் அந்த ஏழை மனிதனுடைய வீட்டிற்குபோக ஆயத்தமானார்கள். சந்திரன் தன் வீட்டுத் தோட்டத்திற்குச் சென்று அங்கிருந்த பல அழகிய பூக்களைப் பறித்துக்கொண்டான். பிறகு இருவரும் ஏழை மனிதனின் வீடு சென்றார்கள். அவர்கள் அங்கே சென்றபொழுது அக்குழந்தை வீறிட்டு அழுதுகொண்டிருந்தது. சந்திரன் ஓடிச்சென்று குழந்தையை இரண்டு கைகளாலும் வாரி எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டான், தான் கொண்டுவந்திருந்த புஷ்பங்களைக் காட்டிக்கொண்டிருந்தான். அதற்குள் சம்பத்து சிறிதுபாலை எடுத்து அடுப்பில் சுடவைத்தான். பின்பு சரியானபடி சர்க்கரை சேர்த்து அதைச் சந்திரனிடம் கொண்டுவந்து கொடுத்தான். சந்திரன் அதை அக்குழந்தைக்கு ஊட்டினான். அப்பொழுது சம்பத் சமையல் வேலையிற் புகுந்தான்.

சாயங்காலத்திற்குள் இருவரும் அந்த வீட்டில் செய்ய வேண்டிய வேலைகள் எல்லாவற்றையும் செவ்வையாகச் செய்து முடித்தார்கள். அந்த நாள் முழுவதும் குழந்தை அழவே இல்லை. சாயங்காலம் சந்திரன் பாட்டுப்பாடிக் குழந்தையைத் தூங்கவைத்தான். பின்பு இருவரும் வீட்டைப் பூட்டிக்கொண்டு தங்கள் தங்கள் வீட்டிற்குப்போய் விட்டார்கள்.

மாலையில் அந்த ஏழைமனிதன் ஆலையிலிருந்துநேராக வைத்தியசாலைக்கு சென்று தன் மனைவியையும் பிள்ளைகளையும் பார்த்துவிட்டு வெகுகவலையோடு வீடுசென்றான். அவன் அங்கே நடந்திருந்த காரியங்களையெல்லாம் கண்டு மிகவும் ஆச்சரியமடைந்தான். அவனுக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவே இல்லை. அன்று அவன் நன்றாய்ச் சாப்பிட்டுப் படுத்துத் தூங்கினான்.

இப்படியே ஏழுநாட்கள் சென்றன. அந்த ஏழு நாட்களிலும் சந்திரனும் சம்பத்தும் அந்த மனிதனுடைய வீட்டில் எல்லாக் காரியங்களையும் செய்து வந்தார்கள். அவர்கள் சாரணர்களாகையால் அவர்களுக்குச் செய்யத் தெரியாத காரியங்களே இருக்கவில்லை. அவர்கள் வெகுதந்திரமாகத் தாங்களித்துக்கொண்டே உதவிசெய்தார்கள். எழாம் நாள் அந்த ஏழை மனிதனுடைய மனைவியும் பிள்ளைகளும் குணமடைந்து வைத்திய சாலையிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்தார்கள். அப்பொழுது அந்தக்குடியானவன் தன் மனைவியைப்பார்த்து, 'இந்த ஏழுநாளும் நம்முடையவீட்டில் தேவதூதர்கள் வந்து எனக்கும் குழந்தைக்கும் எல்லா உதவிகளும் செய்துவிட்டுப்போனார்கள்' என்றான். அந்த இரு சாரணச் சிறுவர்களும் இரண்டு தூதர்கள் என்றே நீங்களும் நினைக்கிறீர்கள் அல்லவா?

(பொக்கிஷ பாணி.)

# மார்க்கக்கல்வி கற்பிப்பதில் சம்பாஷணை அல்லது கேள்வி முறையின் பிரயோஜனம்.

## The Discussion Method in Religion Education.

Rev. R. R. Keithahn.

(கிராம ஆசிரியத் தோழன்)

நான் எடுத்துக்கொண்ட பொருள் மார்க்கக் கல்வி கற்பிப்பதில் அதிகமாய் உபயோகிக்கப்படாத முறையாகிய சம்பாஷணைமுறை. இந்த முறையை நாம் அதிகமாகக் கையாடவேண்டும்; அதினால் அதிக நன்மைகள் உண்டு. இந்த முறை பிள்ளையை யோசிக்கும்படி செய்கிறது. அவனை ஆராயும்படி தூண்டுகிறது. உபாத்தியாயருடைய உதவியில்லாமல் தானே தன்னுடைய ஜீவியத்தில் யோசித்துச் செய்யவேண்டிய காரியங்கள் வருகிற காட்களை உத்தேசித்து, அது மாணுக்கனை பயிற்றுவிக்கிறது. மாணுக்கனுடைய கஷ்டங்களை அறிந்துகொள்ளும்படியாக இது உபாத்தியாயருக்கு அநுகூலமாயிருக்கிறது. மாணுக்கனுடைய சுபாவத்தையும் தேவைகளையும் காட்டக்கூடிய சாதனமாயிருக்கிறது. ஜீவியத்தில் இயற்கையானதும் அதிக பிரயோஜனமானதுமான சம்பந்தமாகிய மாணுக்கனும் உபாத்தியாயரும் சேர்ந்து உழைத்தலே இந்த முறை. கடவுள் எல்லாருக்கும் பிதாவென்பதையும், மனுஷர் யாவரும் சகோதரர் என்பதின் கருத்தையும் விளங்கிக்கொள்ளும்படியாக இது மாணுக்கனை ஆயத்தப்படுத்துகிறது. சேர்ந்து ஆராய்ச்சி செய்வதன் பயனாக சிநேகத் தன்மை விருத்தியாகிறது. பிற்பாடு கடவுளின் உதவி எவ்வளவு அவசியம் என்கிற உணர்ச்சி உண்டாகிறது. இதிலிருந்து ஜெபஞ்செய்யவேண்டுமென்கிற ஆசை இயற்கையாகவே உண்டாகிறது. வளர்ச்சி வரவர நம்முடைய ஜீவியத்திலும், நம்முடைய உடன் மாணுக்கர்களுடைய ஜீவியங்களிலும் நம்முடையதல்லாத ஒரு வல்லமையை அறியும் உணர்ச்சி படிப்படியாய் உண்டாகிறது. இவைகளின் மூலமாய் கடவுளை தெளிவாய் அறிந்துகொள்ளும் அறிவு உண்டாகிறது.

மாணுக்கனுடைய கேள்விகளையும், செய்யவேண்டிய காரியங்களையுமே பாடத்தின் ஆரம்பமாக வைத்துக்கொள்ளவேண்டும். உதாரணமாக, எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் அயோக்கியத்தனம் கவனிக்கப்படத்தக்க ஒரு காரியமாயிருக்கிறது. ஒரு பையன் பொய் சொன்னால், அல்லது தப்பிதமான ஒரு காரியத்தைச் செய்தால், அதைப்பற்றி வகுப்பில் பேசவேண்டும். அது சரியா? அதற்கு என்ன செய்யலாம்? பையன்களும் பெண்களும் இதைப்பற்றிப் பேசி ஒரு முடிவு சொல்லட்டும். பொய் பேசினால் பள்ளிக்கூடம் நடைபெறுமா? அயோக்கியத்தனம் பள்ளிக்கூடத்திலிருந்தால் எல்லாரும்சேர்ந்து உழைக்க முடியுமா? பொய் பேசுவதனால் யாருக்கு அதிக கஷ்டம்? இப்படிப்பட்ட கேள்விகளும் இதர கேள்விகளும் வரும்; மாணுக்கர்கள் உபாத்தியாயருடைய உதவியைக்கொண்டு இந்தக் கேள்விகளுக்கு யோசித்து விடை கண்டுபிடிக்கட்டும். பிற்பாடு மாணுக்கர்கள் உபாத்தியாயருடைய அபிப்பிராயமென்னவென்று கேட்பார்கள். மாணுக்கர்கள் தாங்கள் செய்யவேண்டியவைகளை யெல்லாம் செய்த பிற்பாடுதான், உபாத்தியாயர் தம்முடைய அபிப்பிராயத்தை வெளியிடவேண்டும். நல்ல உபாத்தியாயர் மாணுக்கர்களை இயேசுகிறிஸ்துவினுடைய வார்த்தைகள், மலைப்பிரசங்கம், அல்லது பகவத் கீதை, குரான் முதலிய புஸ்தகங்களை வாசிக்கும்படி செய்து தங்களுடைய கேள்விகளுக்கு விடை கண்டு பிடிக்கும்படி உதவி செய்யவேண்டும். இவைகளின் மூலமாக மாணுக்கருக்கு புது அறிவு உண்டாகும். இன்னும் அதிக சம்பாஷணை நடக்கும். அபிப்பிராயங்களும் எண்ணங்களும் மாறுதலடையலாம். எல்லாவற்றிலும் விசேஷமாக புதிய எண்ணங்களுக்கிணங்க கிரியைகள் ஆரம்பிக்கும். இப்பொழுதுதான் உபாத்தியாயரும் திடகுணமுள்ள மாணுக்கரும் பலவீனமுள்ள சகோதரனுக்கும் சகோதரிக்கும் உதவிசெய்து தங்கள் அன்பையும் சிநேகத்தையும் காட்டவேண்டும். உண்மையாய் நடந்துகொள். வேண்டிய விஷயங்கள் வரும்பொழுதெல்லாம், உபாத்தியாயர் ஒரு வைதிக வழிகாட்டியாயிருக்கவேண்டும். மாணுக்கர்களே திட்டமான சில விதிகளைக் கண்டுபிடித்துக்கொள்ளலாம். இவைகளை எழுதி சட்டம்போட்டு சுவரில் தொங்கவிட்டுக்கொள்ளலாம். ஆனால் ஒரு விஷயத்தை மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். இது ஒரு முறையல்ல; மாணுக்கர்கள் தாமே எப்படி கற்றுக்கொள்ளலாம் என்பதைக் காட்டக்கூடிய ஒரு ஆலோசனைதான்.

காலாகாலத்தில் கடவுளை எப்படி ஆராதிக்கலாம் என்கிற கேள்வியுண்டாகும். கடவுள்யார்? அவர் எங்கேயிருக்கிறார்? நம்முடைய ஜெபங்களை அவர் எப்படிக் கேட்கக்கூடும்? நாம் ஏன் அவரைப்பார்க்க முடியாது? அவருக்கு ஏன் பல பெயர்கள் இருக்கின்றன? ஏன் அநேக தேவர்களிருக்கிறார்கள்? ஏன் சில தேவர்கள் கெட்டவர்களாயிருக்கிறார்கள்? ஏன் நாம் விக்கிரகங்களை வணங்கக்கூடாது? விக்கிரகங்களை வணங்குவது சரியில்லையா? இப்படி முடிவில்லாமல் கேள்விகள் கேட்கலாம். நல்ல உபாத்தியாயர் தம்முடைய வேதசாஸ்திரக் கொள்கைகளையெல்லாம் ஒரே நேரத்தில் பிள்ளைகளுக்குப் போதிக்க ஆத்திரப்படக்கூடாது. அவர் போதிக்கமாட்டார். மாணுக்கர்களோடு விஷயங்களைப்பற்றித் தாராளமாய்ப்பேசுவார். மாணுக்கர்களே அதிகமாய்ப்பேசும்படி இடங்கொடுப்பார். கடினமான சமயங்களில் சரியான கேள்விகளைக்கேட்டு அவர்கள் உண்மையைக் காணும்படி வழி நடத்துவார். புது எண்ணங்கள் கொஞ்சங்கொஞ்சமாய் உண்டாகும். மாணுக்கர்கள் எல்லாரும் பொதுவாய் ஒப்புக்கொள்ளுகிற எண்ணங்களை கரும்பலகையில் எழுதலாம். நன்றாய்ச் சம்பாஷித்த பிற்பாடு ஒவ்வொரு மாணுக்கனுக்கும் அவனவனுக்குப் பிரியமான விஷயத்தைப்பற்றி அதிக அறிவு கிடைக்கக்கூடிய சாதனத்தைக் காட்டலாம். அவன் ஆராய்ந்தறிந்த விஷயங்களை வகுப்பிலே வந்து சொல்லட்டும். இன்னும் அதிக சம்பாஷணை நடக்கட்டும். முந்தின எண்ணங்கள் மாறுதலடையலாம். மாணுக்கர்கள், தாமே தினந்தோறும் நடத்தக்கூடிய ஒரு ஆராதனை ஒழுங்கை எழுதி வைத்துக்கொள்ள விரும்



பலாம். தங்களோடு கடவுளைப்பற்றிப் பேசும்படியாக தங்களைவிட மூத்த ஒரு ஆளை வரவழைக்கலாம். கடவுளுடைய இயற்கை அழகின் அற்புதத்தைப் பார்க்கும்படியாக அவர்கள் ஏதாவது ஒரு இடத்துக்குப்போகலாம். உபாத்தியாயர் மாணுக்கனுக்குத் தோழனாகி, அவனுடைய கஷ்டமான காரியங்களில் ஒரு அண்ணனைப்போல அல்லது தகப்பனைப்போல்பேசி உதவி செய்தால், மாணுக்கன் சொல்ல ஆசைப்படும் விதிகளுக்கு முடிவில்லையென்று பார்க்கலாம். உபாத்தியாயர் அவனோடு பின்செல்லவேண்டும். அவன் ஒரு பொழுதும் ஒரேவழியிலேயே செல்லமாட்டான். இரண்டு வகுப்புகள் ஒரு காரியத்தை ஒரே விதமாகச் செய்யமாட்டா. ஆனால் அவர்களை அவர்கள்பாட்டில் விட்டுவிட்டால் அவர்கள் பூரண ஜீவியம்பண்ணி மனுஷரோடும், தங்கள் பரமபிதாவோடும் நெருங்கி வருவார்கள்.

மேலே சொன்ன விஷயங்களைச் சுருக்கி கடைசி ஆலோசனையாய்ச் சொல்ல விரும்புகிறேன் :—

1. மாணுக்கர்களைத் தாராளமாய் சம்பாஷிக்க விட்டுவிடு. ஒருவனையாவது பேசாமல் தடைபண்ணுதே. ஒவ்வொரு பிள்ளை சொல்வதையும் கேள். ஒவ்வொரு மாணுக்கனும் பேசுகிற நேரத்துக்கும் ஒரு அளவு இருக்கவேண்டும். ஆனால் அந்த அளவை மாணுக்கர்களே ஏற்படுத்திக்கொள்வது நல்லது.

2. சொல்லுவதை அமைதியாயும், கவனமாயும் கேள்; அவசியமானால்தான் அவர்களுக்கு உதவிசெய். வருந்திக் கேட்டாலொழிய அல்லது உன் அபிப்பிராயங்களை வெளியிடாதே.

3. மாணுக்கர்கள் தங்கள் சம்பாஷணையை நடத்தும்படியாகச் சமயம் கொடுக்கவேண்டும். அதிக அவசியமானால் உபாத்தியாயர் பக்கத்திலிருந்து அவர்களை நடத்தலாம்.

4. உபாத்தியாயரால் அல்லது மாணுக்கர்களால் ஏதாவது ஒரு நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒரு சபையை, நியமித்துக்கொள்ளவேண்டும். வகுப்பு நடபடிக்கைகள், கஷ்டங்கள், வெளியிலிருந்து வந்து பேசுகிறவர்கள், வேறே இடத்துக்குப் போதல் முதலிய விஷயங்களைப்பற்றி இவர்களோடு கலந்து பேசிக்கொள்ளலாம்.

5. தங்களுடைய கேள்விகளுக்கு விடைவேண்டிய மாணுக்கர் தங்களுடைய கேள்விகளை எழுதிப் போடும்படியாக ஒரு கேள்விப் பெட்டியை பள்ளிக்கூடத்தில் வைக்கவேண்டும்.

6. ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி பிள்ளைகள் அதிகமாய் அறிய விரும்பினால் அவர்களுக்கு ஆலோசனை சொல்லத்தயாராய் இரு. பள்ளிக்கூடத்துக்கு ஒரு புஸ்தகசாலையிருக்கவேண்டும். அதை மாணுக்கர்கள் உபயோகப்படுத்த வேண்டும்.

7. மாணுக்கர்கள் பள்ளிக்கூடத்தைவிட்டு தங்கள் கிராமங்களுக்குப் போகும்போது தங்கள் ஜீவியத்தில் சில கஷ்டங்களை சேர்ந்து ஆலோசிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆகையால் ஹிந்து, மகம்மதிய, கிறிஸ்தவ மாணுக்கர்கள் முதலிய யாவரும் பள்ளிக்கூடத்திலேயே, மற்ற காரியங்களோடு மதசம்பந்தமான காரியங்களையும் சேர்த்து யோசிக்கலாம்.

8. மாணுக்கர்கள் ஏதாவது ஒரு சத்தியத்தை அல்லது பல சத்தியங்களை அறியும்படி அவர்களை நடத்த ஜாக்கிரதையாயிரு. பிற்பாடு அவைகள் பிரயோஜனமாயிருக்கும்படி அவைகளை எழுதி வைத்துக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்வதனால் தன்னுடைய ஜீவியத்தில் உண்டாகிற வளர்ச்சியை மாணுக்கன் அறிந்துகொள்ளுவான்.

9. எண்ணங்களைச் செய்து முடிக்கும்படியான சமயங்களைக் கண்டுபிடிக்கும்படியாக மாணுக்கர்களை நடத்தவேண்டும். இந்தக் கடைசி விஷயம் அதிக முக்கியம். எண்ணங்கள் செய்கைகளாக மலராவிட்டால் அவ்வெண்ணங்கள் செத்தவைகள்.

# கிறிஸ்தோபேரின் சரித்திரம்.

## THE STORY OF CHRISTOPHER

### ஒபேர் என்னும் போர்வீரன்.

முன்னேர் உரைத்த ஒரு பக்தனுடைய சரித்திரத்தை இன்றைக்கு வாசிப்போமாக. அநேக வருஷங்களுக்கு முன்னே கிரேக்கு தேசத்திலுள்ள ஒரு சிற்றூரிலே ஒபேர் என்னும் ஒரு வாலிபன் இருந்தான். ஒபேர் அத்தேசத்திலுள்ள எல்லாரையும்விட வளர்த்தியில் உயரமானவன். அது மாத்திரமல்ல, குத்துச் சண்டையிலும், சிலம்ப வித்தையிலும், கூத்தாட்டத்திலும் மகா தேர்ச்சியுடையவனும் இருந்தான், அந்த வாலிபன் தகுந்த வயதுள்ளவனானபோது அத்தேசத்தை ஆளுகிற இராஜாவினுடை சேனையில் போர்ச்சேவகனுகச் சேர்ந்துகொண்டான். அந்த இராஜாவுக்காகப் பல யுத்தங்களில் சண்டை செய்தான். பின்பு ஒரு பெரிய போர்வீரன் என்று பேர் வாங்கினான்.

ஒபேர் என்னும் போர் வீரன், 'என் தேசத்தை ஆளுகிற இராஜா அத்தனை பெரிய இராஜாவல்ல, உலகத்திலுள்ள எல்லா அரசர்களையும்விட மிகவும் மேலான ஒரு மகா ராஜாவைத் தேடிக் கண்டடைந்து, அவருக்குக் கீழே சேவகனுய் இருப்பேன்' என்று தீர்மானம்பண்ணி, தன் உத்தியோகத்தையும் தேசத்தையும் விட்டுப் புறப்பட்டான்.

### ஒபேர் ஒரு மகா ராஜாவைத் தேடிப்போனது.

இப்படிப் பல தேசங்களில் திரிந்து தான் கருதினபடியே ஒரு மகா ராஜாவைக் கண்டுபிடித்து அவரிடம்போய்ச் சேர்ந்தான். அந்த இராஜா உண்மையில் மகா பெரியவர்தான். உலகத்தின் ஜனங்களெல்லாம் அந்த மகா ராஜாவுக்குப்பயந்து அடங்கியிருந்தார்கள். ஒபேர் அந்த இராஜாவைப்பார்த்து, 'இவர் உலகத்திலுள்ள ஒருவருக்கும் பயப்படாத உயர்ந்த இராஜா' என்று அறிந்து அவருக்குச் சேவகனுனான்.

ஒருநாள் அந்த மகா ராஜாவின் அரண்மனையில் ஒரு பாடகன் வந்து பாட்டுப்பாடினான். அவன் அப்படிப்பாடும்போது சாத்தான்பிசாசு என்னும்பேர் அந்தப் பாட்டில்

ஓரிடத்தில் வந்தது. இராஜா அந்தப்பேரை கேட்டவுடன் தன் நெற்றியிலே தன் கையால் சிலுவைக்குறி போட்டான். ஓபேர் அதைப்பார்த்து, 'மகா இராஜாவே! நெற்றியில் ஏன் சிலுவைக்குறி போடுகிறீர்கள்?' என்று தாழ்மையோடு கேட்டான்.

போர் வீரனுடைய பேதைமையைப்பற்றி இராஜா நகைத்து அவனைப்பார்த்து, 'சாத்தான் பிசாசு என்னைச் சேதப்படுத்தாதபடி நான் சிலுவைக்குறி போட்டேன்' என்று சொன்னார்.

போர்வீரன் இராஜாவைப்பார்த்து, 'மகா ராஜாவே! நீர் மிகவும் பெரியவராச்சே? சாத்தான் பிசாசைப்பற்றி உமக்குப் பயமிருக்கிறதா? சாத்தான் பிசாசு உமக்குச் சேதம் செய்யக்கூடுமோ?' என்று கேட்டான். அதற்கு மகா ராஜா, 'ஆம், சாத்தான் பிசாசைப்பற்றி எனக்கு பயமிருக்கிறது' என்று சொன்னார்.

போர்வீரன் இதைக்கேட்டு, மகா ராஜாவைப் பார்த்து, 'மகா ராஜாவே! உலகத்தில் ஒருவருக்கும் பயப்படாதவரும் உலகத்திலுள்ள எல்லா இராஜாக்களையும்விடப் பெரியவருமான ஒரு ராஜாவுக்குச் சேவகனாகவேண்டும் என்ற ஆசையுடனே நான் என் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு வந்தேன்; இப்போது சாத்தான் பிசாசுக்கு நீர் பயப்படுகிறபடியால் சாத்தான் பிசாசு உம்மைவிடப் பெரியவராயிருக்கிறதாக எனக்குத் தெரிகிறது. ஆகையால் நான் சாத்தான் பிசாசுக்குச் சேவகனாகும்படி புறப்பட்டுப்போகிறதே நல்லது' என்று சொல்லி, சாத்தான் பிசாசைத் தேடிப் புறப்பட்டான்.

## ஓபேர் சாத்தான் பிசாசைத் தேடிப்போனது.

இவ்விதமாய்ப்பேதமையுள்ளவனாகிய ஓபேர் சாத்தான் பிசாசைத் தேடிக்கொண்டு ஒரு வனாந்தரமார்க்கமாய்ப் போகும்போது வெகுதூரத்தில் பயங்கரமான இன்னொரு பெரிய போர்வீரன் தனக்கு நேராய்வந்துகொண்டிருக்கிறதைக் கண்டான். அந்தப் பயங்கரமான போர்வீரன் ஓபேர் என்பவனைப் பார்த்து அவன் கிட்ட நெருங்கி வந்து, 'நீ எங்கே போகிறாய்?' என்று உரத்த சத்தமாய் அதட்டிக் கேட்டான். அதற்கு ஓபேர், 'நான் சாத்தான் பிசாசு என்பவரைத்தேடி அவருக்குச் சேவகனாக இருக்கப்போகிறேன்' என்றான். அந்த பயங்கரமான போர்வீரன், 'நான்தான் சாத்தான் பிசாசு' என்று அச்சமுறும்படி சொன்னான். இதைக் கேட்டு ஓபேர் என்ற வீரன், 'அப்படியானால், நான் உமக்கே சேவகனாயிருப்பேன்' என்று வாக்குக்கொடுத்தான்.

பிற்பாடு இருவரும் சேர்ந்து போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் அப்படிப் போய்க்கொண்டிருக்கும் போது, வழியருகே தூரத்தில் ஒரு சிலுவைமரம் நாட்டப்பட்டிருப்பதை இருவரும் கண்டார்கள். சாத்தான் பிசாசு அந்த வழியைவிட்டு விலகி, பாழ்வனத்தை நோக்கி வெகுவேகமாய் ஓடினான். ஓபேரும் அவனுடைய சேவகனானபடியால், அவன் பின்னாலே கூடவே ஓடினான். இப்படிச் சிலுவை கண்ணுக்கு மறைகிற பரியந்தம் ஓடி, அரைவட்டமாகத் திரும்பி, மறுபடியும் அதேவழியில் போய் சேர்ந்துகொண்டார்கள். அப்பொழுது ஓபேர் என்பவன் கொஞ்சநேரம் யோசித்துக்கொண்டேயிருந்து சாத்தான் பிசாசைப்பார்த்து, 'வந்த வழியைவிட்டு விலகி பாழ்வனத்தை நோக்கி ஓடி, இவ்வளவுதூரம் சுற்றிவந்து மறுபடியும் இதேவழியில் வந்து கூடினோமே. இதற்குக் காரணம் என்ன?' என்று தாழ்மையோடு கேட்டான்.

சாத்தான் பிசாசு மிகவும் வெட்கப்பட்டு அவனுக்கு மறுமொழி சொல்ல மனமற்றவனாய் இருந்தான். ஓபேரோ, 'நீர் இதற்குக் காரணத்தைச் சொல்லாவிட்டால், நான் உம்முடைய சேவகனாய் இருக்கமாட்டேன்; நான் வேறெங்கேயாவது போய்விடுவேன்' என்று உறுதியாகச் சொன்னான்.

அதற்குச் சாத்தான்பிசாசு, 'நீ போகவேண்டாம், நான் ஓடிப்போன காரணத்தைச் சொல்லுகிறேன் கேள். முன் ஒரு காலத்தில் இந்த உலகத்தில் இயேசுகிறிஸ்து என்னப்பட்ட ஒருவர் இருந்தார். அவருடைய சத்துராதிகள் அவரைப் பிடித்து ஒரு சிலுவை மரத்தின்மேல் கிடத்தி, அதில் அவரை ஆணியடித்து, அந்த சிலுவையைத் தூக்கி நிறுத்தினார்கள்: அதுமுதல் சிலுவையை நான் பார்க்கும்போதெல்லாம் அவருடைய பாடுகளால் எனக்கு மோசம் வருமென்று பயப்படுகிறேன். ஆகையால் நான் சிலுவையைக் கண்டால் ஓடிப் போகிறேன்' என்றான்.

அதற்கு ஓபேர், 'சிலுவையைக்கண்டு நீர் பயப்படுகிறீரே; அந்தச் சிலுவை இயேசு கிறிஸ்துவினுடையது. சிலுவையைப் பார்த்தமாத்திரத்தில் நீர் இப்படிப் பயந்தால் இயேசுகிறிஸ்துவைப் பார்த்தால் நீர் எவ்வளவோ அதிகம் பயப்படுவீர்? இந்த இயேசுகிறிஸ்துவைப்பற்றி இதுபரியந்தம் எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் இயேசுகிறிஸ்து உம்மைவிடப் பெரியவராய் இருக்கிறார் என்பது தெளிவாய் இருக்கிறது. இனிமேல் நான் உம்முடைய சேவகனாய் இருக்க முடியாது. இந்த மகா பெரிய இயேசுகிறிஸ்துவைத் தேடிப்போய் அவருக்குச் சேவகனாக இருக்கப்போகிறேன்' என்று சொல்லி சாத்தான் பிசாசைவிட்டுப் புறப்பட்டுப்போனான்.

## ஓபேர் வனவாசியிடம் வந்துசேர்ந்தது.

ஓபேர் என்ற போர்வீரன் அநேக நாட்களாகப் பல இடங்களில் எல்லாம் இயேசுகிறிஸ்துவைத் தேடிச் சுற்றித்திரிந்தான். கடைசியாய் ஒரு வனாந்தரத்தைக் கடக்கும்போது ஒரு வனவாசியைக்கண்டு அவனிடம் சேர்ந்து இயேசுகிறிஸ்துவைக் குறித்து அவனிடத்தில் விசாரித்தான்.

அந்த வனவாசி இயேசுகிறிஸ்துவைக்குறித்து ஓபேர் என்பவனுக்குப் போதித்தான். ஓபேர் வனவாசிசொன்னவைகளையெல்லாம்கேட்டு, 'இயேசுகிறிஸ்துவே உலகத்திலுள்ள எல்லா இராஜாக்களையும்விடப் பெரியவராய் இருக்கிறார். அவருக்கே நான் சேவகனாக ஊழியம்செய்வேன்' என்று பிரதிக்கினைபண்ணினான்.

வனவாசி ஓபேரைப்பார்த்து, 'நீ இயேசுகிறிஸ்துவின் பேரிலே இவ்விதமாய் பக்திவைத்தால் அவருக்குப் பணிவிடை செய்யவேண்டும்' என்றான். ஓபேர், 'அதுஎன்ன பணிவிடை?' என்றான் அதற்கு வனவாசி, 'நீ அடிக்கடி உபவாசம் பண்ணவேண்டியது' என்று சொன்னான்.



ஓபேரோ, கடவுள் எனக்குச் சரீர பெலத்தைக் கொடுத்திருக்கிறார்; நான் உபவாசம்பண்ணினால் என் பெலன் குறைந்துபோகும்; ஆகையால் நீ சொன்னபடி உபவாசம் பண்ணமுடியாது' என்று சொன்னான்.

அதற்கு வனவாசி, 'சரி, அப்படியிருக்கும்பட்சத்தில் நீ அடிக்கடி ஜெபம்பண்ணவேண்டியது' என்றான். ஓபேர், 'நான் ஜெபம்பண்ணிப் பழகினவனல்ல, ஆகையால் அதுவும் என்னால் முடியாது' என்றான்.

வனவாசி, இதையும்கேட்டு ஓபேரைப் பார்த்து, 'அப்படியானால், நீ இன்னொன்று செய். இத்தேசத்தில் ஒரு பெரிய ஆறு இருக்கிறது. அதிலே தண்ணீர் மிகவும் வேகமாய் ஓடுகிறது. ஒரு ஆளை அமிழ்த்தக்கூடிய ஆழமாயும் இருக்கிறது. அதை கடந்துபோகவேண்டிய மனுஷர்கள் அதில் இறங்கினால், நீர் ஓட்டம் அவர்களுடைய கால்களை வாரிவிடுகிறது. அவர்கள் தவறினால் விழுந்து அமிழ்ந்தி மாண்டுபோகிறார்கள். அந்த ஆறு உனக்கு தெரியுமா?', என்று கேட்டான்.

இதற்கு ஓபேர், 'அந்த ஆறு எனக்கு நன்றாய்த் தெரியும்' என்றான்.

வனவாசி ஓபேரைப் பார்த்து, 'நீ மகா தைரியமுள்ளவன், உயரமானவனும், பலசாலியுமாயிருக்கிறாய். ஆகையால் நீ அந்த ஆற்றண்டைக்குப்போய் இருந்து அதைத் தாண்டிபோகவேண்டியிருக்கிற ஜனங்களுக்கு உதவி செய்து அவர்களைத் தூக்கி அந்த ஆற்றைக் கடந்திவிடு. மற்றவர்களுக்கு இப்படி உதவி செய்வது இயேசுகிறிஸ்துவுக்கு உத்தம பணிவிடையாய் இருக்கும்' என்று சொன்னான்.

அதற்கு ஓபேர், 'சரி இந்த ஊழியத்தை நான்செய்யக்கூடியவனாய் இருக்கிறேன்; நான் இயேசுகிறிஸ்துவின் பேரில் பக்திவைத்திருக்கிறபடியால் அவருக்காக இந்தப் பணிவிடையை மன உற்சாகமாய் செய்வேன்' என்றான்.

அதற்குப்பிறகு ஓபேர் என்ற போர்வீரன் அந்த ஆற்றங்கரைக்குப் போய் அங்கே தனக்கு ஒரு குடிசையைக் கட்டி அதில வாசம்பண்ணினான். அவன் பெரிய தடி ஒன்றைவெட்டிச் செப்பனிட்டு ஊன்றுகோலாக வைத்துக்கொண்டான். மேலும் அவன் ஆற்றிலே இறங்கி அதைக் கடந்துபோகும் வழியில் எங்கெங்கே பள்ளம் இருக்கிறது, எங்கெங்கே மேடு இருக்கிறது என்று சோதித்து அறிந்துகொண்டான். அது முதல் அவன் அந்த ஆற்றைக் கடக்கவிரும்புகிற பிரயாணிகளை ஒவ்வொருவராய்த் தன் தோள்மேல் தூக்கி அவர்களுக்கு யாதொரு சேதமுமின்றி அக்கரைப்படுத்திக்கொண்டு வந்தான்.

## இயேசுகிறிஸ்துவும் ஓபேரும்.

இப்படியே அநேக நாட்கள் கடந்தது. பிறகு ஒரு நாள் ராத்திரியிலே ஓபேர் தன் குடிசைக்குள் படுத்துக்கொண்டிருக்கும்போது ஒரு குழந்தை கூப்பிடுகிற சத்தம் கேட்டது. அச்சமயத்தில் அவன் தூங்கவில்லை. விழித்துக்கொண்டு கிடந்தான். அந்தச் சத்தம் என்னவென்றால் 'என்னைத் தூக்கிக்கொண்டு போய் அக்கரையிலே விடு; என்னைத்தூக்கிக்கொண்டுபோய் அக்கரையிலே விடு' என்பதே.

இந்த சத்தத்தைக்கேட்டு ஓபேர் வெளியேபோய்ப் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. ஆகையால் மறுபடியும் போய் குடிசைக்குள் படுத்துக்கொண்டான்.

மறுபடியும் 'என்னைத் தூக்கிக்கொண்டுபோய் அக்கரையிலேவிடு' என்ற குழந்தையின் சத்தம் கேட்டது. அவன் திரும்பவும் குடிசையில் இருந்து வெளியேறி அங்கும் இங்கும் போய்ப் பார்த்தான யாருமே தென்படவில்லை. பிற்பாடு குடிசையில் போய் படுத்துக்கொண்டான்.

மூன்றும் தடவையும், 'என்னைத் தூக்கிக்கொண்டு போய் அக்கரையில் விடு' என்றுசொல்லுகிற அக்குழந்தையின் சத்தம் கேட்டது. 'இதென்ன ஆச்சரியம்?' என்று ஓபேர் சொல்லிக்கொண்டு மறுபடியும் குடிசைக்குவெளியே புறப்பட்டுப்போய்த் தேடிக்கொண்டு திரிந்தான். முதலில் ஒருவரையும் காணவில்லை. ஏனென்றால் இருட்டு அதிகமாய் இருந்தது. ஆனால் சற்று நேரத்துக்குள்ளாக ஆற்றங்கரையின் ஓரிடத்தில் ஒரு சிறு குழந்தை நின்றுகொண்டிருக்கிறதைக் கண்டு கிட்டப்போனான். அந்தக்குழந்தை, 'என்னைத் தூக்கிக்கொண்டுபோய் அக்கரையில் விடு' என்று கெஞ்சினது. ஓபேர், 'நான் உன்னைத் தூக்கிக்கொண்டுபோய் விடுகிறேன்' என்று சொல்லி, குழந்தையைத் தன் தோள்மேல் தூக்கிக்கொண்டு தன் பெரிய தடியை கையிலே பிடித்துக்கொண்டு ஆற்றிலே இறங்கி அக்கரைக்குப் போகப் பிரயாசப்பட்டான்.

ஓபேருக்கு ஆற்றிலேபோவது மகா கஷ்டமாகிவிட்டது. ஏனெனில், திடீரென்று அச்சமயத்திலே ஆற்றிலே வெள்ளம் புரண்டுவந்தது. தண்ணீர் அதிக வேகமாய் பாய்ந்தது. ஆறு ஆழமாகவும் இருந்தது. தண்ணீர் அவன் கால்களை வாரிவிட ஏதுவாயிருந்ததால் அடி எடுத்து வைப்பது அதிக கஷ்டமாயிற்று. அதோடுகூட ஓபேரின் தோள்மேல் இருந்த குழந்தையின் பாரமும் அதிகமாய் இருந்தது. இராத்திரிநேரத்திலே இவ்விதமாக ஆற்றைக்கடப்பது லேசான காரியமல்ல.

இப்படியாக ஓபேர் அதிக நேரமாக அவதிப்பட்டுக் கடைசியாய் அக்குழந்தையை அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தான்.

அவன் அந்தக் குழந்தையைத் தன் தோளிலிருந்து இறக்கிக் கரையிலே விட்டு, குழந்தையைப் பார்த்து, 'குழந்தாய்! நீ என்னை உயிர் மோசத்தில் அகப்படும்படி செய்துவிட்டாயே. உன்னைத் தூக்கிக்கொண்டுவந்தது எனக்கு மகா கஷ்டமாய் இருந்தது. நாம் இருவருமே வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்படுவோம் என்று நினைத்திருந்தேன் இந்த உலகத்தின் பளுவும் உன் பளுவும் சமமல்லவா? இந்த உலகத்தை என் தோள்மேல் சுமப்பதும் உன்னைச் சுமப்பதும் எனக்குச் சரியாகவே இருந்தது' என்று சொல்லி பெருமூச்சு விட்டான்.

'குழந்தையோ, நீ ஆச்சரியப்படாதே, இந்த உலகம் முழுவதையும் மாத்திரமல்ல அதை உண்டாக்கினவரையும்கூட நீ இன்றைக்கு உன் தோள்மேல் சுமந்துகொண்டு ஆற்றைக் கடந்துவந்தாய். இந்த உலகத்திலுள்ள எல்லா இராஜாக்களையும்விட ஒரு பெரிய இராஜாவுக்கு நீ சேவகனாக விரும்பினாய் அல்லவா? அந்த மகாராஜா நானே. இப்

போது நீ என்னைத் தாங்கிவந்தது எனக்கு செய்த ஊழியம் அல்லவா? அப்படியே இந்த ஆற்றைக் கடக்கும் பிரயாணிகளுக்கு நீ ஊழியம் செய்கிறபோதெல்லாம் நீ எனக்கே அந்த ஊழியத்தைச் செய்துவருகிறாய். நான் சொல்லுவது உண்மையென்று அறியும்படி. நீ உன் குடிசைக்குட்போய் உன்பெரிய தடியைக் குடிசைக்குப் பக்கத்தில் நட்டுவை. காலையிலே அது பூத்து கனி தந்திருக்கிறதைக் காண்பாய். இதுவே நான் சொன்னதற்கு அத்தாட்சி' என்று சொல்லி, ஒபேரை ஆசீர்வதித்து மறைந்துபோய்விட்டது.

ஒபேர் உடனே ஆற்றைத்தாண்டி தன் குடிசைக்கு வந்து தன் பெரிய தடியைக்குடிசையின் பக்கத்தில் நட்டு வைத்துப் போய்ப் படுத்துக்கொண்டான். அவன் காலையில் எழுந்துவந்து அதைப் பார்த்தபோது அதில் இலைகளும், பூக்களும், பழங்களும் இருக்கக்கண்டான், அவன் உடனே முழங்கால்படியிட்டுத் தனக்குத் தரிசனைக்கொடுத்த இயேசுக்கிறிஸ்துவுக்குத் தோத்திரம்பண்ணி, தன் ஜீவியகாலமெல்லாம் பிரயாணிகளை ஆற்றைக் கடத்திவிட்டான்.

இதினிமித்தம் ஜனங்கள் எல்லாரும் ஒபேர் என்பவனுக்கு கிறிஸ்தோபேர் என்று பேரிட்டு அழைத்தார்கள். கிறிஸ்தோபேர் என்னும் பதத்திற்கு கிறிஸ்துவைத் தாங்கிச் சுமந்தவன் என்று அர்த்தமாம்.

முன்னோர்கள் இந்தக் கதையின் கருத்தை பின்வருமாறு சொல்லுவார்கள்.

(1) உலகத்திலுள்ள எல்லா இராஜாக்களைப் பார்க்கிலும் பெரிய இராஜாவின் சேவகனாய் இருக்கும்படி அவரைத் தேடுவது உத்தமம்.

(2) இந்த மகா ராஜா இயேசுகிறிஸ்துவே.

(3) மற்றவர்களுக்குப் பணிவிடை செய்வது மகா ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவுக்குச் செய்கிற விசேஷித்த ஊழியமே.

(4) அந்த மகா ராஜாவாகிய இயேசுகிறிஸ்து ஆடம்பரத்தோடு அல்ல, ஒரு சிறு நேசமுள்ள குழந்தையாகவே தமது பக்தருக்குக் காணப்படுகிறார்.

---

## நாம் மறந்து விடவேண்டிய சில விஷயங்கள்.

என் தாயார் பார்த்தவர்களெல்லாரிலும் என்னைப் போல் மறதியுள்ள பையன் இல்லையென்பதாக அவர்கள் அடிக்கடி எனக்குச் சொல்வதுண்டு. அவர்கள் என்னை கடைக்கு அனுப்பி ஆறு சாமான்களை வாங்கிவரச் சொன்னால் நான் அவற்றில் சிலவற்றை மறந்துவிட்டு சிலவைகளைமட்டுமே வாங்கி வருவேன். காலையில் பல்லைத் துலக்கி முகங்கழுவி கை கால்களை சுத்தஞ்செய்ய நான் மறந்துவிட்டதில்லை. ஏனெனில் இவை எல்லாரும் ஞாபகத்தில் வைக்கக்கூடியவைகளே. ஆனால், மாலையில் வீட்டிற்கு சரியான நேரத்தில் வந்துசேரவேண்டுமென்பதை மறந்து, விளையாட்டில் அதிகமாய் என் நேரத்தைப் போக்கிவிடுவேன். நான் படிக்கும் பாடங்கள் என் மனதில் தங்குகிறதில்லை. வேதவாக்கியங்களை மனப்பாடம்பண்ணி ஒப்பித்தல் எனக்கு அதிகக் கஷ்டமாயிருக்கும்.

விறகுகளைக் கொண்டுவந்து போடவும் தண்ணீர் நிரப்பவும் என் தாயார் அடிக்கடி எனக்கு ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கவேண்டும். மேஜை நாற்காலிகளை ஒழுங்காக வைக்கவேண்டுமென்பதைப்பற்றியும் நான் அடிக்கடி மறந்து போகிறதுண்டு. யாரையேனும் சந்திக்க நேரிட்டால் "சலாம், நீங்கள் சுகமாயிருக்கிறீர்களா" என்று சொல்ல மறந்து விடுவேன், வீட்டிற்குள் வரும் பொழுது கைகால்களை சுத்தஞ் செய்ய மறந்துவிடுவேன்.

இதைப் பார்க்கும்பொழுது என் தாயார் துணிந்து, அவர்கள் எனக்குப் போதித்த இந்த நல்வினைகளையெல்லாம் எனக்கு ஞாபகமூட்ட என் கை விரலில் ஒரு சிறு நூற்கயிற்றைச் சுற்றிக் கட்டுவார்கள்; ஆனால், அவர்கள் எடுத்த பிரயாசை பலிக்கவில்லை. ஏனெனில் என் கையில் நூற்கயிறு கட்டப்பட்டிருக்கிறதை முதலாய் நான் மறந்துபோய் விடுவேன்.

நமது ஞாபக சக்தி நம்மை சில வேளைகளில் மோசம் போக்கிவிடுகிறதென்று நான் எண்ணுகிறதுண்டு. எப்படியெனில் நான் ஞாபகத்தில் வைக்கவேண்டுமென்று எண்ணும் விஷயங்கள் தீர்மானங்கள் என் மனதில்ரா. நான் மறந்து போகவேண்டுமென்று எண்ணுகிறவைகளோ அடிக்கடி என் ஞாபகத்திற்கு வந்துகொண்டிருக்கும். இன்றைக்குங்கூட நான் சிறு பையனாயிருந்த காலத்தில் கற்ற எனக்குப்பிரியமில்லாத அநேக விஷயங்களை நான் மறந்துவிட வேண்டுமென்று எண்ணினாலும் அவை என் மனதை விட்டு முற்றிலுமாய் நீங்குகிறதில்லை.

உங்களிலும் அநேகர் தங்கள் மனைவிமார் ஒரு கடிதம் கொடுத்து அதைத் தபாலில் போட்டுவிடும்படி சொன்னால், அதைப் போட மறந்து அநேக நாட்களாய் சட்டைப் பைக்குள் வைத்திருந்தவர்கள் உண்டு. நான் இதைச் சொல்லும் இக்ஷணத்தில் தானே என் மனைவி தன் சகோதரிக்கு எழுதின ஒரு கடிதத்தை நான் நேற்றையதினமே தபாலில் போட்டிருக்கவேண்டியதற்குப் பதிலாக இன்னமும் என் சட்டைப் பைக்குள் வைத்திருக்கிறேன்.

இவை யாவும் இப்படியிருந்தபோதிலும் சரியான விவேகத்தோடும் பகுத்தறிவோடும் நமது ஜீவியத்தில் சில விஷயங்களை மறந்துவிடுதல் ஓர் சிறந்த நல்லொழுக்கந்தான். நமது ஜீவியத்திலுள்ள பற்பல கசப்பான எண்ணங்கள் பலவித தவறுதல்கள் நமது இருதயங்களை சஞ்சலத்தால் நிரப்புகின்றன. இவை யெல்லாவற்றையும் அப்புறப்படுத்தி நமது ஜீவியத்தை நாம் சுத்திகரிக்க வேண்டும்.

(இன்னும் வரும்.)

அமெரிக்கன் மிஷன் விறேக்ஸ் பிரஸ், பசுமலை,—1930.

1588

REG. NO.—M. 2146

# THE
# Piramalai Reformer
## பிரமலை சீர்திருத்தன்.

"நன்மைக்குத் தீமை செய்கிறவன் எவனோ, அவன் வீட்டைவிட்டுத் தீமை நீங்காது."

Vol. X. ] ஜூன் 1930 [ இலக்கம் 2

### பஞ்சாங்கம்.

1930 | பிரமோதூத வருஷ வைகாசி 19 | ஜூன் | பிரமோதூத வருஷ ஆனி 16 | 1930

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 வை 19 | 2 20 | 3 21 | 4 22 | 5 23 | 6 24 | 7 25 |
| 8 26 | 9 27 | 10 ○ 28 | 11 29 | 12 30 | 13 31 | 14 32 |
| 15 ஆனி 1 | 16 2 | 17 3 | 18 4 | 19 5 | 20 6 | 21 7 |
| 22 8 | 23 9 | 24 * 10 | 25 11 | 26 ● 12 | 27 13 | 28 14 |
| 29 15 | 30 16 | | | | | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager.*

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கைபொய்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## கிராமப் பள்ளிக்கூடமும் அதன் முன்னேற்றமும்.

MR. K. V. MATTHAI.

மாணுக்கர்கள் பள்ளிக்கூடத்திலிருக்கும் காலத்தில் தங்கள் ஜீவியத்தை கூடிய அளவு சந்தோஷமாயும், பிரயோஜனமாயும் ஆக்கிக்கொள்ளும்படி செய்வதே ஒவ்வொரு உபாத்திமாரின் முதலான முக்கிய கடமையாகுமென்பது யாவரும் ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயம். பள்ளிக்கூடங்களில் மேலான முறையைக் கையாடி சித்தியுடன் முக்கியமான பாடங்களை கற்பிக்கவேண்டியது அவசியந்தான். எழுத வாசிக்கக் கற்றுக்கொடுப்பதுமன்றி கிராமங்களின் தேவைகளுக்குத் தக்கவாறு கல்வி கற்பிக்க வேண்டுமென்பதையும் தற்காலங்களில் சிந்தனை பண்ணுகிறோம். பள்ளிக்கூடங்களில் நாம் போதிக்கும் போதனை தேச ஜீவியத்திற்கடுத்ததாயும், நமது ஊராரின் தேவைகளை நிவிர்த்திசெய்யத்தக்கதாயும் இருக்கவேண்டும்.

பள்ளிக்கூட சம்பந்தமான பாடங்களைப் படித்துக் கொள்வதுமன்றி, கிராமத்திலுள்ள பிள்ளைகள் விளையாடவும், பாடவும் இயற்கைகளைப்பற்றிப் படித்து அவைகளை நேசிக்கவும், பட்சிகளைப்பற்றியும், பட்டுப்பூச்சிகளைப் பற்றியும், புஷ்பங்களைப்பற்றியும், தெரிந்துகொண்டு பின்பு அவைகளை நேசிக்கவும் கற்கவேண்டும். இவ்விதம் செய்யப் பழகும்போது பிள்ளைகளுக்குத் தங்கள் கிராமத்தின்மேல் அபிமானம் உண்டாகி, தங்கள் கிராமத்திலேயே வசித்து அங்கே ஊழியஞ்செய்ய ஆவல் உண்டாகிறது. இதுவே கிராமப்பள்ளிக்கூடம், அந்த கிராமத்துக்குத்தரும் முக்கிய மூலாதாரமான கல்வி.

ஒரு உபாத்தியாயர் தன்னை கிராமத்தில் ஒருவனுகப் பாவித்துக் கிராமத்தாரின் சுக துக்கங்களில் பங்கடைவதுமன்றி, ஜாதி வித்தியாசம் பாராட்டாமலும் தான் எல்லாருக்கும் மேலான அந்தஸ்து உள்ளவனென்று நினையாமலும் இருக்கவேண்டும். ஜாதிகளுக்குள் காணப்படும் பெறுமைக்குணங்களையும் ஒருவகுப்பினர்க்கும் மற்றோர் வகுப்பினர்க்கும் இருந்துவரும் போட்டியான எண்ணங்களையும் நீக்கி, கிராமத்தில் தேச ஒற்றுமையை உண்டாக்கவேண்டும்.

தற்காலங்களில் கிராமத்தின் தேவையைப்பற்றியும், ஊழியத்தைப்பற்றியும் வற்புறுத்த அவசியமில்லை. ஏனெனில் ஒரு உபாத்தியாயர் தான் கடவுளால் அனுப்பப்பட்ட ஊழியன் என்றும், கிராமத்தாரின் வழிகாட்டி என்றும், ஆலோசனைக்காரன் என்றும், சிநேகிதன் என்றும், கிராமத்தாரின் காரியங்களில் தான் உதவிபுரிவதற்குக் கடமைப்பட்டவன் என்றும் உணரும்காலம் வந்துவிட்டது. ஒரு தேசத்தின் கல்வி இலாகாவின் கடமை அத்தேசத்தின் அறிவீனரைக் கண்டுபிடித்து அவர்களுக்கு வெளிச்சத்தை புகட்டுவதேயாகும். தங்கள் ஜீவனைக் கொடுத்து அவ்விதச்சேவை செய்பவர்கள் கிராமத்திலுள்ள உபாத்திமார்களே. ஆகையால் தாங்கள் தெரிந்துகொண்ட ஊழியம் பரிசுத்தஅழைப்பு என ஒவ்வொருவரும் கருதல் வேண்டும்.

கிராமம் அல்லது தேசமேன்மைக்கு சுய உழைப்பைத் தவிர வேறுவழியில்லை என்பதை ஒவ்வொருவரும் நன்குணரவேண்டும். சுய உழைப்பே ஒரு தேசத்தை ரட்சிக்கும். அதுவே நிச்சயமான வழி. ஆகையால் தங்கள் கிராமத்தின் தேவைகளைக்கண்ணுற்று தாங்களே தங்களுக்கு உதவிசெய்து கொள்ளுமாறு கிராமவாசிகளை நடத்துவதே உபாத்திமார்களின் கடமையாகும். நமது கிராமங்களின் நிலைமைகளும், தேவைகளும் என்ன என்பதைப்பார்ப்போம். நமது ஜனங்கள் எவ்விதத் தீமைகளிலிருந்து கஷ்டப்படுகிறார்களென்று நாம் எடுத்துக் கூறுவோம். சுகவீனத்தை உண்டாக்கும் வழக்கப்பழக்கங்கள் கிராமங்களில் காணப்படுகின்றன அல்லவா? லேசாய் தடுக்கக்கூடிய வியாதிகளால் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்களல்லவா? பிள்ளைகள் சாப்பிடுவதிலும், தூங்குவதிலும் ஒழுங்காய் மலஜலம் கழிப்பதிலும், சுகாதார முறைகளை அனுசரித்து வருகிறார்களா? சுத்தமான அல்லது நாகரீகமான வழக்கபழக்கங்கள் அவர்களுக்கு உண்டா? வீடுகள் எவ்விதம் இருக்கின்றன? அவைகளுக்கு ஜன்னல் உண்டா? ஜன்னல்கள் இருந்தால் இரவில் அவைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றனவா? சிறுவர்களும் அவர்கள் பெற்றோர்களும் திறந்த இடங்களிலும் ரஸ்தாப்பக்கங்களிலும், நடை பாதைகளிலும், மலஜலம் கழித்து அசுசி படுத்துகிறார்களா? சிறுவர்கள் வீட்டிலுள்ள கிணறுகள் சுத்தமாயிருக்கின்றனவா? அழுக்குப்படிந்த அல்லது விஷக்கிரிமிகளுள்ள துணிமணிகளைத் துவைத்து கிராமத்திலுள்ள குளங்களை அசுத்தப் படுத்துகிறார்களா? ஒரு உபாத்தியாயர் நல்ல சித்தத்துடன் ஒரு கிராமத்தில் ஊழியம் செய்வாராகுல் கிராமத்தார் பள்ளிக்கூட மாணுக்கர்கள் முதலியோர் உதவியைக் கொண்டு கிராமத்திலுள்ள கஷ்ட நஷ்டங்களையும், வியாதி விக்கினங்களையும், சுகாதாரத்துக்கு நேர் விரோதமான துர்ப்பழக்கங்களையும் குறைத்து அவைகளை முற்றிலும் நீக்கப் பிரயாசப்படுவதில் சிறந்த சித்தி அடைவார்.

கிராமத்திலுள்ள பிள்ளைகள், பெண்கள், இவர்கள் தாழ்ந்த நிலைமையை எண்ணி அவர்கள் முன்னேற்றத்தைக் கருதி உழைக்கவேண்டும். இவ்விதமாக ஒரு கிராம வழிகாட்டியாக ஒரு உபாத்தியாயர் உழைப்பாராகுல் கிராமத்திலும், வீடுகளிலும் உள்ள சுத்தஅசுத்தம், அறியாமை, துன்பம், நோத்தை வீணாய்க்களித்தல் முதலியவற்றை அவர் நீக்குவதில் சித்தி அடைவார். அப்பொழுது கிராமத்திலுள்ள வீடுகள் இன்பமாயும், வசிக்கக்கூடியதாயும், வசிப்பதற்கு வசதியுள்ளதாயும் ஆகும். இத்துடன் நின்று விடாமல், கிராமத்தில் ஆண்களும் பெண்களும் பிள்ளைகளும் சந்தோஷமான ஜீவியத்தை நடத்துதற்குறிய சாதனங்களையும் நிலைநிறுத்தவேண்டும்.

தன் தேசத்தை நேசிக்கிற ஒரு உண்மையுள்ள உபாத்தியாயர் கிராமத்திலுள்ள விவசாயத் தொழிலைக் கையாடவேண்டும் முறைகளை பிள்ளைகளுக்கு கற்பிப்பதில் உதவியாயிருத்தல்வேண்டும். கிராமத்திலே உள்ள ஆடு, மாடு, கோழி, நாய் இன்னும் மற்றும் பிரயோஜனமுள்ள மிருகங்களை கவனிப்பதிலும், காப்பாற்றுவதிலும் மேலானமுறைகளைத் தெரிந்துகொள்வது அதிக அவசியமாயிருக்கிறது.



கிராமத்திலே குடி, கதை, வீணான சடங்காசாரங்கள் வழக்கு முதலிய தீமையான காரியங்களுக்கு ஏராளமான பணம் செலவழிக்கப்படுகின்றனதல்லவா? கிராமத்தாரை முன்னேற விடாமல் அழுத்திக்கொண்டிருக்கும் மேலே கூறப்பட்ட கொடிய தீமைகளை நீக்குவதிலும், கிராமத்தைச் சீர்படுத்துவதிலும் இப்பணத்தை செலவழித்தால் எவ்வளவு பிரயோஜனமாயிருக்கும்? ஒரு உபாத்தியாயர் தன்னுடைய குடும்பத்திலும், தன்னைச்சார்ந்த அல்லது சுற்றிலுமுள்ள ஜனங்களின் மத்தியிலும், இவ்வித வீண் செலவை நீக்குவதில் போர்செய்து தானே ஒரு சிறந்த முன்மாதிரியாகத் தன் ஜீவியத்தில் காட்டவேண்டும். ஒரு உபாத்தியாயரின் மனைவி, மக்களும் ஆபரணங்களை அணியாது அவைகளை நீக்குவதில் முன்மாதிரியாய் இருக்கலாம் அல்லவா?

நம்முடைய கிராமங்களில் உரத்துக்குரிய மாடுகளின் சாணத்தை எருவிராட்டிகளாகத் தட்டி விறக்குகிறார்களே. நம் வயல்களுக்கு சேர்த்தியான உரமாகும். அந்தச் சாணத்தை எரிப்பதற்கு உபயோகிப்பது நமக்கு அதிக நஷ்டமே. நம்முடைய தேசத்தின் அநேக பாகங்களில் இந்தக் காரியத்தைக் கண்டிப்பாய்த் தடுக்கவேண்டும். நம்முடைய கிராமங்களில் நம்முடைய கிராமத்தார் வீணாக்கும் காலத்துக்கு கணக்குக் கிடையாது. இவ்வித நிலைமையிலும், இன்னும் மற்ற விஷயங்களிலும் கிராமத்தாருக்கென்றும், பிள்ளைகளுக்கென்றும் தன்னுடைய ஜீவியத்தைத் தத்தம் செய்கிற ஒரு உபாத்தியாயர் பெரிய காரியங்களை அந்தக் கிராமத்துக்குச் செய்து முடிக்கிறவராயும், அக்கிராமத்துக்கே ஒரு பெரிய ஆசீர்வாதமாயும் இருக்கிறார்.

திருப்பிச் சொன்னால் பள்ளிக்கூடமானது மற்ற இடங்களுக்கு அனுப்பப்படும் சக்திக்கும், உண்மைக்கும், மற்றெல்லா விஷயத்துக்கும் ஒரு உறைவிடமாயிருக்கிறது. இப்பள்ளிக்கூடத்திலிருந்து கிராம முன்னேற்றம், தேசமுன்னேற்றம் முதலியவைகளுக்கு ஆதாரமான காரியங்கள் புறப்படவேண்டும். உபாத்திமார்கள் ஐக்கிய நாணய சங்கங்கள் சம்பந்தமாகவும், இராப்பள்ளிக்கூடங்கள் நடத்துவதிலும், பிள்ளைகளின் சுத்தத்துக்குரிய விஷயத்திலும், ஜனங்களின் சுகாதார விஷயத்திலும், கிராமங்களில் காணப்படும் குடி முதலிய கொடிய வழக்க பழக்கங்களுக்கு விரோதமாகப் போராடும் விஷயத்திலும் முன்னின்று உழைக்கவேண்டும்.

(கிராம ஆசிரியத்தோழன்)

---

## கிராம சுகாதார பீரோ.

### சென்னை சுகாதார இலாகா.

### வியாதிகளின் காரணம்.

அநேக காலமாக பல வியாதிகளின் உற்பத்தியும் காரணமும் நமக்குத் தெரியாமலே இருந்து வந்தது ஜனங்கள் நோய்கள் எல்லாம் ஏதோ தெய்வ சங்கற்பத்தாலோ அல்லது பேய் பிசாசுகளாலோ உண்டாகிறதென்று நம்பி வந்தார்கள். இக்காலத்திலும்கூட அப்போப்பட்ட நம்பிக்கை கொண்டவர்கள் அநேகர் இருக்கிறார்கள்.

சிறிய அணுக்களை எத்தனையோ மடங்கு பெரிதாகக் காட்டக்கூடிய பூதக்கண்ணாடி என்னும் ஓர் கருவி கண்டுபிடிக்கப்படவே இவ்விதமான தப்புக் கொள்கைகள் மறைந்து விட்டன. இக்கண்ணாடியின் மூலமாய் நம் கண்ணால் பார்க்ககூடாத அநேக பொருட்களைப் பார்த்து விடலாம். மனிதனின் மல ஜலத்தில் அநேக வியாதிகளுக்கு காரணமாகிய எண்ணிறந்த சிறிய கிருமிகள் இருப்பதை இக்கண்ணாடியால் பார்க்கலாம். பரீட்சித்துப் பார்த்ததில் இப்பூச்சிகளே இந்த வியாதிகளுக்கு காரணமென்றும் திட்டமாய் நிர்ணயித்துவிட்டார்கள். அதினால் பழைய நம்பிக்கைகளெல்லாம் படிப்படியாக மறைந்துவிட்டன.

ஆகவே தற்காலத்தில் ஒவ்வொரு வியாதியின் காரணமும் இன்னின்னதென்று உள்ளங்கை நெல்லிக்கனி போல் பரிஷ்காரமாய்த் தெரிந்துவிட்டது. அத்தோடல்ல அவ்வியாதிகளை சுலபமாய் தடுத்துவிடக்கூடிய முறைகளும் தெரிந்துவிட்டன், இதனால் நமது சுகாதாரத்திற்கு உண்டான நன்மைகளுக்கு அளவில்லை.

சில வியாதிகள் மனிதனில் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு சுலபமாய் பரவக்கூடும். அதற்கு காரணம் இச்சிறு பூச்சிகளே. ஒவ்வொரு வியாதிக்கும் காரணமாகிய ஒவ்வொருவகைப் பூச்சி உண்டு. இப்பூச்சிகள் மனித உடலினுட் சென்றதும் ஆயிரக்கணக்காய் விர்த்தியாகி அவைகளின் விஷத்தினாலேயே இவ்வியாதிகள் தோன்றி அந்தந்த வியாதிகளுக்கு உரிய குறிகள் காணப்படுகின்றன.

இந்நோய்களுக்குக் காரணமாகிய பூச்சிகள் மனிதனின் உடலில் உற்பத்தியாகிறதில்லை. வியாதி கண்டிருப்பவர்களின் அல்லது அந்த வியாதிகளால் வருந்தினவர்களின் மல்ஜல கழிவு மூலமாகவே இப்பூச்சிகள் பரவி, தண்ணீர் ஆகார முதலியவற்றில் கலந்து மற்றவர்களுக்கும் இவ்வியாதிகள் உண்டாக்குகின்றன.

விஷஜுரம், வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு, விஷபேதி, கொக்கிப்புழு நோய் அல்லது பித்தப்பாண்டு முதலிய வியாதிகளுக்கும், இன்னும் குடலில் இருக்கப்பட்ட பலவகை புழுக்களுக்கும் நமது மல ஜலத்தில் இருக்கும் இப்பூச்சிகளே காரணம்.

நம் மலஜலத்தில் இருக்கப்பட்ட இப்பூச்சிகள் பரவாதபடி தடுத்துவிடக்கூடிய முறைகளைக்கொண்டால்தான் இவ்வியாதிகளையும், அவற்றால் நம் தேசத்தில் நேரிடும் ஆயிரக்கணக்கான மரணங்களையும் நிறுத்தமுடியும். நம் நகரங்களிலும், கிராமங்களிலும், மலஜலம் கழிப்பதற்காக சுகாதாரமான கக்கூஸ்கள் ஒவ்வொரு வீட்டிலும் கட்டி அவைகளையே உபயோகித்து வந்தால், இப்பூச்சிகள் பரவாது தடுத்து இவ்வியாதிகளை நமது தேசத்தை விட்டு அறவே ஒழித்து விடலாம்.

இதற்காகவே இந்த டிபார்ட்மெண்டார் பெருமுயற்சி செய்து வருகின்றார்கள். நீங்களும் ஒத்துழைக்கும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இன்னும் இதைப்பற்றிய விஷயம் அறிய விரும்பினால் மகா-ா-ா-ஸ்ரீ சென்னை கிராம சுகாதார ஆபீஸர்,

நெ. 81, மவுண்ட் ரோடு, மதராஸ் (Rural Sanitation Officer, No. 81, Mount Road, Madras) அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

---

## அசுத்தம் அப்புறப்படுத்துவதின் அவசியம்.

ஜீவப்பிராணிகளின் வாழ்க்கையில் உண்டாகிவரும் கழிவு பதார்த்தங்களை அவைகளின் சுத்தத்தை யனுசரித்து அப்போதைக்கப்போது அப்புறப்படுத்தவேண்டும். மானிடர் விஷயமும் அவ்வாறே. ஆகவே, மனிதரின் மலஜல அசுத்தங்களை அவர்கள் சுகாதார விஷயமாய் அப்போதைக்கப்போது அப்புறப்படுத்தல் அவசியம் என்று யாவருக்கும் தோன்றும். ஏனென்றால், அவைகளில் அநேக வியாதிகளுக்குக் காரணமாகிய சிறிய கிருமிகள் இருக்கின்றன.

அக்கிருமிகளோ நமது கண்ணால் பார்க்கக்கூடாத அவ்வளவு சிறியவைகள். பூதக்கண்ணாடியால் வெகு சுலபமாய்ப் பார்க்கலாம்; அவைகள் நாம் சாப்பிடக்கூடிய ஆகாரம், தண்ணீர் இவைகளில் கலந்து உடலினுட் சென்று பெருங் கெடுதியை விளைவிக்கின்றன. இது வே, காலரா, சீதபேதி, வயிற்றுப்போக்கு, விஷஜுரம் முதலியவற்றிற்குக் காரணம்.

இதுபோக நமது குடலில் பலவியாதிகளை உண்டாக்கக்கூடிய பல புழுக்கள் இருக்கின்றன. அவைகளின் முட்டைகள் மலத்தின் மூலமாய் வெளிவருகின்றன. அதனால் மலத்தைக் கழிக்க சரியான கக்கூஸ்கள் உபயோகம் செய்யாவிடின் இந்த முட்டைகளில் உற்பத்தியாகும் சிறிய புழுக்கள் எங்கும் பாவி கடைசியாய் பலவிதமாய் மனிதரின் குடலினுட் சென்று பெரும் தீங்குகளை விளைவிக்கின்றன. அகவே, நமது சுகாதாரத்தை கவனிக்கவேண்டியநிமித்தம் மல ஜலம் கழிக்க சுத்தமாக கக்கூஸ் கட்டி அதிலேயே கழித்து உடனுக்குடன் அப்புறப்படுத்தவேண்டியதவசியம் என்று தெரிகிறது.

கக்கூஸ் கட்ட சொற்ப செலவு நேரிடலாம். ஆனால், அதனால் உண்டாகும் நன்மைகள் அநேகம். ஆகவே, அதில் செலவழிக்கும் பணம் வியர்த்தமாகமாட்டாது. மனிதருக்குள் பாவுகிற அநேக வியாதிகளை அது தடுக்கக்கூடியதாயிருக்கிறது.

ஆகையால் நகரங்களிலும் கிராமாந்திரங்களிலும் மல ஜலம் கழிப்பதற்கான கக்கூஸ் வசதிசெய்ய ஜனங்கள் உபகாரம் செய்யவேண்டும். இதற்காக நாம் கிராமசுகாதார உத்தியோகஸ்தர்களால் பெரு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதோடு பொது ஜனங்களும் அதிகாரிகளோடு ஒத்துழைக்கவேண்டுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இன்னும் இதைப்பற்றிய விஷயம் அறிய விரும்பினால் மகா-ா-ா-ஸ்ரீ. சென்னை கிராம சுகாதார ஆபீஸர், (நெ. 81, மவுண்ட்ரோட், கெதிட்ரல் போஸ்டு, மதராஸ்) அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளலாம்.

## இல்லற இன்ப இரகசியம்.

நமது வீட்டை மகிழ்ச்சிக்குரிய ஸ்தலமாக்குவதெப்படி? அதற்கு கல்விக்குரிய நாகரிகம், அன்பு, பொறுமை, சந்தோஷம் முதலிய நற்குணம் சுறுசுறுப்பு விடாமுயற்சியோடு கூடிய ஊழியம் ஆகிய பல படிகள் உள. அவற்றுள் ஒன்றாகிய ஊழியத்தினால் நாம் எப்படி நமது வீடுகளைச் சந்தோஷிப்பிக்கலாமென்று சற்று யோசிப்போம்.

'இல்லறமே நல்லறம்'. இது தேவ. ஏற்பாடுகளில் ஒன்று. மனிதனைச் சிருஷ்டிக்கிறதற்கு முன் ஆண்டவர் அவன் குடியிருக்கத்தக்க வசதிகளைச் சிருஷ்டித்தார்.

இப்படி குடும்பமானது தேவனுடைய ஞானமுள்ள ஏற்பாடால் இருக்கிறது. அவரே அதற்கு ஆதிகாரணர். அதை துவக்கும்போது ஒரு புருஷனும், ஒரு ஸ்திரீயுமாய்த் துவங்குகிறார்கள். அதில் அவர்களிருவருக்கு முரிய வேலைகளுண்டு. அவ்வூழியத்தை இருவரும் ஒரு மனமுள்ளவர்களாய்ச் செய்யவேண்டும். இல்லையானால் வீடுவீடாய் இல்லாமல் புலி, கரடி, வாழும் காடாகவும், தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனுஷர் மிருகங்களுக்கொப்பதாகவும் மாறிப்போகக்கூடும். இதற்கு சாட்சாத் கடவுளாகிய தேவன் காரணரல்ல. மனிதரால்தான் குடும்பங்களில் சண்டை சச்சரவு உண்டாகிறது. வீடுகளில் சந்தோஷக் குறைவு மறுமனையாட்டிகளால் உண்டாகிறது. உதாரணமாக, தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திராமல் ஆத்திரப்பட்டதினால் இப்படியானது. குடும்பங்களிலிருந்து ஜாதிகள் அதாவது ஐரோப்பியர், அமெரிக்கர், இந்தியர், சீனர், ஜப்பானியர், ஆப்பிரிக்கர் முதலிய ஜாதிகள் எழும்புகிறது. ஒரு ஜாதியின் அபிவிர்த்திக்குக் காரணர் அதின் தாய்மாரே, தகப்பன் குடும்பத்தின் தலையாயும் கைகளாயுமிருக்கலாம். ஆனால், தாயோ அதின் இருதயமாயிருக்கிறாள். அதாவது, தகப்பன் பொருள் சம்பாதிக்கவும், தாய் அவைகளை ஞானத்தோடு பாதுகாத்து அனுபவிக்கவும் ஏதுவாகிறது.

பலவித அறங்களில் இல்லறம் முக்கியமானது. 'இல்லறமல்லது நல்லறமன்று' என்று முதுமொழியுண்டு. கல்வியிலும் ஞானத்திலும் தேர்ந்த ஒரு பெரிய மனுஷன் தன் தாயின் அருமையை நினைத்துச் சொல்லுகிறதென்னவென்றால், கடவுள் தாயை சுகசெல்வியாகவும், ஆழ்ந்த அன்பும் தெய்வீக ஆத்ம வல்லமையுள்ளவளாகவும், அழகு வாய்ந்தவளாகவும், அமைத்தபோது திருப்திகாமான சிரிப்போடு தாிதமாய் முடித்திருப்பார் என்கிறார். இப்படிப்பட்ட தாய் தன் வீட்டைச் சந்தோஷிப்பிப்பதற்காக செய்யவேண்டிய ஊழியம் எவ்வகை.

இவளுடைய ஊழியம் மகா உத்தரவாதமானது. ஆண்களுக்கு 6 மணி, அல்லது 8 மணி நேரம் சிரமமான வேலையானால் பெண்களுக்கு ஒரு நாள் முழுவதும் வேலைதான். ஒவ்வொருவருக்கும் அவரவர் நிலைமைக்கேற்ற வேலைகள் உண்டு. புருஷனுக்காவது, ஸ்திரீக்காவது ஓயாமல் உபயோகமான வேலைசெய்யும் பழக்கமிருப்பது அவர்களுடைய சந்தோஷத்துக்கும், நன்னடக்கைக்கும் மிகவும் அனுகூலமானது. வேலைசெய்ய மனதில்லாதவன் சாப்பிடலாகாது என்று வேதம் சொல்லுகிறது. சோம்பல் தரித்திரத்தை உண்டாக்கும். துரு இரும்பை அரிப்பதுபோல் ஒருவனுடைய அல்லது ஒருவளுடைய சோம்பல் அவர்கள் ஆத்துமாவை அரிக்கும். அது யாவருக்கும் சுலபமாக முடியும். வேலையின் அருமையைக் காட்டிய ஒரு நீதிமஞ்சரி வாக்கியமுண்டு.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்.

வேலையில் கண்ணும் கருத்துமாயிருப்பவர்கள் தேகத்தில் வலிமையும், பசியையும், தூக்கத்தையும் பாராமல், மற்றவர்கள் தீயமொழிகளையும், அவர்கள் அவமதிப்பையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதே. புருஷன் தேசத்தையும்ஊரையும் ஆளுகிறவனானால் ஸ்திரீ தன் சொந்தக்குடும்பத்தை ஆளுகிற உத்தியோகமுடையவளாயிருக்கிறாள். தன் சொந்தக்குடும்பத்தில் அவளுடைய ஆளுகை வல்லமையாய்ச் செல்லுகிறது. ஆகையால், ஆண்களுக்கு தேச ஆளுகைக்கு எவ்வளவு ஞானம் வேண்டுமோ, அவ்வளவு ஞானம் பெண்களுக்கு தங்கள் வீட்டை ஆள ஞானம் தேவை. ஆனதுபற்றி பெண்கள் படித்திருக்க வேண்டும். சில படித்த பெண்கள் வீட்டுவேலையை மிகவும் அற்பமாய் எண்ணி கெகிழவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வீட்டில் சந்தோஷமிராது. ஸ்திரீகளுக்கு தங்கள் வீட்டிலுள்ள சாமான்களையும், தட்டுமுட்டுகளையும் சுத்தமாக வைப்பதும், தன் வீட்டின் உட்புறங்களையும், வெளிப்புறங்களையும் சுத்தமாக இருக்கப்பார்ப்பதும், முக்கியமாய் ஜலதாரைகள், குளிக்கும் இடங்களைக் கழுவி, சுத்தப்படுத்துவதும் கணவருக்கு ஏற்ற வேளையில் ஆகாரமளிப்பதும், சமையல் தேர்ந்திருப்பதும் உறவினரையும், அந்நியரையும் உபசரிப்பதும் இவை எல்லாவற்றிற்கும் மேலாய் தங்கள் பிள்ளைகளை தெய்வபக்தியில் வளர்ப்பதுமே பிரதான வேலையாயிருக்கிறது. இவ்வூழியம் சோம்பலினாலும், பெருமையினாலும் நெகிழப்படும்போது நிச்சயமாகவே வீட்டின் சந்தோஷம் குறையும். அவ்வூழியங்களில் ஒரு தாய்க்கு மிகவும் அங்கலாய்ப்பையும், கவலையையும் கொடுக்கிற ஊழியம் பிள்ளைகளை வளர்ப்பதே. இவ்வூழியத்தில் தேவன் தாய்மாரிடத்தில் பொன் வெள்ளியைப்பார்க்கிலும் மிகவும் உத்தரவாதமான ஜீவன்களை ஒப்புவித்திருக்கிறார். பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம் என்று வேத புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறது. குழந்தைகளை நாம் கைகளில் ஏந்தும்போது அவர்கள் நம் பின் சந்ததியாராகிய ஸ்திரீ புருஷர் என்று எண்ணுகிறதில்லை. பிள்ளைகளின் வளர்ப்பை தாய்மார் மகா பயபக்திக்குரிய காரியமென்றெண்ணவேண்டும். இயற்கையிலுள்ள அன்பு மாத்திரமிருந்தால் போதாது. இவ்வித அன்பு மிருகங்களுக்குமுண்டு. தாய்மாரிடத்தில் கண்டிப்பு, சுறுசுறுப்பு, விழிப்பு, நிதானம், சாந்தம், மன உறுதி முதலியவைகளோடு அன்பு சேர்ந்திருக்கவேண்டும். பிள்ளைகளுடைய தெய்வபக்தி, சரீர சுத்தி, வஸ்திரம், ஆகாரம் முதலியவைகளை சுகாதார முறைப்படி அனுசரித்துவந்தால் அவர்களுக்குண்டாகும் சுகவாழ்வினால் வீட்டில் சந்தோஷமுண்டாகும்.

ஒரு தாய் தன் நாலு பிள்ளைகளுக்கு உணவழித்துவிட்டு தெருவிலுள்ள வேடிக்கையை மிகவும் ஆவலாய்ப் பார்த்துவிட்டு வீடு வந்தபோது தன் நாலு பிள்ளைகளும் மரித்திருக்கக்கண்டாள். குழம்பில் பாம்பின் விஷமிருந்ததை அறியாதிருந்தாள். இன்னொரு தாய் தன் 6 வயது மகனுக்கு பலாக்கொட்டை தொண்டைக்குள் அடைத்துக்கொண்டதை அறியாதவளாய் அவனைப் பிடித்து இழுத்து தலைக்கு வார்க்கும்போது பிள்ளை துவண்டு போய் இறந்துபோனான். வேறொரு தாய் தன் பெரிய மகளுடைய தலைமாட்டில் நல்லபாம்பு ஒன்று கொத்திக்கொண்டிருந்ததை எலி என்று சொல்லி அசட்டையாய்த் தூங்கி மகள் சாகும் தருணத்தில் அலறி எழுந்தாள். பிள்ளையை நன்றாய் வளர்த்த ஒரு தாய் ஆஸ்தியையும், நகைகளையும் கண்டு ஆனந்தித்த தன் சிநேகிதிக்கு தன் இரண்டு ஆண்மக்களைக் காட்டி இவர்களே என் ஆபரணம் என்றாள். தாயும் தகப்பனும் இல்லாமல் இரண்டு சகோதரிகளும், அவர்கள் இளைய சகோதரனுமாய் வாசம் பண்ணிக்கொண்டிருந்த ஒரு வீட்டில் நமது அருமை இரட்சகராகிய இயேசு பெருமான் போக்கும் வரத்துமாயிருந்தபோது அவ்வீட்டில் சந்தோஷம், சமாதானம், சங்கீர்த்தனம் உண்டானது. அப்படிப்போல நாமும் தெய்வபயமுள்ளவர்களாய் நடப்போமானால், அக்காலத்தில் மனிதர்களிடத்தில் வாசஞ்செய்து அவர்களை சந்தோஷிப்பித்த ஆண்டவர் நம்மையும் சந்தோஷப்படுத்துவார்.

---

## குடும்ப காரியங்கள்.
## (HOME)

எனது பிரியமுள்ள பேரன் தங்சாமிக்கு எழுதும் செய்தியாவது:—

சில தினங்களுக்கு முன்னதாக உமது அருமையான கடிதம் வந்தது. அதை வாசித்துப் பார்த்து சகல சங்கதிகளையும் அறிந்துகொண்டோம். அதில் நீரும், உமது மனைவி ஞானசுந்தரியும் நல்ல சுகமாயிருக்கிறதென்றும், சீக்கிரத்தில் நீரும் அவளுமாகப் புறப்பட்டு நமது வீட்டுக்கு வந்து சிலநாள் எங்களுடன் இருந்துவிட்டு பிற்பாடு உங்கள் மாமனார் வீட்டுக்குப் போகிறதாகவும் எழுதியிருந்தீர். எங்கள் வீட்டுக்கு நீங்கள் வருகிறது எவ்வளவோ சந்தோஷமாயிருக்கிறது. கடிதம் வந்த நேரமுதல் உமது பாட்டி நாளை எண்ணிக்கொண்டுதான் இருக்கிறாள். ஆனால் அந்தக் கடிதத்தை நன்றாய்ப் படித்துப் பார்க்கும்போது நமது பேத்தியை நீர் பேறுகால விஷயத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய் தனது தாயாரிடம் விட்டுவர யோசித்திருக்கிறதாகத் தெரிகிறது. பிள்ளையின் தற்சமய நிலைமையைக் கேள்விப்பட்டது எங்கள்யாவருக்கும் அதிக சந்தோஷந்தான். ஆனால் தற்காலம் அநேக புருஷரான வாலிபர் தங்கள் மனைவியை இப்படிப்பட்ட சமயத்தில் தங்களை விட்டுப் பிரித்துவிடுகிறார்கள். சிலர் இச்சமயத்தில் தங்களுக்கு மாமனார் வீட்டில் கிடைக்கும் சகல வெகுமதிகளையும், சீர் சீராட்டுகளையும், பேறுகாலச் செலவுகளையும் விட்டுவிடக்கூடாதென்றும்; இன்னும் சிலர் அக்காலத்தில் தனது மனைவி தன்னுடனிருந்தால் தனக்கு பற்பல

வகையான தொந்தரவுகளும், கஷ்டங்களும் நேரிடுமென்றும், தனக்கு அப்படிப்பட்ட காலங்களில் யாதொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாதென்றும் எண்ணிக்கொள்ளுகிறார்கள். இன்னும் சில வீட்டில் மாமியாரிருந்தால் அவள், தன் மகன் தனது பெண்சாதியை தன் தாய் வீட்டுக்கு பேறுகாலத்துக்கு அனுப்பாமல் எதிரில் வைத்துக்கொள்ளுகிறானே; அதினால் அவள் நிமித்தம் நமது மகனுக்கு எவ்வளவோ பெருஞ் செலவுகள் வரப்போகிறது. நமது மகனோ, அவளென்றாலும், அவள் இனஜன பந்துக்களென்றாலும் பணத்தைப் பணமென்று பாராமல் இடறிவிழுந்து செலவழிப்பான். ஓர் வேளை நாம்தான் அவர்கள் யாவருக்கும் சமைத்துப்போட வேண்டியதிருந்தாலுமிருக்குமென்றெண்ணி, அவளுடைய தாயைப்பார்க்கிலும் அவளை யார் அதிகமாய்ப் பார்க்க முடியும், தாய் என் மகளை என் மருமகன் இன்னும் அனுப்பவில்லையே என்று பலரிடமும் முறையிட்டுக்கொண்டேயிருப்பாள், அந்தப்பாடு நமக்கென்னத்துக்கு! தங்கச்சியை பேறுகாலத்துக்கு அவள் தாய் வீட்டுக்கு சீக்கிரம் அனுப்பிவை என்று வெகு அருமை பெருமைபோல் ஓயாமல் சொல்லும் தொந்தரவுகள் பொறுக்கமாட்டாமல் அனுப்புவாருமுண்டு. இப்படிப்பட்ட சமயங்களில் பெண்களுக்கு வாஸ்தவத்திலே தன் புருஷனை விட்டுப்பிரியச் சற்றேனும் பிரியம் கிடையவே கிடையாது. என்றாலும் தனது மனதிலிருக்கிறதை வெளியிலே விட்டால், ஜனங்கள் அதை எவ்விதமாய் அர்த்தப்படுத்திக்கொள்ளுகிறார்களோவென்று பயந்து, தன் அபிப்பிராயங்களை வெளியே விடாமல் அடக்கிக்கொண்டு, எவ்வளவோ வருத்தத்துடன் தனது தாய் வீட்டின் கண்டிப்பினால் அல்லது தனது புருஷன் வீட்டாரின் தொந்தரவினால் தான் புருஷனைவிட்டு வெளியே பிரிகிறது. அப்பொழுது அவர்கள் மனதிலிருக்கும் அங்கலாய்ப்புகளை யார்தான் எடுத்து இதில் வரையக்கூடும்? எப்படியிருந்தாலும் சரி; இந்த விஷயத்தில் என் மனதில் படும் சில நியாயங்களை எனது பேரப்பிள்ளைக்கு இக்கடிதத்தின் மூலமாய் எடுத்துரைக்கலாமென்று எண்ணுகிறேன். நீர் அதைத் தகுந்தபடி கவனிப்பீரென்றும் நம்புகிறேன்.

பேறுகால சமயத்தில் எந்தப் புருஷனும் தனது மனைவியை தன்னைவிட்டுப் பிரிக்க வகைபார்க்கவேகூடாது. அந்தக் காலம் சமீபிக்க சமீபிக்க, அவளுக்கு அதிக உதவியும், அனுதாபமும் வேண்டியதிருக்கும். புருஷனைப்போல் அக்காரியங்களை தனது மனைவிக்கு அதிக அன்புடனும், நேசபாசத்துடனும் வேறு ஒருவரும் கவனித்துக்கொள்ளவே முடியாது. மேலும் அக்காலத்தில் புருஷனுடன் மனைவியிருந்தால் அவள் மனதிற்கு அது எவ்வளவோ சந்தோஷத்தையும், தைரியத்தையும் கொடுக்கிறதாயிருக்கிறது. இருவரும் பிரிந்திருந்தால், பிரிந்தகாலமுதல், மனைவிக்குக் குழந்தை பிறந்து தாயும் பிள்ளையும் நல்ல சுகமாய் வீடுவந்து மறுபடியும் சேரும் காலம்வரையும் இருவருக்கும் எவ்வளவோ சோர்பும், கவலையும் புருஷனுக்கு தன் மனைவியை நன்றாய்க் கவனிப்பார்களோ, கவனிக்கமாட்டார்களோ, என்னென்ன காரியங்களை தாய் வீட்டில் மூடஜென்மங்கள் தப்பிதமாய்ச்செய்து கைப்பிசகாய் அவளைக் கொன்றுபோடுகிறார்களோவென்றும்; மனைவிக்கு, தனது புருஷனுடைய சுகம், சாப்பாடு காரியங்கள் எப்படியிருக்கிறதோவென்றும், தன் புருஷனை இனிமேல் பார்க்கமுடியுமோ முடியாதோ, நாம் அவரை விட்டு வந்தும் சில மாதங்களாகிவிட்டதே, இப்பொழுது அவர் எப்படியிருக்கிறாரோ என்று உண்டாகும் பற்பல வகையான அங்கலாய்ப்புகள் அநேகமுண்டு. சிலர் இந்தக் காலங்களில் பிரிந்து இருந்துகொண்டு அங்குமிங்கும் அனுப்புகிற தந்திகளுக்கும், கடிதங்களுக்கும் கணக்கிராது. தனது மனைவி பேறுகாலத்துக்கு போயிருக்குமிடங்களில் தனது இனஜன பந்துக்கள் யார் யார் இருப்பார்களோ அவர்கள் யாவருக்கும் நமது மனைவியைச் சற்றுப் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று எழுத்துமேல் எழுத்து எழுதிக்கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு நாளும் என்ன செய்தி வருமென்று ஆவலோடு தபாலுக்காகக் காத்திருந்தாலும் ஓர் பதிலையும் காணாமல் வெகுவாய் ஏமாந்து போகிறதுமுண்டு. எத்தனை எழுத்து எழுதினாலும் புருஷனுக்கு மனைவிமேலிருக்கும் கவலைபோல் வேறு யாருக்குமுண்டாகுமா?

சிலவேளைகளில் மிகவும் நாகரீகமும், நல்ல ஆஸ்பத்திரியும், வைத்தியருமிருக்கப்பட்ட இடத்திலிருந்து முதலாய் புருஷர்மார் தங்கள் மனைவிகளை நாகரீகமில்லாத பட்டியில் இருக்கும் தனது மாமனார் வீட்டுக்கு பேறுகாலத்துக்கு அனுப்பிவிட்டு, மனைவியின் சுகம் எப்படி, பேறுகாலத்தை நன்றாய்க் கவனிக்கவேண்டும். எத்தனை ரூபாய் செலவு வந்தாலும் கவனிக்கவேகூடாது என்று மூடத்தனமாய் கணக்கில்லாத கடிதங்கள் எழுதுவாரும் பலர். இதுபோக இன்னும் சிலர் தனது மனைவியை மற்றகாலங்களில் வெகு அருமையாகவும் அன்பாகவும் நடத்துகிறது; பேறுகாலம் சமீபித்து இனி அது தன்னை அதிகமாய்க் கவனிக்கமுடியாதென்றறிந்ததும், தான் போகுமிடத்தை முதலாய் ஒருவரிடமும் சொல்லாமல் ஓடிப்போய்விடுகிற பேதைகளுமாயிருக்கிறார்கள். பிற்பாடு பிள்ளை பிறந்து தாயும் பிள்ளையும் சகல வேதனைகளிலிருந்தும் நீங்கி நல்ல சுகமாயிருக்கிறார்களென்று கேள்விப்பட்டதும் வெகு சந்தோஷமான முகத்துடன் சில நாட்களுக்குப் பிற்பாடு வீடு வருகிறதுண்டு இப்படிப்பட்ட புருஷன்மாரையுடைய ஸ்திரீகளை நான் நினைக்கும்போது என் மனம் எவ்வளவோ பரிதாபப்படுகிறது. இந்தப் பெண்ணுக்கு பேறுகால வேதனையைவிட தன் புருஷன் அப்பொழுது எவ்வளவோ மூடத்தனமாய் எங்கு போகிறோமென்று முதலாய் சொல்லாமல் ஓடிப்போய்விட்டாரே, எங்கே போனாரோ, சாப்பாட்டுக்கு என்ன செய்வார், அவரை யார் கவனிப்பார், எங்கே அவர்கள் மெலிந்து வாடிப் போகிறார்களோ என்று தனது நிலைமைக்குரிய வேதனையிலும் இச்சமயத்தில் அவரைப்பற்றிய கவலைதான் மேற்பட்டுவிடுகிறது. இந்த விஷயங்களில் நாம் கற்றுக்கொள்ள வெகு தூரம் போகவேண்டாம். நமது வீட்டில் கூடுகட்டி, முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் ஓர் ஜோடு அடைக்கலான் குருவிகளைப் பாருங்கள். ஒன்



றுக்கொன்று கூடுகட்ட ஆரம்பிக்கிற காலமுதல், முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து, அவைகளை வெளியிலே பறக்கக் காட்டும் காலம் வரையும் காட்டும் அனுதாபங்களும் நேச பாசமும், நமக்குப் படிப்பினையும் முன்மாதிரியுமாக இருக்கவேண்டாமா?

ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களில் இப்படிப்பட்ட சமயங்களில் புருஷன் எவ்விதத்திலும் தனது மனைவியை விட்டுப் பிரிந்திருக்கவேமாட்டான். அப்பொழுதுதான் தனக்கு அவள்மேலிருக்கும் முழு அன்பையும் காட்டி, தன்னால் கூடிய சகல உதவிகளையும் அவளுக்குச் செய்ய புருஷன் ஆயத்தமாயிருக்கிறான். புருஷன்மாராகிய நமக்கு ஓர் அற்ப வேதனைகள், கஷ்டங்களிருக்குமானால், நமது நேச மனைவிகள் நம்மை மறந்து சற்றுநேரம் மறைந்துபோய் நித்திரைசெய்ய அவர்கள் மனம் சகிக்குமா? நாமோ பெலவீனமான பாண்டங்களாகிய அவர்களுக்கு இதிலும் அதிகமாய் உதவ வேண்டாமா? கடைசியாக நான் உமக்கு இது விஷயத்தில் சொல்லக்கூடியதென்னவென்றால் நீரும் ஞானசுந்தரியும் எங்கள் வீட்டுக்கும் உங்கள் மாமனார் வீட்டுக்கும் வந்து சில நாள் கழித்துவிட்டு பிற்பாடு நீர் வேலைசெய்யும் பட்டணத்துக்கே இருவரும் போய்விடுங்கள். அவ்விடத்தில் ஓர் நல்ல பேறுகால ஆஸ்பத்திரி இருக்கிறதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அங்குள்ள டாக்டர் அம்மாளைக்கண்டு பேசிவையும், காலம் சமீபிக்கும்போது அந்த அம்மாளைப்போய் உமது மனைவி அடிக்கடி பார்த்து வரட்டும். ஏதாவது தகுந்த ஆலோசனைகள் அவசியமானால் அவர்கள் சொல்லுவார்கள். பிற்பாடு பேறுகாலம் எவ்விதத்திலும் ஆஸ்பத்திரியில்தான் ஆகவேண்டும். அங்கு சகல வசதிகளும், ஏற்பாடுகளும், வைத்தியங்களும் செய்ய தகுந்த உதவிக்காரிருக்கிறார்கள். 'உமக்கு யாதொரு கவலையும் வருத்தமும் வேண்டாம். சகல காரியங்களையும் சரிவரப் பார்த்து சுமார் 7 அல்லது 9 நாளில் தாயும் பிள்ளையுமாக உமது வீட்டுக்கு நல்ல சுகமாய் வந்து சேருவார்கள். நீரும் ஒவ்வொரு நாளும் போய் உமது மனைவியையும் பார்த்துக்கொண்டு வரலாம். வெகு அவசியமானால் உமது மாமியாரை உமது வீட்டுக்கு அக்காலத்தின் உதவிக்கு அழைத்துக்கொள்ளும். தற்காலத்தில் முதலாய் படித்த அநேகர் தங்கள் மனைவியை ஆஸ்பத்திரிக்கு பேறுகாலத்துக்கு அனுப்பினால் ஊருக்குள்ளே ஜனங்கள் இன்னார் தனது மனைவியை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டாரென்று சொன்னால், அது தன் உத்தியோகத்துக்கும், அந்தஸ்துக்கும் வெகு குறைவென்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். இதுதான் பெரிய மூடத்தனம். எவ்வளவு பணங்கள் செலவு செய்து இப்படிப்பட்ட காலங்களில் பெண்களுக்கு உதவி செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டார் முயற்சிக்கிறார்கள். அங்கிருக்கும் வசதிகளில் நூற்றில் ஒன்றுமுதலாய் நமது வீட்டில் செய்ய முடியாதே.

ஆகையால் என் அருமைப்பேரனே இவைகளை நன்றாய் வாசித்துப்பார்த்து நீரும் ஞானசுந்தரியும் உங்களுக்குப் பிரியமானபடி நடந்துகொள்ளவும். உங்கள் இருவருக்கும் எங்கள் அன்பின் முத்தங்கள். [பாட்டனார்]

## உலக வர்த்தமானம்.

சென்ற வருஷம் ஆகஸ்டு மாதத்தில், அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் நாளொன்றுக்கு சராசரி 91 பேர் வீதமாக மோட்டார்வண்டி விபத்துக்களினால் உயிர்ச்சேதமடைந்தார்கள். இதற்குமுன் இவ்வித அபாயங்களில் மடிந்தவர்களின் கணக்கு விவரங்களைப் பார்க்குங்காலத்து இதற்குமேல் போகக்கூடிய சராசரி அத்தேச சரித்திரத்தில் கிடையாது. இக்கணக்கு விபரம் சிக்காகோவிலுள்ள நாஷனல் சேவடி காங்கிரஸ்காரரால் கொடுக்கப்பட்டது.

---

கனடாவிலுள்ள நாஷனல் கவுன்ஸில் கல்விச் சங்கத்தார், பதினாறு வயதுக்குக்கீழுள்ள பிள்ளைகளெல்லாரும் நாடகசாலைகளுக்குப் போகக்கூடாதென்பதாக ஓர் கட்டளை பிரப்பித்திருக்கிறார்கள். சிறு பிள்ளைகளை இளம்பிராயத்தில் தானே இவ்வித கெட்ட பழக்கங்களுக்கு விலக்க இச்சங்கத்தார் எடுத்திருக்கும் முயற்சி மிகவும் புகழப்படத்தக்கதுதான். இந்த சட்டப் பிரமாணம் எங்கெங்கே செலுத்தக்கூடாமலிருக்கிறதோ, அங்கே தங்கள் பிள்ளைகளைக் காத்துக்கொள்ளும்படியாக பெற்றோரே முயற்சியெடுக்கவேண்டும்.

இப்பொழுது ஆகாயக் கப்பல்கள் சஹாரா வனாந்தரத்தையும் கடந்துபோகக்கூடியதாக ஆகிவிட்டன. பெல்ஜியம், பிரான்ஸ் இந்த இரண்டு கவர்ன்மெண்டாரும், பிரஸ்ஸெல்ஸ் பாரீஸ் பட்டணங்களிலிருந்தும் 'மடாகாஸ்கர்' தீவுக்குச்செல்ல இவ்வனாந்தரத்தை தங்கள் மார்க்கமாக்கிக்கொள்ளப் போகிறார்கள். போக்கு வரத்து முதல் முதலில் வாரத்திற்கொரு முறை விதமாக ஆரம்பிக்கும். வியாபாரம் பின்னும் இடங்கொடுக்குமென்றால், தினசரி ஜனங்களையும் சாமான்களையும் ஏற்றிக்கொண்டு போக வர ஏதுவாகும். ஆகாயக் கப்பல்களானது முதலில் பிரஸ்ஸெல்ஸ் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டபின் பாரீசிலும், போர்த்துகீஸ் ஆப்பிரிக்காவிலுள்ள பீரா பட்டணத்திலும் தங்கி முஸாம்பிக் கடலைக்கடந்து மடாகாஸ்கர் தீவிற்குப்போய்ச் சேரும். வனாந்தரத்திலுள்ள அகோர காங்கையினிமித்தம் இக்கப்பல்கள் இராத்திரியில் இவ்வனாந்தரத்தைக் கடந்து செல்லும்.

## பட்சம்.

உங்கள் பிள்ளைகளை எப்பொழுதும் கௌரவமாயும், பட்சமாயும் நடத்துங்கள். அப்பொழுது அவர்களும் அதேவிதமாகவே உங்களிடத்தில் நடந்துகொள்ளுவார்கள். அவர்களுக்கு ஏதேனும் ஓர் வாக்குக் கொடுத்தால் அதை உறுதியாய் நிறைவேற்ற தவறிபோகாதிருங்கள். உங்கள் பிள்ளைகள், எவைகளைச் செய்ய நீங்கள் விரும்புவீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். பிற்பாடு உங்கள் பிள்ளைகளும் அவ்வண்ணமே செய்கிறார்களாவென்று கவனியுங்கள்.

பட்சம் காட்டுகிறதென்பது வெறும் நடிப்பல்ல. அது நாம் நமது பிள்ளைகளுடைய அன்பையும், பட்சத்தையும் கவர்ந்துகொள்ளும்படி கையாடும் ஓர் சிறந்த வழி. நமது சிநேகிதர் நமது வீடுகளுக்கு வரும்பொழுது, அவர்களுக்கு உபசாரஞ் சொல்லி, அவர்களுடைய சுக செய்திகளை பட்சமாய் விசாரிக்கவும் அவர்களுக்குக் கற்பியுங்கள். பெருந்தன்மையான ஜீவியமும், நெறி தவராத ஒழுக்கமும் எப்படிப்பட்டதென்பதையும் அவர்களுக்குப் போதியுங்கள்.

இவை எல்லாவற்றின் பிரயோஜனமென்ன? இயற்கையாய் எழும்பும் தீய சுபாவங்களை நீக்கி அவற்றை பகுத்தறிவுக்கும், சித்தத்திற்கும் உட்படுத்தி ஜீவிக்கப் பிரயாசப்படுவதுதான். இதுதான் தன்னை அடக்கி ஆளும் ஜீவியம்.

ஒரு பிள்ளைக்கு ஒரு விளையாட்டின்மேல் பிரியமிருந்து அவ்விளையாட்டு அதற்கு ஏற்றதல்லவென்று நாம் காண்போமானால், அவ்விளையாட்டை தடுப்பதற்குப் பதிலாக அதற்குப் பதிலாய் இன்னொரு விளையாட்டில் பிள்ளையின் கவனத்தைச் செலுத்திவிடுதலே யுக்தியாகும். உங்களுக்குப் பிரியமில்லாத காரியத்தை உங்கள் பிள்ளைகள் செய்யக்கூடாதென்று நீங்கள் தடுக்கிறீர்களென்பதாய் வைத்துக்கொள்ளுவோம். அந்த விளையாட்டை நிறுத்திப்போட்டு அதற்கு பதிலாய் என்ன செய்யவேண்டும் என்று யோசிக்க அவர்களுக்கு புத்திபோதாது. ஆகையால் நீங்கள் விளையாடக்கூடாதென்று கட்டுப்பாடு பண்ணினாலும் அதே விளையாட்டின்பேரிலேயே அவர்களுக்கு எண்ணமுண்டாகிறது. ஆகையால், அதைப்பார்க்கிலும் ஒரு நல்ல விளையாட்டைக் காண்பித்து அதில் அவர்கள் மனதைச் செலுத்திவிடுகிறதே நீங்கள் கையாடவேண்டிய சிறந்த யுக்தி. அவர்களுடைய மனதையும், சிந்தனைகளையும் வேறொன்றில் செலுத்திவிடுங்கள். அவர்கள் நல்ல உடுப்புகளைப் போட்டுக்கொண்டு சேற்றில் விளையாடுகிறார்களா? அப்படியானால் அவர்கள் போட்டுக்கொண்டிருக்கும் சுத்தமான உடைகளை களைந்துபோட்டு அவ்விளையாட்டுக்கேற்ற உடையைப் போட்டுவிடுங்கள். அல்லது வேறொரு நல்ல விளையாட்டில் அவர்களுடைய கவனத்தைச் செலுத்திவிடுங்கள். அப்பொழுது அவர்கள் உற்சாகம் அதில் திரும்பி விடுகிறது. இதினால் அவர்கள் உங்கள் கட்டுக்கு கீழடங்கவில்லையென்று நீங்கள் நினைக்கக்கூடாது. அவர்கள் ஒரு காரியத்தைத் தீர்மானிக்கும்பொழுது, அவர்களே தங்கள் சுயபுத்தியைப் பிரயோகிக்கத்தக்கதாக இப்பொழுதிருந்தே அவர்களை அந் நல்வழியில் பயிற்றுவிக்கிறீர்களென்பதை நீங்கள் அறியவேண்டும். நீங்கள் அவர்களை அதட்டி, "போ! மூடப்பயலே, இது என்ன விளையாட்டு, நன்றாய் உதைக்கிறேன் பார்" என்று சொல்வீர்களானால் அதினால் உண்டாகும் பயன் என்ன? ஒன்றுமில்லை. அவர்கள் எவ்விதத்திலும் சீர்திருந்துகிறது கஷ்டம். தண்டனை கொடுத்த சிறிது நேரத்திற்கு அவர்கள் கொஞ்சம் பயந்திருப்பார்கள். அது முடிந்தபின் தாங்கள் முன்செய்த அதே காரியத்தையே மறுபடியும் செய்யவேண்டுமென்று நினைத்து அதையே செய்யப்போவார்கள். ஆகையால், அப்படிச் செய்வதற்குப் பதிலாக, இன்னொரு நல்ல விளையாட்டில் அவர்கள் கவனத்தைச் செலுத்திவிட்டால், நாம் அவர்களுக்குக் காட்டும் மேலான வழியைத் தெரிந்துகொள்ளும்பொழுது, அவர்கள் மனதார நமது வார்த்தைகளுக்கு சந்தோஷமாய்க் கீழ்ப்படிவார்களென்பதற்கு ஐயமில்லை. இன்னும் பெற்றோர் கவனிக்கவேண்டிய விஷயங்களென்னவென்பதை அடுத்த வியாசத்தில் கவனிப்போம்.

ஆரோக்கிய தூதிகை.

அமெரிக்கன் மிஷன் லினக்ஸ் பிரஸ், பசுமலை,—1930.

1589

REG. NO.—M. 2146

# THE Piramalai Reformer

## பிரமலை சீர்திருத்தன்.

"நன்மைக்குத் தீமை செய்கிறவன் எவனோ, அவன் வீட்டைவிட்டுத் தீமை நீங்காது."

Vol. X.] ஜுலை 1930 [இலக்கம் 3.

... OF THE ... 9 SEP 193 ... RAS

## பஞ்சாங்கம்.

| 1930 | பிரமோதூத ஞு ஆனி 17 | | ஜுலை | | பிரமோதூத ஞு ஆடி 16 | 1930 |
|---|---|---|---|---|---|---|
| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
| | | 1 ஆனி 17 | 2 18 | 3 19 | 4 20 | 5 21 |
| 6 22 | 7 23 | 8 24 | 9 25 | 10 ○ 26 | 11 27 | 12 28 |
| 13 29 | 14 30 | 15 31 | 16 ஆடி 1 | 17 2 | 18 3 | 19 4 |
| 20 5 | 21 *6 | 22 7 | 23 8 | 24 9 | 25 ● 10 | 26 11 |
| 27 12 | 28 13 | 29 14 | 30 15 | 31 16 | | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## உங்கள் பிள்ளைகள் தங்களையே ஆளும்படி பயிற்றுவியுங்கள்.

ஏ. டபிளியு. ஸ்பால்டிங்.

உங்கள் பிள்ளைகள் தங்கள் ஆசை எண்ணங்களை தாங்களே அடக்கியாள திறமையுள்ளவர்களாகும்படி அவர்களைப் பயிற்றுவிக்கிறதே உங்களுடைய பிரதான கடமையாகும். அநேகர், தங்கள் பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதென்றால், அவர்களுடைய எண்ணங்களெல்லாம் தங்கள் மனதில் எண்ணங்களுக்கு ஒத்திருக்கும்படி செய்துவிடுவதானென்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். இது சரியன்று, பிள்ளைகள் தங்கள் சுய சித்தத்தை அடக்கி ஆளவும், தாங்கள் செய்ய நினைக்கும் காரியத்தைத் தெரிந்துகொள்ளவும், அவ்விதம் தாங்கள் சரியென்று அறிந்ததைச் செய்வதற்காக அவர்களுக்குப் போதிக்கிறதே மிகவும் விசேஷித்த காரியம். அப்படியானால், நாம் அவர்களுக்கு உபாத்திமாராயிருக்கவேண்டியதேயன்றி அதிகாரிகளாயிருக்கக் கூடாது. பிள்ளையின் சுயாதீனத்தை நீக்கிப்போடுவதல்ல. ஆனால், அவர்களிலுள்ள சுபாவங்களை அவர்களே ஆளத்தக்கதாக, அவற்றைக் கொஞ்சங் கொஞ்சமாய் விருத்தி செய்கிறதே நமது முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும்.

இதைச் செய்யவேண்டுமென்றால், முதல் முதலாக பெற்றோரே தங்கள் ஆசை விருப்பங்களை அடக்கி ஆளக்கூடியவர்களாயிருக்கவேண்டும். நமது போதனையை நமது சாதனையில் காட்டுகிறதே நாம் மற்றவர்களுக்குப் போதிக்கும் சிறந்த வழி. நமது ஜீவியத்தில் நாம் அநுசரியாத காரியங்களைக் குறித்து மற்றவர்களுக்குப் போதிக்க நாடுவது வீணும் வியர்த்தமுமே.

### எதிர் பார்க்கை, பட்சம்.

பிள்ளை தன்னையே ஆண்டுகொள்ள அதைப் பயிற்றுவிக்க வேண்டுமானால், கட்டளை கொடுப்பதில் பட்சமும், பிள்ளையின் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கும்படியான அன்பும், சந்தர்ப்பங்களுக்கேற்றபடி கட்டளையிடவேண்டிய மாதிரியும், பிள்ளையைப் பயிற்றுவிப்பதின் நோக்கமும், தங்கள் உத்தரவாதமான கடமைகளை நிறைவேற்றுவதிலும், தேவனுடைய ஆசீர்வாதத்திலும் இந்நோக்கம் நிறைவேறும் என்ற மனவுறுதியும் பெற்றோருக்கு அவசியம்.

அப்படியானால் பெற்றோர் பிள்ளைகளுக்குக் கட்டளை கொடுக்கும்பொழுது கோபதாபமின்றி அன்பாய் கட்டளையிடவேண்டும். விரோதம் முதலான தீய எண்ணங்களுக்கு இடங்கொடுக்கவே கூடாது; நீங்களும் அவர்களும் ஒன்றென்றும் உங்கள் அபிப்பிராயம் இன்னதென்பதை அறிந்து கொண்டபின் அவர்கள் உங்களுக்குச் சந்தோஷமாய் கீழ்ப்படிவார்களென்றும் நீங்கள் அறிந்திருக்கவேண்டும். இதை நீங்கள் அறிந்துகொள்வீர்களென்றால் நீங்கள் அவர்களைச் செய்யவிரும்பும் எந்தக் காரியத்தையும் அவர்கள் சந்தோஷமாய்ச் செய்ய எப்பொழுதுமே ஆயத்தமாயிருப்பார்கள். இவ்விதபயற்சி நன்னடக்கைத்தை அவர்களுக்குள் அதிகமாய் விருத்திபண்ணுமென்பதற்குச் சந்தேகமில்லை.

நீங்கள் அவர்களுக்குக் கட்டளையிடும் எல்லாவற்றிலும் அன்பாயும், சாந்தமாயும் கட்டளையிடுங்கள். ஒருபோதும் குரூரமாய் கட்டளையிடாதிருங்கள். அவர்களை பயமுறுத்தி நமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியச் செய்கிறதினால் வரக்கூடிய நன்மை ஒன்றுமில்லை. அநேகப் பெற்றோர் இவ்விஷயத்தில் தவறிப் போகக்கூடியவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சிநேகிதரை வீட்டில் சந்திக்கையில் அவர்களிடத்தில் காட்டும் பட்சமான சுபாவம், தயவு, அன்பு இவையெல்லாவற்றையும் தங்கள் பிள்ளைகள் உற்று கவனிக்கிறார்களென்பதை மறந்துவிடுகிறார்கள். ஆகையால், பெற்றோர் எப்பொழுதும் விழிப்புள்ளவர்களாய் தங்கள் போதனையினாலும், சாதனையினாலும் தங்கள் பிள்ளைகளுக்கு எப்பொழுதும் நல்ல முன்மாதிரி காட்டப் பிரயாசப்படவேண்டும்.

### சித்தியடைவதாயினும் என்ன?

சித்தியடைவதாயினும் என்ன? பொருளைத் திரள் திரளாகக் குவித்தலா? தாவீதுக்கு அப்படிக் காணப்பட்டதாகத் தெரியவில்லை. அதுவும் அதிகாரமும் வல்லமையுமா? ஏரோதுக்கு அப்படிக் காணப்படவில்லை. அது அறிவிலும், ஞானத்திலும் சார்ந்திருக்கிறதா? பவுலுக்கு அப்படித் தென்படவில்லை. மெய்யான சித்தி என்பது கடவுளுக்கு உண்மையாய்த் தொண்டுபுரிவதுதான். சித்தி என்பது தேவனிடமிருந்து ஜீவன், சுகம், செல்வம் இவற்றைப் பெற்றுக்கொண்டு அவைகளை மற்றவர்களின் நன்மைக்கென்று பிரயோஜனப்படுத்துவதுதான். வருஷங்கள் போகப்போக மெய்யான சித்தி இன்னதென்பதைக் குறித்து நான் ஆழமாய்ச் சிந்திக்கிறேன். உலகம் அழைக்கும் பிரகாரமாய் நான் அதை அழைக்கிறதில்லை. என் உள்ளான மனுஷ வல்லமையாய்ப் பயப்படவேண்டுமென்பதே என் மனதில் பேராவல்.



### பகையை வெல்லும் மருந்து.

சலாம் தம்பி சுந்தரம்! ஏதோ சங்கடம் நேரிட்டது போல் உமது முகத்தில் தோன்றுகிறதே; என்ன விசேஷம்?

ஆமப்பா ராகவா, சங்கடத்துக்குள்தான் இருக்கிறேன். என் தாயார், தனுக்கோடி வீட்டில் போய கொஞ்சம் வாழைப்பழம் வாங்கிவரும்படி சொன்னாள். (உமக்குத் தெரிந்திருக்கிறபடி என் தாய்க்கு நல்ல சுகமில்லை அல்லவா, அதினாலே தனுக்கோடி வாழைப்பழத்தில் கொஞ்சம் வேண்டுமென்று கேட்டாள்.) அந்தப்படி நான் போய் கேட்டேன். ஆனால் ராகவன், அவன் கோபத்தை என்ன சொல்ல! நீ வந்து பார்த்தால் தெரியும். அவன் கடுகடுப்பாய், உன் அம்மை கேட்டனுப்பினவுடனே சீப்புச் சீப்பாய் அறுத்துக் கொடுக்கதான் நான் வாழைத் தோட்டம் போட்டேனோ? கடைக்குக் கடை குலை குலையாய்த்தொங்குகிறது உனக்குத் தெரியாதா? காசு கொண்டு கடைக்குப் போனால் நை நிறைய வாங்கலாமே; சீ, சீ, அப்பாலே போ என்று சொன்னான்.

அப்போது நான் கும்பிட்டு, ஐயா! அப்படிச் சொல்லாதேயும்; என் தாய்க்குச் சுகமில்லை; உம்முடைய பழத்தின் மேல்தான் ஆவலிருக்கிறது என்று சொன்னேன். அதற்கு அந்தச் சண்டாளன்: வியாதியாயிருந்தால் வைத்தியனைத் தேடவேண்டுமா, வாழைப்பழத்தைத் தேடவேண்டுமா? என்று கேட்டான். அவன் போட்ட சப்தம் தலை இடி பிடிக்கும், உடனே நான் பயந்து ஓட்டம் பிடித்தேன்; அவன் மகா லோபி, அவனை நான் ஜந்மப்பகையாய்ப் பகைக்கிறேன் என்று சொன்னான்.

ராகவன். நல்லது சுந்தரம், நான் அதற்காக மெத்தத் துக்கப்படுகிறேன். நான் வந்து அவனை ராசிபண்ணப் பார்க்கிறேன் தம்பி.

சுந்தரம்: அண்ணா ராகவா, அவன் சங்காத்தம் எனக்கு வேண்டாம்; சத்துருவாச்சுதே; நமக்கு எதாவது தொந்தரவு செய்யவேண்டுமானாலும் அவனாலாகும், பாம்பும் சரி அவனும் சரி. என் தகப்பனார் இறந்ததுமுதல், என் தாயாருடைய நிர்பந்தத்தைப் பார்த்து அவன் சிரித்து, அவள் அறுதலிதானே என்று நிந்திக்கிறான். சிலவேளை நான் அழவும் கோபமடையவும் தக்கதாய் என்னைக் கேலிபண்ணுகிறான். அவனுக்கும் எனக்கும் பொருந்தாது. நாங்கள் கீரியும் பாம்பும்தான். அவனை நான் முழுப்பகையாய்ப் பகைக்கிறேன்.

ரா. அதையெல்லாம் மனதில் வைக்காதே சுந்தரம், அவன் மனதை மாற்ற நான் உனக்கு ஒரு நல்ல மருந்து சொல்லுகிறேன்.

சு. மன முரண்டுக்கு மருந்துமுண்டா? அதென்ன மருந்தப்பா ராகவா?

ரா. உன்னால் கூடியமட்டும் அவனுக்குப் பட்சம் காட்டு; இதுதான் மருந்து.

சு. அவனோடு பட்சமாயிருக்கிறதா? அதெப்படிக் கூடும்? அப்படி நான் விரும்பினாலும் அவன் இருக்க விடானே, நான் என்ன செய்யலாம்?

ரா. அவன் தன் பசுவையும் காளையையும் மேய்க்கப் போகிறானா, இல்லையா?

சு. ஆம், அவன் கால் சற்று ஊனம், ஓடியாடித்திரிய எலாது. ஒருநாள் அவன் பசு ஓடிப்போயிற்று; அதைப் போய் மடக்கிக்கொண்டுவர அவனால் கூடாமல்போயிற்று!

ரா. சுந்தரம், அதுதான் நீ அவனை வெல்ல நல்ல சமையம். ஒன்று செய், நாளையத்தினம் அவன் தன் பசுவை ஓட்டிவரும்போது, நீ மெல்ல அவனண்டை போய்: சலாம் ஐயா, உமக்காக நான் ஓட்டிக்கொண்டு போகட்டுமா என்று கேள்; அப்போது அவன் மனம் இளகும். அப்புறம் விறகு எதாவது வேண்டியிருக்குமானால் அவ்விதமாயும் உதவி செய். இப்படி உன்னாலானமட்டும் அவனுக்கு அன்புபாராட்டு; அப்புறம் அவன் மனம் மாறுகிறதா இல்லையா பார், நீ அவனைக் கைவசப்படுத்த சிலநாள் செல்லும். துவக்கத்தில் சற்று கடுகடுப்பாய்த்தானிருப்பான்; ஆனால் அதையெல்லாம் நீ எண்ணாமல் நடந்துகொள். அப்போது கடுகடுப்பை விட்டுவிட்டுப் பட்சமாய் நடப்பது உத்தமம் என்று அவனே அறிந்துகொள்வான்.

சு. அண்ணா ராகவா, நான் இதைப்பற்றி நினைக்கவேயில்லை. இந்த உபாயம் உமக்கு எப்படித் தெரிந்தது?

ரா. நான் கிறிஸ்துமார்க்கப் பாடசாலைக்குப் போய் அவர்கள் சாஸ்திரத்தில் அடங்கிய அநேக சுலோகங்களைப் படித்திருக்கிறேன். அந்த சுலோகங்களில் ஒன்று இப்போ என் மனதில் வந்தது. அந்த சுலோகத்தைக் கேள்.

'மெதுவான பிரதியுத்தரம்
உக்கிறத்தை மாற்றும்.' இன்னும் ஒன்றைக்கேள்;

'தீமைக்குத் தீமையைச் சரிக்கட்டாமல் அதற்குப் பதிலாக ஆசீர்வதி'. வேறொன்றைக் கேள்;

'மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்' என்பவைதான்.

தனுக்கோடி உன்னைப் பகைக்கிறது உனக்கு இஷ்டமில்லை; அப்படியிருந்தும், நீ அவனைப் பகைக்கிறேன் என்கிறாயே; நீ அவனுடன் பட்சமாயிருக்க விரும்பி, பட்சமாய்ப் பேசி, பட்சமாய் நடந்துகொள்ளவேண்டும். இப்படி நீ உன்னாலானமட்டும் நடந்துகொள், அப்புறம் அவன் கடுகடுப்பு மாறுகிறதா இல்லையா பார்.

சு. நான் படிக்கிற பள்ளிக்கூடத்தில் இப்படிப்பட்ட தொன்றும் படிக்கிறதில்லையே ராகவா?

ரா. உன் வேதத்தில், தேவர்கள் என்னப்படுகிறவர்களுடைய தூர்க்கிரியைகளைத்தான் வாசிப்பாய்; அதிலிருந்து உனக்கு என்ன நன்மை வரும். கிறிஸ்தவர்களுடைய தேவனே அன்புள்ளவர். அப்படியே அவர்கள் சாஸ்திரத்திலும்: 'தேவன் அன்பாயிருக்கிறார்' என்று சொல்லியிருக்கிறது.

சு. இதைப்பற்றிய சங்கதிகளையெல்லாம் நான் அறிய மெத்த ஆசையாயிருக்கிறேன். கிறிஸ்தவன் என்றால், அவன் யார் ராகவா?

ரா. அவன் யார்? கிறிஸ்துவைப்போலிருக்கிறவன் தான்.

சு. கிறிஸ்து வென்றால் அவர் யார்? அவரைப்பற்றி நான் கேள்விப்படவில்லையே?

ரா. தேவசுதனாகிய திரு அவதாரமூர்த்தியே கிறிஸ்து. அவர் பாவிகளை இரட்சிக்கும்படி இப்பூலோகத்தில் வந்தார். ஆ! அந்த ரட்சணியமூர்த்தியின் அன்பை என்ன சொல்ல! அவருடைய திருச்சரிதை முழுவதையும் உனக்குச் சொல்ல எனக்கு ஆசையுண்டு; ஆனால் என்ன செய்வேன்? பள்ளிக்கூடத்திற்குப் போக நேரமாயிற்றே; நான் படிக்கிற பள்ளிக்கூடத்தில் நீயும் வந்து படிக்கும்படி உன் தாயாரைக் கேள். அத்தோடு உன் பகைஞனோடு ராசியாகவும் பார்த்துக்கொள்; போய் வருகிறேன், சலாம் சுந்தரம்.

சு. அண்ணா சலாம், சலாம்; உமக்கு மெத்த வந்தனம், முன்னிலும் இப்போ சற்று மனம் ஆறியிருக்கிறது, போய் வாரும் என்று சொல்லி வழிவிட்டனுப்பினான்.

அன்று சாயந்திரம் சுந்தரம் பாதைவழியாய்ப் போகையில், தன் பகைஞனாகிய தனுக்கோடி பசுக்களையும், எருமைகளையும் ஓட்டிவந்தான். அப்போது ஒரு பசு யிரண்டு வாலை முறுக்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தது. தனுக்கோடி நொண்டியானதால் அதைப்போய்த் திருப்பிக்கொண்டுவர ஏலாமல் வாயில் விரலை வைத்துக் கொண்டு, ஆகா, பசு ஓடிவிட்டதே என்று அங்கலாய்த்துக்கொண்டு நின்றான். அப்போது சுந்தரம் முந்திப் பயந்தாலும் பிந்தி தைரியங்கொண்டு, கொஞ்சம் வைக்கோலை எடுத்து ஒரே ஓட்டமாய் ஓடி பசுவின் கொம்பைப் பிடித்துக்கொண்டு, ஹா, ஹா, ஹா, என்று பசுவைத்தடவி அமர்த்தி, வைக்கோலைக் காட்டி ஆட்டுக்குட்டியைப்போல் பின்னால் வரச்செய்து, தனுக்கோடி வீடுமட்டும் கொண்டுபோய், ஐயா! பசுவைத் தொழுவத்தில் கட்டிப் போடட்டுமா என்று கேட்டான். அதற்கு,

தனுக்கோடி: கட்டிப்போடப்பா, இப்படிப் பசுவைப் பிடிக்கும் உபாயத்தை உனக்குக் கற்றுக்கொடுத்தது யார்?

சு. என் தாயார் கற்றுக்கொடுத்தாள் ஐயா.

தனு. அவளா, அவள் எப்போ பசு வளர்த்தாள்?

சு. என் தகப்பனார் சாகுமுன் வளர்த்தாள்; அப்பால் அதையெல்லாம் விற்றுப்போட்டாள்.

தனு. உன் தாய் பால் கறக்கும் வகையையும் கூடக் கற்றுக்கொடுத்தாளா?

சு. ஆம், பசுவையாவது, எருமையையாவது பால் கறப்பேன், ஐயா.

தனு. நல்லது, அப்படியானால் போய்ப் பால்கற பார்ப்போம்; உன் தாய்க்கும் கொஞ்சம் பால் தருவேன். ஆனால் கறக்கும்போது ஒரு சொட்டுப் பாலாவது சிந்தவும் கூடாது, நீ திருட்டுத்தனமாய்க் குடிக்கவும் கூடாது; பத்திரம் என்றான்.

அந்தப்படியே சுந்தரம் பால் கறந்து பசுக்களுக்குத் தவிடும் பருத்திக்கொட்டையும் வைத்து, எருமைகளுக்கு வைக்கோல் போட்டான். அப்புறம் அந்தக் கடுகடுப்பன் வெடுவெடுப்பை மறந்து, கொஞ்சம் பால் கொடுத்து, அடே பையா! இதோ, இந்த இரண்டு வாழைப்பழங்களையும் உன் தாய்க்குக் கொண்டுபோ, நான் அதிகம் கொடுக்க மாட்டேன், காது கேட்குதா? காலையில் மாடுகளை ஓட்ட உன் தாய் உன்னை விடுவாளா? உனக்கு மனமாகி அவள் உன்னை அனுப்பினால் வரலாம்; போய்வா.

சு. நான் என் தாயாரிடத்தில் கேட்டு, அவள் அனுப்பினால் சந்தோஷமாய் வருவேன். மெத்த வந்தனம் ஐயா! சலாம்.

தனு. சலாம் அப்பா! வழியில் பாலைச் சிந்திப்போடாதே, பத்திரம் என்று சொல்லியனுப்பினான்.

உடனே சுந்தரம் ஓட்டமாய் ஓடி முந்தின நாளில்லாத சந்தோஷத்தோடும் முகமலர்ச்சியோடும் வீடுவந்து சேர்ந்தான். முந்தினநாள் மகன் தன்னிலித்தம் வசைச் சொல் கேட்டதால் துக்கத்தோடிருந்த தாயாரும் சந்தோஷப்பட்டு, தனுக்கோடிக்கு எப்போ அவசரமோ அப்போதெல்லாம் நீ போகலாம் என்று உத்திரவு கொடுத்தாள். மேலும் ராகவன் வழியில் கண்டு பேசினதையெல்லாம் தாயிடத்தில் சொல்லி, தான் கிறிஸ்தவர்கள் பள்ளிக்கூடத்தில் போய் படிக்கவும் உத்திரவு கேட்டான். ஆனால் ஜாதி வித்தியாசத்தைப் பற்றி அந்தப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பயந்தாள். அப்போது பையன்: ராகவனும் நானும் ஒரே ஜாதி தானே; மேலும் அவர்கள் நல்ல படிப்பெல்லாம் சொல்லிக்கொடுக்கிறார்கள். பார் அம்மா, தனுக்கோடியின் கோபந்தணிய உபாயம் சொன்னவன் அவன்தான். இவ்விதமாகவே நான் பகையை வெல்லுவேன். அம்மா, என்னை அந்தப் பள்ளிக்கூடத்துக்குத்தான் அனுப்பவேண்டும் என்றான். அதற்குத் தாய்: ஆ மகனே, நீ அவனைப் பட்சத்தினாலேவென்றால், ராகவன் பள்ளிக்கூடத்திற்குத்தானே போ, காரியம் எப்படியாகுது பார்ப்போம் என்று சொல்லி, சம்மதித்தாள்.

அதுமுதல் சுந்தரம் ராகவனுடைய பள்ளிக்கூடத்தில் போய்ப் படித்துவந்தான். இருவரும் கூடும்பொழுதெல்லாம் சத்தியவேதத்திலிருந்து சில புதுமைகளை அவனுக்குச் சொல்லிக்கொண்டே வருவான். இதினாலே சத்திய வேதத்தை ஆராயவேண்டுமென்கிற ஆசை அவனுக்குள் அதிகரித்தது. அவன் எவ்வளவுக்கு அதிகமாய் அதைப் படித்தானோ, அவ்வளவுக்கதிகமாய் இன்னும் படிக்க ஆவல் கொண்டான்.



ஒருநாள் இரவு அவர்கள் சாப்பிட்டுப் போட்டு, தாயும் மகனுமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில், தாய் மகனைப் பார்த்து:

மகனே, நீ ராகவன் படிக்கும் பள்ளிக்கூடத்திற்குப் போகிறதைப்பற்றி எனக்குச் சந்தேகமே இல்லை. நீ அவனிடத்திலிருந்து அநேக நல்ல காரியங்களைக் கற்றிருக்கிறாய். அதில் சில எனக்கும் பிரயோஜனமாயிருக்கின்றன. நான் முன் அறியாத ஒரு காரியம் இப்போ எனக்குத் தெரியவந்தது. தேவன் விதவைகளையும், திக்கற்ற பிள்ளைகளையும் காப்பாற்றுகிறாரென்பது நிசந்தான். 'அவர் திக்கற்ற பிள்ளைகளையும் விதவைகளையும் ஆதரிக்கிறார்' என்றும் (சங். 146: 9), 'திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார்' என்றும் (சங். 68: 5), நீ எனக்கு ஒரு மாசத்துக்குமுன் சொன்னாயே, அதை மறக்கமாட்டேன். நம்முடைய தேவர்களில் எவர்களைப் பற்றியாவது இப்படிப்பட்ட நல்ல காரியம் சொல்லியிருக்கிறதா? பிராமணரும் மற்றவர்களுங்கூட விதவைகளைத் தீட்டாய் எண்ணுகிறார்களல்லவா? ஆ இந்த நல்ல தேவனைப்பற்றி நாம் இன்னும் அதிகமாய் அறிந்தால் எவ்வளவு நல்லது. நீ இனி அந்தப் பாடசாலைக்கே போய், அந்தத் தேவனைப்பற்றியே படித்து எனக்கும் வந்து சொல்லு. அப்போது நானும் கைம்பெண்களைக் கண்பார்க்கிற அந்தக் கடவுளைப்பற்றி இன்னும் விபரமாய் அறிந்துகொள்வேன்.

எப்படியிருந்தாலும் நம்முடைய சாஸ்திரங்களில் கண்டுபிடிக்கக்கூடாத ஒரு நல்ல படிப்பைக் கற்றுக் கொண்டாய், அதற்காக எனக்குச் சொல்ல முடியாத சந்தோஷமுண்டு. அதென்னவென்றால்:

'பகையை வெல்லும் மருந்துதான்' என்றாள்.

---

## தூக்கம் வராமைக்குப் பரிகாரம்.

நன்றாய் நித்திரை வரக்கூடாமற் போவதினால் தேகத்திற்கு ஏதோ விசேஷித்த அபாயம் விளையுமென்று நாம் சொல்லிவிட முடியாது. என்றாலும், நல்ல சுகதேகிகளாயிருப்பவர்களுங்கூட போதுமானவளவு நித்திரை செய்யாவிட்டால் அவர்களுக்கு ஞாபக சக்திக் குறைவு, ஒரே காரியத்தில் மனதைச் செலுத்த திடமின்மை முதலான மனசம்பந்தமான நோய்களுண்டாகின்றன. கண்களுக்கும் இதனால் ஆயாசம் உண்டாகி, ஒருவிதமான மயக்கம் ஏற்படுகின்றது. சரீரம் முழுவதுமே விடாய்த்துப் போனவண்ணம் தெரிகிறது. நோவு, ஜுரம், மனவெழுச்சி, தேகத்தில் இரத்தமின்மை, முதுகில்வலி, இவையாவும்நித்திரையைக் கெடுக்கக்கூடும். இந்நோய்கள் எத்தனை பிடிவாதமாக நிலைத்திருக்கிறதோ அத்தனைக்கதிகமாய் தூக்கமின்மையும் நீடித்துக் கொண்டு தான் வரும்.

நல்ல தேகசுகமும், வீரியமும் வாய்ந்த ஒருவன் மிகுதியான ஆகாரம் புசிப்பானென்றால், அவன் மண்டைக்குச் செல்லவேண்டிய இரத்தமானது ஜீரணக்கருவிகளுக்குப்போக ஆரம்பிக்கிறது. மண்டையில் இரத்தோட்டம் இல்லாமலிருக்கையில் இலேசாய் தூக்கமயக்கம் உண்டாகக்கூடும் அப்படிக்கின்றி, நல்ல போஷிப்புக்கான ஆகாரங்களைச் சாப்பிடாமலும் உபவாசமிருந்து வருகிறவர்களுக்கு இரவில் வெகு நேரம் நல்ல தூக்கம் வருகிறதில்லை. சிலவேளைகளில் படுக்கப்போகுமுன் மனதில் அநேககாரியங்களைக்குறித்து யோசித்துக்கொண்டிருந்து பின்பு படுக்கப்போகிறவர்களுக்கும் இலேசாய் தூக்கம் வருகிறதில்லை. இன்னும் கோபதாபமாயிருந்து படுக்கப்போனாலும் உறக்கம் வருகிறதில்லை. இன்னும் மலபந்தம், கால்கள் சில்லிட்டுப்போதல், அசுத்த ஆகாயம், இவையும் தூக்கம் வாராமைக்குக் காரணங்களாகும்.

இவையெல்லாவற்றிலும் மனதொந்தரவுதான் மிகக்கொடுமையானது. சந்தேகம் மனக்கவலை இவை பெரும்பாலும் நித்திரையைக் கெடுக்கக்கூடியவையே. தூக்கமின்மை சிலபேரில் நீடித்திருப்பதின் காரணங்களில் ஒன்று, ஏதோ ஒரு காரியம் நடந்தேறவேண்டுமென்று அவர்கள் அபேட்சையாய் எதிர் நோக்கியிருத்தல்தான்.

தேக சுகத்தையும், மனோசுகத்தையும் காத்துக்கொள்ளக்கூடிய சுகவிதிகளை கிரமமாய் அனுசரித்து வருதலே நல்ல சுக நித்திரையைக் கொண்டுவரக்கூடிய சிறந்த வழியாகும். காப்பி தேயிலை பானம் இவற்றை அறவே ஒழித்துவிடுதல் வேண்டும். இரவில் அநேக மணிநேரங்களாக விழித்திருக்கவேண்டியவர்கள் அடிக்கடி காப்பி சாப்பிட்டுக்கொள்ளுகிற வழக்கமுண்டு. இப்பழக்கம் கொடியது. இரவு சாப்பாட்டில் வெண்காயத்தைச் சாப்பிட்டுவருதல் மிகவும் உத்தமம். வெண்காயத்தில் உறக்கத்தையுண்டாக்கக்கூடிய ஓர் வித எண்ணெய் உண்டு.

தலையில் நீர் தங்கியிருந்து தூக்கம் வராமற் போகுமென்றால், காடி தண்ணீர் இரண்டையும் கடற்பஞ்சில் தொட்டுக்கொண்டு கன்னப் பொறிகளிலும், நெற்றியிலும் துடைக்கவேண்டும். சரீரத்தின் கீழ்பாகத்தை உஷ்ணமாய் வைத்துக்கொள்ளுதலும் அவசியம். அநேக கேசுகளில் இந்தப் பரிகாரம் குணத்தைக்கொடுக்கும்.

முதுகைக் கீழ்வைத்து மல்லாக்கப் படுத்துக் கொள்வதினுல் நெஞ்சு கனதியுண்டாக்கும் ஒரு சங்கடம் ஏற்படுகின்றது. இடது பக்கம் படுத்துறங்குவதினுல் பலவிதமான வீண் கனுக்கள் உண்டாகும். குழந்தைகள் சாப்பாட்டிற்குப் பின் குப்புறப்படுத்து, உறங்குவது சகஜமே. வயதானிகளுங்கூட குப்புறப்படுத்து, தங்கள் இடது கையை முதுகின் கீழ்ப்பக்கத்தின்மேல் போட்டு, தங்கள் தலையை இடதுப்பக்கமாய்ச் சாய்த்து, தங்கள் வலதுகையை தலைக்கு மேற்புறமாக வைத்துக் கொள்வதினுல், தங்களுக்கு சுகமாய் நித்திரை வருகிறதாகக் காண்கிறார்கள். வலது பக்கத்திலாவது அல்லது இடது பக்கத்திலாவது படுத்துறங்கும்பொழுது தலையை சற்று முன்னுக்கு வைத்துக்கொள்ளவேண்டும் இது நாசியின் மூலமாய் மூச்சுவிட இலகுவுண்டாக்கும். ஆ. து.

---

## சருமரோகம்—அதின் காரணமும், அதற்குரிய பரிகாரமும்.

டி. எ. ஆர். ஆப்ரன்ஸ், எம். ஆர். ஸி. எஸ்., எல். ஆர். ஸி. பி. எல். டி. எஸ்., ஆர். ஸி. எஸ்.

சருமத்தில் படிந்துள்ள அழுக்கைப் போக்க சிறந்த வழியாதெனில், சிறிது சவுக்காரத்தைக்கொண்டு சுத்த ஜலத்தில் நமது தேகத்தைத் தேய்த்துக் கழுவி ஸ்நானஞ்செய்தல்தான். வாரத்திற் கிருமுறையாயினும் அல்லது கூடுமானுல் நாள்தோறும் கிரமமாய் ஸ்நானஞ்செய்து வருவோமானுல் நமது மேற்தோலானது பலமாயும், மினுமினுப்பாயும், இளக்கமாயுமிருப்பதுடன் ஆரோக்கியமாயுமிருக்கும். நமது சருமம் ஆரோக்கியமாயிருந்தால் சருமத்தைப்பற்றின வியாதியொன்றும் நமக்கு இலேசாய் வாராது. தன் தேகத்தின் மேற்புறத்தை எப்பொழுதும் சுத்தமாயும், ஆரோக்கியமாயும் வைத்துக்கொள்கிறவன், மற்ற விஷயங்களிலும் சுகதேகியாயிருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை.

### ரோகங்களுக்குக் காரணம்.

சரும ரோகம் உண்டாவதின் பல காரணங்கள் நமக்கு ஒருவாறு கருகலாயிருக்கின்றன. தேகத்திலுள்ள இரத்தம் கெட்டுப்போவதே எல்லாவித சர்ம ரோகங்களுக்குமுரிய காரணம் என்று நாம் சொல்லிவிட முடியாது. சின்னம்மை, ஸ்கார்லட் விஷஜுரம், முதலான சருமரோகங்கள் வருங்கால், அவற்றினுல்தேகசுகமும் தாக்கப்படுகிறது மெய்யானுலும், அநேகவிதமான சரும ரோகங்கள் வேறே காரணங்களினுலும் வரக்கூடும்.

நமது மேற்தோலானது ஸ்பரிச உணர்ச்சியுள்ளதாயிருப்பதினுல், அது நோவு முதலியவற்றை விரைவாய் உணருகிறது. ஆகையால் ரொட்டி சுடுகிறவர்கள், செங்கல் சுடுகிறவர்கள், இன்னும் பற்பல தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்கள் ஆகிய இவர்கள் எரிவு, காங்கை முதலியவற்றினுல் உண்டாகும் பலவித சர்ம ரோகங்களினுல் வருந்துகிறார்கள்.

### சர்ம ரோகத்தால் வருந்துகிறவர்களுக்கு ஏற்ற ஆகாரம்.

சர்ம ரோகத்தால் வருந்துகிறவர்களில் அநேகருக்கு நாள்பட்ட அஜீரணம் இருந்துவந்திருக்கிறதென்பதை நாம் முதலாவது அறியவேண்டியது. ஆகையால் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் மது, காப்பி, தேயிலை, கடுகு மிளகு முதலானவை, இன்னும் மாமிசம், பலகாரம், இனித்த மாப்பண்டங்கள் முதலான யாவையும் அப்புறப்படுத்தி விடவேண்டும். நமது தேகத்திலுள்ளிருக்கும் உறுப்புகளுக்கு கோளாறுகள் ஏற்படுவதினுலும் சருமரோகம் வரக்கூடுமென்பதை நாம் மறந்துவிடலாகாது.

### பொதுவாய் அனுசரிக்கவேண்டிய விதிகள்.

சருமத்தைப்பற்றிய வியாதிகளைக் குணமாக்குகையில் முதலில் அவற்றின் காரணத்தைக் கண்டுபிடிப்பது அவசியமாகும் காரணத்தைக் கண்டுபிடித்து அதை நீக்கினுலன்றி, மற்றெவ்விதமான மருந்துகளைக்கொண்டும் மேற்காயங்களைக் கழுவினுலும் குணமுண்டாகாது. எல்லா வித ரோகங்களுக்கும் பொதுவான பரிகாரங்களைக் கையாடுதல் மட்டும் போதாது; அந்தந்த வியாதியின் தன்மைக்கேற்றபடி பரிகாரமும் இருக்கவேண்டியது அவசியம்.

நோயாளியின் சுகவீனத்தைப் பின்னும் அதிகரிக்கச் செய்யும் தொல்லையாக்கவலை, வருத்தம், மனநோவு முதலியவற்றிற்கு அவன் இடங்கொடுக்கலாகாது.

சருமத்தில் புண்களுள்ள பாகங்களை மருந்து நீரைக்கொண்டு கழுவி, அதற்குப் பூசவேண்டிய தைலத்தைப் பூசுதல் நாம் கையாடவேண்டிய சிகிச்சையாகும். மேலும், இச்சிகிட்சையை அந்தந்த ரோகத்திற்கேற்ற விதமாய்க் கையாடுவதும் அவசியம். பற்பல சரும ரோகங்களைக் குணமாக்கக்கூடிய பற்பல விதமான மருந்துகள் உண்டு.



### மிதமிஞ்சின வேர்வை.

இம்மாதிரியான நிலைமையில் இரத்தக் கோளகங்கள் மிகுதியாய் வேலைசெய்கின்றன. முக்கியமாக பாதங்களிலும், கஷ்கத்திலும், உள்ளங்கைகளிலுந்தான் வேர்வை உண்டாகிறது. தேக முழுவதிலும் துர்நாற்றம் வீச ஆரம்பிக்கிறது.

இங்ஙனம் மிகுதியான வேர்வையுண்டாகும் பொழுது கையாடவேண்டிய பரிகாரம் சுடு ஜலத்திலும் குளிர்ந்த நீரிலும் முறையே மாறி மாறி ஸ்நானஞ் செய்தல்தான். ஒரு பாத்திரத்தில் சூடான ஜலத்தையும் மற்றொரு பாத்திரத்தில் குளிர்ந்த ஜலத்தையும் வைத்துக்கொண்டு, கால்களை முதலாவது சூடான ஜலத்திலும், பின் குளிர்ந்த நீரிலும் அரை நிமிஷமாக மாறிமாறி இருபது நிமிஷம்வரை அப்படியே வைத்திருக்கவேண்டும். பின்பு கால்களைத் துடைத்துவிட்டு, கீழ்கண்ட மருந்து நீரில் ஒன்றைப் போடவேண்டும். டானிக் ஆசிட் (Tannic acid) ஒரு அவுன்ஸும், தண்ணீர் நாலு அவுன்ஸும், இது கிடையாவிட்டால் போரிக் ஆசிட் (Boric acid) ஒரு தேயிலைக்கரண்டி அளவும், விட்ச் ஆஸல் (Wich hazel) என்னும் திரவ பதார்த்தத்தில் ஐந்து அவுன்ஸும் சேர்த்துக்கொள்ளலாம். மேலும் இப்பாகங்களில் சுத்த ஆகாயம் படும்படி திறந்துவிடுவது நல்லது. உடைகளை அடிக்கடி மாற்றிவர வேண்டும். கஷ்கங்களில் வேர்வை அதிகம் உண்டாகுமானுல் சவுக்காரத்தை கொண்டும் தண்ணீரைக்கொண்டும் அடிக்கடி கழுவி, மேற்சொன்ன மருந்து நீரில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு, அதோடு பொட்டாசியம் பெர்மாங்கனேட் பொடியில் கொஞ்சம் கலந்து சருமத்தைக் கழுவலாம்.

### தேமல்.

சருமத்தில் வர்ணப்பசை அதிகமாய்க் காணப்படுவதினுல் இந்த ரோகம் உண்டாகிறது. சூரியனின் காங்கை காற்று இவை எந்நேரமும் தேகத்தில் படவிடுகிறவர்களுக்கு விசேஷமாக இவ்வித சருமரோகம் வருகிறதுண்டு. இதற்குரிய பரிகாரத்தை யாவரும் இலேசாய்க்கையாடலாம். ஒன்றரை தேக்கரண்டியளவு போராக்ஸ், ஒரு பெரிய கரண்டியளவு கிளிஸரீன், இரண்டு பெரிய கரண்டியளவு எலுமிச்சம் பழரசம் இம்மூன்றையும் மூன்று அவுன்ஸுள்ள ஒரு புட்டியில் ஊற்றி, அதில் தண்ணீரை நிரப்பிக்கொள்ளவும். ஒரு நாளில் மூன்று வேளை பதினைந்து நிமிஷமாக இதை தேமல் படர்ந்துள்ள பாகங்களில் தேய்த்து, பின்பு மெல்லிய ஒரு துவாலையைக்கொண்டு துடைத்துவிடவேண்டும். அல்லாவிட்டால் ஒரு எலுமிச்சம்பழத்தை அறுத்து ரோகமுள்ள பாகங்களில் அதைத் தேய்க்கலாம்.

### சொறி சிறங்கு.

இது சாதாரணமாய் வரக்கூடிய ஒரு சரும ரோகந்தான். இது சில பேர்களில் புண்ணுகி மேலே எழும்புகிறதில்லை. பெரும்பாலும் இரத்தம் அல்லது நரம்புகள் கெட்டுப்போவதினுல் இந்த ரோகம் உண்டாகிறது. இன்னும் சிலரில் இது காலவேற்றுமை ஆகாரக்கிரமமின்மை முதலியவற்றினுலும் உண்டாகக்கூடும்.

ஆகையால் இந்த ரோகதனைச் சொஸ்தமாக்கும் முறையிலும் காரணத்தை முதலாவது அறிந்து அதை நீக்கப் பிரயாசப்படவேண்டும் அடிக்கடி ஸ்நானஞ் செய்து தேகசுகத்தை செம்மையாய்ப்பாதுகாத்துவரவேண்டும். போதுமான அளவு தண்ணீர் குடித்து குடல்களையும் இரைப்பையையும் எப்பொழுதும் சுத்தமாயிருக்கும்படி வைத்துக்கொள்ளவேண்டும். கொழுப்பான பதார்த்தங்களையெல்லாம் நீக்கிவிடவேண்டும்.

ரோகமுள்ள பாகங்களை சுத்தமாய் வைத்து, ஒரு பைன்ட் (பன்னிரண்டு அவுன்ஸ் அளவு) தண்ணீரில் ஒரு தேக்கரண்டியளவு போராக்ஸ், அல்லது சோடா கார்பனேட் சேர்த்து, கரைத்துக்கொண்டு அம்மருந்து நீரை ரோகங்களில் தடவலாம்.

### உஷ்ணக்கட்டிகள், பருக்கள்.

இது மிகவும் உஷ்ணகாலத்தில் வருகின்ற ஓர்வித ரோகம். வெயில் அதி உக்கிரமாயிருக்கும் காலத்தில் ஸ்திரீகள் இந்த ரோகத்தால் பெரும்பாலும் வருந்தக்கூடியவர்களாயிருக்கிறார்கள். அகோரமும் காங்கையுமே இந்த ரோகத்தைக் கொண்டுவரும் சாதனங்களாம். அதிலும், உப்புநீர் அதாவது சமுத்திர ஜலத்தில் ஸ்நானஞ் செய்வதால் இது நேரிடக்கூடியது. சூரிய ரேகைகள் படும்படியாக திறந்துவிடப்பட்ட பாகங்கள் சிவந்து மேனி மாறுதலடையும். அல்லது சிவந்த பருக்கள் எழும்பலாம். தினவு சொரி முதலியவும் இதோடு வரக்கூடும். ரோகம் கொடிதாயிருந்தால் புறத்தோல் உரிந்து போவதுண்டு.

இந்த ரோகம் மிகவும் கொடிதானுலன்றி மற்றப்படி பயப்படவேண்டிய அவசியமில்லை, சில பகலி நேரங்களில் அல்லது சில நாட்களுக்

குள்ளாக இவை ஆறி மறைந்துபோகும். வேதனை கஷ்டமாயிருந்தால் குளிர்ச்சியான ஒற்றடங்கள் கொடுத்தும், ஒரு பைண்ட் தண்ணீரோடு ஒரு தேக்கரண்டியளவு சோடா கலந்து அதில் ஸ்நானஞ் செய்தும் கஷ்டத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம். ஸ்நானஞ் செய்த பின் ரோகமுள்ள ஒரு அவாலையைக்கொண்டு தேய்த்துத் துடையாமல் ஒற்றித் துடைக்க வேண்டும்.

ஆ. ஞா.

---

### ஈ கொலை பாதகன்

### ஈ சேதம் பண்ணுகிற உபாயங்கள்

#### 1. ஈ தொந்தரவாளி.

மையூர் என்ற ஒரு ஊரில் ஆவணிமாதம் ஒரு ராத்திரியில் நல்ல மழை பெய்தது. அடுத்த நாள் காலையில் மழை நின்று விட்டது. வெயில் நன்றாய் அடித்தது. ஊரிலே எங்கும் ஈரமாயிருந்தாலும், உஷ்ணம் அதிகமாயிருந்தது.

அந்த நாள் காலையில் மாணிக்கம் உபாத்தியாயரும் பிள்ளைகளும் வழக்கம்போல் பள்ளிகூடத்துக்குப் போனார்கள். பள்ளிக்கூடத்துக்குச் சில சிறு ஜன்னல்களும், ஒரே ஒரு கதவுமட்டும் இருந்தது. கதவைத்திறந்து உள்ளே போகும்போதே 'இன்று எவ்வளவோ காங்கை' என்று உபாத்தியாயர் சொல்லிக்கொண்டார். பிள்ளைகள் உட்கார்ந்தார்கள்.

சற்று நேரத்திற்குப் பிறகு உபாத்தியாயர் பிள்ளைகளைப் பார்த்து, சொன்னதாவது: ஐயோ! என்னைத் தொந்தரவுபடுத்தும்படி இப்போது நாலைந்து பேர் வந்திருக்கிறார்கள்.

பிள்ளைகள்: (அதிக ஆச்சரியப்பட்டு, அக்கம் பக்கம் பார்த்து): என்ன, ஐயா! ஒருவரையும் காணோமே.

உபாத்தியாயர்: பிள்ளைகளே, தொந்தரவு பண்ணுகிறவர்கள் சத்தத்தைக் கவனித்துக் கேளுங்கள்.

(அப்பொழுது பிள்ளைகள் தங்கள் வாயைத்திறந்து ஒன்றும் பேசாமல் இருந்தார்கள்.)

உபாத்தியாயர்: (தான் பயப்பட்டது போல்): ஐயோ! இன்னும் பலபேர் எங்கேயோ இருந்து வருகிறார்கள். நாம் என்ன செய்வோம்?

பிள்ளைகள்: (இன்னும் அதிகம் அதிகமாய் ஆச்சரியப்பட்டு): ஐயா, பள்ளிக்கூடத்துக்கு வேறே ஒருவரும் வரவில்லையே.

உபாத்தியாயர்: கேளுங்கள், கேளுங்கள்; இவர்கள் இப்போது பள்ளிக்கூடத்தில் இருக்கிறார்கள்; சிலர் தரையில் உங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள்; சிலர் என்மேல் உட்கார்ந்திருக்கிறார்கள்; இரண்டு மூன்று பேர் பலகைமேல் நடக்கிறார்கள்; அவர்களுக்குக் கை இல்லை, ஆறு கால்கள்தான் உண்டு. . . . . . . . . . . . . .

பிள்ளைகள்: (உடனே): ஓகோ! தெரியும், தெரியும், ஐயா. தொந்தரவு பண்ணுகிறவர்கள் ஈக்களாய்த்தான் இருக்கவேண்டும்.

#### 2. தொந்தரவாளி செய்யும் இடைவிடா முயற்சி.

உபாத்தியாயர்: நீங்கள் சொன்னது சரிதான். தொந்தரவு பண்ணுகிறவர்கள் ஈக்களே. இவைகள் கூட்டங் கூட்டமாய் வந்ததினாலே பாடம் நடத்த எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. இவைகளைப்பற்றிச் சற்றுநேரம் பேசிக்கொள்வோமா? பிரியமா?

பிள்ளைகள்: பிரியந்தான், ஐயா.

உபாத்தியாயர்: ஒரு தடவையில் நான் காசிக்குப் போனேன். அங்கே ஈக்கள் ஏராளம். ஆனால், ஈக்களைப் பார்க்கக் காசிக்குப் போகவேண்டுமா?

பிள்ளைகள்: [illegible]டாம், வேண்டாம், ஐயா.

உபாத்தியாயர்: வேண்டாம். ஈக்கள் இல்லாத ஊர் இல்லவே இல்லை. இந்த ஊரிலே ஈக்கள் இல்லையா?

பிள்ளைகள்: இருக்கும், இருக்கும், ஐயா.

உபாத்தியாயர்: (கை காட்டி) அதோ, கேவலமான நாய்க்குட்டி ஒன்று குப்பையின்மேல் தூங்குகிறது. ஈ அக்குட்டியின்மேல் உட்கார்ந்து அதற்குத் தொந்தரவு பண்ணுகிறது. பார்க்கிறீர்களா?

பிள்ளைகள்: பார்க்கிறோம், ஐயா.

உபாத்தியாயர்: நமது ஊரில் பெரிய ஜமீன்தாரின் வீடு இருக்கிறது, அல்லவா?

பிள்ளைகள்: இருக்கிறது.

உபாத்தியாயர்: ஈ அவருடைய வீட்டுக்குப் போகாதா? மரியாதை இல்லாமல் ஒரு ஈ ஜமீன்தாரின் மூக்கிலே உட்காரும். அந்த ஈ எங்கிருந்து வந்தது? குப்பையில் தூங்கின நாய்குட்டியிலிருந்து பறந்துவந்திருக்கும்.

பிள்ளைகள்: ஐயோ!

உபாத்தியாயர்: ஆம், ஒரு பெரிய பக்தன் தபசு செய்யும்போது ஈக்கள் அவனைத் தொந்தரவு பண்ணும். அதைப்போலவே தோட்டியானவன் தன் வேலையைச் செய்யும்போதும் ஈக்கள் அவனுக்குத் தொந்தரவு பண்ணும். நமது ஊரிலே சத்திரம் சாவடி இருக்கிறது. திருவிழாவிற்குக் குஷ்டரோகம் முதலிய புண்கள் உள்ள பிச்சைக்காரர்களும், பரதேசிகளும் வந்திருப்பார்கள், அல்லவா? அவர்களின் புண்களின்மேல் ஈக்கள் மொய்த்துக்கொண்டிருப்பதைப் பார்த்திருப்பீர்களா?

பிள்ளைகள்: பார்த்திருக்கிறோம், ஐயா.

உபாத்தியாயர்: ஆம், ஜாதிபேதமின்றி ஈக்கள் யாவருக்கும் தொந்தரவு பண்ணும். மேலும் ஆடுமாடுகளுக்குங்கூட ஈக்கள் தொந்தரவு கொடுக்கும், அல்லவா?

பிள்ளைகள்: தொந்தரவு பண்ணும், தொந்தரவு பண்ணும்.

(இன்னும் வரும்)



744

REG. NO.—M. 2146

# THE Piramalai Reformer

## பிரமலை சீர்திருத்தன்.

12 NOV 1930

"முற்கோபி மதிகேட்டைச் செய்வான்; துர்ச்சிந்தனைக்காரன் வெறுக்கப்படுவான்."

Vol. X.] ஆகஸ்டுமீ 1930 [இலக்கம் 4

### பஞ்சாங்கம்.

1930 பிரமோதூதஞு ஆடி 17 — ஆகஸ்டுமீ — பிரமோதூதஞு ஆவணி 15 — 1930

| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
|---|---|---|---|---|---|---|
| 31 15 | | | | | 1 17 | 2 18 |
| 3 19 | 4 20 | 5 21 | 6 22 | 7 23 | 8 24 | 9 ○25 |
| 10 26 | 11 27 | 12 28 | 13 29 | 14 30 | 15 31 | 16 32 |
| 17 ஆவ* 1 | 18 2 | 19 3 | 20 4 | 21 5 | 22 6 | 23 ● 7 |
| 24 8 | 25 9 | 26 10 | 27 11 | 28 12 | 29 13 | 30 14 |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription.—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## பெண் கல்வி.

பார்த்தால் ஒரு சிறு வாக்கியம், சொன்னால் வாய்க்கு ஒரு சிறு வசனம், நினைத்தால் நினைவுக்கு ஒரு பழமொழி, மதித்தால் மனதுக்கொரு முதுமொழி, நாகரீகமான இக்காலத்திலும் பெற்றோர்களில் அநேகர், தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புகிறதில்லை என்று சிற்சில இடங்களிலிருக்கும் உபாத்திமார்கள் சொல்வது விசனிக்கத்தக்கதே. கற்றுணர்ந்த பெரியோரும், பெண்கள் கல்வி என்ற வார்த்தைதானும் காதில்பட்டால் அவர் படும்பாடு கொஞ்சமல்ல.

அடுப்பு ஊதும் பெண்களுக்குப் படிப்பு எதுக்கு என்ற வாக்கியத்தைக் குருட்டுப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு கல்வியினால் பெண்களுக்கு யாது பயனுமில்லை என்று எண்ணியுளர். இது இவ்வாறிருக்க, சாதாரணமாக உலகத்தில் எந்தக்காரியத்தை எடுத்தாலும் அதில்நன்மையும் தீமையும் இருப்பது சகஜமே. ஆனதுபற்றி நேரிடக்கூடிய சில தீமைகளை உத்தேசித்து மனத்தாழ்ச்சி மேலாகி நாம்செய்ய நினைத்த கருமத்தை விட்டுவிடுதல் நன்னன்று. நெருப்பினால் ஒரு பொருளை அழிக்கவும், அதே சமயத்தில் உண்டாக்கவும் உபயோகப்படுத்தலாம். யாதொரு காரியத்திலும் ஜெயமடைவது நம்மைப் பொருத்ததே.

இது நிற்க, மேற்சொன்ன பெண் கல்வியால் வரும் நன்மைகளில் சிலவற்றை இங்கு எடுத்துக் கூறுவோம்.

(1) பிள்ளைக் கடமை:— நாம் அன்றாடத்தில் காண்கிறபடி கல்வியறிவு சிறிதேனும் அடையாத பெண்பிள்ளைகள், தங்கள் பெற்றோர்கள் எந்தநேரமும் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தால் ஒழிய தாங்களாய் யூகித்து ஒரு காரியத்தைச் செய்வதில் மிக்கக் குறைவுடையவர்களாய் இருக்கிறார்கள். தாங்கள்செய்வது இன்னதென்று அறியாமல் வரக்கூடிய நன்மைதீமைகளை வரையறுக்கக் கூடாதவர்களாய்த் திகைக்கிறார்கள்.

ஆகையால் நமது பெண் மக்கள் கடவுளால் இலவசமாய்ப் பெற்ற மனோசக்தியை நல்வழியில் பிரயோகித்து தாங்கள் பெற்றோரிடம் இருக்கும்போது பெற்றோருக்குப் பிள்ளைகள் செய்யவேண்டிய கடமையைச் சரிவர செய்வதற்கு மேற்சொன்ன மனோசக்தியை எல்லா விதிகளிலும் விர்த்திசெய்யக்கூடிய கல்வியைக் கொடுப்பது தர்மமன்றோ.

(2) மனைவியின் கடமை:— தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவநாயினார் 'அன்பு மறனுமுடைத்தாயினில் வாழ்க்கை பண்பும் பயனுமது' என்று உரைத்தபடி இல்வாழ்க்கையானது அன்பு, தர்மம் என்ற நற்குணங்களோடு கூடி இருப்பதே ஜெயம். ஆகவே, தெய்வத்துக்கும், சாதுக்கள் முதலான பெரியோருக்கும், ஏற்ற இன்பத்தைக் கொடுக்கக்கூடியது. சகல நற்குணங்களும் பொருந்திய இல்வாழ்க்கையே இந்தலோகத்தைச் செவ்வனே கொண்டுசெலுத்துவதற்கு இல்வாழ்க்கைக்கு விளக்காகிய மனைவியே காரணக் கர்த்தாவாகிறாள்.

இதிலிருந்து சாதாரணமாக, ஒரு மனைவிக்கு இல்வாழ்க்கையில் எவ்வளவு உத்திரவாதமான வேலை இருக்கிறதென்று வெள்ளிடைமலைபோல் தெரிகிறது. ஆகையால் தன்னை ஜீவிய சிநேகிதியாக தெரிந்தெடுத்த கணவனுடைய நோக்கத்தைத் திருப்திகரமாய் முடிக்க எவ்வளவோ ஞானமும், புத்திக்கூர்மையும் வேண்டும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. இப்பேர்ப்பட்ட ஞானத்தைக் கொடுக்கக்கூடியவள் கல்விக்கரசியே. ஆகையால் பெண் மக்கள் அவளிடம் போய் தங்களுக்கு அவள் வைத்திருக்கிற விலைமதியா ஞானத்தையும், இல்லர வாழ்க்கைக்கு வேண்டிய பூஸ்திதியையும் வாங்க வேண்டுவதவசியமே.

(3) தாய் கடமை:— 'தாயைப்போல பிள்ளை, நூலைப்போல்சேலை' என்ற பெரியோர் வாக்கியத்திலிருந்து இல்லர வாழ்க்கையில் தாயானவள் எவ்வளவுக்கெவ்வளவு முக்கிமாகக் கருதப்படுகிறாள் என நன்கு புலப்படுகிறது. குடும்பத்தின் பலன்களாகிய பிள்ளைகள் தங்கள் பின் ஜீவியத்தில் ஜெயமுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்றால் அக்குடும்பத்திற்கு, தலைவியாகிய தாய் எல்லா விஷயத்திலும் முன்மாதிரியாக இருக்கவேண்டுமல்லவா. இதுவுமன்றி தன் பிள்ளைகளுக்கு வியாதி ஒன்றும் அணுகாதபடி அவர்களை சுத்தமாய்வைத்து காலம் தவராது வேண்டிய சவாட்சணை செய்து வியாதிவரும் பட்சத்தில் கைமருந்தின் மூலமாயும், அல்லது தேர்ந்த வைத்தியர் மூலமாயும் அவ்வியாதியைத் துவக்கத்திலேயே வேரற நீக்குவதற்கு ஏற்ற அறிவு தேவை என்பது தெரிகிறது. இதுவுமன்றி 'இளமையிற் கல்' என்றபடி பிள்ளைகளைச்சரியான பிராயத்தில் பள்ளிக்கனுப்பவும், அவர்களைச் சன்மார்க்கத்தில் நடத்தக்கூடிய ஞானவெளிச்சம் படவேண்டுமென்றோ.



ஆகையால் மேற்சொன்ன காரணங்கள் மட்டுமல்ல. நமக்கு நாளடைவில் தெரியவரும் மற்றும் பிரயோசனங்களையும் நிறுத்துப்பார்த்து கல்வி என்னும் இந்த களஞ்சியமென்னும் ஆஸ்தியை கடவுள் சிருஷ்டித்த நமது பெண்மணிகளுக்கும் கொடுத்து அதினால் அவர்கள் அடையும் பலாபலன்களை நமது கண்கள் பார்த்து ஆனந்திக்க செய்வோமாக.

அளிக்குஞ் செழுந்தமிழ் தெள்ளமுதார்ந் துன்னருட் கடலிற் குளிக்கும்படிக்கென்று கூடுங் கோலோ வுளங்கொண்டு தெள்ளித் தெளிக்கும் பணிவற் புலவோர் கவிமழைசிந்தக் கண்டு களிக்குங் களாபமயிலே சகலகலாவல்லியே:—

மயிலானது மேகத்தைக்கண்டு எப்படி சந்தோஷித்து தன் அழகிய சிறகை விறித்து ஆடுகிறதோ அதுபோல்:— சரஸ்வதியானவள்:— 'கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு' என்று உற்றகலை மடந்தை யோதுகின்றாள். மெத்தவெறும் பந்தயம் கூறவேண்டாம் எறும்பும் தன் கையால் எண்சாண்:— என்றபடி நாம் படித்த படிப்பானது ஒரு கை மண்ணளவுமாகவும் படிக்காதவைகள் உலகத்தின் அளவாகவும் சரஸ்வதியானவள் சொல்லிக்கொண்டு இன்னும் சரஸ்வதியானவள் படிக்கிறதாகச் சொல்லுகிறாள். இதுபோல் கல்விக் களஞ்சியத்தைக் காணாத பெண்மணிகாள், கண்டடையக் காலமிது காணாதோமென் மேலும்:— ஓங்கி வளரும் ஓயாவிருட்சமிது ஒழிபெற்று வாழ்க.

மேல்வாழி. P. கந்தசாமி,
சித்தர்கள் நத்தம். உபாத்தியாயர்.

---

## நல்ல சுகத்துக்கேற்ற சாப்பாடு என்ன?

### Diet for Health.

R. P. White.

நாம் சுகமாய் ஜீவித்து வேலை செய்ய வேண்டுமானால் சாப்பாடு நமக்கு அவசியம் என்று நாம் எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. வியாதி இருந்தால் உபவாசம் இருக்கலாம். சிலர் பக்தியால் உபவாசம் செய்வார்கள், என்றாலும் பொதுவாய் ஒவ்வொருநாளும் நாம் சாப்பிடவேண்டும் சாப்பாட்டைப்பற்றி அநேக தட்பிதமான எண்ணங்கள் இருக்கின்றன. வயிறுநிறைய சோறு சாப்பிட்டால் மட்டும் சாப்பிட்டேன் என்று அநேகர் சொல்லுகிறதுண்டு. மிட்டாய், பலகாரம், முதலிய பதார்த்தங்களைச் சாப்பிட்டாலும் அது சாரமில்லை என்று சொல்வார்கள். போதுமான சாதம் மாத்திரமல்ல, சரியான ஆகாரம் சுகத்துக்குவேண்டியது அவசியம் என்று அநேகருக்கு நன்றாய்த் தெரியாது. வயிறு நிறைய சாதம் சாப்பிடுகிறவர்கள் அடிக்கடி சுகமாயிருக்கமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்க்கிலும் சரியான பதார்த்தங்களைச் சாப்பிட்டுச் சாதம் கொஞ்சம் சாப்பிடுகிறவர்கள் அடிக்கடி அதிக சுகமாயிருக்கிறார்கள் என்று பார்க்கிறோம். 'மாக்கால் புல் தின்னுகிறதைப் பார்க்கிலும் மாகாணி சோறு சாப்பிடுகிறது நல்லது' என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஏன் என்று கேட்டால் புல் நமக்குச் சரியான ஆகாரமில்லை என்று அறிகின்றோம். நம்முடைய வயிற்றில் புல் ஜீரணமாகாது. அதுபோல சில சமயங்களில் நாம் சரியாய்ச் சாப்பிடுகிறோம் என்று நினைத்து புல்லைச் சாப்பிடுகிறதுபோல அதிகமான அளவு உண்கிறோம். நாம் சாப்பிடுகிற சாதம் செமிக்காவிட்டால் நமக்கு ஒரு பயனும் தராது.

Protein = ஸத்துள்ள பதார்த்தங்கள்
Carbohydrates = மாவுப் பொருள்கள்

நமது சாப்பாட்டில் ஆறுவிதமான பொருட்கள் அவசியமாயிருக்கவேண்டும். அவையாவன: 1. Protein, 2. கொழுப்பு (Eats), 3. Carbohydrates, 4. Vitamines, 5. உலோக உப்பு (Mineral salts), 6. தண்ணீர் என்பன.

முதலாவது: நம்முடைய ஆகாரத்தில் Protein இருக்கவேண்டும். Protein சதையை உண்டாக்குகிறது. நாம் வேலையைச்செய்த பிறகு நமது தேகத்தின் சதையை புதிப்பிக்கிறது; (repairs waste) அன்றியும் வேலை செய்யும்படி நமக்கு சக்தி கொடுக்கிறது, புஷ்டியாக்குகிறது. கறி, முட்டை, கோழி, மீன், பால், மொச்சைப்பயறு, பட்டாணி, பருப்பு, காணப்பயறு, கடலை, நிலக்கடலை முதலியவற்றில் Protein காணப்படும். நம்முடைய சாப்பாட்டில் நூறில் பத்து பாகம் Protein இருக்கவேண்டும். வளரும்படி பிள்ளைகள் Protein கட்டாயமாய் சாப்பிடவேண்டும். பெரியவர்களைப் பார்க்கிலும் பிள்ளைகளுக்கு Protein அதிக அவசியமாயிருக்கிறது. கறி கட்டாயமாய் சாப்பிடவேண்டும் என்று நாம் சொல்லகூடாது. உஷ்ணமான தேசத்தில் கறி அதிகமாய் சாப்பிடகூடாது. ஏனென்றால் கறி உஷ்ணத்தைக் கொடுக்கும். ஆனாலும் கொஞ்சம் கறி சாப்பிடலாம் மற்றபடி கறி சாப்பிடாமல் அதற்குப் பதிலாக பருப்பு, கடலை முதலியவைகளை அதிகமாய் சேர்க்கவேண்டும. சிறு பிள்ளைகளுக்கு முட்டை அதிக நல்லது. இந்த தேசத்தில் பிள்ளைகளுக்குக்கு முட்டை கொடுக்காதது தப்பிதம். பச்சை முட்டை கொடுக்கலாம். இல்லாவிட்டால் கொதிக்கிற தண்ணீரிலே அதைப்போட்டு இரண்டு மூன்று நிமிஷம் வேகவைத்துக் கொடுக்கலாம். முட்டை நல்ல பலன்கொடுக்கும். இரண்டு முட்டை மாகாணிவீசை கறிக்குச் சரியாயிருக்கும். இரண்டு கைபிடி மொச்சைப்பயறு மாகாணிவீசை கறிக்குச் சரியாயிருக்கும். நிலக்கடலை சுகத்துக்கு அதிக நல்லது. என்றாலும் பச்சையாய்ச் சாப்பிடக்கூடாது. ஏனென்றால் பச்சை நிலக்கடலை சுகத்துக்கு அதிகக் கெடுதல். அது வயிற்றுக்கடுப்பை உண்டாக்கலாம். நிலக்கடலையை வெந்நீரிலே தோலோடு இருபது நிமிஷங்கள் அவித்துக்காயவைத்துச் சாப்பிடலாம். இல்லாவிட்டால் வறுத்துத் தின்னலாம். துவையலுக்கும் உதவும். மொச்சைப்பயறு அதிகமாய்ச் சாப்பிட்டால் வாய்வை உண்டாக்கும்.

இரண்டாவது: கொழுப்பு நம்முடைய ஆகாரத்தில் இருக்கவேண்டும். நம்முடைய வேலையைச் செய்யும்படி கொழுப்பு நமக்குப் பலன் கொடுக்கும். அது புஷ்டியைத் தருகிறது. என்றாலும் அளவுக்குமிஞ்சி எண்ணெய்ப் பொருள் சாப்பிட்டால் நல்லதல்ல. "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" நெய், நல்லெண்ணெய், வெண்ணெய், நிலக்கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் முதலியவைகளில் கொழுப்புள்ள பதார்த்தங்கள் காணப்படும். நாம் சாப்பிடுகிற பதார்த்தங்களில் நூறில் முப்பது பாகம் கொழுப்பாயிருக்கவேண்டும்.

மூன்றாவது: நாம் சாப்பாட்டில் நூறில் அறுபது பாகம் Carbohydrates இருக்கவேண்டும். Carbohydrates நாம் வேலைசெய்யும்படி நமக்குப் பலன் கொடுக்கும். அது நாம் புஷ்டி ஆகும்படிசெய்கிறது. பிள்ளைகள் அதிகமாய் ஓடி விளையாடுகிறதினால் அவர்கள் Carbohydrates அதிகமாய்ச் சாப்பிடவேண்டும். நெல், கேப்பை, சோளம், கம்பு, கிழங்கு, சீனிக்கிழங்கு, சர்க்கரை, கருப்புக்கட்டி முதலியவைகளில் Carbohydrates காணப்படும். சோறு சுமார் வெறும் Carbohydrate தான். சோறு அதிகமாய்ச் சாப்பிட்டால் நமக்கு மோசம் உண்டாகலாம். அதாவது அது நீரிழிவுக்கு ஏதுவாயிருக்கும். சோறு அதிகமாய்ச் சாப்பிட நேர்ந்தால் குத்தின அரிசியை உபயோகித்தல் நல்லது. வெள்ளை அரிசியைப் பார்க்கிலும் சிவப்பு அரிசி நமக்கு சுகமும் பலமும் தரும். Beri-beri என்கிற தோல்வியாதி ஒன்றுண்டு. யந்திரத்தில் அரைத்த அரிசியை அதிகமாய்ச் சாப்பிட்டால் அந்த வியாதி வரும். யந்திரங்கள் அதிகமாயிருப்பது மோசம். அவற்றில் நாம் அரைத்த அரிசியை அதிகமாய்ச் சாப்பிட்டால் அந்த வியாதி வரலாம். யந்திரங்கள் நெல்லை அதிக விரைவாய் அரிசியாக்குவதால் அவற்றையே நாம் விரும்புகிறோம்.

படித்தவர்களுக்குள்ளே ஒரு அறியாமை உண்டு. அதாவது பட்டிக்காட்டிலே வசித்திருக்கிறவர்கள் பல தானியங்களைத் தின்பார்கள்; எங்களுக்குப் படிப்பும் சம்பளமும் இருக்கிறதினால் அரிசியைவாங்கி உண்போம் என்பதே. அதுதான் நல்லது என்று நினைக்கிறார்கள். அது மகா பிசகு. நாய்க்கர்கள் பல தானியங்கள் தின்பார்கள். ஒரு நாளைக்கு ஒரு நேரம் மாத்திரம் அரிசிச்சோறு சாப்பிடுகிறார்கள். மற்ற நேரத்தில் பல தானிய வகை உணவு தின்பார்கள். அவர்கள் திடகாத்திரமாயிருக்கிறார்கள். அரிசியைப்பார்க்கிலும் மற்ற எல்லாத் தானியங்களுக்கும் சக்தி அதிகம். ஒருமடங்கு சோளம், மும்மடங்கு நெல் அரிசிக்குச் சமம். அதினால் காலே அரைக்கால்படி அரிசிக்கும் அரைக்கால்படி சோளத்துக்கும் சுமார் அதே சக்தி இருக்கும். சோளம் சாப்பிட்டால் அரிசிச் சோறு சாப்பாடு குறையும்.

கம்பு உடம்புக்கு குளிர்ச்சியை உண்டாக்கும். ஆகையினால் வெயில் காலத்தில் கம்பஞ்சோறு அதிகமாய் சாப்பிடலாம்.

கேப்பை அல்லது கேழ்வரகு என்கிற தானியத்தில் Protein அதிகம் இருக்கிறதினால் பிள்ளைகளுக்கு அது அதிகம் நன்றாயிருக்கும். Protein வளர்ச்சிக்குக் கட்டாயமாய்வேண்டும். அதோடு கேப்பை, மலச்சிக்கலை நீக்கும். என்றாலும் அது அநேகருக்குப் பிரியமில்லை. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குக் கேப்பைக்களி கொடுத்தால் முறுமுறுக்கிறார்கள். நெல் அரிசியைப் பார்க்கிலும் கேப்பை அதிக நன்றாயிருக்கும். சில பள்ளிக்கூடங்களில் இராமுழுவதும் மாவைப் புளிக்கவைத்து காலையில் கூழ் க்காய்ச்சுகிறார்கள். காலையில் புளிப்பாயிருக்கிறதினால் சிலருக்கு அதை சாப்பிடப்பிரியம் அதிகம். அது இலேசாய் செமிக்கலாம். கேப்பைக் கூழோடு பால், சர்க்கரை, மோர், தயிர், நவையல் முதலியவைகளில் ஏதேனும் ஒன்றுசேர்த்துச் சாப்பிடலாம். கேப்பைக் களியைக்கிண்டி குழம்புவிட்டுச் சாப்பிடலாம். அநேகருக்குச் சமையல் செய்யும்போது களிக்கிண்டத் தெரிவதில்லை.

அரிசிச் சாதத்தைப் பார்க்கிலும் மற்ற தானியங்களின் சாதம் சுகத்துக்கு அதிக நன்றாயிருக்கும் என்று சொல்லியிருக்கிறேன். என்றாலும் நெல் அரிசிச் சாதத்தை எப்பொழுதும் சாப்பிடுகிறவர்கள் திடீரென்று அதை வெறுத்து பிறகு சோளம், கம்பு, கேப்பை முதலியவைகளை உடயோகிப்போம் என்று எண்ணக்கூடாது. சோறு இலேசாய் செமிக்கும். அமெரிக்கா தேசத்தில் குழந்தைகளுக்கும் வியாதியுள்ளவர்களுக்கும் நெல் அரிசிச் சோறு கொடுக்கிறோம். நாம் அநேக நாளாக கையினால் யாதொரு வேலை செய்யாமல் திடீரென்று மண்வெட்டியை எடுத்து கூலிவேலை செய்யப்போனால் எப்படியிருக்கும்? கைக்குப் பலனில்லாவிட்டால் அந்தக்கஷ்டமான வேலை செய்யமுடியாது. நாம் பையப்பைய வேலை செய்யத் துவக்கவேண்டும். அப்பொழுதுதான் படிப்படியாக நம்முடைய கைக்குப் பலன்வரும். அதே மாதிரியாக நம்முடைய வயிறும், ஒரு தசை நார் அப்பியாசமில்லாவிட்டால் அது எந்த தசை நாரானாலும்சரி பலவீனப்படும். அதுபோல வயிற்றுக்கு அப்பியாசம் இல்லாவிட்டால் பலவீனம் உண்டாகும். திடீரென்று ஜமிக்கக் கஷ்டமான ஆகாரம் சாப்பிட்டால் அஜீரணம் உண்டாகும். அப்படியிருக்க இதற்குமுன் எப்பொழுதும் சோறு சாப்பிடுகிறவர்கள் பையப்பைய மற்ற தானியங்களைத் தின்னத்துவக்கவேண்டும். வாரத்துக்கு ஒருதரம் கேப்பை, ஒருதரம் கம்பு முதலியது சாப்பிடலாம். வயிற்றுக்குப் பலன் வரும்போது இவைகளை அதிகமாய்ச் சாப்பிடலாம்.

கிழங்கும், அரிசிச் சோறும் ஒரே மாதிரி சாப்பாடாயிருக்கிறதினால் உருளைக்கிழங்குபோட்ட குழம்பைச்சோற்றோடு உபயோகிக்கக்கூடாது. உருளைக்கிழங்கைச் சோற்றுக்குப் பதிலாக உபயோகிக்கலாம். இல்லாவிட்டால் கேப்பை சோளம், கம்பு முதலியவையோடு உருளைக்கிழங்கு சேர்ந்த குழம்பை ஊற்றி உண்ணலாம். கிழங்கைத் தோலோடு சமைக்கவேண்டும். தோலுக்குள்ளே Protein கொஞ்சம் இருக்கிறது. சீவினால் Protein நஷ்டமாய்ப் போய்விடும் ஒரு பெரிய கிழங்கு வீசம்படி அரிசிக்குச் சமம். இரண்டிலும் அதே சக்தி இருக்கும்.

பிள்ளைகளுக்குச் சர்க்கரை அவசியமே. அவர்கள் விளையாடி வேலைசெய்யும்படியான சக்தியைச் சர்க்கரை சீக்கிரம் கொடுக்கும். அதினால் ஒவ்வொரு நாளும் சர்க்கரையாவது கருப்பிட்டியாவது கொஞ்சம் கஞ்சிச் [illegible]



சோடு கொடுத்தால் நல்லது. அது வயிற்றிலே பூச்சி உண்டாக்கும் என்று சொல்லக்கூடாது. பூச்சி அசுத்தத்தினால் உண்டாகும்.

நாலாவது: Vitamines சாப்பாட்டில் இருக்கவேண்டும். Vitamines சாதமல்ல; என்றாலும், அது சுகத்துக்கு அவசியம் வேண்டும். போதுமான Vitamines நம்முடைய சாப்பாட்டில் இல்லாவிட்டால் நாம் சரியாய் வளர்ந்து ஜீவிக்கமுடியாது பல வியாதிவரும். Vitamines தானியங்கள், தவிடு, பழம், மரக்கறி, பால், வெண்ணெய், கறி, முட்டை முதலியவைகளில் காணப்படும். மரக்கறி சமைக்கும்போது சில Vitamines கெட்டுப்போய் ஒன்றுக்கும் உதவாமல் இருக்கிறதினால் எப்படியாவது சில காய் பச்சையாய்ச் சாப்பிடவேண்டும். வெங்காயம், வெள்ளரிக்காய், கற்றாழைப்பழம், கொடிக்காரப்புளிப்பழம் முதலியவைகளைச் சமைக்காமல் சாப்பிடலாம். பழம் சின்னப்பிள்ளைகளுக்கு அவசியமாய் வேண்டும்.

ஐந்தாவது: உலக உப்பு (Mineral salts) எலும்பும் பல்லும் பலப்படுத்தும்படி இது நமக்கு அவசியம். மற்றும் இது நமது சுகத்துக்கும் வேண்டியது. உலோக உப்பு, தானியங்களின் உமி, பழம், காய்கறி, கறி முதலியவைகளில் காணப்படும். கீரையை ஒவ்வொரு நாளும் சாப்பிட்டால் அதிக நன்றாயிருக்கும். கீரையிலே இரும்பு, உப்பு, அதிகமாயிருக்கிறதினால் இரத்தத்துக்கு நன்றாயிருக்கிறது. அதோடு மலச்சிக்கலைப் போக்கும்.

ஆறாவது: தண்ணீர் சுகத்துக்கு வேண்டியது அவசியம் தினசரி ஒரு படி தண்ணீர் குடிக்க வேண்டும். பிள்ளைகளுக்குக் கூடியமட்டும் பால் கொடுத்தால் அவர்களுக்குச் சுகம். அதினால் காப்பி, தேத் தண்ணீர் கொடுக்கவே கூடாது. அவைகள் சின்னப் பிள்ளைகளுக்கு ஒரு விஷம்போலிருக்கும். சோறு ஆக்கும்போது கஞ்சித்தண்ணீரைக் கீழே ஊற்றாமல், பானையில் ஊற்றி தண்ணீருக்குப் பதிலாக அந்தப் பிள்ளைகள் குடிக்கிறதற்குக் கொடுக்கலாம்.

நாம் சுகமாய் ஜீவித்து வரவேண்டுமானால் சாப்பாட்டிலே ஆறு பொருட்கள் காணப்படவேண்டும். அவைகளாவன:- 1. Protein, 2. கொழுப்பு (Fats), 3. Carbohydrates, 4. Vitamines, 5. உலோக உப்பு (Mineral salts), 6. தண்ணீர். காரமான சாப்பாடு சுகத்துக்கு நல்லதல்ல. மசாலைச் சாமானுக்காக நாம் வழக்கமாய் செலவழிக்கும் பணத்தில் பாதிமாத்திரம் செலவழித்து மற்றபாகம் காய்கறி வாங்க உபயோகித்தால் நம்முடைய சுகத்துக்கு அதிக நன்றாயிருக்கும். சாப்பிடும்போது சாதத்தை நன்றாக மென்று தின்னவேண்டும்.

"சோறுதான் எங்களுக்குச் சாதம்; சோளம், கம்பு, கேப்பை எப்படித்தின்னலாம்? காரமான குழம்புதான் பிரியம்; உருசியில்லாமல் காய் கறி எப்படி சாப்பிடலாம்?" என்று அநேகர் சொல்லுவார்கள். இன்னும் சிலர்: "எங்களுடைய சாப்பாட்டைப்பற்றி இந்த சீமை அம்மாளுக்கு என்ன தெரியும்? அவர்களுடைய வயறு வேறே, எங்களுடைய வயிறு வேறே," என்று சொல்லுவார்கள், என்றாலும் அப்படிச் சொல்லாமல், பிரியத்துக்குமாத்திரமல்ல சுகத்துக்குச்சரியாய்ச் சாப்பிட பிரயாசப்படவேண்டும் என்று உங்களை அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

| | | |
|---|---|---|
| ஒரு பெரிய உருளைக் கிழங்கு | $\frac{1}{16}$ படி | அரிசிக்குச் சமம். |
| இரண்டு வாழைப் பழங்கள் | $\frac{1}{16}$ ,, | ,, |
| மூன்று பேரீச்சம் பழங்கள் | $\frac{1}{16}$ ,, | ,, |
| ¼படி பால் | $\frac{1}{16}$ ,, | ,, |

## பிரயாணமும், போக்கு வரவும்.

முற்காலத்தில் பிரயாணம் பண்ணுவது அதிக மெதுவாயும், கஷ்டமாயும், அலுப்பாயும் இருந்தது. முற்காலத்தில் ஒருவன் அதிவேகமாய்ப் பிரயாணம் பண்ணவேண்டுமானால் அவன் ஒட்டகத்தின்மேலாவது, குதிரை மேலாவது, அல்லது பாய்மரக் கப்பலிலாவது பிரயாணம் பண்ணவேண்டும். ஆனால், சாதாரணமாய் மாட்டு வண்டியிலும், ஜட்கா வண்டியிலும், பல்லக்கிலும் பிரயாணம் பண்ணினார்கள்.

1807-ம் வருஷத்தில் ராபர்ட் பல்டன் (Robert Fulton) என்னும் ஒரு அமெரிக்கன் நீராவிப்படகைக் கண்டுபிடித்ததிலிருந்து பிரயாண சாதனத்தில் ஒரு அபிவிர்த்தி உண்டாயிருக்கிறது. அநேக வருஷங்களாக அவர் நீராவியையும், அதன் சக்தியையும், அதன் பிரயோஜனத்தையும்பற்றி பரிசோதனை செய்தார். இவர் தன் காலத்தை வீணில் செலவிடுகிறாரென்று அநேக ஜனங்கள் அவரைப் பரிகாசம் பண்ணினார்கள். கடைசியாக அவர் நீராவிப் படகை செய்து முடித்து அதில் யந்திரங்களை அமைப்பித்து அதை ஓட்டுவதற்கு தயாராக வைத்திருந்தார். அவருடைய காரியம் வாய்க்காதென்று அநேக ஜனங்கள் சிரித்து பரிகாசம் பண்ணும்படி கூடிவந்திருந்தார்கள். நீராவிப்படகு தானாக ஓடாது என்றார்கள். குறித்த நேரத்தில் பல்டன் என்பவர் நீராவிப்படகை ஓட்ட ஆரம்பித்தார். அவர் நினைத்திருந்த மாதிரியே படகு முன்னோட ஆரம்பித்தது. அது நியூயார்க் பட்டணத்திலிருந்து அல்பானி என்னும் ஊருக்கு ஹட்சன் நதி மார்க்கமாய் 150மைல் தூரம் சென்றது. இது ஜனங்களுக்கு அதிக ஆச்சரியத்தை உண்டுபண்ணினது.

அதன் பின்பு அமெரிக்காவின் நதிகளில் செல்லத்தக்க இன்னும் வேறு அநேக நீராவிப்படகுகள் செய்யப்பட்டன. பிற்பாடு சமுத்திரங்களைக் கடக்கத்தக்க பெரிய நீராவிக் கப்பல்களைச் செய்தார்கள். இம்மரக்கலங்களைக் கட்டுவதில் மனிதர் கொஞ்சங்கொஞ்சமாய்த் தேர்ச்சியடைந்து அவைகளை முன்னிலும் பெரிதாயும், அதிக பலமானதாயும், அதிக வேகமாய் ஓடக்கூடியதாயும் உண்டாக்கக் கற்றுக்கொண்டார்கள். தற்காலத்தில் ஏறக்குறைய ஆயிரம் அடி நீளமுள்ள நீராவிக் கப்பல்கள் இருக்கிறது. அவைகள் ஒவ்வொன்றிலும் மூவாயிரம் பிரயாணிகள் தாராளமாய்ப் பிரயாணம் செய்யலாம். மேலும், அதில் ஏராளமான ஜாமான்கள் வைத்துக்கொள்ளலாம். இந்தக் கப்பலில் அலங்காரமான மண்டபங்களும், அழகிய சாப்பாட்டு அறைகளும், சமையல் கட்டுகளும், ஸ்நானம் செய்யும் இடங்களும் இருக்கும். இவைகளெல்லாம் மின்சாரத்தால் விளக்கு ஏற்றப்பட்டும், நீராவியால் சூடாக்கப்பட்டும் இருக்கும். தற்காலத்து அழகிய விடுதி

களைப்போல எல்லாம் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இது மாத்திரமல்ல, கப்பல் நடுச்சமுத்திரத்திலிருக்கும் போதே கம்பியில்லாத் தந்தியின் மூலமாய் உலகத்தின் ஐந்து கண்டங்களிலிருந்து சமாச்சாரங்களைப் பெற்றுக் கொண்டு கப்பலிலேயே தினந்தோறும் பத்திரிகைகளை அச்சிடுகிறார்கள். கப்பலில் போகும் பிரயாணிகள் தரைக்கு ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலிருந்தபோதிலும் உலகத்தில் நடக்கும் பெரிய வர்த்தமானங்களை இந்த தினசரி பத்திரிகையின் மூலமாய் அறிந்துகொள்ளுகிறார்கள்.

இந்த அலங்காரமான கப்பல்கள் ஒரு மணி நேரத்திற்கு 20 மைல் வீதம் ஓடுகின்றன. முற்காலத்து பாய் மரக்கப்பலில் ஒருவன் ஏறி இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு யாத்திரை பண்ணவேண்டுமானால் இரண்டு, அல்லது நாலு மாதம் பிடிக்கும். ஆனால் தற்காலத்தில் ஒரு வேகமான நீராவிக்கப்பல் வழியாய் ஏறக்குறைய இருபது நாட்களுக்குள் வந்து விடலாம். இப்பொழுது ஆயிரக்கணக்கான பலத்த நீராவிக்கப்பல்கள் ஒவ்வொரு சமுத்திரங்களிலும் நீந்திச் செல்லுகின்றது. பற்பல கண்டங்களிலும், தேசங்களிலுமுள்ள ஆறுகளிலும், குடாக்களிலும் ஆயிரம் பதினாயிரமான சிறு நீராவிக்கப்பல்கள் ஜனங்களையும் ஜாமான்களையும் ஏற்றுக்கொண்டுபோகிறது.

நீராவி யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு இப்பொழுது ஏறக்குறைய 150 வருஷங்களாகிறது. இந்த யந்திரம் தண்ணீரை வெளிச்செலுத்தும் ஒரு சக்கரத்தை சுற்றவாவது, அல்லது வேறு எந்த காரியத்திற்காவது உதவும். 50 வருஷங்களுக்குப் பின் அதாவது 1814-ம் வருஷத்தில் ஜார்ஜ் ஸ்டீவன்சன் என்னும் ஒரு ஆங்கிலேயன் இரண்டு சமமான இருப்புப்பாதைகளின் வழியாய் ஓடும் நீராவி யந்திரத்தைக் கண்டுபிடித்தார். ஸ்டீவன்சனுடைய யந்திரம் நேராயும், சமமாயும் ஓடக்கூடும். அந்நாளிலிருந்து இந்நாள்மட்டும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இந்த நீராவி யந்திரத்தில் தேர்ச்சியுண்டாக வேண்டுமென்று பிரயாசப்பட்டு வருகிறார்கள். தற்காலத்திற்குள்ளாக அவர்கள் அந்த வண்டிகளில் அதிக தேர்ச்சி செய்திருக்கிறார்கள். பிரயாணிகளுக்கு வசதியான வண்டிகளும், சாப்பாட்டு வண்டிகளும், படுத்துத்தூங்கும் வண்டிகளும், இன்னும் பிரயாணிகளுக்கு நானாவித இன்பங்களைத் தரும்படி வசதியாய் செய்யப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் வியாபாரிகளுக்கென்று ஒரு விசேஷித்த வண்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது தினந்தோறும் நியூயார்க் பட்டணத்திலிருந்து ஷிக்காகோ பட்டணத்திற்கு ஓடுகிறது. இந்த இரு பட்டணத்திற்குமுள்ள தூரம் ஏறக்குறைய ஆயிரம் மைல். இந்த வண்டி இருபது மணி நேரத்தில் அவ்வளவு தூரம் பிரயாணம் பண்ணுகிறது. அப்படியானால், ஒருமணி நேரத்தில் சராசரி 50-மைல் வீதம் ஓடுகிறது. அது சில இடங்களில் நின்று மனிதரை ஏற்றிக்கொள்ளுகிறதினால் சில சமயத்தில் ஒரு மணிக்கு 60-மைலுக்கு மேல்கூட ஓடவேண்டியதாயிருக்கும். ஒரு வியாபாரி தன் வியாபார விஷயமாய் ஒருநாள் முழுவதையும் நியூயார்க் பட்டணத்தில் செலவழித்துவிட்டு பிறகு மோட்டார் வண்டியில் ஏறிவந்து இந்த இருப்புப்பாதை வண்டியில் ஏறுகிறான். இரா முழுவதும் படுக்கிறதற்காக அமையப்பெற்ற ஒரு வண்டியில் தங்கிவிட்டு காலையில் வியாபார விஷயமாய் ஆபீசுகள் திறக்கப்படும் சமயத்தில் ஷிக்காகோ என்னும் பட்டணத்திற்கு வந்து விடுகிறான். இப்படியாக வியாபார விஷயமாய் ஒரு நாளை நியூயார்க்கிலும், அடுத்த நாளை ஆயிரம் மைலுக்கப்பாலிருக்கும் ஷிக்காகோவிலும் கழிக்கலாம். அதேமாதிரியாக ஒருவன் கல்கத்தாவிலிருந்து பம்பாய்க்கு 40-மணி நேரத்திலும், லாகூரிலிருந்து சென்னைக்கு 90-மணி நேரத்திலும் பிரயாணம செய்யலாம்.

அநேக தேசங்களில் இருப்புப்பாதை வண்டிகள் சர்வ சாதாரணமாகிவிட்டது. 1913-ம் வருஷத்தின் முடிவில் இங்கிலாந்தில் 23,436-மைல் தூரமும், பிரான்சில் 31,807 மைல் தூரமும், ஜெர்மனியில் 39,600 மைல் தூரமும், ருஷியாவில் 48,534-மைல் தூரமும், ஐக்கிய மாகாணங்களில 2,553,32-மைல் தூரமும் இருப்புப்பாதைகள் போடப்பட்டிருக்கிறது. 1853-ம் வருஷம் வரையில் இந்தியா தேசத்தில் இருப்புப் பாதையே கிடையாது. ஆனால் 1915-ம் வருஷத்திற்குள் 35,285-மைல் தூரம் அழகான இருப்புப்பாதைகள் போடப்பட்டது.

சீன தேசத்தார் முற்காலத்தில் இருப்புப்பாதைகளின்மேல் பிரியப்படவேயில்லை. அவைகள் அசுத்த ஆவி பிடித்தும் அங்குமிங்கும் அலைகிற வஸ்துக்களென்று நினைத்தார்கள். ஆனால் 1887-ம் வருஷத்தில் இருப்புப் பாதைபோட ஆரம்பித்து தற்காலத்திற்குள் 7,000 மைல் தூரம் இருப்புப் பாதைகள் போட்டிருக்கிறார்கள்.

முதலில், உலகம் தட்டையாயிருக்கிறதென்று எல்லாரும் நினைத்தார்கள். சாஸ்திரம் விர்த்தியானதினால் உலகம் கோளம்போல உருண்டையாயிருக்கிறதென்று மனிதர் நம்புகிறார்கள். பூமியின் வடிவம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு மாகிலன் என்னும் ஒரு போர்த்துகல் தேசத்தான் சில தேர்ந்த கப்பலோட்டிகளைத் தெரிந்துகொண்டு ஸ்பானியரிடமிருந்து சில மரக்கலங்களை பெற்றுக்கொண்டு உலகத்தை சுற்றி பிரயாணம் பண்ணும்படி புறப்பட்டான். அவர்கள் மேற்கு முகமாய்ப் பிரயாணம் பண்ணி, அத்லாந்திக் மகா சமுத்திரத்தைக் கடந்து தென் அமெரிக்காவின் தென் கரையைச் சுற்றி வந்து பசபிக் மகா சமுத்திரத்தைக் கடந்து பிலிப்பியன் தீவுகளில் ஒன்றாகிய கியூபா தீவுக்கு வந்தார்கள். இந்த இடத்தில் மாகிலனும் அவனோடு வந்த சில மனிதரும் கொலை செய்யப்பட்டார்கள். தப்பிப் பிழைத்தவர்கள் இந்துமகா சமுத்திரத்தைக் கடந்து ஆப்பிரிக்காவின் தென் கரையைச் சுற்றியோடி கடைசியாக தாங்கள் புறப்பட்ட இடத்திற்கே திரும்பவும் வந்து சேர்ந்தார்கள். இப்படிப் பிரயாணம்பண்ண மூன்று வருஷம் பிடித்தது. (1619—1622) ஆனால் தற்காலத்தில் உலகத்தை சுற்றிப் பிரயாணம் பண்ண மூன்று வருஷம் தேவையில்லை. 1889-ம் வருஷத்தில் இரண்டு யௌவன ஸ்திரீகள் உலகத்தை சுற்றி வரும்படி தீர்மானித்தார்கள். ஒருத்தி மேற்கு முகமாகவும், மற்றவள் கிழக்கு முகமாகவும், கப்பல் வழியாயும், இடை இடையே ரெயில் மார்க்கமாயும், பிரயாணம் பண்ணினார்கள். அவர்களில் ஒருத்தி 73 நாட்களுக்குப்பிறகுதான் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்தாள். அதிலிருந்து இந்நாள் வரைக்கும் போக்குவரவுக்குறிய சாதனங்களில் அதிக விர்த்தியடைந்துகொண்டு வந்திருக்கிறதினால் தற்காலத்தில் ஒரு மனிதன் 35 நாள், 21 மணி, 35 நிமிஷத்திற்குள் உலகத்தை ஒருதரம் சுற்றி பிரயாணம் செய்து விடலாம்.



நூறு வருஷங்களுக்கு முன்பு ஒருவன் தன் சொந்த ஊரை விட்டு பிரயாணம் செய்வது அதிக அபாயமாயிருந்தது ஆனால் இப்பொழுது பிரயாணம் செய்வது சர்வ சாதாரணமாகிவிட்டதினால் ஜனங்களெல்லாரும் தங்கள் காலத்தின் மிச்சமான பாகத்தை பிரயாணம் செய்வதில் செலவிட விரும்புகிறார்கள். எந்த வேளையும் கோடிக்கணக்கான ஜனங்கள் குதிரைமேலும், வண்டிகளிலும், சைகில்களிலும், (Bicycle) மோட்டார் வண்டிகளிலும், மின்சார வண்டிகளிலும், இருப்புப்பாதை வண்டிகளிலும், பிரயாணம் பண்ணுகிறார்கள் 1917-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் மாத்திரம் பம்பாய் பட்டணத்து மின்சார வண்டிகளில் ஏறக்குறைய 5,00,00,000 பேர் பிரயாணம் பண்ணியிருக்கிறார்கள். சைகில் வண்டிகளும், மோட்டார் வண்டிகளும், உலகத்தின் எல்லா பாகங்களிலும் அதிக சாதாரணமான வஸ்துக்களாகிவிட்டது. அமெரிக்கா தேசத்தில் மாத்திரம் 30 லக்ஷம் மோட்டார் வண்டிகள் இருக்கிறது. அமெரிக்காவின் சில பாகங்களில் சராசரி பத்துப்பேரில் ஒருவனுக்கு ஒரு மோட்டார் வண்டி இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி மோட்டார் வண்டிகளைச் செய்யும் போர்டு (Ford) கம்பெனிக்காரர் சராசரி ஒரு நிமிஷத்தில் இரண்டு மோட்டார் வண்டிகள் செய்வதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆங்கிலேயர் முதல் முதலில் இந்தியாவுக்கு வந்தபொழுது, இங்கிலாந்திற்கு ஒரு கடிதம் எழுதி அதற்கு பதில் பெற்றுக்கொள்ள ஒரு வருஷம் சென்றது. தற்காலத்தில் ஒருவன் இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு ஒரு காகிதமெழுதி 7 அல்லது 8 வாரத்திற்குள் பதில் பெற்றுக்கொள்ளக்கூடும். இது மாத்திரமல்ல, இந்தியாவிலிருக்கும் ஒரு வியாபாரி லண்டன் நகரில் படிக்கும் தன் மகனுக்கு சில மணிநேரத்திற்குள் தந்தி மூலமாய் செய்தி யனுப்பலாம். அவசியமாயிருந்தால் தந்தி மூலமாய் அவனுக்கு பணமும் அனுப்பலாம்.

ஒரு தந்தி சமாச்சாரம் உலக முழுதும் சுற்றி வருவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்குமென்று அறிய ஒரு வியாபாரி நியூயார்க் பட்டணத்திலிருந்து மேற்கு முகமாய் ஒரு சமாச்சாரம் அனுப்பினான். அவன் அனுப்பிய அதே சமாச்சாரம் இரண்டு மணி நேரத்திற்குள் கிழக்கு முகமாய் அவனுக்கு வந்து எட்டினது.

ஒருவன், அநேக மைல் தூரத்திற்கு அப்பாலிருந்தாலும் அவன் மற்றொருவனோடு பேசும்படியாக மின்சாரப் பேசும் கருவி 1877-ம் வருஷம் கண்டு பிடிக்கப்பட்டது. முதலில் அந்த யந்திரத்தினால் சிறிது தூரத்திற்கு மாத்திரம் பேச முடிந்தது. ஆனால் இப்பொழுது மிக நேர்த்தியான யந்திரத்தைக்கொண்டு ஈராயிரம் அல்லது மூவாயிரம் மைல் தூரத்திற்கப்பாலிருக்கும் ஒருவனோடு தெளிவாய்ப் பேசி அதை அறிந்து கொள்ளக்கூடும். ஒரு விசேஷித்த யந்திரத்தைக்கொண்டு இப்பொழுது கம்பி வழியாய்ப் பாடங்கள் அனுப்பவும் கூடும்.

அநேகருக்குத் தெரிந்தபடி இப்பொழுது கம்பியில்லாமலும் சமாச்சாரங்கள் அனுப்பப்படுகிறது. தற்காலத்தில் இந்தக் கருவியினால் ஆகாய மார்க்கமாய் ஆயிரக்கணக்கான மைல் தூரத்திற்கு சமாச்சாரம் அனுப்ப முடியும். இந்தப் பூமியின் சுற்றளவின் மூன்றிலொரு பங்கு தூரத்திற்குக்கூட இந்தத் தேர்சியடைந்த யந்திரத்தினால் சமாச்சாரம் அனுப்ப முடியும். இவ்விதமான கம்பியில்லாத தந்தியினால், இந்த யுத்தத்திலும் அவர்கள் தங்கள் கப்பல் சேனைகளையும், கரைச் சேனைகளையும் தொலை தூரத்திலிருந்துகொண்டே நடத்தினார்கள். அல்லாமலும் கம்பியில்லாமலே பேசும் கருவியையும் இப்பொழுது கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஏறக்குறைய நூறு வருஷங்களுக்கு முன்னே பிரான்சு தேசத்தில் சில போபோன நாஸ்திகர்கள் இருந்தார்கள். அவர்களில் வால்டேர் என்பவன் ஒருவன். அவன் சர் ஐசக் நியூட்டன் எழுதின காரியங்களைக் குறித்து பரிகாசம் பண்ணி "பூமி ஆகர்ஷண சக்தியை சர் ஐசக் நியூட்டன் கண்டுபிடித்து நம்மெல்லாரையும் அதிசயிக்கும்படி செய்தார். ஆனால் அவர் தன் கிழப்பிராயத்தில் வேதாகமம் என்னும் புஸ்தகத்தைப் படிக்க ஆரம்பித்தார். அந்தக் கட்டுக்கதையில் சொல்லப்பட்டிருக்கிறவைகள் உண்மையென்று நம்பி ஒரு மணி நேரத்தில் 50 மைல் வீதம் பிரயாணம் பண்ணத்தக்கதாக அறிவு விர்த்தியாகி விடுமென்று எழுதியிருக்கிறார்:" என்று சொன்னான்.

இந்த இரண்டு மனிதரில் ஞானவான் யார்? என்னும் கேள்வியை நாம் கேட்போம் வால்டேர் எழுதிய புஸ்தகங்களையெல்லாம் மனிதர் அதிகமாய் மறந்துவிட்டார்கள். ஆனால் நியூட்டன் எழுதியவைகளோ இன்னும் நிலைத்திருக்கிறது. அவர் வேதாகம தீர்க்கதரிசனங்களிலிருந்து எடுத்து எழுதினவைகளெல்லாம் இப்பொழுது நிறைவேறுகிறது இப்பொழுது மனிதர்கள் முன்னைவிட அதிகமாய் அந்த தீர்க்கதரிசனங்களை ஆராய்ச்சி செய்கிறார்கள்.

இக்காலத்தில் அறிவு பெருகிப்போயிருக்கிறது. உலகத்தின் எல்லா தேசங்களிலுமுள்ள ஜனங்கள் அங்குமிங்கும் ஓடி ஆராய்கிறார்கள் இதை வாசிக்கும் என் நண்பனே! கடந்த நாலு வருஷத்திற்குள்ளாக இந்த உலகத்தில் பிரயாணத்திலும், போக்கு வரவிலும் எவ்வளவு விர்த்தியுண்டாயிருக்கிறதென்பதை சிந்தித்துப்பார். தேவன் இவைகளையெல்லாம் முன்னமே அறிந்து ஏறக்குறைய 2,500 வருஷங்களுக்கு முன்பே தீர்க்கதரிசனத்தின் மூலமாய் இவைகளை வெளிப்படுத்தினார். தேவன் வெளிப்படுத்தின காரியங்களெல்லாம் இப்பொழுது நிறைவேறுகிறதை நாம் பார்க்கும்போது இவைகளெல்லாம் நாம் இப்போது முடிவுகாலத்தில் வசிக்கிறோமென்பதற்கு அறிகுறிகளாயிருக்கிறதென்று எண்ணிக்கொள்வோமாக.

(நிகழ்கால சத்தியம்)

## சென்னை விவசாய டிபார்ட்மெண்ட்.

### கரும்பில் ஏற்படும் செந்தாளை நோவு.

இந்த நோவு, ஒரு கிருமியால் உண்டாகிறது. கரும்பு பயிரிடும் இடங்களிலெல்லாம் இது தெரியும். இந்தியாவில் பொடிக்கரும்பைப் பார்க்கிலும் பருங்கரும்பில்தான் இந்த நோய் அதிகம் உண்டு.

நோய் குறிகள்:—கரும்பு முத்தும்சமயம் நோய் சாடின கரும்பின் உச்சித்தோகையின் நுனி பட ஆரம்பிக்கிறது. வரவர கீழ்நோக்கி தோகைமத்தி தவிர இருபுறமும் அடிவரை பட்டுக்கொண்டு வருகிறது. அந்த சமயத்தில் கரும்பின் மொளிகளிலாவது, மொளிகளுக்கு ஊடேயாவது மாறுதல் ஒன்றும் கண்ணுக்குத் தெரியாது. நோய் ஆரம்பத்தில் கரும்பைக் கிழித்துப்பார்த்தால், கரும்பின் மேல்பாகத்தில் ஒன்றும் வித்தியாசமாய்த் தோன்றாது. கரும்பின் அடியில் பார்த்தால், இரண்டொரு அடிகணுக்களிலும், கணுக்களுக்கு இடையிலும் சிவந்திருக்கும். இந்தச் சிவப்பானது முதலில் கொடிப்போல் ஓடியும், அதன்பின் சிவப்புப்புள்ளிகளாவும், கடைசியாக கரும்பு முற்றிலும் சிவப்பாகி விடுகிறது இப்படி சிவப்படைந்த பாகத்தில் இடை இடையில் வெள்ளையும் தெரியும். இந்த வெள்ளை குறுக்குவசமாக நீண்டு இருக்கும். இப்படிச் சிவந்து இருப்பதற்கும், மற்ற காரணங்களால் சிவந்திருப்பதற்கும் வித்தியாசம் லெகுவில் கண்டறியமுடியாது ஆனால் இந்த சிவப்புப்புள்ளியில் வெள்ளை, மத்தியில் தோன்றுவதுதான் இந்த நோயின் குறி. நோய் முத்தின சமயம் கரும்பு பூராவும் பட்டுவிடும். ஒரு தூரில் ஒரு கரும்பு பட ஆரம்பிக்கவும், அந்தத் தூரிலுள்ள மற்ற கரும்புகளுக்கும் தூரில் இந்த நோய் அநேகமாய் இருப்பதைப் பார்க்கலாம்.

இந்த நோயை தடுக்கும் முறை:—இந்த நோய் பாவுவதற்கு காரணம், நோய் பீடிக்கப்பட்ட கரும்புத்துண்டுகளை நடுவதினால்தான். அதாவது கரும்பு அறுத்தவாயில் சிவந்திருக்கிற துண்டுகளை நடுவது. எந்த விதைத் துண்டிலாவது சிவப்புத்தெரிந்தால் அதை நடக்கூடாது. அது மாத்திரம் போதாது ஏனென்றால், நோய் சாடிய கரும்பின் நுனியாகம் சிவப்பேரி இருக்காது. என்றாலும் அதில் இந்நோய் இருக்கலாம். ஆகையால் விதைக் கரும்பு வெட்டும்போது, ஒரு கரும்பின் அடிப்பாகத்தில் சிவப்பேறி இருந்தால், அந்தக் கரும்பை முற்றிலும் விதைக்கு எடுக்காமல் தள்ளிவிடவேண்டும். இதற்கும் அதிகமாகவே ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஒரு கரும்புத்தூரில் ஒரு கரும்புக்கு நோயிருப்பது தெரிந்தால் அந்தத்தூரில் விதைக்கரும்பு வெட்டக்கூடாது. நடவுக்கு கரும்பு வெட்டும்போது, வெட்டும் கத்தியை இரண்டொருதரம் நீக்கொழுந்தில்காட்டி சூடேறியபின் மறுபடி கத்தியை வெட்ட உபயோகிக்கவேண்டும் அப்படிச் செய்தால் நோய்சதது கத்தியில் ஒட்டியிருந்தால் அது செத்துப்போகும். நோயுள்ள கரும்புகளை வெட்டினால் இந்த மாதிரி செய்யவேண்டும்.

எஸ். சுந்தராமன்,
கவர்ன்மெண்டு மைகாலாஜிஸ்டு.

## தடுக்கக்கூடிய அகால மரணம்.

உங்கள் தாய் தந்தையர்கள் சகோதரிகள், அல்லது, உங்களுக்கு அருமையான யாராவது அகால மரணத்தால் இறந்துபோயிருக்கிறார்களா? அப்படியாகில் அவர்கள் திடீரென எதிர்பாராத வயதில் இறந்துபோன காரணம் தெரியுமா? அநேகமாய் அவர்கள் காலரா, விஷஜுரம், வயிற்றுப்போக்கு, சீதபேதி முதலான சுலபமாய்த் தடுக்கக்கூடிய வியாதிகளால் இறந்துபோயிருக்கலாம். இவ் வியாதிகளின் காரணமும் தடுக்கக்கூடிய முறைகளும் உங்களுக்குத் தெரிந்திருந்தால் ஒருவேளை அப்பேர்ப்பட்ட அகால மரணத்தைத் தடுத்திருக்கலாம்.

நீங்கள் கஷ்டப்பட்டதைப்போலவே இன்னும் எண்ணிறந்த பேர்கள் தங்கள் இனத்தார்களை இழந்திருக்கலாம்.

இன்னமும் இந்த வியாதிகளின் தன்மையை அறியாது முன்போலவே கஷ்டநஷ்டங்கள் அடைய விரும்புவீர்களா? இவ்வியாதிகளின் தன்மையை அறிந்து அதைத் தடுத்துவிடவே முயலுவீர்கள் என்று நினைக்கிறோம்.

இவ்வியாதிகள் கண்ணால் பார்க்ககூடாத அவ்வளவு சிறியதான பூச்சிகளால் உண்டாகிறதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பூதக்கண்ணாடியால் அவைகளை வெகு சுலபமாகப் பார்க்கலாம்.

மனிதரின் மலஜலம் எண்ணிறந்த விஷப்பூச்சிகளால் நிறைந்திருக்கிறது. நமது தேசத்தில் அனுஷ்டானத்தில் நடந்துவருகிறபடி மலஜலத்தை வெளிகளில் கழிப்பதால் இப்பூச்சிகளும் புழுக்களும் மண்ணுடன் கலந்து எங்கும் பரவி, தண்ணீர், ஆகாரம் மூலியமாக நமது உடலினுட்புகுந்து இக்கொடிய வியாதிகளை உண்டாக்குகின்றன. அதனால் இவ்வியாதிகள் பரவாதபடி மலஜலத்தை அக்கம்பக்கத்து வெளிகளில் கழிக்காமல் சரியான கக்கூஸ்கள் கட்டி அவைகளையே உபயோகித்து வருவது அவசியம் என்று தெரியவரும். இது நகரங்களிலும், கிராமங்களிலும் முக்கியமாக கவனிக்கப்படவேண்டும். ஆகவே, நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் இந்த வியாதிகளைத் தடுப்பதற்காக சரியான கக்கூஸ்கள் கட்டி, உபயோகித்து வரும்படி முயற்சி செய்யவேண்டும் இதற்காக உழைத்துவரும் இந்த டிபார்ட்டுமெண்டார்களுடன் ஜனங்களும் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இன்னும் இதைப்பற்றிய விஷயம் விரும்புவோர், சென்னை கிராம சுகாதார ஆபீஸிலிருந்து (Rural Sanitation office, No. 81, Mount Road, Cathedral Post, Madras) அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

---

அமெரிக்கன் மிஷன் லினுக்ஸ் பிரஸ், பசுமலை,—1930.

367

REG. NO.–M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

25 OCT 1930

"மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்"

Vol. X.] செப்டெம்பர் 1930 [இலக்கம் 5.

## பஞ்சாங்கம்.

| 1930 | பிரமோதூத வருடம் ஆவணி 16 | | செப்டெம்பர் | | பிரமோதூத வருடம் புரட்டாசி 14 | 1930 |
|---|---|---|---|---|---|---|
| Sunday ஞாயிறு | Monday திங்கள் | Tuesday செவ்வாய் | Wednesday புதன் | Thursday வியாழன் | Friday வெள்ளி | Saturday சனி |
| | 1 16 | 2 17 | 3 18 | 4 19 | 5 20 | 6 21 |
| 7 ○ 22 | 8 23 | 9 24 | 10 25 | 11 26 | 12 27 | 13 28 |
| 14 * 29 | 15 30 | 16 31 | 17 பு. 1 | 18 2 | 19 3 | 20 4 |
| 21 5 | 22 ● 6 | 23 7 | 24 8 | 25 9 | 26 10 | 27 11 |
| 28 12 | 29 13 | 30 14 | | | | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur A. J. Vethanayaga Th... ...patti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## கிராமவாசியின் வறுமை

1. இந்தியாவில் மகாராஜாக்களும் கோடீஸ்வரரும் சிலர் இருந்தாலும், 100-க்கு 95 பேர் மிகவும் ஏழைகளே. கனம் K. T. பால் அவர்கள் கடந்த வருஷம் எருசலேம் சங்கத்தில்' இதைப்பற்றி கூறியது உண்மையே. "இந்திய கிராமவாசி ஏழையாயிருப்பது மாத்திரமல்ல, கடனால் மூழ்கியிருப்பதால் குடிக்கக் கஞ்சியில்லாமல் பலவித வியாதிகளுக்கும் ஆளாகிறான். இங்கிலாந்திலுள்ள சிறைச்சாலையில் ஆள் ஒன்றுக்கு $3\frac{1}{4}$ அணாவாவது நாள் ஒன்றுக்குத் தேவை என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் சென்னை ராஜதானியில் சராசரி குடும்பம் ஒன்றுக்கு $4\frac{1}{2}$ அணா மாத்திரம் வருமானம். பம்பாய் மாகாணத்தில் குடும்பம் ஒன்றுக்கு $3\frac{1}{3}$ அணா மாத்திரம்; வங்காளத்தில் குடும்பம் ஒன்றுக்கு ஒரு நாள் வருமானம் $2\frac{1}{2}$ அணா மாத்திரம்" இதையிட்டு டாக்டர் ஏசுதாசன் கூறுவது உண்மை. "ஓர் மனிதன் மிகுந்த பரிதாபமான ஸ்திதியிலிருக்கலாம். ஆனால் அவனிடத்தில் நல்லகாலம் வருமென்று ஓரணுவாவது நம்பிக்கை தங்கி நிலைகொள்ளுமானால், அவன் காரியமும் பிற்கால சம்பவங்களும் கைகூடிவரும். நம்பிக்கை அடியோடு போய்விட்டால் என்ன உண்டு? இந்த மனநிலைமைக்குப் பல காரணங்களுண்டு. கிராமவாசிகளுக்குத் திடீரென்று பல நஷ்டங்களும், துன்பங்களும் வருவதுண்டு. காலமழை இல்லாமை; தன் நஞ்சைக்கும், கிணறுகளுக்கும் ஆதாரவான ஏரிகள் வறண்டுபோதல்; சாதாரண வீட்டுச் செலவுக்கு வேண்டிய தண்ணீர்கூட கோடை காலங்களில் கிடையாமல் போதல். குடியானவனின் கண்கள் மழை மறந்த வெண்கலம்போன்ற வானத்தை உயர்நோக்கி, ஐயோ! ஏமாந்துபோகின்றன. குடியானவனின் பேச்செல்லாம் மழையைப்பற்றியே."

2. கடன். கிராமவாசியின் எளிமைக்கு முக்கிய காரணம் கடன். சுமைகல்லைப்போல் அவனுடைய சந்தோஷம், பெலன், வாஞ்சை இவைகளை அவனுடைய ஜீவியத்திலிருந்து உறிஞ்சிவிட்டு, செத்த மனிதனைப் போல் ஆக்கிவிடுவது கடனே. இதைப்பற்றி டாக்டர் ஏசுதாசன் கூறுவதாவது:—"மேலும் அவனை நெருக்கி அமிழ்த்தும் பணக்கஷ்டமும் கடனுமுண்டு. கடன் கொடுத்தவனோ சாமர்த்தியமாய் முதலைத் திருப்பிக்கொடுக்க அவனை அவசரப்படுத்தாமல் காத்துக்கொண்டிருக்கிறான். கடைசியில் கச்சேரி சென்று அந்த ஏழைக் குடியானவனின் நிலத்தைக் கடனுக்கும், வட்டிக்கும் பதிலாகப் பறித்துக்கொள்ளுகிறான். ஓர் கிராமத்தில் ஒரு பெரியவர் இருக்கிறார். ஒரு ஏழை மனிதனுக்கு ரூ. 25 கடன்கொடுத்து, முதலோடு வட்டி வளர்ந்துகொண்டு போகச் செய்துவிட்டு, கடைசியில் ஆயிரம் ரூபாய் பெருமான அவன் நிலத்தைப் பிடுங்கிக்கொண்டார். இப்படி நிலஞ்சேர்ப்பதே அவர் வழக்கம்."

2. கல்வியின்மை. இந்தியாவின் 32 கோடி ஜனங்களில் பெரும்பான்மையோர் கல்வியில்லாதவர்களே. மொத்த ஜனத்தொகையில் ஆண்களில் நூற்றுக்கு 10 பேரும், பெண்களிலோ நூற்றுக்கு 1 வீதம் மாத்திரம் எழுத்துக்கற்றவர்களுண்டு. ஜப்பான் தேசத்தில் 100-க்கு 80 பேர் பள்ளிக்கூடத்துக்குப் போய்வருகிறார்கள். பிஷப் அசரியா கூறுகிறபடி "ஜப்பான் தேசத்தின் பட்டிதொட்டிகளிலும் முதலாய் கொல்லன், தச்சன், வண்டிக்காரன் முதலானவர்கள் வாசிக்கக் கற்றவர்களாயிருக்கிறார்கள். தெருவில் புல்விற்கும் வயோதிபரும், கருவாடு விற்கும் கிழவிகளும், தினசரி வர்த்தமானப் பத்திரிகையைப் படிப்பதைக் கண்டோம். அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் நூற்றுக்கு 21, பிரித்தானியா தீவுகளில் 18, ஜப்பானில் 12, நமது தேசத்திலோ $1\frac{1}{2}$. என்ன பரிதாபம்!

3. பஞ்சம், கொள்ளைநோய். நம் தேசத்தில் வேளாண்மைக்கு மழை இன்றியமையாதது. பருவகாலங்களில் மழை பெய்யாமற்போனால், அகவிலையேறி, பஞ்சம் உண்டாகிறது. 1900-ம் வருஷம் உண்டான கொடிய பஞ்சத்தில் மாண்டவர்கள் 10 லட்சம், 1871-ம் வருஷத்திலிருந்து 1921-ம் வருஷம் மட்டும், அதாவது 50 வருஷங்களில் நமது தேசத்தில் பஞ்சத்தால் மாத்திரம் மாண்டவர்கள் ஏறக்குறைய 3 கோடி.

வாந்திபேதி, வைசூரி, பிளேக் முதலிய வியாதிகள் நம் தேசத்தில் அதிகமாய் காணப்படுகின்றன. ஏராளமான ஜனங்கள் வருஷந்தோறும் மாண்டுபோகின்றனர். வறுமை ஒரு பக்கம், கடன் இன்னொரு பக்கம், அறிவீனம் இன்னொரு பக்கம், கொள்ளைநோய் மறுபக்கம். இவையெல்லாம் ஒன்றுசேர்ந்து ஏழைக்கிராமவாசியை அமிழ்த்தி நசுக்குகின்றன.

ஐக்கிய சபைத் தூதிகை.

---

## சிறுவர் பாகம்.

நண்பர்களே,

டிக்விற்றிங்றன் பொழுது விடியுமுன் எழுந்திருந்து இரவு சுமார் பத்துமணிவரையிலும் கஷ்டப்பட்டு வேலைசெய்தும், இரவில் அயர்ந்து நித்திரைசெய்ய முடியாதவனாய் இருந்தான். ஏனென்றால், இரவெல்லாம் எலிகள் இவனை ஓயாமல் தொந்தரவுசெய்து கொண்டிருந்தன. பொழுது விடிந்து எழுந்தாலோ, தன்னை வேலை வாங்கும் வேலைக்காரியின் தொந்தரவுகளைப் பொறுக்க முடியாமல் கண்ணீர்விடுவான். ஆகவே ஏழை விற்றிங்றன் இவளுடைய இம்சைகளைப் பொறுக்க முடியாமல் எங்கேயாகிலும் ஓடி விடவேண்டுமென்று எண்ணி அதிகாலையில் எழுந்து தன்னிடத்தில் உள்ள உடைகளை மூட்டையாகக் கட்டி வெளியே வந்து வெகு தூரம்போய் விட்டான். இவன் போய்க்கொண்டிருக்கும்போது லண்டன் பட்டணத்துப் பெரிய கடிகாரம் ஐந்து மணி அடித்தது. இச்சத்தம் டிக்விற்றிங்றன் காதில் போகாதே வா, வா, என்று ஐந்து முறை கூப்பிட்டதுபோல் கேட்டது. இவன் திடுக்கிட்டு உடனே மறுபடியும் வேலைக்காரி வருமுன்னும், தன் எஜமான் எழுந்திருக்கு முன்னும் வந்து, சமையல் அறையில் பிரவேசித்தான். உடனே வேலைக்காரி வந்துவிட்டாள் அடேய், மட்டிப்பயலே தண்ணீர் சுடவைக்காமல் தூங்கிக்கொண்டிருந்தாயா என்று ஒரு அறை கொடுத்தாள். ஏழைப் பையன் ஓ, வென்றலறி அழுதான். சிறிய தப்பிதங்களுக்கெல்லாம் அடிப்பாள். அன்று ஒரு பெரிய மனிதன் இவனுடைய எஜமான் வீட்டுக்கு வந்தான். அவர் வந்ததும் விற்றிங்றனை கூப்பிட்டு அவருடைய சப்பாத்தைத துடைக்கும்படி சொன்னார். உடனே போய் அவ்வேலையைச் செய்தான். அப்பெரியவர் சந்தோஷப்பட்டு ஒரு அணா கொடுத்தார். விற்றிங்றன் அந்த அணாவுக்கு ஒரு பூனைக்குட்டி வாங்கிப் பத்திரமாய் வளர்த்தான். அன்று முதல் எலிகளின் தொந்தரவுகள் இல்லாமல் நன்றாய் தூங்கினான். இவனுடைய எஜமான் ஒரு பெரிய வியாபாரி. சில நாட்களுக்குப்பின்பு இவர் வியாபாரம்செய்ய பெரிய கப்பல்கள் நிறையச் சாமான்களை எடுத்துக்கொண்டு வெகு தூரமான ஓர் ஊருக்குப்போனார். அப்போது வேலைக்காரர்கள் எல்லாம் சில சாமான்களை அனுப்பி அவைகளை விற்றுத் தரும்படி வேண்டினார்கள். எஜமானன் விற்றிங்றனைப் பார்த்து டிக் நீ ஒன்றும் கொடுக்கவில்லையா உன் பூனைக்குட்டியை கொடு அதை நான் விற்று வருகிறேன் என்று சொன்னார். பையன் தன் பூனைக்குட்டியைக் கொடுக்க இஷ்டமில்லை. ஆனாலும் தன் எஜமானன் கேட்பதினிமித்தம் கஷ்டத்தோடு அக்குட்டியைக் கொண்டுவந்துகொடுத்தான். இவ்வியாபாரி சரக்குகளையெல்லாம் எடுத்துக்கொண்டு மிகவும் நாகரீகமில்லாத ஊருக்குப் போனார். இவ்வூர் பெரியதாயினும், கல்வி, நாகரீகம் இல்லாத பெரிய தேசம். அங்கு போய் கப்பல் தங்கியதும், வியாபாரி அத்தேசத்தின் ராஜாவைப் பார்க்கப் போனார். அத்தேசத்தின் ராஜாவும், ராணியும் இவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு உபசரித்தார்கள். அச்சமயத்தில் இவ்வியாபாரிக்குச் சில பழங்களை அவர் முன்வைத்துச் சாப்பிடச் சொன்னார்கள். அப்போது ஏராளமான எலிகள் வந்து அவைகளைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டன. ராணி இவ்வியாபாரியைப் பார்த்து எங்கள் ஊரில் எலிகள் மிகுதி, நாங்கள் சாப்பிடவும் முடியவில்லை, தூங்கவும் முடியவில்லை. எலிகளால் எங்களுக்கு உண்டாகும் கஷ்டங்கள் கொஞ்சமல்லவென்று சொல்லி விசனப்பட்டார்கள். இவ்வெலிகளை கொல்லும்படியான பூனைகள் உங்கள் ஊரில் இல்லையா என்று வியாபாரி கேட்டார். பூனைகளை நாங்கள் கேள்விப்பட்டதே இல்லை என்று சொன்னார்கள். என்னிடத்தில் ஒன்று இருக்கிறது நான் உங்களுக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லிக்கொண்டே கப்பல் நின்றுகொண்டிருக்கும் இடத்திற்கு ஓடி, பூனையை எடுத்துக்கொண்டுவந்தார். மறுபடியும் கொஞ்சம் பழங்கள் கொண்டுவந்து வைத்தார்கள், முன் போல ஏராளமான எலிகள் வந்து பழங்களைத் தூக்கின. கையிலிருந்த பூனைக்குட்டி உடனே கீழே குதித்து அநேக எலிகளை நாசமாக்கி விட்டன. ராஜாவுக்கும் ராணிக்கும் மிகுந்த சந்தோஷம் உண்டாகி, அப்பூனைக்குவேண்டிய பணம்கொடுத்தார்கள். சரக்குகளை விற்றுவிட்டுத் திரும்பி அவ்வியாபாரி லண்டன் பட்டணத்திற்கு வந்தார். அவரவர் சாமான்களை விற்ற பணங்களைக் கொடுத்தார். டிக்விற்றிங்றனுக்குத் திரண்ட பணம் வந்தது. விற்றிங்றனை மரியாதையுடன் கூப்பிட்டு உன் பூனை உனக்கு இவ்வளவு பணத்தை அனுப்பியது, நீ சந்தோஷமாய் இவைகளை எடுத்துக்கொள் என்று சொன்னார். விற்றிங்றன் அதைநம்பவே இல்லை. வியாபாரியோ நடந்தவற்றை எல்லாம் சொல்லி அவனிடம் கொடுத்தார். டிக் அவைகளைப் பெற்றுக்கொண்டு தன்னுடன் இருந்தவர்களுக்குக் கொஞ்சம் உபகாரம் செய்தான். தன்னைக் குரூரமாய் நடத்திய வேலைக்காரிக்கும் உபகாரம் செய்தான். இப்பணத்தைக் கொண்டுபோய் பாங்கியில் போட்டுவைத்து, நன்றாகப் படித்துப் பெரிய கல்விமானாகிப் புத்திமானாகிவிட்டார். எல்லா படிப்பும் முடிந்த பிறகு லண்டன் பட்டணத்து ஜனங்கள் அவரைத் தங்கள் பட்டணத்தை நடத்தக்கூடிய பெரிய மனிதனாக்கினார்கள். இவர் மூன்று முறை லண்டன் பட்டணத்து மேயர் ஆனார். லண்டன் பட்டணத்துக்கு வேண்டிய நன்மைகளைச் செய்தார். அரசர் அவரை அதிகமாய் நேசித்தார். டிக்விற்றிங்றன் சிறு பிராயமுதற்கொண்டு கடவுளுக்குப் பயந்து, பெரியோர்களைக் கனப்படுத்தித் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை உண்மையாய்ச் செய்து, கஷ்டங்களை எல்லாம் பொறுமையோடு சகித்து வந்ததனால், கடவுள் அவரை உயர்த்தி மேன்மைப்படுத்தினார்.

பூபாலன் சி டானியேல்,
வெல்லூர், சென்னை.

ஐக்கிய சபைத் தூதிகை.

## கிராம சுகாதார பீரோ.

சென்னை சுகாதார இலாகா.

### கிராம சுகாதார படை முயற்சி.

கிராம சுகாதார படை முயற்சி டிபார்ட்மெண்டானது (Rural Sanitation Campaign) பொதுஜன சுகாதார டிபார்ட்மெண்டின் (Public Health Department) ஓர் அங்கமே. சுடந்த 8 வருடங்களாக கவர்ன்மெண்டார் அமெரிக்கா தேசத்து ராக்பெல்லர் தர்ம ஸ்தாபனத்தாருடைய (Rockefeller foundation) உதவியாலும், ஒத்துழைப்பாலும் வேலை நடத்திவந்ததின் பலனாகவே இந்த டிபார்ட்மெண்ட் உதயமாயிற்று. கவர்ன்மெண்டாரின் வேண்டுகோளுக்கிணங்கி, ராக்பெல்லர் தர்ம ஸ்தாபனத்தார் 1920-ம் வருடஆரம்பத்தில் இப்படை முயற்சி நம் தேசத்தில் நடத்தப்படுவதவசியமென்று தோற்றியதாலும் நம் தேசத்திற்கும்அதன் ஜனங்களுக்கும் பெருந்தீங்கிழைத்துவரும் இக்கொக்கிப்புழு நோயை (Hook-worm disease) தடுப்பதோடு பொதுஜன சுகாதார முறைகளைப் புகட்டும்படியாகவே இம்முயற்சியை ஆரம்பித்தனர். இப்பேர்பட்ட கொக்கிப்புழு படை முயற்சி (Anti Hookworm Campaign) மற்றுமநேக தேசங்களில் நடத்தப்பட்டு பொதுஜன சுகாதார விஷயமாக ஏராளமான பலனைக்கொடுத்தது. ஆகவே நம் தேசத்திலும் இப்படை முயற்சியின் பலனாய் இக்கொக்கிப்புழு நோயை தடுத்துவிடுவதோடு ஜனங்களுக்கு சுகாதார முறைகளையும் புகட்டி மற்றுமநேக நோய்களையும் தடுத்துவிடலாமென்பதே அவர்களின் நோக்கம். இக்கொக்கிப்புழு நோயைத் தடுக்கும்படியான முறைகளே மற்றுமநேக நோயைத் தடுக்கக்கூடியதாயிருக்கிறது. அதனால் பொதுஜன சுகாதாரம் விர்த்தியடைந்து சுகாதார விதிகளை ஜனங்கள் அறிவதினால் அநேக வியாதிகளை எளிதில் தடுத்துவிடக்கூடும்.

இந்த 8 வருடங்களாய் கொக்கிப்புழு நோயைப் பற்றி நம் தேசத்தில் ஆராய்ச்சி செய்ததில் எத்தனையோ ஜனங்கள் இந்நோயால் வருந்தி வருகிறார்கள் என்று காட்டினார்கள். ஒளிவிசித்திரப் படம், உபந்நியாசம், புகைப்படக் காகிதம் முதலியவற்றால் இக்கொக்கிப்புழு நோயை ஜனங்களுக்கு எடுத்துக் காட்டி அந்நோய்க்கு மருந்து கொடுத்து அதைத் தடுத்துவிடக்கூடிய முறைகளையும் போதித்து வந்தார்கள். கண்டவிடங்களில் மலஜலங் கழித்து நிலத்தை அசுத்தப்படுத்தி அதனாலே விர்த்தியாகிவரும் இந்நோயைத் தடுத்துவிடும்படி தற்போது பெருமுயற்சி எடுக்கப்பட்டுவருகிறது. இத்தனை வருடங்களாய் இப்படை முயற்சி நம் தேசத்தில் நடத்தி அதனால் உண்டாகக்கூடிய நன்மைகளை எடுத்துக் காட்டிவந்த இந்த ராக்பெல்லர் தர்ம ஸ்தாபனத்தார் (Rockefeller foundation) இந்தவேலையை கவர்ன்மெண்டாரிடம் ஒப்புவித்துப் போய்விட்டார்கள். அது முதல் இக்கிராம சுகாதார படை முயற்சி வேலையானது கவர்ன்மெண்டாரால் நடத்தப்பெற்று, பொதுஜன சுகாதார டிபார்ட்மெண்டோடு (Public Health Department) இணைக்கப்பட்டு அதன் ஓர் அங்கமாயிற்று.

நம் நகரங்களிலும் கிராமாந்தரங்களிலும் பொதுஜனங்களின் தேகஆரோக்கியத்தையும், சுக வாழ்வையும் விர்த்தி செய்யவேண்டுமென்பதே இந்த டிபார்ட்மெண்டின் நோக்கம். ஜனங்களுக்கு சுகாதார விதிகளைப் பற்பலவிதமாய் புகட்டி அவர்களின் வாழ்வை விர்த்தி செய்வதே அவர்களின் கருத்து.

ஆரம்பத்தில் சிற்சில இடங்களில் பிரபல்யமான சுகாதார முயற்சி செய்ததின்பின் அம்முயற்சிகள் பொதுஜன சுகாதார டிபார்ட்மெண்டாரால் மென்மேலும் விருத்திக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்பதே முக்கிய நோக்கம். ஆகவே இந்த கிராம சுகாதார டிபார்ட்மெண்டார் (Rural Sanitation Campaign) சகல ஜில்லா முனிசிபாலிட்டி சுகாதார உத்தியோகஸ்தருடன் ஒத்துழைத்தே வருவார்கள். கண்டவிடமெல்லாம் மலஜலம் கழித்து அதனால் விர்த்தியாகி, பற்பலவிதமாய் மனிதருடைய குடலில் வந்து சேர்ந்து பெருங்கெடுதியோ அல்லது மரணத்தையோ உண்டாக்கக்கூடிய இப்புழுக்கள் பரவாதபடி தடுத்துவிடும் முறைகளையே தற்சமயம் கையாடி வருகிறார்கள். கண்டவிடமெல்லாம் மலஜலம் கழிக்கும் இப்பழக்கத்தை ஒழித்து ஒவ்வொரு வீட்டிலும் சுகாதாரமான கக்கூஸ்கள் கட்டி அவைகளையே உபயோகித்து வந்தால்தான் இக்கொக்கிப்புழு நோயை தடுத்துவிடுவதோடு மற்றுமநேக நோய்களையும் நம் தேசத்தைவிட்டு ஒழிக்கலாம்.

இந்த டிபார்ட்மெண்டாரின் பெருமுயற்சியால் பொதுஜன சுகாதாரத்திற்கு பெருநன்மைகள் உண்டாகக்கூடியதால், எல்லாரும் எங்களுடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இன்னும் இதைப்பற்றிய விஷயம் அறிய விரும்புவோர் மகா-ா-ா-ஸ்ரீ சென்னை கிராம சுகாதார ஆபீஸர், 81, மவுண்ட் ரோட், மதராஸ் (Rural Sanitation Officer, 81, Mount Road, Madras) அவர்களிடம் தெரிந்துகொள்ளலாம்.

---

### கால்நடைகளுக்கு சூடுபோடுவதும் அவைகளின் தோலை சரியாக உரிப்பதும்.

சர்க்கார் கால்நடைகளை வைத்திருக்கும் சொந்தக்காரர்களுக்கு (1) உயிரோடிருக்கும் மிருகத்திற்கு சூடுபோடுவதினாலும், (2) இறந்துபோன மிருகத்தின் தோலை அஜாக்கிரதையாய் உரிப்பதினாலும் நேரிடும் நஷ்டத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறார்கள். இராணுவத்திற்கு வேண்டிய நல்ல தோல்களை சர்கார் இழப்பதோடுகூட மிருகங்களின் சொந்தக்காரர்களும் நல்ல தோலுக்கும், சூடுகளினாலும், வெட்டுகளினாலும் கெட்டுப்போன தோலுக்கும் உள்ள நாணய வித்தியாசத்தை இழந்துபோகிறார்கள்.

சூடுபோடுதல்.—மிருகங்களுக்கு (1) வாதம்போலுள்ள வியாதியைப் போக்குவதற்கும் (2) ஒரு அறிகுறியாக இருப்பதற்கும் (3) திருஷ்டிபடாமல் இருப்பதற்கும் ஜனங்கள் பொதுவாய் சூடுபோடுகிறார்கள். முதல் கேஸில் மிருகத்தின் உடம்பில் எங்கு நோய் இருக்கிறதோ அங்கே சூடு போடப்படுகிறது. அதாவது சாதாரணமாய் முட்டியில்தான். அப்பொழுது தோலுக்கு சேதம் கொஞ்சம். மற்றப்படி அறிகுறி கண்டுபிடிப்பதற்காகவும், திருஷ்டிபடாமல் இருப்பதற்கும் சூடுபோடும்பொழுது மிருகத்தின் முதுகிலும் பக்கங்களிலும், சில சமயத்தில் தோளிலும் இரட்டை அரைவட்ட வடிவமாய் சூடுபோடப்படுகிறது. சூடுபோடும்பொழுது கவனிக்க வேண்டிய விதிகள் என்னவென்றால் (1) காரியத்திற்கு வேண்டிய அளவுமாத்திரம் சூடு போடவேண்டும். (2) சூடு, தோலின் ஒரு சிறு பாகத்தில் போடவேண்டும். உதாரணமாக, கழுத்து அல்லது கழுத்தின் அடிப்புறம் இவ்விடங்களில் சூடுபோட்டால் சேதம் கொஞ்சம். சாதாரணமாக ஒரு பதனிட்டதோல் சராசரி 10 பவுன் எடையுள்ளது. அப்படிப்பட்ட தோல் சேதப்படாமல் இருந்தால் பவுன் 1க்கு $1\frac{1}{2}$ ரூபாய் விலை. சூடுபோட்டதினால் சின்னாபின்னப்பட்ட தோலுக்கு பவுன் 1க்கு 8 அணாவுக்குமேல் மதிப்பு ஓடாது. சூடுபோட்ட தோல் 15 ரூபாயிலிருந்து 5 ரூபாய்க்கு குறைந்து விடுகிறது. இந்த நஷ்டத்தை விலக்க சொந்தக்காரர்கள் தங்கள் மாடுகளுக்கு சூடுபோடாமல் இருக்கவேண்டும். அப்படி சூடு போடவேண்டியது மிகவும் அவசியமாயிருந்தால் கழுத்திலாவது தோள்பட்டையிலாவது மிகவும் குறைந்த அளவுக்கு சூடுபோடவேண்டும்.

தோல் உரித்தல்.—மிருகத்தின் பிரேதம் சூடாயிருக்கும்போதே தோலை உரிக்கவேண்டும். அப்பொழுது மிருகத்தின் பிரேதம் முதுகு கீழ்புறமாய் வைக்கவேண்டும். பிறகு கீழ் தாடையிலிருந்து அடி வால் வரைக்கும், அடிவயிற்றின் மத்தியில் நேரே தோலைக் கீற வேண்டும். மார்பிலிருந்து ஒவ்வொரு முன்கால் உட்புற மத்தியிலும் விரைப்பையிலிருந்தாவது அல்லது பசுவாயிருந்தால் மடிவிலிருந்தாவது ஒவ்வொரு பின்கால் மத்தியிலும் மற்ற கீறல்கள் போடவேண்டும். பிறகு, முதலில் பிரேதத்தின் ஒரு பக்கத்திலிருந்து தோலை உரித்தும் மற்றப் பக்கத்திலிருந்து இதேவிதமாகத் தோலை உரித்தும் பிரேதத்தின் முதுகின் மத்தியிலுள்ள கோட்டுக்குக்கொண்டு வந்து தோலை முற்றிலும் உரித்து எடுத்துவிடலாம். தோலை எடுக்கையில் தோலின் உள்பக்கம் கத்தியினால் எவ்விதமான வடு அல்லது காரியமும் இல்லாமல் விலக்கும்படி மிகவும் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளவேண்டும். அநேகமாய தோலை உரித்து எடுக்க ஏற்பட்ட கூலிக்காரன் தன் வேலையை சீக்கிரத்தில் முடித்துவிட வேண்டிய அவசியத்தினால் அவசரப்பட்டு தோலின் மாமிசப்பாகத்தில் காயம்படாமல் தோலை எடுக்க போதுமான ஜாக்கிரதை எடுத்துக்கொள்ளுகிறதில்லை. அவ்விதக் காயங்களினால் தோல்களின் பெறுமானம் சூடுகளினால் எவ்வளவு குறையுமோ அவ்வளவுக்கு குறைந்து விடுகிறது. காயம் பட்டதினால் பதனிட்டபின் இத்தோலின் விலை பவுன் 1க்கு 8 அணாத்தான் ஆகிறது. அதே தோல் காயமில்லாமலிருந்தால் பவுன் 1-க்கு $1\frac{1}{2}$ ரூபாய் விலை. தோலை எடுக்க போதுமான சாவகாசமும் ஜாக்கிரதையும் எடுத்துக்கொண்டால் இந்த வருமான நஷ்டமும், தோல் உபயோகமற்றுப்போவதும் ஏற்படாது. பம்பாயில் பண்டரா என்னும் ஆடு மாடு அடிக்கும் தொட்டியில் நூறுக்கு 65 தோல்கள் காயங்களினால் சேதப்பட்டன. கூலிக்காரனுக்கும் காயம்படாத தோல் 1க்கு அணா 2 இனாம் கொடுக்கிற வழக்கத்தை ஏற்படுத்தினது முதல் இப்போது நூற்றுக்கு 5 தான் சேதமாகின்றன. இறந்து போன கால்நடைகளிலிருந்து தோல்களை உரித்து எடுக்கப் போதுமான சாவகாசமும் ஜாக்கிரதையும் எடுத்துக் கொள்ளும்படி அதைச் செய்யும் கூலிக்காரர்களைத் தூண்டவேண்டும். கால் நடைகளின் சொந்தக்காரர்களும், தோல் வியாபாரிகளும் சற்று கஷ்டம் எடுத்து செலவு செய்தாலும் கடைசியில் அவர்களுக்கு லாபமே ஏனென்றால், இந்த ராஜதானியில் இவ்விதமாக அனாவசியமான சூடுபோடுதலினாலும், அஜாக்கிரதையான தோலுரித்தலினாலும் உண்டாகும் மாசாந்தர நஷ்டத்தை 3 லட்சம் ரூபாய்க்கு மதித்திருக்கிறார்கள்.



---

### ஈ கொலை பாதகன்

ஈ சேதம் பண்ணுகிற உபாயங்கள்.

(1930ஞ் ஜூலை 24-ம் பக்கத்தின் பின் தொடர்ச்சி)

3. வருவேன் என்னும் ஈ.

உபாத்தியாயர்: ஈக்கள் எங்கே ஜாஸ்தி இருக்கும்?

ஒரு பிள்ளை, (சற்றுயோசித்து) குப்பையில் அதிகமாய் இருக்கும்.

இன்னொரு பிள்ளை: குப்பை கொட்டும் தகரத்தில் இருக்கும்.

இன்னொரு பிள்ளை: குப்பைக்குழியில் இருக்கும்.

உபாத்தியாயர்: ஆம், கக்கூஸ் முதலிய அழுக்கான இடங்களில் இருப்பது ஈக்களுக்கு அதிகப் பிரியம், அல்லவா?

பிள்ளைகள்: ஆம், ஐயா, அந்த இடங்கள்தான் அவைகளுக்கு அதிக இஷ்டம்.

உபாத்தியாயர்: மேலும் செத்துப்போன காகத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள், அல்லவா? அதின்மேல் ஈக்கள் இல்லையா?

பிள்ளைகள்: அதிலே ஜாஸ்தி ஈக்கள் இருக்கும்.

உபாத்தியாயர்: நீங்கள் சொன்னது சரிதான். மேலும் நீங்கள் சேற்றிலே நடந்தால் உங்கள் கால்களில் சேறு ஒட்டிக்கொள்ளும், அல்லவா? அப்படியே ஈக்கள் அழுக்கின்மேல் உட்கார்ந்து நடக்கும்போது, அந்த அழுக்கு அவைகளின் ஆறு கால்களிலும் ஒட்டிக்கொள்ளும். நாம் அந்த அழுக்கான ஈக்களை நமது வீட்டுக்கு அழைப்போமா?

பிள்ளைகள்: மாட்டோம், மாட்டோம்.

உபாத்தியாயர்: மெய்தான். ஆனால், அந்த அழுக்கான ஈக்கள் 'வருவேன், வருவேன்' என்று சொல்லி நமது வீடுகளுக்குள் பறந்து வரும்.

பிள்ளைகள்: ஐயோ, ஐயோ!

### 4. ஈ அழுக்கைக் கொண்டுவரும்.

உபாத்தியாயர்: ஈ அழுக்கான இடங்களிலே அழுக்கிலே பிறந்திருக்கும். ஈ அழுக்கைத் தின்னும். ஈ அழுக்கின்மேல் நடக்கும். ஈ எப்போதும் அழுக்கையே விரும்பும். அழுக்கில் எப்போதும் நடக்கிற பூச்சி சுத்தமாய் இருக்குமா? சற்று யோசித்துச் சொல்லுங்கள்.

பிள்ளைகள்: சுத்தமாய் இருக்கவே இருக்கமாட்டாது. அசுத்தமாகத்தான் இருக்கும், ஐயா.

உபாத்தியாயர்: இன்னொரு சங்கதியை யோசித்துக் கொள்ளுங்கள். ஈக்கள் கக்கூஸ், குப்பை முதலிய அழுக்கான இடங்களில் தங்கள் கால்களில். படிந்த அழுக்கை அவை நீக்கமாட்டாது. நமது வீட்டுக்குள்ளே பறந்து வரும்போதே அந்த அழுக்கை எல்லாம் கொண்டுவரும், அல்லவா?

பிள்ளைகள்: கொண்டுவரும்.

### 5. அழுக்கான ஈ கொலைபாதகன்.

உபாத்தியாயர்: காலையில் ஈ வீட்டுக்குள்ளே அதிகமாய் இருக்குமா?

பிள்ளைகள்: ஐயா, காலையிலே அதிகம் இல்லை.

உபாத்தியாயர்: நமது வீட்டுக்குள்ளே தாய்மார் சமையல் வேலை துவக்கும்போது ஈ வரமாட்டாதா?

பிள்ளைகள்: வரும், வரும்.

உபாத்தியாயர்: ஆம், ஆம். சமையல் செய்யும் வாசனை நல்ல வாசனை, அல்லவா? ஈக்கள் தூரத்திலிருந்து அந்த வாசனையைத் தெரிந்து குசினிக்குக் கும்பல் கும்பலாய் வரும், அல்லவா?

பிள்ளைகள்: ஆம், ஐயா, வரும். பார்த்திருக்கிறோம்.

உபாத்தியாயர்: நாம் சாப்பிடும் போது ஈக்கள் தூரத்திலே நிற்குமா?

ஒரு பிள்ளை: தூரத்திலே நிற்கமாட்டாது.

இன்னொரு பிள்ளை: நாம் சாப்பிடும்போது நமது எச்சிலையில் உட்காரும்.

மற்றொரு பிள்ளை: ஆம், நாம் சாப்பிடுமுன் நமது சோற்றின்மேல் உட்காரும்.

உபாத்தியாயர்: மெய்தான். ஆனால் குப்பையிலிருந்து வந்த ஈக்கள் உட்கார்ந்த அந்தச் சாதத்தை நாம் சாப்பிடுவோம். இது பெரிய மோசம்.

பிள்ளைகள்: மோசம் ஏன், ஐயா?

உபாத்தியாயர்: பாருங்கள். வாந்திபேதியினால் பீடிக்கப்பட்டவனுடைய மலஜலவாதியிலே வாந்திபேதி உண்டாக்குகிற ஆயிரக்கணக்கான சிறு பூச்சிகள் உண்டு. அவை மிகச்சிறியவை. கண்ணுக்குத் தெரியாதவை. ஆனால் அவை விஷமுள்ளவை. அவை வாந்திபேதி உண்டாக்கும். ஈ அந்த மலஜலவாதியின்மேல் உட்காரமாட்டாதா?

பிள்ளைகள்: உட்காரும், உட்காரும்.

உபாத்தியாயர்: அப்போது வாந்திபேதியை உண்டாக்குகிற விஷமுள்ள பூச்சிகள் ஈயின் கால்களில் ஒட்டிக்கொள்ளும். கேவலமான அந்த ஈ ஒருவனுடைய சோற்றின்மேல் உட்காரும்போது, அந்த விஷப்பூச்சிகளை அந்தச் சோற்றிலே விட்டுவிடும். பிறகு அந்தச் சோற்றிலுள்ள விஷப்பூச்சிகள் அதைச்சாப்பிட்டவனுக்கு வாந்திபேதியை உண்டாக்கலாம். அவ்விதமாய் ஒரு ஊரிலே வாந்திபேதி நடமாடினால், ஈக்கள் யமதூதர்களைப்போல்; அந்த ஊரிலே வாந்திபேதியை அதிகமாகப் பரவும்படி செய்யும்.

பிள்ளைகள். இது நிச்சயமா, ஐயா?

உபாத்தியாயர்: நிச்சயந்தான். டாக்டர்மார் இதைப் பற்றி அடிக்கடிப் பரீட்சித்து இதை நன்றாய்க் கண்டறிந்திருக்கிறார்கள். அழுக்கை விரும்பும் ஈக்கள் தங்கள் கால்களில் விஷமுள்ள பூச்சிகளைக் கொண்டு போய் நமது சோற்றின்மேல் வைத்துவிட்டு, க்ஷயரோகம், வயிற்றுக்கடுப்பு, வயிற்றோட்டம், விஷசுரம் முதலிய சில வியாதிகளைப் பரவப்பண்ணும். இதைப்பற்றிச் சந்தேகம் இல்லை.

ஒரு பிள்ளை: ஐயா, ஈ பாலிலே விழும். அது மோசமா?

உபாத்தியாயர்: நீ கெட்டிக்காரப் பிள்ளை! நல்ல கேள்வி கேட்டாய். ஈ பாலில் விழுந்தால், அதின் கால்களில் இருக்கும் விஷமுள்ள பூச்சிகள் அந்தப் பாலிலே விழும். அந்தப்பாலை நாம் குடித்தால் மோசம் உண்டாகும். இதெல்லாம் நாம் பார்த்தால் ஈ பெரிய கொலைபாதகன் என்று சொல்லுவோம், அல்லவா?

பிள்ளைகள்: ஈ கொலைபாதகன்தான்.

### 6. மிட்டாய்க்கடையில் ஈ செய்யும் தோஷம்.

உபாத்தியாயர்: நீங்கள் மிட்டாய்க்கடைக்குப் போயிருக்கிறீர்களா?

பிள்ளைகள்: போயிருக்கிறோம், ஐயா.

உபாத்தியாயர்: மிட்டாய்க்கடைகளில் ஈ இல்லையா?

பிள்ளைகள்: ஆம், இருக்கும்.

ஒரு பிள்ளை: ஈக்கள் சர்க்கரைமேல் இருக்கும்.

இன்னொரு பிள்ளை: வெல்லத்தின்மேல் இருக்கும்.

இன்னொரு பிள்ளை: தித்திப்பான எல்லா சாமான்களையும் விரும்பும்.

உபாத்தியாயர்: ஈ மிட்டாய் சாப்பிடும் விதம் உங்களுக்குத் தெரியுமா?

பிள்ளைகள்: தெரியாது, ஐயா.

உபாத்தியாயர்: (ஒரு மிட்டாய் காண்பித்து): இதோ இங்கே ஒரு மிட்டாய் இருக்கிறது. மேசைமேல் இதை வைப்போம். இங்கே ஈக்கள் ஜாஸ்தியாக மிட்டாய்க்தாக வரும். பார்ப்போம்.

[ஈக்கள் மிட்டாய்மேல் அதிகமாக வந்து உட்கார்ந்தது. பிள்ளைகள் அவைளை உற்றுப்பார்த்தார்கள்.]

உபாத்தியாயர்: பாருங்கள். ஈயின் தலையிலே ஒரு சிறு தும்பிகைபோன்றது இருக்கிறது. ஈ மிட்டாய் மேல் உட்காரும். மிட்டாய்க்குள்ளே அதன் தும்பிக்கையை இறக்குகிறது. அதின்மூலமாய் மிட்டாயின் மேல் கொஞ்சம் எச்சிலைத் தள்ளும். அதினாலே மிட்டாயில் ஒரு சிறு துண்டு தித்திப்பான நீராக மாறும். ஈ அந்தத் துளியைத் தன் தும்பிக்கையின் மூலமாய் உறிஞ்சும். ஈ இவ்விதமாய் மிட்டாய் சாப்பிடும், பாருங்கள். ஈயின் தும்பிக்கையிலாவது, ஈயின் எச்சிலிலாவது வியாதி உண்டாக்குகிற பூச்சிகள் இருந்தால், மிட்டாய் முதலியவைகளின்மேல் ஈ தன் தும்பிகையினால் அவைகளை இறக்கும். ஒருவேளை ஈ நீரான மிட்டாய் சாப்பிடும்போது மிட்டாய்மேல் தான் போட்ட வியாதிப்பூச்சிகளையும் மறுபடியும் உறிஞ்சலாம். ஆனால் அடிக்கடி அக்கம் பக்கம் நடந்து அந்த விஷப்பூச்சிகளை மிட்டாய் மேல் விட்டுவிடும். இவ்விதமாய் விஷப்பூச்சிகள் ஈக்களின்மூலமாக மிட்டாய்மேல் வரும், அல்லவா?



பிள்ளைகள்: வரும்.

உபாத்தியாயர்: இன்னொரு சமாச்சாரம் இருக்கிறது. ஈ நடமாடித் திரியும் மிட்டாயின்மேல் சிறிய கருப்புப் பொட்டுகள் பார்ப்பீர்கள். அவை என்ன? ஈ போட்ட மலந்தான், வேறல்ல. இதிலும் விஷப்பூச்சிகள் உண்டு. இதினாலேயும் வியாதி உண்டாகும். ஆதலால் ஈ மூன்று விதமாய் நமது பதார்த்தங்களின் மேல் விஷப் பூச்சிகளைப்போடும் சொல்லுங்கள்.

ஒரு பிள்ளை: ஈ குப்பை முதலிய அழுக்கான இடங்களில் நடந்து, தன் கால்களில் ஒட்டி இருக்கிற விஷப் பூச்சிகளைக்கொண்டுவரும்.

உபாத்தியாயர்: சரி, அப்புறம் என்ன?

இன்னொரு பிள்ளை: ஈ தன் தும்பிக்கையின் மூலமாய் விஷப்பூச்சிகளைப்போடும்.

உபாத்தியாயர்: சரி, வேறு என்ன?

இன்னொரு பிள்ளை: ஈ தன் மலத்திலே விஷப்பூச்சிகளை விடும்.

உபாத்தியாயர்: அதெல்லாம் சரி. அப்படி இருக்க ஒரு குழந்தை ஈக்கள் கும்பல் கும்பலாய் இருக்கும் கடையிலேமிட்டாய் வாங்கிச்சாப்பிட்டால், அந்த குழந்தைக்குப் பேதியானால், ஆச்சரியம் என்ன? கணக்கில்லாத பிள்ளைகள் பேதியினால் சாகிறார்கள். டாக்டர்மார் கணக்கு எடுத்துப்பார்த்து, குழந்தைகள் ஐந்தில் நாலுபேர் இப்பேர்ப்பட்ட வியாதியினால் செத்துப் போகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஈ அவ்விதமாய் வியாதியைப் பரவப்பண்ணுகிறதினால், அது குழந்தைகளைக் கொல்லும். நான் முன் சொன்னதுபோல அதுபெரிய கொலைபாதகன், அல்லவா?

பிள்ளைகள்: ஆம், ஐயா, ஈ ஒரு பெரிய கொலைபாதகன் தான்.

### 7. ஈ நமது கண்களில் செய்யும் தோஷம்.

உபாத்தியாயர்: இந்த ஊரிலே பிள்ளைகளுக்குக் காற்றடிக்கும் காலத்தில் கண்ணோய் இல்லையா?

பிள்ளைகள்: ஆம், கண்வலி இருக்கும்.

உபாத்தியாயர்: சரி, நமது பிள்ளைகளுக்கு வழக்கமாய்க் கண்ணோய் உண்டாகிறது எப்படி?

பிள்ளைகள்: அது எப்படியோ, தெரியாது, ஐயா.

உபாத்தியாயர்: பாருங்கள். ஒரு குழந்தைக்கு கண்ணோய் இருக்கிறது. அதின் கண்களிலே ஒரு விதமான பீளை வருகிறது. அதில் கண்ணோய் உண்டாக்குகிற சிறு விஷப்பூச்சிகள் உண்டு.

பிள்ளைகள்: அப்படியா, ஐயா?

உபாத்தியாயர்: அப்படியே. ஈ இதில் என்ன செய்யும் தெரியுமா? அது அந்தப் பீளையைச் சாப்பிடும்படி குழந்தையின் கண்ணிலேஉட்காரும். அப்போது பீளை அதன் காலில் ஒட்டிக்கொள்ளும். பிறகு அந்த ஈ சுகமுள்ள குழந்தையண்டைக்குப்பறந்துபோய், அதன் கண்ணிலே உட்காரும். இவவிதமாய்த் தன் காலில் ஒட்டி இருக்கிற கண்ணோய் உண்டாக்கும் விஷம் சுகமுள்ள பிள்ளையின் கண்ணிலே படும். இவ்விதமாய் ஈக்கள் பல குழந்தைகளுக்குக் கண்ணோயைப் பரவச்செய்யும், அல்லவா?

பிள்ளைகள்: ஐயோ, பாவம்!

### 8. ஈயோடு நாம் செய்யும் சண்டை.

உபாத்தியாயர்: பிள்ளைகளே! புலியைப்பற்றி உங்களுக்குப் பயம், அல்லவா?

பிள்ளைகள்: ஆ, பயந்தான், ஐயா.

உபாத்தியாயர்: ஒரு கேள்வி கேட்கிறேன். நமது ஊருக்குள் ஒரு புலி வந்தால் என்னசெய்வோம்? வேட்டைக்காரர் போய் அதைச் சுட்டுக்கொன்றுபோடுவார்கள், அல்லவா?

பிள்ளைகள்: ஆம், அந்தப் புலியைக்கொன்றுபோடுவார்கள்.

உபாத்தியாயர்: நாம் புலியைப்போல ஈக்களைச் சுட முடியுமா?

பிள்ளைகள்: முடியாது.

உபாத்தியாயர்: அப்படியானால், ஈக்களை நீக்கும்படி நாம் என்ன செய்யவேண்டும்? கேளுங்கள். காகிதம், கந்தைத்துணி, எச்சிலை, குப்பை முதலியவற்றின்மேல் ஈ முட்டைஇடும். தாய் ஈ ஒரு சமயத்திலே 120 முட்டைகள் போல இடும். நாலைந்து நாட்களுக்குள்ளே இந்த முட்டைகளிலிருந்து சிறு புழுக்கள் வரும். இந்தப் புழுக்கள் ஒரு விதமான கூடு கட்டி அதற்குள்ளே ஐந்தாறு நாள் தூங்கிக்கொண்டிருக்கும். பிறகு அவைகள் ஈக்களாக மாறி வெளியே வரும். இந்தப் புதிய ஈக்கள், மறுபடியும் பத்து, பதினைந்து நாட்களுக்குப்பின் முட்டை இடும். இவ்விதமாய் ஒரு மாசத்திலே கோடா கோடி ஈக்கள் ஒரு தாய் ஈக்குப் பிறக்கும். அப்படி இருக்க, ஈக்களைக் குறைக்கவேண்டுமானால் ஈக்களின் முட்டைகளை நாம் அழித்துப்போடவேண்டும். ஈக்களின் முட்டைகளை நாம் அழித்துப்போட்டால் ஈ குறைந்து போம், அல்லவா?

பிள்ளைகள்: குறைந்துபோம்.

உபாத்தியாயர்: இவ்விதமாக நமக்குத்துணை செய்கிறவர்கள் யார்?

ஒரு பிள்ளை: (சற்றுநேரம் யோசித்து பள்ளிக்கூடத்தின் சுவரில் இருந்த ஒரு பல்லியை விரலினால் சுட்டிக் காட்டி) பல்லி ஈயைத் தின்னுகிறது.

இன்னொரு பிள்ளை: கோழி குப்பையிலே இருக்கிற ஈக்களின் புழுக்களைத் தின்னுமா?

உபாத்தியாயர்: ஆம். கோழி, பல்லி, எறும்பு, பட்சிகள் முதலியவைகள் இந்த ஈக்களின் புழுக்களைத் தின்னும். ஆனால் முட்டைகள் ஏராளமானதினால் நாமும் அவைகளை அழிக்கவேண்டும்.

பிள்ளைகள்: எப்படி, ஐயா?

உபாத்தியாயர்: முதலாவதாக, ஈக்கள் விஷப்பூச்சிகளை விடும்படி இடங்கொடுக்கக்கூடாது. நாம் சாப்பிடும் வெல்லம், பால் முதலியவற்றின்மேல் ஈ உட்காராதபடி அதை மூடிவைக்கவேண்டும். மேலும் சாப்பாடு வைக்கும் பாத்திரங்களைச் சுத்தமான துணியினால் சுற்றிக் கட்ட வேண்டும். ரெயில்வே ஸ்டேஷனில் பலகாரக்காரன் பலகாரத்தைத் தகரத்தினால்மூடிவைத்திருக்கிறான், அல்லவா? அப்படியே நாம் நமது வீடுகளில் நமது சாப்பாட்டைப் பத்திரப்படுத்தினால் ஈ அதின் மேல் விஷமுள்ள பூச்சிகளைக் கொண்டு வந்து வைக்கமுடியாது.

இரண்டாவதாக, ஈ வழக்கமாய் முட்டை இடும் இடத்தை நாம் சுத்தப் படுத்தவேண்டும். காகிதம், கந்தை, எச்சிலிலை, பழத்தோல் முதலியவைகளை நாம் சும்மா எறிந்து போடுவது போதாது. அவைகளை நாம் எரித்துப்போடுவது அவசியம். அப்படிச்செய்தால் தாய் ஈக்களுக்கு முட்டை இடும் இடம் குறைந்து போகும்.

மூன்றாவதாக, நம்முடைய குப்பை மேடு வீட்டுக்குத் தூரத்திலே இருக்கவேண்டும். அதில் சாணி எரு முதலியவைகளைப் பயிருக்காக அதிகநேரம் வைக்க வேண்டுமானால், அதன் மேல் மண்போட்டு மூடவேண்டும். அப்பொழுது ஈ அதற்குள்ளே முட்டையிடமாட்டாது. அல்லது கொஞ்சம் கெரோசினாயில் என்னும் மண் எண்ணெயைக் குப்பையிலே தெளிக்கவேண்டும். எண்ணெய் தெளித்த இடங்களிலே தாய் ஈ முட்டை இடமாட்டாது. இதனாலும் ஈக்கள் குறைந்து போகும். கடைசியாக, கேளுங்கள். நமக்கும் ஈக்களுக்கும் ஓயாத சண்டை இருக்கவேண்டும். நாம் ஈக்களை நீக்காவிட்டால் ஈக்கள் நம்மை அழிக்கும்.

---

## கொசு என்னும் நமது சத்துரு

### பறக்கிற சத்துரு யார்?

ஒரு ஊரிலே, சாமிநாத பண்டிதர் என்னும் ஒரு வைத்தியர் இருந்தார். அதே ஊரில் முத்துச்சாமி என்னும் ஒருசமுசாரியும் இருந்தான். அவர்கள் ஒரு நாள் ஒருவரை ஒருவர் கண்டு சந்தித்தபோது நடந்த சம்பாஷணையாவது:—

சமுசாரி:—நமஸ்காரம் ஐயா! பண்டிதரே. க்ஷேமம் தானா?

பண்டிதர்—ஆம், க்ஷேமம்தான்.

சமுசாரி:—விசேஷம் ஏதாவது உண்டோ?

பண்டிதர்—ஆம், நீர் கவனிக்கவேண்டிய ஒரு விசேஷ காரியமுண்டு.

சமுசாரி:—இக்கஷ்ட காலத்தில் நாம் கவனிக்கவேண்டிய பல காரியங்கள் உண்டுதான். தாங்கள் சொல்வது ஏதேனும் புதிதான காரியமோ?

பண்டிதர்:—இது புதிய காரியம் அல்ல. ஆனால் இம்மட்டும் நீர் அதைக் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன்.

சமுசாரி:—அது என்னகாரியம், ஐயா?

பண்டிதர்:—ஐயா! முத்துச்சாமி, இந்த ஊரிலே உமக்குப் பல சத்துருக்கள் இருக்கிறார்கள்.

சமுசாரி:—பண்டிதரே! இது என்ன பேச்சு? இந்த ஊரிலுள்ள எல்லாரோடும் நான் சிநேகமாய் இருக்கிறேனே எனக்குச் சத்துருக்கள் எப்படி யிருக்கக்கூடும்?

பண்டிதர்:—நீர் சொல்வது சரிதான். ஆனால் உம்மை ஈட்டியால் குத்தி, காயப்படுத்தி, அந்தக் காயத்தின் வழியாய் நஞ்சைச் செலுத்துகிற ஒருவன் உமக்குச் சத்துருவா? அல்லவா?

சமுசாரி:—பண்டிதரே, தாங்கள் சொல்வது எனக்குப் புரியவே இல்லை. என்னை ஈட்டியால் குத்துகிறவன் இந்த ஊரிலே ஒருவனும் இல்லையே.

பண்டிதர்:—அப்படி இருக்கட்டும், ஆனால் உம்மை ஈட்டியால் குத்துகிற சத்துருக்களை நான் கண்டிருக்கிறேன்,

சமுசாரி:—என் சத்துருக்களைக் கண்டிருக்கிறீர்களா? அப்படியானால் அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? சொல்லுங்கள் பார்ப்போம்.

பண்டிதர்:—அநேகர் உமது தோட்டத்தில் மறைந்திருக்கிறார்கள். அநேகர் குப்பை மேட்டில் ஒளித்துக் கொண்டு இருக்கிறார்கள். சிலர் கிணற்றுக்குள் இருக்கிறார்கள்.

சமுசாரி:—ஓ! ஓ! இப்போது விளங்குகிறது. பாம்புகள் தான் அந்தச்சத்துருக்கள்.

பண்டிதர்:—பாம்புகள் சத்துருக்கள்தான். ஆனால் நான் சொல்லுகிற சத்துருக்களுக்குக் கால்கள் உண்டு.

சமுசாரி:—கால்கள் இருக்கிறதா? தெரியும், தெரியும். இந்தக் காட்டில் வெறிபிடித்த நரிகள் அநேகமிருக்கிறது. சில நரிகள் தோட்டக்காலுக்கு வருகிறது, குப்பைமேட்டிற்கும் வருகிறது.

பண்டிதர்:—நாலுகால் சத்துருவைப்பற்றி நான் பேசுகிறதில்லை. நான் சொல்லுகிற சத்துருக்கள் ஒவ்வொன்றிற்கு ஆறு கால்கள் உண்டு.

சமுசாரி:—இது என்ன, ஐயா? ஆறு கால் சத்துருவது?

பண்டிதர்:—இந்தச் சத்துருக்களுக்குச் சிறகுகளும் உண்டு அவை பறக்கவும் கூடும்.

சமுசாரி:—நீங்கள் சொல்வது ஒரு நல்ல விடுகதை அது எனக்கு இப்போது தெரிகிறது. ஈக்களா?

பண்டிதர்:—ஈக்களின் இனத்தாரே.

சமுசாரி:—கொசுக்களைப்பற்றியா பேசுகிறீர்கள்.

பண்டிதர்:—ஆம், பறக்கிற பூச்சிகளில் நமக்குப் பல சத்துருக்கள் உண்டு. அவற்றில் விசேஷித்த சத்துரு கொசுக்களே.

(இன்னும் வரும்).

அமெரிக்கன் மிஷன் லிறுக்ஸ் பிரஸ், பசுமலை,—1930.

965

37

REG. NO.—M. 2146

# THE Piramalai Reformer

## பிரமலை சீர்திருத்தன்.

"மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்"

21 NOV 1930

Vol. X.] அக்டோபர்மீ 1930 [இலக்கம் 6.

## பஞ்சாங்கம்.

| 1930 | பிரமோதூதஹு புரட்டாசி 15 | | அக்டோபர்மீ | | பிரமோதூதஹு ஐப்பசி 15 | 1930 |
|---|---|---|---|---|---|---|
| **Sunday** ஞாயிறு | **Monday** திங்கள் | **Tuesday** செவ்வாய் | **Wednesday** புதன் | **Thursday** வியாழன் | **Friday** வெள்ளி | **Saturday** சனி |
| | | | 1<br>15 | 2<br>16 | 3<br>17 | 4<br>18 |
| 5<br>19 | 6<br>20 | 7<br>○ 21 | 8<br>22 | 9<br>23 | 10<br>24 | 11<br>*25 |
| 12<br>26 | 13<br>27 | 14<br>28 | 15<br>29 | 16<br>30 | 17<br>ஐப். 1 | 18<br>2 |
| 19<br>3 | 20<br>4 | 21<br>● 5 | 22<br>6 | 23<br>7 | 24<br>8 | 25<br>9 |
| 26<br>10 | 27<br>11 | 28<br>12 | 29<br>13 | 30<br>14 | 31<br>15 | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur,
A. J. Vethanayaga Thevar Avl.,
Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam,
Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley,
Tirumangalam.

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager*.

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor*.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## ஆசீர்வாதமும், அன்பும் புதிய வாழ்க்கை நடத்துதல்.

(இதை மாசா மாசம் வாசித்து நீங்கள் அநேக புதுக் காரியங்களை அறிந்துகொள்ளுவீர்கள்).

ஆசீர்வாதம் கள்ளர் நாட்டில் பிறந்து பசுமலே பாடசாலையில் ஐந்தாம் பாரம் படித்துத் தேறினர். பிற்பாடு, மதுரை, மங்மள்புரம் பாடசாலையில் எட்டாவது வகுப்புப் படித்த, அன்பு என்ற அம்மாளை கலியாணம் செய்தார். 1918-ம் வருஷத்தில் அவர்கள் பினங்கு தேசத்துக்குப் போய் ஒரு பெரிய ரப்பர் தோட்டத்தில் பதினெரு வருஷகாலமாக வேலைசெய்தார்கள். அங்கு இருந்தபோது சிக்கனமாய்ப் பிழைத்து 800 ரூபாய் மிச்சப்படுத்தி, போனவருஷம் தங்களுடைய ஊருக்கு வந்தார்கள். அவர்களுக்கு பதினெரு வயதுள்ள பேதுரு, ஒன்பது வயதுள்ள கிருபை, நாலு வயதுள்ள யாக்கோபு ஆக மூன்று பிள்ளைகள் இருந்தார்கள்.

அவர்கள் வந்தபிறகு ஆசீர்வாதத்தினுடைய தகப்பனர் இறந்துபோனர். அவர் மகனுக்காக வைத்துவிட்டுப் போன சொத்து கவண்டன்பட்டியில் ஒரு கூறை வீடு, அதே ஊரில் உசிலம்பட்டி, பேரையூர் ரஸ்தாவில் நாலு ஏக்கர் புஞ்சை இன்னும், சில ஜங்கம சொத்துக்கள். புஞ்சையில் ஒரு பெரிய கிணறு கொஞ்சம் மாத்திரம் தோண்டியிருந்தது.

திரும்ப பினங்குக்குப் போகவேண்டும் என்னும் யோசனையை நிறுத்தி சமுசாரி வேலை செய்வோம், நம்முடைய நாட்டு ஜனங்களுக்குப் படித்தவர்களும்கூட எப்படி சமுசாரி வேலைசெய்து கௌரவமாகவும், சௌகரியமாகவும் பிழைக்கலாம் என்று காட்டுவோம் என்று எண்ணினர்கள். இந்தச் செய்தியை அவருடைய சிநேகிதர்கள் அறிந்தபோது சிரித்தார்கள். அவரோடு படித்துத் தேறிய உபாத்தியார்வேலைசெய்த ஒருவர், பின்வருமாறு சொன்னர் :—

என்ன அப்பா! நீசெய்கிறது என்ன? நீ நெற்றியின் வேர்வை நிலத்தில் விழ பாடுபட்டு, பட்டினி கிடந்து சாகப்போகிறய். மதுரை பட்டணத்தில் நானும், என் பெண்சாதியும் உபாத்தியாயர் வேலைசெய்து மாசத்துக்கு ஐம்பது ரூபாய் சம்பாதிக்கிறோம். நான் ஆஸ்பத்திரிக்கும், காப்பிக்கடைக்கும், சினிமா காட்சிசாலைக்கும், சமீபத்தில் வசிக்கிறேன். என் வேலை இலேசு, சம்பளம் நிச்சயம். நாகரீகமில்லாத இடத்துக்கு நீங்கள் போகிறீர்கள், மழை இல்லாவிட்டால் நீங்கள் வேளாண்மை இல்லாமல் திண்டாடுவீர்கள். உங்கள் பிள்ளைகளுக்குச் சரியான பள்ளிக்கூடம் கிடையாது. நீங்கள் என்ன அரும்பாடுபட்டாலும் நாலு ஏக்கர் நிலத்திலிருந்து என்ன லாபம் உங்களுக்குக் கிடைக்கும், உங்கள் புத்தி இவ்வளவுதானு?

இதைப் பொறுமையோடே கேட்டுக்கொண்டிருந்த ஆசீர்வாதமும் அன்பும், "நாங்கள் கஷ்டப்பட்டுத்தான் உழைக்கவேண்டும். ஆனல் படித்த ஒரு குடும்பம், நிலத்தைப் பண்படுத்தி வேண்டிய பணம் சம்பாதிக்கலாம் என்று காட்டப்போகிறோம். வாஸ்தவத்தில் இருக்கிற கஷ்டம் என்னவென்றால் படித்தவர்கள் வேலை செய்ய சோம்பல்படுகிறர்கள். படிக்காதவர்களுக்குப் பண்படுத்த வழி தெரியவில்லை என்று சொன்னர்கள்.

ஆகையினலே ஆசீர்வாதமும் அன்பும், தங்கள் மூன்று பிள்ளைகளோடு கவண்டன்பட்டியில் குடியிருக்கப்போனர்கள். முதலாவது அவர் செய்த காரியம், ஊருக்குள்ளே இருந்த தம்முடைய வீட்டை விற்றுப்போட்டார். கடவுள் சுத்தமான காடுகளை நமக்குக் கொடுத்திருக்கும்போது நானும் என் குடும்பமும் என்னத்துக்காக இந்த நெருக்கமும் அசுத்தமுமான வீதியில் குடியிருக்க வேண்டும். இங்கே காற்றோட்டம் இல்லை. ஈக்களும், வியாதிகளும் ஏராளம். எவ்வளவு பிரயாசப்பட்டாலும் வீட்டைச் சுத்தமாய் வைக்கமுடியவில்லை.

ஆகையினலே அவர் ஊருக்குள்ளே இருந்த தம்முடைய பழைய வீட்டையும் நிலத்தையும் 250 ரூபாய்க்கு விற்றுப்போட்டார். அப்புறம் தம்முடைய நிலத்தில் இருந்த கிணற்றுக்கும், புளிய மரத்துக்கும் பக்கத்தில் ஒரு புது வீடு கட்டினர். தீயைப்பற்றிய பயம் நமக்கு இல்லாமல் இருக்கவேண்டும் நமக்கும் போதுமான காற்றும் விசாலமான சுத்த இடமும்வேண்டும். பின் காலத்தில் சாதனங்களும் உறமும் வேண்டியிருப்பதால் வீட்டுக்காக அதிகப் பணம் செலவுசெய்ய முடியாது.

மேல்கோப்பைத் தாங்கும்படியாக, மூன்றுமைல்களுக்குத் தெற்கேயுள்ள தோல்கேட்டுக்குப்போய் பத்தரை அடி நீளமுள்ள பதினறு கல் தூண்களை வாங்கினர். இவைகளை நாட்டி பதினலு அடி நீளமும், பத்து அடி அகலமுள்ள இரண்டு அறைகளைக் கட்டினர். ஒவ்வொரு அறைக்கும், முன் வாசல் ஒன்றும், பின்வாசல் ஒன்றும், மூன்று பெரிய ஜன்னல்களும் இருந்தன. தூண்களுக்கு இடையில் மண் சுவர் கட்டப்பட்டது. ஓடுகளைத் தாங்கும்படி கல் மூங்கில் வரிச்சல்கள் போடப்பட்டன.

அவர் அப்புறம் ஜான் லீச் துரையுடைய ஓட்டுக் கடைக்குப் போய் எழுபது ரூபாய்க்கு ஓடுகளை வாங்கினர் இவைகளை வீட்டுக்கும் முன் தாழ்வாரத்துக்கும் போட்டார். புகை, வீட்டுக்குள்ளே வாராதபடி வீட்டின் பின் பக்கத்தில் சமையல் அறை கட்டினர். அப்புறம் அவர் மண்சாந்தினல் சுவரைப் பூசி, வெள்ளையடித்தார். குளிர்ச்சிக்காக வரிச்சல்களுக்கு அடியில் மூங்கில் பாய் போட்டார் இந்த வீடுகட்ட முந்தின வீட்டின் கிரயத் தொகையும், பினங்கில் சம்பாதித்து மிச்சப்படுத்திய ரூபாயில் 150-ம் சென்றது.

தம்முடைய தகப்பனர் வைத்திருந்த சின்ன ஜோடி மாடுகளையும், இரண்டு பசு மாடுகளையும் விற்றுப்போட்டு ரூபாய் 250-க்கு பெரிய ஜோடி மாடு வாங்கினர். சில ஆடுகளை விற்றுப்போட்டு எழுபது ரூபாய்க்கு ஒரு பெரிய மாட்டு வண்டி வாங்கினர்.

இப்போது, சித்திரை மாசம் பிறந்து பசுமலே பாடசாலை மாணக்கர்கள் ராஜா விட்டு வீட்டுக்கு வந்தார்கள். அவர்களில் மூன்றுபேர் ஆசீர்வாதமிடம் வந்து, "நாங்கள் 5-ம் பாரம் பரீட்சையில் கஷ்டத்தோடு தேறினலும், S. S. L. C. பரீட்சையில் தேறுவோம் என்கிற நிச்சயமும் இல்லை, அந்த வகுப்புக்கு வேண்டிய புஸ்தகம் வாங்கப் பணமும் இல்லை. இனிமேல் படிப்பை நிறுத்த வேண்டியதுதான் வரும்" என்று முறையிட்டுக் கொண்டார்கள்.

நோய் வந்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும் என்பது, நீங்கள் மனம் சோர்ந்து போகவேண்டாம். இந்த ராஜா காலங்களில், நான் என் நிலத்துக்குக் காம்பை அடிக்கப் போகிறேன். நீங்கள் காலையில் மூன்று மணி நேரம், சாயந்தரம் மூன்று மணி நேரம் அந்த வேலையில் உதவி செய்தால் நானே உங்களுக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுப்பேன், தவிர புஸ்தகம் வாங்குவதற்குக் கொஞ்சம் பணமும் தருவேன், என்று சொல்லி, ஆசீர்வாதம் அவர்களைத் தேற்றினர். அந்தப் பையன்கள் அதற்குச் சம்மதிக்கவே, ஆசீர்வாதம் வாடகைக்கு இன்னெரு வண்டி வாங்கி, இந்த மூன்று பையன்களோடு சேர்ந்து காம்பை அடித்தார். ஒரு வண்டிக்குப் பாரம் ஏற்றும்போது, ஒரு பையன் இரண்டாவது வண்டியில் மாட்டைப் பூட்டி நிலத்துக்கு ஒரு வண்டிப் பாரம் கொண்டுபோவான். அப்படியே மாடுகளை வண்டியில் மாற்றி மாற்றிப் பூட்டி வேலை செய்ததினல் காலையில் பத்து வண்டிக் காம்பையும், மாலையில் பத்து வண்டிக் காம்பையும், ஒவ்வொரு நாளும் அடித்தார்கள். இப்படியாக, ஐம்பது நாளில் ஆயிரம் வண்டிக் காம்பை அந்த நாலு ஏக்கர் நிலத்துக்கு அடிக்கப்பட்டது. மத்தியான ஓய்வு நேரங்களில் ஒழுங்காக ஆங்கிலம் படித்தார்கள். அதோடு ஒவ்வொருவனுக்கும் ரூ 15 கிடைத்தது. அவர்கள் தைரியத்தோடும் சந்தோஷத்தோடும் பள்ளிக்கூடத்துக்குப் போனர்கள்.

(இன்னும் வரும்)

(கவனிப்பு)—பிறதேசத்திலிருந்து நம்முடைய நாட்டை நேசித்து உழைத்து வரும், ஒரு பெரியவரால் இக்கதை தமது சொந்தக் கையால் எழுதப்பட்டு வருகிறது. இது கதையாக மட்டுமல்ல, கிராம வாழ்க்கைக்கும் பிரயோஜனப்படுத்தும் வண்ணமாக இதை எல்லோரும் வாசித்துப் பயன்பெறுவார்களென்று நம்புகிறோம்.

(பத்திராதிபர்.)

---

## சென்னை விவசாய டிபார்ட்மெண்ட்.

### பயிர்களை அழிக்கும் சிகப்புக் கம்பளிப்பூச்சி.

(Amsacta albistriga.)

பயிர்களை அழிக்கும் சிகப்புக் கம்பளிப்பூச்சி தென்னிந்தியாவில் அனைவருக்கும் தெரிந்தது. இதை தமிழ் ஜில்லாக்களில் 'கம்பளிப்பூச்சி' என்றும் ஆந்திர தேசத்தில் 'கொங்காலி புருகு' என்றும் கன்னட நாட்டில் 'கோரி ஹு-உலான்' என்றும் சொல்லுவார்கள். இது மணல் கலந்த செம்மண் தரைகளில் உற்பத்தியாகும் மானவாரி கம்பு, சோளம், வேர்கடலை, பருத்தி, ஆமணக்கு, துவரை முதலிய பயிர்களை அழிக்கின்றது. இது, பயிர்கள் இளம்பருவத்தில் இருக்கும்பொழுது திடீரென்று ஏராளமாய் புழுத்தலால், பயிர்களை ஜாடாவாய் அழிக்கக்கூடியவைகளாய் இருக்கின்றன.

ஜீவிய சரித்திரம்—இதன் ஜீவிய சரித்திரம் மிகவும் விநோதமானது. நன்றாய் வளர்ந்த புழு $1\frac{1}{2}$ அங்குல நீளமுள்ளதாய் உடல் முழுவதும் பழுப்பு அல்லது சிகப்பு மயிர்களால் மூடப்பட்டிருக்கிறது. இதன் சுருசுருப்பு, ஆகாரம் தின்னுமலிருக்கும்பொழுது ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு வெகு துரிதமாய் உடலை வளைத்து வளைத்துப் போவதிலிருந்தே தெரியவரும். நன்றாகத் தின்றவுடன், இது பூமியில் 4, 5 முதல் சில சமயங்களில் 9 அங்குலம் வரையில் வளைதோண்டிக்கொண்டு போகும். வளையின் கடைசியில் கோழிமுட்டை வடிவமுள்ள ஒரு சிறு அறை அமைத்து அதன் பக்கங்களில் தன் உடல் மயிர்களை வாய் எச்சிலால் ஒட்டுகிறது. பிறகு இப்புழு தன் மேல்தோலைக் களைந்து 'பியூபா' என்று சொல்லப்படும் ஈச்சங்கொட்டைபோன்ற ஒரு கரும்பழுப்பு வர்ணமுள்ள வடிவத்தை அடைகிறது. இந்த 'பியூபா' அசைவற்று உயிரற்றதுபோல் காணப்படுகிறது. இந்நிலைமையில் இது அடுத்த வருஷம் முதல் மழை வருகிற வரையில், சுமார் 9, 10 மாத காலம் பூமிக்குள் காலந்தள்ளுகிறது. பூமி நல்ல மழையினல் நன்றாக ஈரமானவுடன் மேற்சொன்ன பியூபா கொஞ்சங் கொஞ்சமாக உருமாறி ஒருவித வண்ணாத்திப் பூச்சியாய் விடுகிறது. பிறகு இவ்வண்ணாத்திப்பூச்சி தானிருந்த கூட்டை உடைத்துக்கொண்டு மெதுவாய் ஈரமண்ணை விலக்கிக்கொண்டு பூமிக்குவெளியில் வருகிறது.

வெளிவந்ததும் பக்கத்திலிருக்கும் செடிகளின்மேல் உட்கார்ந்து தன் இறக்கைகளை வளர்த்துக்கொண்டு இராக்காலங்களில் வீடுகளில் விளக்கு வெளிச்சத்தண்டை இப்பூச்சிகள் பறந்துவருவதைக் காணலாம். இவ்வண்ணாத்திப் பூச்சிகள் பூமியிலிருந்து வெளிவந்ததும் ஆணும் பெண்ணும் கூடி, பிறகு பெண்பூச்சிகள் பக்கத்தில் எந்த செடி தென்படுகிறதோ அதன்மேல் முட்டையிடுகின்றன. பூமியிலிருந்து வெளிவந்தன்றையதினமேகூட முட்டையிடக்கூடும். ஒவ்வொரு பெண்பூச்சியும் 800 முதல் 1,300 முட்டைகள் இடக்கூடும். சராசரி சுமார் 1,000 முட்டைகளை ஒரு பெண்பூச்சி மூன்றுதினத்துக்குள் இட்டுவிட்டு இறந்துவிடுகிறது. முட்டைகளிலிருந்து மிகச் சிறிய கம்பளிப் பூச்சிகள் 3 நாளில் வெளிவந்து பயிர்களிலிருக்கும் பசுமையான வஸ்துக்களை உண்டு 3, 4 வாரத்திற்குள்ளாக முதலில் கூறிய கம்பளிப்பூச்சிகளாக ஆகிறது.

தேசத்தின் தன்மை—பயிர்கள் இளமையாயிருக்கும் பொழுது கம்பளிப்பூச்சி வந்துவிட்டால் பயிர்கள் அடியோடு அழிந்துபோய் மறுபடியும் விதைக்கும்படியாய்விடும். பயிர்கள் சற்றுமுதிர்ந்தபின் வந்தால் இலைகளை முழுவதுமோ அல்லது கொஞ்சமாகவோ தின்றுவிடும். பயிர்களின் பூக்களையும், கதிர்களையும் விடாமல் தின்னும். கம்பளிப் பூச்சிகளால் பீடிக்கப்பட்ட பயிர்கள் மறுபடியும் தழைத்து எழுவதுமுண்டு. ஆனல் அறுவடையில் கண்டமுதல் பெரும்பாலும் மிகக் குறைவாகவே இருக்கும்.

1. தடுக்குமுறைகள்.—கிடங்குகள் வெட்டுதல்.—பொதுவாய் குடியானவர்களுக்கு, கம்பளிப்பூச்சிகள் பயிரைத் தின்று நன்றாய் வளர்ந்த பிற்பாடே, அவைகள் வந்து, பயிரை அழிக்கிறது என்பது தெரியவருகிறது. இக்

நிலைமையில் கம்பளிப்பூச்சிகள் லக்ஷக்கணக்காய் இருப்பதனால் அவைகளைப் போக்கடிப்பது அசாத்தியமான காரியம். கைகளால் அவைகளைப் பொருக்கிக்கொள்வதோ, அல்லது விஷமருந்துகளை அவைகள் சாகும்படியாய் தெளிப்பதோ மிருந்த பணச்செலவையும் சிரமத்தையும் கொடுக்கக்கூடியவை. அநேக சமயங்களில் இப்பூச்சிகளை அழிப்பதற்கு ஆகும் செலவு பயிரிலிருந்து கிடைக்கக்கூடியதைவிட ஜாஸ்தியாக இருப்பதால் கையாடக்கூடியவைகளாகயில்லை. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் ஏராளமாய் கம்பளிப்பூச்சிகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு தோட்டத்திற்கு தீனிக்காக கூட்டங்கூட்டமாய் போகும்பொழுது, ஒரு அடி அகலமும் ஒரு அடி ஆழமுள்ள கிடங்குகளை அவைகள் போகும் வழிக்கு குருக்காய் வெட்டிவிட்டால், அவைகள் அதில் விழுந்து அதைத் தாண்டமுடியாமல் கிடக்கும். அப்பொழுது அவைகளைச்சேர்த்து சுலபமாய்க் கொன்றுவிடலாம்.

2. வண்ணாத்தி பூச்சிகளாய் இருக்கும்பொழுது கையால் பொருக்கிவிடுவது.—அநேக இடங்களில் கம்பளிப்பூச்சிகள் சில தாலுகாகளில் வருஷாவருஷம் கொஞ்சமாகவோ ஜாஸ்தியாகவோ காணப்படுகிறது. குடிகள் இவைகளின் ஜீவிய சரித்திரத்தை மாத்திரம் ஞாபகத்தில் வைத்திருந்தால் கம்பளிப்பூச்சிகள் ஒருநாளும் தங்கள் நிலத்தை விட்டுப்போவதில்லையென்றும், பூமிக்குள்ளேயே ஒளிந்துகொண்டிருந்து அடுத்த வருஷம் மழைபெய்ததும் வண்ணாத்திப் பூச்சிகளாக வெளிவருகின்றன என்பதும் தெரியவரும். அப்படி அவைகள் மழை பெய்த இரண்டு நாளைக்கெல்லாம் கூட்டங்கூட்டமாய் வெளிவந்து புல்பூண்டுகளின் மீது உட்காரும். இவ்வண்ணாத்திப் பூச்சிகள் கண்ணுக்குப் புலப்படக்கூடியவைகளாயும் வெண்மை நிறமாயும் மெதுவாக ஊர்ந்துகொண்டும் இருப்பதனால் அவைகளைச் சுலபமாய் கைகளால் பொருக்கிவிடலாம். அதிலும் இவைகள் வெளிவருவதற்கு 2 நாள் முந்தியே கிராமத்திலுள்ள சிறுவர் சிறுமிகளை நூறு பூச்சிகள் பிடித்துக்கொடுத்தால் இன்னது கொடுக்கிறேனென்று சொல்லிவைத்திருந்தால் இப்பூச்சிகளை வெளிக்கிளம்பியவுடன் முழுவதும் பிடித்து ஒழிக்கலாம். 1,000 முட்டைகளையிடும் ஒரு பெண் பூச்சியை பிடித்துக் கொன்றால் பின்னால் 1,000 கம்பளிப் பூச்சிகளைக் கொல்வதற்கு சமானமாகையால், செவ்வையாக இவ்வண்ணாத்திப் பூச்சிகளைமட்டும் பொருக்கிவிடும் பக்ஷத்தில் பின்னால் இக்கம்பளிப் பூச்சியினால் பயிர்கள் அழியாமல் காக்கலாம்.

3. முட்டை மொத்தைகளைப் பொருக்குதல்.—எவ்வளவு ஜாக்கிரதையாக வண்ணாத்திப் பூச்சிகளைப் பொருக்கினபோதிலும் அவைகள் வெளிவந்த முதல்நாளில் அநேகம் விட்டுப்போய்விடும். அப்படிவிட்டுப் போனவைகள் முதல் நாளிரவில் முட்டையிட்டுவிடும். ஆனால் 100 முதல் 700 முட்டைகளை ஒருமொத்தையாக இடுவதால் அவைகள் நல்ல மஞ்சள் நிறத்துடன் மறுநாள் வண்ணாத்திப் பூச்சிகளைத் தேடுபவர்கள் கண்களுக்கு புலப்படக்கூடியவைகளாயிருக்கின்றன. முட்டைகளிலிருந்து வெளிவரும் புழுக்களால் பெருத்த நஷ்டம் விளைவதால் இந்த முட்டை மொத்தைகளை விடாமல் பொருக்கிவிடவேண்டும்.

4. பியூபாக்களைப் பொருக்குதல்.—பொதுவாய் கம்பளிப்பூச்சிகள், வயிறாரத்தின்று கொழுத்துப் பூமிக்குள் போவதற்குமுன், வேலி ஓரங்களையோ, மரநிழலையோ தேடிப்போய் அங்கே வளைதோண்டிக்கொண்டு பூமிக்குள் போகின்றன. கொஞ்சம் பழக்கமானால் சுலபமாய் அவ்விடங் கண்டுபிடித்து ஒரு களைக்கொத்தினால் பூமியைக் கொத்தி 1,000-க் கணக்கான பியூபாக்களை வெளிப்படுத்தி நாசமாக்கலாம்.

## இத்தடுக்கு முறைகளை செய்து காட்டினதும் அதனால் ஏற்பட்ட லாப நஷ்டங்களும்.

பண்ருட்டிக்கு பக்கத்தில் உள்ள மாளிகம்பட்டு, தாழம்பட்டு கிராமங்களில் குடியானவர்களின் 100 ஏக்ரா நிலத்தை, 1926-ம் வருஷம் விவசாய டிபார்ட்மெண்டார் எடுத்துக்கொண்டு மேற்சொன்ன தடுக்குமுறைகளை செய்துகாண்பித்தார்கள். அப்பொழுது கால்செவி (24 செண்டு) மழை பெய்த இரண்டு நாளைக்கெல்லாம், ஜூலை மாதம் 25உ ஒரு கூட்டம் வண்ணாத்திப் பூச்சிகள் வெளிவந்தன. மறுபடியும் 26உ முதல் 28உ ஒரு கூட்டம் வெளிவந்தன. இந்த இரண்டு நாட்களிலும் 3½ லக்ஷம் பூச்சிகளும் அநேகம் முட்டை மொத்தைகளும் பொருக்கப்பட்டன. மறுபடியும் ஆகஸ்டு 1உ 64 செண்டு மழை பெய்ததனால் 3உ பூச்சிகள் வெளிவந்தன. ஏராளமான முட்டை மொத்தைகளும் 6 லக்ஷம் பூச்சிகளும் வெளிவந்து பிடிபட்டன. பிறகு ஆகஸ்டு 17உ வரையில் மழையில்லாமலிருந்து அன்றையத்தினம் 50 செண்டு மழை பெய்து கொஞ்சம் பூச்சிகள் வெளிவந்தன. ஆகஸ்டு 19உ 54 செண்டு மழைபெய்தது. சுமார் 5 லக்ஷம் பூச்சிகள் வெளிவந்து பிடிபட்டன. அதே மாசத்தில் 29உயும் 31உயும் சொற்பமாய் பூச்சிகள் பிடிபட்டன.

மொத்தத்தில் ஆறுவாரத்திற்குள்ளாக 13,70,000 வண்ணாத்திப் பூச்சிகளும் ஏராளமான முட்டை மொத்தைகளும் பொருக்கப்பட்டன. இவைகளைப் பொருக்குவதற்கு ஏக்கருக்கு ரூ. 2-விகிதம் சுமார் ரூ. 200 ஆயிற்று.

கம்பு, கடலைக்காய் அறுவடை சமயத்தில் இம்மாதிரி முறைகளை அனுசரித்த இடத்தையும், அனுசரிக்காத இடத்தையும் தனித்தனியே அறுத்து அடித்துப்பார்க்கப்பட்டது. பூராவும் கம்பளிப்பூச்சிகளால் அழிக்கப்பட்ட கம்புப்பயிர்களை குடியானவர்கள் உழுதுவிட்டார்கள். அவைகளைத் தள்ளிவிட்டு அவ்வளவு கேவலமாய் அழிக்கப்படாதவைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு பின்வருவனவற்றை கணக்கொடுத்தார்கள். தனிக் கம்புபோட்ட நிலங்களில் இம்மாதிரிப் பூச்சிகளைப்பொருக்கி எடுத்த இடத்தில் சராசரி ஏக்ராவுக்கு 256.4 படி கிடைத்தது. கேழ்வரகுடன் கலந்துபோட்ட கம்பு ஏக்ராவுக்கு 161·5 படி மேனிக்கு ஆயிற்று. ஆனால் பூச்சிகளை மேற்சொன்னபடி பொருக்காத இடங்களில் தனிக்கம்பு சராசரி 104·1 படியும், கேழ்வரகுடன் சேர்த்துப் போட்ட கம்பு 81·1 படியும் ஏக்ராவுக்குக் கொடுத்தது. ஆகவே, தடுக்குமுறைகள் அனுசரித்த இடத்திற்கும் அனுசரிக்காத இடத்திற்கும் ஏற்பட்ட லாபம் ஏக்ராவுக்கு தனிக் கம்பில் 152.3 படியும், மணிலாக்கொட்டையுடன் போட்டகம்பில்



81.4 படியும் கிடைத்தது. அதாவது, தனிக்கம்பில் ரூ. 25-ம் கலப்புக்கம்பில் ரூ. 13½-யும் ஏக்ராவுக்கு இந்தத் தடுக்குமுறைகளை அனுசரித்ததினால் லாபமாகக் கிடைத்தது.

இந்த வருஷம் மழையின்மையினால் கடலைக்காய் மகசூல் மிகக் குறைவு. இருந்தபோதிலும் பின்வருமாறு மகசூல்கள் கிடைத்தன. மேற்சொன்ன முறைகளை அனுசரித்த 86.37 ஏக்ராவில் ஏக்ராவுக்கு ரூ. 78-14-5 பெருமான 1·578 பாரம் பருப்பும் அம்முறைகளை அனுசரிக்காத 64·34 ஏக்ராவில் ரூ. 26-8-0 பெருமான 0.530 பாரம் பருப்பும் ஏக்ரா ஒன்றுக்கு கிடைத்தன. பின்சொன்னதில் குடியானவன் தான பயிர் செய்து செலவழித்த செலவைக்கூட முழுவதும் அடையமுடியவில்லை. இப்படி மழையில்லாத காலத்திலும்கூட கடலைக்காயில் இம்முறைகளால் ஏக்ராவுக்கு ரூ. 52 லாபம் கிடைத்திருக்கிறது. நல்ல காலங்களில் கம்பளிப்பூச்சிகள் அழிக்காமலிருக்குமானால் ஏக்கருக்கு சுமார் ரூ. 200 சாதாரணமாய் கிடைக்குமென்பதாகத் தெரியவருகிறது.

கடலைக்காயும் கம்பும்கலந்து பயிர் செய்யும் குடியானவர்கள், இக்கம்பளிப் பூச்சிகளால் ஏற்படும் நஷ்டத்தைத் தடுப்பதற்கு சாதாரணமாய் ஏக்கருக்கு ரூ. 2 செலவு செய்யலாம்.

இம்முறைகளில் வெற்றியின் ரகசியம்.—இத்தத்தடுக்குமுறைகளில் வெற்றியையடைய குடியானவர்கள் ஒற்றுமையுடன் வேலைசெய்யவேண்டும். கிராமத்திலுள்ள எல்லாக்குடிகளும் ஒரே மனதுடையவராய் ஒற்றுமையாய் தங்களுக்கெதிரியாயிருக்கும் கம்பளிப்பூச்சிகளைத் தொலைக்க ஏற்படவேண்டும். அப்படி ஒற்றுமையில்லையானால் ஒன்றும் நடக்காது. கிராமத்தில் சிலர் மாத்திரம் பூச்சிகளைப் பொருக்க ஏற்பட்டு மற்றவர்கள் சும்மாயிருந்தால் பின் சொன்னவர்கள் நிலத்தில் புழுக்கும் பூச்சிகள் பொருக்கினவர்கள் நிலத்துக்கும் வரக்கூடுமாதலால் இவற்றைத் தொலைக்க ஒற்றுமையின்றி மார்க்கமில்லை.

தவிர வண்ணாத்திப் பூச்சிகள் எந்தக் காலத்தில் வெளிவருமென்பதை நன்றாய் ஆராய்ந்து அறியவேண்டும். இது தென்னிந்தியாவில் சீதோஷ்ணஸ்திதிப் பிரகாரம் ஒவ்வொரு இடத்திற்கு ஒரு மாதிரி இருக்கிறது. உதாரணமாய் தென்னாற்காட்டில் ஜூலை, ஆகஸ்டு மாதத்திலும், ராமநாதபுரம் ஜில்லாவில் அக்டோபர், நவம்பரிலும், பல்லாரியில் ஜூன், ஜூலையிலும் கோயமுத்தூர், பொள்ளாச்சித் தாலுகாவில் மே, ஜூனில் ஒருதரமும், மறுபடியும் ஜூலையிலும் வண்ணாத்திப் பூச்சிகள் பூமியினின்றும் வெளிவருகின்றன. அப்படி வெளிவருவதை ஜாக்கிரதையாக கண்டுபிடித்து உடனே அவைகளைப் பிடித்துத் தொலைக்கத்தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

இதைத் தவிர இன்னும் ஏதேனும் விஷயங்கள் தெரியவேண்டியிருந்தால் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

விலாசம்:— சர்க்கார் பூச்சி சாஸ்திரி,
விவசாய பரிசோதனைசாலை,
லாலிரோட் போஸ்டு, கோயமுத்தூர்.

## சென்னை விவசாய டிபார்ட்மெண்ட்.
## நெல் கதிரில் விழும் நாவாய்பூச்சி.

சென்னை ராஜதானியில் நெல்விளையும் பாகங்களில் நெல் கதிரில் இந்தப் பூச்சி விழுந்து அதிக சேதப்படுத்துகிறதாக ரிப்போர்ட்டுகள் வந்திருக்கிறது. பெரும்பாலும் மலையாளம் பக்கம் அதிகம். தென்கன்னடத்தில் 'பம்புச்சு' என்றும் மலையாளத்தில் 'ச்சாழி' என்றும் சொல்லப்படுகிறது. தமிழ் தேசங்களில் நாவாய்ப்பூச்சி, கிளி என்று சொல்லப்படுகிறது. தெலுங்கு தேசத்தில் சிலுக்கலு என்று பெயர். அதன் அர்த்தமும் கிளிதான். அந்தப் பூச்சியானது ஒடுங்கி ஒரு அங்குல நீளமாயும் பசுமையோடு கபில நிறமுள்ளதாய் கொம்பும் காலும் நீளமானதாக இருக்கிறது. அது எப்பொழுதும் சுறுசுறுப்புள்ளதாயிருக்கிறது. சிறகுகளுமிருப்பதால் ஒரு வயலிலிருந்து அடுத்த வயலுக்குப் பறந்து போகிறது. நீண்டு கூர்மையான குழாய்போன்ற வாயிருப்பதால் இளங்கதிர் காம்பு அல்லது நெல் மணியில் துளைத்து அதன் ரசத்தைப் பருகிவிட ஏதுவாயிருக்கிறது. இளங்கதிர் வெளிவருகிற சமயம் நெல்பயிரில் ஆயிரக்கணக்காகத் தோன்றி அதிகச் சேதம் உண்டுபண்ணுகிறது.

சில சமயங்களில் ஒரு நெற்கதிர் கொலை பூராவும் சாவியாகப் போய்விடும். ஆனால் அநேகமாய் ஒரு நெல்கதிரில் ஒவ்வொரு மணி (நெல்) மட்டும். இடை இடையே சாவியாக சேதப்பட்டிருக்கும். நெல்லிலேயே இந்தப் பூச்சி சாதாரணமாகத் தோன்றினும், சோளம், ராகி, தினை இதுபோன்ற மற்ற சிறு தானியக் கதிர்களிலும் விழுந்து சேதப்படுத்தியதாக இந்த ராஜதானியில் பல இடங்களிலிருந்து ரிப்போர்ட்டு வந்திருக்கிறது.

இந்தப் பூச்சியின் பிறப்பு வளர்ப்பு.—இந்தப் பூச்சி பொதுவாய் நெல், சிறு தானியப் பயிர் மற்றும் காடுகரைகளிலும், தருசுகளிலுமுள்ள புல்லுகளிலுமிருந்து உண்டாகிறது. ஒவ்வொரு பெண்பூச்சியும் 250 முதல் 300 முட்டைவரையும் இடக்கூடும். நெல் அல்லது புல் தோகைகளில் 10 முதல் 25 முட்டைவரையும் ஒரு வரிசையிலிருக்கத்தக்கதாய் வரிசை வரிசையாக முட்டை இடுகிறது. முட்டையிட்ட ஒரு வாரத்துக்குள் பொடியாய் நுட்பமான பச்சைப் பூச்சிகள் கிளம்பிவிடுகின்றன. இவைகள் தோகைகளிலும் தண்டுகளிலுமுள்ள ரசத்தைப் பருகிப்பருகி இரண்டு வாரத்துக்குள் இறக்கைப் போட்டு பறக்கின்றன. அப்படி வளர்ந்த பூச்சியானது கதிர்களில் கிளரும் மணிகளின் ரசத்தைப் பருகியும் தோகை, தண்டு இவைகளிலும் ரசத்தைப் பருகி, மூன்று அல்லது நாலு மாசம்வரை உயிரோடிருக்கின்றன. இப்பருவத்தில் தான் எங்கெங்கே பயிருணவு கிடைக்குமோ அங்கங்கே முட்டையிடுகின்றன. மலையாளப் பக்கத்தில், மழைகாலத்தில்தான் இப்பூச்சி முட்டையிட்டு பலுகுகின்றது. மே மாதம், ஆகஸ்டு மாதங்களில் பயிரிடுகிற முதல் போகப் பயிரில் இப்பூச்சி அதிகமாய்த் தோன்றி சேதப்படுத்துகிறதில்லை. ஆனால் இரண்டாம் போகப்பயிரிலும் மூன்றும் போகம் எங்கெங்கே பயிரிடப்படுகிறதோ அங்கேயும் அவைகள் சிற்சில இடங்களில் தண்டுதண்டாய் பயிரிடப்படுகிறபடியால் அங்கங்கே, முதல்போகப் பயிர்

விருந்தும் புல்லுகளிலிருந்தும் வளர்ந்துகொண்டிருக்கிற அந்தப்பூச்சி டை இரண்டாம் போகம் மூன்றாம் போகப் பயிர்களில் விழுந்து, பெருஞ்சேதப்படுத்துகிறது. இரண்டாம் போகம் நெல்பயிரிலும் சீக்கிரம் கதிர் வாங்குகிற சொற்ப வித்துப்பயிரில்தான் இப்பூச்சியால் சேதம் அதிகம்.

இப்பூச்சியை மாற்றும் முறை.—இப்பூச்சி உற்பத்தியாகிற முறையைப் பார்த்தால், சரியாய் வேலை செய்யாத கருஞ்சைகளிலுள்ள புல்லுகளிலும், கருஞ்சைகளின் பக்கத்திலுள்ள தருக, காடு முதலியதுகளிலுள்ள புல்லுகளிலும் இப்பூச்சி வளருகிறது. ஆதலால் பூமியை புல்பூண்டுகளில்லாமல் சுத்தமாய் பயிரிடவேண்டியது அவசியம். அப்படிச் செய்தால் அப்பூச்சி நின்றுவளருகிறதற்கு இடமில்லாமல்போய் பின்னால் பயிரில் விழுவதற்கு மார்க்கமில்லாமல் போய்விடுகிறது. இந்தமாதிரி பக்கத்திலுள்ள அநேக விவசாயிகள் ஒன்று கூடிச் செய்தால் இந்தப்பூச்சியினால் ஏற்படும் சேததை அநேகமாய் குறைத்துவிடலாம்.

என்றாலும் ஒரு வயலில் இப்பூச்சி அதிகமாகத் தோன்றியிருந்தால் உடனே அதைப் பிடித்து கொன்று குறைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்தப் பயிரில் சேதம் அதிகம் ஏற்படாது. அநேகமாய் கதிரில் சேதம் அதிகம் ஏற்பட்டபின்தான் விவசாயிகள் பூச்சி விழுந்திருப்பதைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். அச்சமயம் சேதம் ஏற்பட்டு நெல் சாவியாயிருக்கிறது. பூச்சி விழுகிற ஆரம்பத்தில் கண்டுபிடித்தால் கைவலைகொண்டு பிடித்து குறைத்துவிடலாம். கைவலை உண்டுபண்ணுதல் ரொம்பவும் லெகுவு கைவலையென்பது ஒரு முரட்டுத் துணியால் தைத்து ஒரு பக்கம் திறந்துள்ள பை. அந்தப்பை 1 அல்லது $1\frac{1}{2}$ அடி அகலமாயும், $1\frac{1}{2}$ அல்லது 2 அடி நீளமுள்ளதாக இருக்கவேண்டும். அந்தப்பையின் வாயில் வளைந்த ஒரு சிறு பிரம்பு அல்லது மூங்கில் போகும்படியாய் உள்பக்கம் மடித்துச் சுருக்கித் தைத்திருக்க வேண்டும். அந்த மூங்கில் நுனி இரண்டையும் ஒரு கவைக்குச்சியில் சேர்த்து நன்றாய்க் கட்டிவிட்டால் அந்த வலைக்கு கைப்பிடி ஏற்பட்டுவிடுகிறது. கெட்டியானதும் நாள்பட இருக்கக்கூடியதுமான ஒரு இரும்புக் கம்பியினுல் கிராமக் கொல்லன் கைப்பிடிபோடக்கூடும். அந்தவலையை பிடித்துக்கொண்டு கதிரில் விரைவாய் வீசி எடுத்தால் வலையில் ஏராளமான பூச்சி அகப்பட்டிருக்கும். ஒருவன் அந்தமாதிரி ஒரு வயலில் ஒரு பக்கமிருந்து கடைசிவரை இரு கைப்பக்கமும் வீசிப் பிடித்தால் ஏராளமான பூச்சியைப் பிடித்து விடலாம். பிடிபட்ட பூச்சிகளை ஒரு சட்டியில் தண்ணீரோடு கொஞ்சம் மண்ணெண்ணெயும் விதக்க விட்டுக்கொண்டு அதில் போட்டால் பூச்சிகள் செத்துவிடும்.

இந்த விதமாக வலையை இரண்டு மூன்று நாளைக்கு பூச்சி தோன்றிய பயிரில் ஒரு விவசாயி காலையிலும் மாலையிலும் வீசிப்பூச்சிகளைப் பிடித்துக் கொன்றால் பூச்சி முற்றிலும் தொலைந்துவிடும். ஆனால் பூச்சி தோன்றி கொஞ்ச காலத்திற்கு பிற்பாடு செய்தால் அவ்வளவு பிரயோஜனம் அடையாது. ஏனென்றால் அதற்குள் கொஞ்சம் சேதப்படுத்தியிருக்கும்.

இந்தமாதிரி பூச்சிகளை பிடித்து நிறுத்துவதற்கு உபாயம்.—பூச்சிகளைப் பிடித்து கொன்று நிறுத்தலாம் அல்லது நிறுத்த முடியாதென்பதற்கு இரண்டு விஷயம் கவனிக்கவேண்டியவை.

1. அக்கம் பக்கம் விவசாயிகள் ஒத்துக்கூடி எல்லாரும் சேர்ந்து செய்தல்.

2. பூச்சி விழுந்தவுடனே நெரிந்து வேலைசெய்தல்.

பக்கத்திலுள்ள விவசாயிகள் கூடிச் செய்தாலொழிய பயன்படாதென்பதைப் பற்றி அதிகமாகச் சொல்லவேண்டியதில்லை. ஏனென்றால், பூச்சி பறக்கக்கூடியது. பக்கத்து வயல் விவசாயியும் வலைபோட்டுப் பிடித்தாலொழிய ஒரு வயலில் பிடித்து பிரயோஜனப்படாது. ஒரு விவசாயி சுருசுருப்பாய் பூச்சி தோன்றியபொழுது பிடித்துக்கொண்டிருக்க பக்கத்தில் மற்றொருவன் பூச்சி விழுந்தால் விழட்டும் என்று பேசாமலிருந்தால் முன்னவன் செய்த முயற்சியெல்லாம் வீணாய்விடும். பொதுவாய் நெல் பயிரிட்ட ஒரு வட்டத்தில் முன்கூடி கதிர்வாங்குகிற இடப்பில் பூச்சிவிழக்கூடும். அப்படி விழுகிறது தெரிந்தவுடன் பக்கபூமிக்காரரும் சேர்ந்து அதை நிறுத்த வேண்டியதவசியம்; இல்லாவிட்டால் அங்கே யிருந்து கொண்டு பின்னால் மற்ற இடங்களுக்கும் பரவிவிடும். புல்பூண்டு இல்லாமல் சுத்தமாய் பயிரிடுவதற்கும் பக்கத்திலுள்ளவர்கள் கூட்டுறவுவேண்டும்.

ஒரு விவசாயி தன் நெற்பயிரில் பூச்சி விழாமல் தடுக்க வேண்டுமானால் தன் பூமியில் மட்டுமல்ல பக்க பூமிகளிலும் பூச்சி விழுந்திருக்கிறதா என்று ரொம்பவும், ஜாக்கிரதையாய் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். பூச்சி விழ ஆரம்பித்தவுடன் அதைப்பிடித்து மேலே சொன்ன பிரகாரம் கொல்லவேண்டும். பூச்சி தோன்றி பெரும்பாலும் சேதப்படுத்தியபின், பூச்சியை பிடித்து கொல்ல ஆரம்பித்து, அது பயனடையவில்லையென்று அந்த முறையைக் குற்றம் சொல்வதில் பயனில்லை. இது விஷயமாக மேலும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பவர்கள் கோயம்புத்தூர் லாலி ரோடு போஸ்டு, விவசாய கலாசாலை, கவர்ன்மெண்ட் என்டமாலோஜிஸ்டுக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

---

## கொசு என்னும் நமது சத்துரு.

### பறக்கிற சத்துரு யார்?

(1930ஹ செப்டெம்பர் 40-ம் பக்கத்தின் பின் தொடர்ச்சி)

### பறக்கிற சத்துரு செய்யும் மோசம்.

சமசாரி:-ஆம், ஐயா! நீங்கள் சொல்வது வாஸ்தவமே கொசுக்கள் பெரிய தொந்தரவு கொடுக்கிறது. விளக்கேற்றினால் போதும், கொசுக்கள் வீட்டுக்குள் நிறைந்துவிடுகிறது. ஆனால் அதிகக் கஷ்டம்தான். ஆனால் கொசுவுக்குப் பயந்து கோட்டையை விட்டு ஓடுகிறதா? என்ன செய்கிறது?



பண்டிதர்:—கொசுக்கள் தொந்தரவு செய்வதோடே நின்றுவிட்டால், நான் அதைப்பற்றி ஒன்றும் சொல்ல மாட்டேன். ஆனால் இன்றைக்கு இந்த ஊர் பள்ளிக்கூடத்திற்கு நாலு பிள்ளைகள் வரவில்லை. ஏன்? அவர்களுக்குக் குளிர்காய்ச்சல் அடிக்கிறது. அந்த நாலு பிள்ளைகளுக்கு மாத்திரம்தானா குளிர்காய்ச்சல்?

சமசாரி:—அநேகர் காய்ச்சலாய் இருக்கிறார்கள்.

பண்டிதர்:—சென்னபட்டணத்திலிருந்து காளப்பன் குளிர்காய்ச்சலுடன் வந்திருக்கிறானே தெரியாதா? பட்டணத்தில் அவன் வேலைசெய்யும் பஞ்சுச்சாலை இருக்கிறது, அல்லவா? அதிலே ஆயிரக்கணக்கான ஆட்கள் வேலை செய்கிறார்களே. அதில் ஒவ்வொரு நாளிலும் நூற்றுக்கணக்கான பேர் குளிர்காய்ச்சலில் அகப்பட்டு வேலைக்குப்போகாமல் இருக்கிறார்கள். அந்நாட்களில் அவர்களுக்குச் சம்பளம் கிடைக்குமா? இது அற்பத் தொந்தரவு மாத்திரமா?

சமசாரி:—அது மகா பெரிய நஷ்டம்தான்.

பண்டிதர்:—அப்படியே ரெயில் வேலைக்காரருக்குள்ளே எத்தனையோ பேர் குளிர்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வேலைக்குப் போகாதிருக்கிறார்கள். இதுவும் வெறும் தொந்தரவுதானா?

சமசாரி:—இது வெறும் தொந்தரவல்ல. பெரிய நஷ்டமே. பண்டிதரே, நீங்கள் ஆரம்பித்தது கொசுக் கதை. இப்பொழுது பேசுவதோ காளப்பன் சங்கதியாய் இருக்கிறதே.

பண்டிதர்:—அப்பா, நமது சத்துருவாகிய கொசுவே இந்தக் குளிர்காய்ச்சலுக்கெல்லாம் காரணம்.

சமசாரி:—நீங்கள் சொன்னபடி கொசுவினால் எப்படி குளிர்காய்ச்சல் உண்டாகிறது?

பண்டிதர்:—சொல்லுகிறேன் கேளும். ஊரிலே ஒரு பையனுக்குக் குளிர்காய்ச்சல் வருகிறது. அவன் படுக்கையிலே கிடக்கிறான். கொசுக்கள் அவ்வீட்டில் இருக்கும், அல்லவா? கொசுக்களுக்கு ஆகாரம் என்ன? தெரியுமா?

சமசாரி:—கொசுவுக்கு ஆகாரம் இன்னதென்று தெரியாதவர்கள் யார்? கொசுவுக்கு நமது இரத்தமே ஆகாரம்.

பண்டிதர்:—கொசுக்களுக்குப் பலவித ஆகாரங்கள் உண்டு. ஆனால் குளிர்காய்ச்சலை உண்டாக்கும் கொசுவுக்கு நமது இரத்தம் என்றால் வெகு பிரியம். அது நமது இரத்தத்தை எப்படி குடிக்கும்? யானைக்குத் தும்பிக்கை இருக்கிறது, அல்லவா? அது போல அந்தக் கொசுவுக்கும் மூக்கிலே ஒரு விதத் தும்பிக்கை யுண்டு அது ஊசிபோல் இருக்கிறது. அந்த ஊசியில் சிறு குழாய் இருக்கிறது. தெரியுமா?

சமசாரி:—ஆம் ஊசிபோல் இருக்கிற அதின் தும்பிக்கையைப் பார்த்திருக்கிறேன்.

பண்டிதர்:—சரி; கொசு குளிர்காய்ச்சல் அடிக்கிற பையன்மேல் உட்காரும். அவன் தோலுக்குள் அது தன் தும்பிக்கையைச்செலுத்தும். அவனுடைய இரத்தத்தை அந்தத் தும்பிக்கையின் மூலமாய் அது உறிஞ்சிக் குடிக்கும். குளிர்காய்ச்சல் அடிக்கிற பையனுடைய இரத்தத்திலே ஒருவிதமான விஷம் இருக்கிறது. அந்த விஷம் கொசுவின் தும்பிக்கையில் ஒட்டிக்கொள்ளுகிறது

சமசாரி:—ஓகோ! அப்படியா சங்கதி?

பண்டிதர்:—ஆம் அப்பா! மேலும் கொசு குளிர்காய்ச்சல் அடிக்கிற பையனுடைய இரத்தத்தைக் குடித்தபின் என்ன செய்யும்? அது பறந்துபோய் இன்னொருவன் மேல் உட்கார்ந்து தன் விஷமுள்ள தும்பிக்கையை அவன் தோலுக்குள் செலுத்தி, அவன் இரத்தத்தையும் குடிக்கும், அல்லவா? இவ்விதமாய் குளிர்காய்ச்சல், விஷம், சுகமுள்ளவனுடைய இரத்தத்தில் கலந்துவிடும். இதினால் சுகமுள்ளவனுக்கும குளிர்காய்ச்சல் வந்துவிடும்.

சமசாரி:—இது நிசம்தானா?

பண்டிதர்:—ஆம்; பல தேசங்களில் உள்ள டாக்டர்கள் இதைப்பற்றிப் பரிசோதனை பண்ணியிருக்கிறார்கள். குளிர்காய்ச்சல் கொசுக்கடியினால் பரவுகிறது என்பதற்குச்சந்தேகமே இல்லை. இதினால், கொசுதான் பெரிய சத்துரு என்று அறியப்பட்டிருக்கிறது.

### சத்துருவை ஜெயிக்கும் விதம்.

சமசாரி:—பண்டிதரே, நீங்கள் சொல்வது உண்மைதான் என்று நம்புகிறேன். ஆனால் இந்தச் சத்துருவை ஜெயிப்பது எப்படி? இது கூடிய காரியமா?

பண்டிதர்:—ஐயா! ஒரு சத்துரு உம்மை நஞ்சு ஊட்ட வருவதை நீர் கண்டால் சும்மா இருப்பீரா? அவனைத் தடுக்க எத்தனிப்பீர், அல்லவா?

சமசாரி:—ஆம், தடுப்பேன், ஆனால் கொசுக்களைத் தடுப்பது எப்படி?

### (i) பள்ளங்களில் தண்ணீர் கட்டி நிற்க விடப்படாது.

பண்டிதர்:—முதலாவது: தாய்க் கொசுக்கள் முட்டையிடும்படிக்கு இடம் கொடுக்கப்படாது. தாய்க் கொசு தன் முட்டைகளைத் தண்ணீருள்ள இடங்களில்தான் இடும். தண்ணீர் உள்ள பக்கங்களிலேதான் கொசுக்கள் டலுகும். ஆகையால் தோட்டத்திலும் குப்பைமேட்டிலும் உள்ள பக்கங்களில் தண்ணீர் கட்டி நிற்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இவைகளில் தண்ணீர் இல்லாவிட்டால் தாய்கொசு முட்டையிடும்படி அங்கே வரமாட்டாது.

சமசாரி:—அப்படிச் செய்யலாம். அந்தப் பள்ளங்களை நாம் மூடிப்போடலாம். அதற்குத் தடையில்லை.

### (ii) கெரோசீன் எண்ணெய்.

பண்டிதர்:—இரண்டாவது: கொசுவின் குஞ்சுகளாகிய கிருமிகளை அழிப்பது அவசியம்.

சமசாரி:—கொசுவின் கிருமிகள் என்ன?

பண்டிதர்:—மற்ற சிக்களைப்போலவே தாய் கொசுக்களும் முட்டைகளை இடும். நான் முன் சொன்னபடி தாய்க்கொசு தண்ணீரிலே தன் முட்டைகளை இடும். மூன்று நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு முட்டையினின்றும் அதிகச் சிறிய ஒரு கொசுக்கிருமி பிறக்கும். அந்தக்

கொசுக்கிருமி தண்ணீருக்குள் துள்ளித் துள்ளி, நீந்திக் கொண்டு திரியும். அப்புறம் சில நாட்களுக்குப் பின் அந்தக் கிருமி கொசுவாகமாறிப்பறந்து விடும்.

சமுசாரி:—நான் என்து பழைய கிணற்றின் தண்ணீரில் துள்ளித் துள்ளி நீந்திக் கொண்டிருக்கும் அந்தக் கிருமிகளைப் பார்த்திருக்கிறேன். அது கொசுக் கிருமியா?

பண்டிதர்:—ஆம், ஆம்; அதுதான் கொசுக்கிருமி. தாய்க்கொசு நாம் மூடிவிடக்கூடிய பள்ளங்களில் மாத்திரமல்ல, தண்ணீர் தொட்டியிலும் கிணற்றிலும் தடாகத்திலும் கூட முட்டையிடும். எப்போதும் இறைத்துக் கொண்டிருக்கும் கிணற்றைப்பற்றி அவ்வளவு பயமில்லை நீர் நிலையான பழைய கிணற்றையும், தடாகத்தையும் தொட்டியையும் பற்றிதான் பயம். ஏனென்றால், அவைகளில் தாய்க்கொசு தடையின்றி முட்டையிடும். அந்த நீர் நிலையான இடங்களில் முட்டைகளிலிருந்து பிறந்த கொசுக்கிருமிகள் தடையில்லாமல் பலுகும். அவ்விடங்களில் கொசுக்கள் தாராளமாய்ப் பெருகும். ஆகையால் கிணற்றிலும், தடாகத்திலும், தண்ணீர்த் தொட்டிகளிலுமுள்ள இந்தக் கொசுக்கிருமிகளை நாம் அழித்துவிட்டால், நமது சத்துருவாகிய கொசுச்சேனை குறைந்துபோகும், அல்லவா?

சமுசாரி:—மெய்தான். நாம் கொசுக்கிருமிகளை அழித்துவிட்டால் கொசுச்சேனை குறைந்துபோம். ஆனால் இந்தக் கொசுக்கிருமிகளை அழிப்பது எப்படி?

பண்டிதர்:—தண்ணீர் தொட்டியிலும், கிணற்றிலும், தடாகத்திலும் கொஞ்சம் கெரோசின் எண்ணெய் என்று சொல்லப்பட்ட மண் எண்ணெய் தெளிக்கவேண்டும்.

சமுசாரி:—அப்படித் தெளித்தால் என்ன நடக்கும்.

பண்டிதர்:—அமைதியான ஒரு தண்ணீர் தொட்டியிலிருக்கும் தண்ணீர்மேல் ஒரு துளி எண்ணெயை விட்டுப் பாரும்.

சமுசாரி:—பார்த்தால் என்ன?

பண்டிதர்:—அந்தத் துளி உடனே தண்ணீர் மேல் நாலாதிக்கிலும் படரும். பின்னும் சில துளிகள் விட்டால், அத்தொட்டித் தண்ணீரின் மேல்பரப்பு முழுவதையும் அந்த எண்ணெய் மூடிக்கொள்ளும். அப்படியே ஒரு பெரிய தடாகத்தில் உள்ள தண்ணீர்மேல் அரைப்டின் கெரோசின் எண்ணெயைப் பல இடங்களில் தெளித்தால், அந்த கெரோசின் எண்ணெய் அத்தடாகத்திலுள்ள தண்ணீரின் மேல்பரப்பு முழுவதையும் மூடிக்கொள்ளும். ஒரு பெரிய கிணற்றுத் தண்ணீரில் அரைப்புட்டி அல்லது அரைக்குப்பி மண்எண்ணெயைத் தெளித்தால், அது அக்கிணற்றிலுள்ள தண்ணீர் முழுவதையும் மூடிக்கொள்ளும்.

சமுசாரி:—தொட்டி, கிணறு, தடாகம் முதலியவற்றிலுள்ள தண்ணீர் மேல்பரப்பை இவ்விதமாய் மூடுவதினால் பலன் என்ன?

பண்டிதர்:—தண்ணீரின் மேல்மட்டத்தில் பாவியிருக்கும் சொற்பமான அந்த மண்எண்ணெய் தண்ணீருக்கும் வெளி ஆகாயத்துக்கும் இடையில் இருக்கிறது, அல்லவா? ஆகாயத்துக்கும் தண்ணீருக்கும் இடையில் ஒரு மெல்லிய திரையைப்போல் அந்த எண்ணெய் தண்ணீரின்மேல் மூடியிருக்கிறது. கொசுக்கிருமிகள் ஆகாயத்தில் மூச்செடுக்கவேண்டியது அவசியம். அதற்காக அந்தக் கிருமிகள் துள்ளித்துள்ளி நீந்திக் கொண்டு தண்ணீர் மேல்மட்டத்திற்கு வரும். மண்எண்ணெய் தண்ணீர்மேல் கொஞ்சமாவது இருந்தால், கொசுக்கிருமிகள் மூச்சுவிடமுடியாமல் மாண்டுபோகும். ஏனென்றால் மண்எண்ணெய் கொசுக்கிருமிகளின் சிறு சுவாசக்கருவிகளை காற்றுப்போகாமல் அடைத்துவிடும்.

சமுசாரி:—ஓ! ஓ! காரியம் தெரியவந்தது. கொசுக்கிருமிகள் மாண்டுபோனால் நமது சத்துருவாகிய கொசுச்சேனை குறைந்து போகும், அல்லவா?

பண்டிதர்:—அப்படித்தான். ஆனால் அவைகளை அடியோடே தொலைத்துவிடவேண்டும் என்றால், கெரோசின் எண்ணெயை வாரத்திற்கு ஒருமுறை சில வாரங்களாக இப்படியே தெளித்து வரவேண்டும். இப்படி விடாமுயற்சியாய் செய்துவருவோமானால் நமது சத்துருவை ஜெயித்துவிடலாம்

சமுசாரி:—இந்தக் கெரோசின் எண்ணெய் தண்ணீரைக் கெடுக்கமாட்டாதா?

பண்டிதர்:—கெடுக்காது. கெரோசின் எண்ணெய் நஞ்சு அல்ல. தண்ணீரில் உண்டாகும் அதின் நாற்றமும்கூட சிலநாள் கழித்தால் நின்றுபோகும்.

சமுசாரி—நல்லது, பண்டிதரே, என் வீட்டு வரையில் நீங்கள் சொன்னபடி செய்கிறேன். ஊராரும் அப்படியே செய்யவேண்டுமே?

பண்டிதர்:—சரிதான். இதைச் செய்வதற்கு ஊரரெல்லாரும் ஒன்றுசேர்ந்தால் நலமாயிருக்கும் என்று நினைக்கிறேன். ஊர் பஞ்சாயத்து, யூனியன், முனிசிபாலிட்டி உள்ள கிராமங்களில் இருக்கிற பொதுக்கிணறு, தடாகங்களில் இப்படி எண்ணெய் தெளிக்க லேசாய் ஏற்பாடு செய்யலாம். இவ்விதமாய் ஒருவனுடைய தலைமேல் அவ்வளவு செலவும் வந்துவிழாது. மேலும் இன்னொரு சங்கதியும் இருக்கிறது. அதாவது ஏக சமயத்தில் எல்லா நீர்நிலைகளிலும் கெரோசின் எண்ணெயை தெளித்துவிடப்படாது. அப்படிச் செய்தால், குடிக்கிற தண்ணீர் எல்லாம் நாறிப்போகும். ஆகையால் ஒருநாள் சில நீர்நிலைகளிலும் இன்னொருநாள் மற்ற நீர்நிலைகளிலும் அப்படித் தெளித்து வரலாம். இப்படிச் செய்துவந்தால் நாற்றமில்லாத தண்ணீர் எப்போதும் கிடைக்கக்கூடியதாய் இருக்கும்.

(இன்னும் வரும்).

அமெரிக்கன் மிஷன் லிருக்ஸ் பிரஸ், பசுமலை,—1930.

1412

REG. NO.—M. 2146

# THE Piramalai Reformer

## பிரமலை சீர்திருத்தன்.

3 DEC 1930

"முற்கோபி மதிகேட்டைச்செய்வான்; துர்ச்சிந்தனைக்காரன் வெறுக்கப்படுவான்".

Vol. X.] நவம்பர்மீ 1930 இலக்கம் 7.

## பஞ்சாங்கம்.

| 1930 | பிரமோதூதவூ ஐப்பசி 16 | | நவம்பர்மீ | | பிரமோதூதவூ கார்த்திகை 15 | 1930 |
|---|---|---|---|---|---|---|
| SUNDAY ஞாயிறு | MONDAY திங்கள் | TUESDAY செவ்வாய் | WEDNESDAY புதன் | THURSDAY வியாழன் | FRIDAY வெள்ளி | SATURDAY சனி |
| 30 15 | | | | | | 1 16 |
| 2 17 | 3 18 | 4 19 | 5 20 | 6 ○ 21 | 7 * 22 | 8 23 |
| 9 24 | 10 25 | 11 26 | 12 27 | 13 28 | 14 29 | 15 30 |
| 16 கார். 1 | 17 2 | 18 3 | 19 4 | 20 ● 5 | 21 6 | 22 7 |
| 23 8 | 24 9 | 25 10 | 26 11 | 27 12 | 28 13 | 29 14 |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager.*

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா-ள-ள-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

# COPY OF G.O. No. Ms. 1650/L. PUBLIC WORKS AND LABOUR DEPARTMENT.

*Dated 4th June 1930.*

Depressed classes-Kallars—Madura Ramnad and Tanjore—Christians and Non-christians, no distinction to be made in the matter of education facilities.

ORDER.

As special measures are being taken for the reclamation of the Kallars the Government direct that as in the case of Criminal Tribes in settlements no distinction should be made between Christians and Non-christians members of the community registered under the Criminal Tribes Act in the matter of the grant of educational concessions by the Labour Department.

## ஜி. ஓ. நிர். எம். எஸ். 1650-ல் பப்ளிக் ஒர்க்ஸ் அண்டு லேபர் டிபார்ட்மெண்டு.

4—6—1930.

ஆர்டர்.

பிரமலைக் கள்ளர்களுக்குச் சீர்திருத்தம் செய்வதற்குத் தக்க ஏற்பாடுகள் சர்க்காரால் செய்யப்பட்டு வருவதால், இதர செட்டில்மெண்டு ஸ்தலங்களிலுள்ள குற்றம் செய்யக்கூடிய வகுப்பினர்களைப்போல் கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்தவரல்லாதார்க்கும் லேபர் டிபார்ட்மெண்டால் அளிக்கப்பட்டுவரும் கல்விக்குரிய சாதன முறைகளில் யாதொரு வித்தியாசமில்லாமல் பாராட்டப்படவேண்டுமென்று சர்க்காரால் உத்தரவிடப்படுகிறது.

---

## ஆசீர்வாதமும், அன்பும்.

### ஒரு கதை.

(முன் தொடர்ச்சி).

ஆசீர்வாதமும், அன்பும் இப்போது தங்கள் புதிய ஓட்டு வீட்டைக் கட்டி முடித்துவிட்டார்கள். அது சுத்தமும், நல்ல காற்றோட்டமும் உள்ளதாயிருக்கிறது. கிணற்றோரம் தங்கள் சொந்த நிலத்தில் அதைக் கட்டியிருக்கிறார்கள். பசுமலைப் பையன்களின் உதவியால்தான் நாலு ஏக்கர் நிலத்தில் ஆயிரம் வண்டி காம்பை அடித்திருக்கிறது.

நல்ல வெள்ளாண்மை செய்வதற்கு மூன்று காரியங்கள் அதிக அவசியமானது. (1) உரம். ஆசீர்வாதம் தன்னுடைய நிலத்திற்கு போதுமான காம்பை அடித்துவிட்டார். அதோடு, தன் காளைகளுக்கும், இனி வாங்கப்போகும் மாடுகளுக்கும் ஒரு கொட்டம்போட்டார். இதற்குச் சமீபத்தில் 8 அடி நீளம், 8 அடி அகலம், 6 அடி ஆழத்தில் இரண்டு குழிகள் தோண்டினார். இந்தக்குழிகளுக்கு மேலாக வெயில் மறைக்கு கூரைபோட்டார். ஜனங்கள் பார்த்து சிரித்தார்கள். "உரத்துக்குக்கூடவா ஒரு வீடு கட்டவேண்டும், மனிதருக்கு குடியிருக்கத்தான் வீடுகட்டப் பார்த்திருக்கிறோம்" என்று நகைத்தார்கள். ஆனால் ஆசீர்வாதம் தன் நிலத்திற்குப் போதிய உரம் கிடைக்கும்படி எல்லாக்கூழம், குப்பைகளையும், காய்ந்த இலை முதலியவற்றையும் இந்தக் குழிகளில் போடுவார். 4, 5 மாதங்களில் ஒரு குழி நிரம்பின உடனே அதை மண்போட்டு மூடி மற்ற குழியில் போடுவார். முதற் குழியில் போட்ட உரம் 4, 5 மாதங்களில் நன்றாக மக்கினவுடனே அதை காட்டுக்குக்கொண்டுபோய் போடுவார்.

(2) நல்ல-உழவு. இது இரண்டாவது முக்கியமான விஷயம் ஆசீர்வாதம் நல்ல இரும்புக் கலப்பை ஒன்று 12 ரூபாய்க்கு வாங்கினார். அவரிடம் நல்ல பெலமான மாடுகளுண்டு. ஜூலைமீ 15உ நல்ல மழை பெய்ததினால் தன் நாலு ஏக்கர் நிலத்தையும் உழுதார். இந்த வேலைக்கு ஆறு நாள் சென்றது, வேலை முடிந்தபோது தன் நிலத்தில் களையாவது, அருகாவது ஒன்றுமேயில்லாமல் இரும்புக் கலப்பை அவைகளை பூமிக்குள் புறட்டிப் புதைத்துப்போட்டது. இது களைபெருக்கும் காலத்தில் அதிக இலேசாய்க்காணப்பட்டது.

(3) தண்ணீர். மூன்றாவது முக்கியமான காரியம் வருஷா வருஷம் சமுசாரிகள் நிலத்தை உழுது, உரம் போட்டு, விதைத்தும், கடைசியில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் தண்ணீர் இல்லாதபடியால் யாதொரு பிரயோஜனமும் அடையாமல்போவது ஆசீர்வாதத்திற்குத் தெரியும். ஆகையினால் ஆசீர்வாதம் 70 ரூபாய் செலவுசெய்து கிணற்றை ஆழமாய் வெட்டினதினால் வருஷம் முழுவதிலும், சில காலம் இரண்டு கமலைக்கும், சில காலம் ஒரு கமலைக்கும் வற்றாத தண்ணீர் இருந்துகொண்டேயிருந்தது. பிற்பாடு இரண்டு ஏக்கர் நிலத்தில் இருங்குச் சோளம் விதைத்தார். ஆனால் அவைகளை தோட்டத்தைப் போல பாத்திகட்டி விதைத்தார். ஏனென்றால் மழையில்லாமல் போகுங்காலத்தில் கிணற்றுத் தண்ணீர் பாய்ச்சுவதற்கு ஏதுவாயிருக்கும்படிக்குத்தான். இந்த விதமாக சரியான காலத்தில் மற்றவர்கள் விதைக்கிறதற்கு இரண்டு வாரத்திற்கு முன்னமேயே விதைத்துப்போட்டார். செப்டெம்பர்மீ மற்ற எல்லாப்பயிர்களும் மழையில்லாமல் வாடிப்போன சமயம், தன் சோளத்திற்கு இரண்முறை தண்ணீர் பாய்ச்சி, அக்டோபர்மீ மழைபெய்தபோது சோளம் நன்றாக வளர்ந்ததால், தன் அயலகத்தாரைக் காட்டிலும் இரண்டு பங்கு அதிகமாக லாபமடைந்தார். மற்ற இரண்டு ஏக்கர் நிலத்தில் தோட்ட வெள்ளாண்மை செய்தார். இது சாப்பாட்டுக்கு உதவினதோடு பணத்திற்கும் விற்கக்கூடியதாயிருந்தது.



தன் வீட்டிற்குப் பக்கத்தில் 4 எலுமிச்சமரங்களும், 4 கொய்யாமரங்களும், பப்பாளிமரங்களும் உண்டுபண்ணினார். அத்தோடு, சில கரைச்செடிகளும், பீர்க்கங்காய் செடிகளும், அவரைச் செடிகளும், பூசினிச்செடிகளும் போட்டார். தங்களுக்கு போதுமான காய்கறிகள் இருந்ததோடு, மீதத்தை விற்கவும் கூடியதாயிருந்தது. வீட்டுக் கழிவு தண்ணீர் இவைகளுக்கு உதவினது. இதற்கு யாதொரு செலவுமில்லை.

அக்டோபர்மீ நல்ல மழைபெய்தபோது போதுமான புல் இருந்தபடியால் ஒன்று 60 ரூபாயாக இரண்டு எருமை மாடுகள் வாங்கினார். இவைகளின் எரு காடுகளுக்கு உரமானதோடு, வாரந்தோறும் இரண்டு அல்லது 3 ரூபாய்க்கு நெய் விற்றுவந்தார். வீட்டிற்கு போதிய மோரும், தயிரும் இருந்தது.

தன் குடும்பத்திற்கு முட்டை வேண்டியிருந்தபடியால் பசுமலையில் 24 லெக்கார்ன் முட்டைகள் வாங்கி குஞ்சுகள் பிறக்கும்படி செய்தார். இவைகளில் 8 விடைகளை வைத்து வேறு இடத்திலிருந்து ஒரு சேவல் வாங்கி இவைகளோடு சேர்த்தார். நாள்தோறும் 3, 4, 5 முட்டைகளிட்டபடியால் அவைகள் சாப்பிட உதவின. இந்தக் குஞ்சுகளை வளர்ப்பதற்கு அதிகச் செலவுபிடிக்கவில்லை. ஏனென்றால், வீட்டில் மிச்சம் ஆகாரமும், தானியத்தவிடும், மிச்சம் தானியமும் போதுமானதாயிருந்தது.

இந்தவிதமாக அதிகம் காசு செலவுசெய்யாமலே தன் வீட்டிற்குப் போதிய முட்டை, மோர், காய் கறிகள் உண்டாக்கிக்கொண்டார். இவைகள் இவ்விதம் நடந்துகொண்டிருக்க நாலு ஏக்கர் நிலத்திலும் நல்ல வெள்ளாண்மை உண்டானது. பேதுரு 11 வயதாயிருந்தும் கமலை மாடு ஓட்டப் படித்துக்கொண்டான். கிரேஸ் என்ற பெண்ணுக்கு 9 வயது, அவளுக்குத் தண்ணீர் பாய்ச்சத் தெரியும். இந்தப் பிள்ளைகள் காலை இரண்டு மணிநேரமும், மாலை இரண்டு மணி நேரமும் வேலைசெய்வார்கள், மீதியான நேரங்களில் கவண்டன்பட்டிப் பள்ளிக்கூடத்திற்குப் போவார்கள். இவர்கள் தண்ணீர் இறைத்துப் பாய்ச்சகையில் ஆசீர்வாதம் வேறு காரியங்களைக் கவனிக்க நேரிருந்தது. வீடு கிணற்றுப் பக்கத்திலிருந்தபடியால் போகவர நேரம்பிடிக்கிறதில்லை. தோட்டத்திற்குச் சமீபத்தில் வீடு இருந்தபடியால் காவலுக்கும் பணச்செலவில்லை.

(இன்னும் வரும்.)

---

## அகில இந்திய பக்தி முயற்சி சங்கக் காரியதரிசியின் வரவேற்பு திருவிழா.

இந்தியாவின் முழுமைக்கும், கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கக் காரியதரிசியாகிய ரெவரெண்ட் அபேய் துரையும், அம்மாளும் ஜூன்மீ 24உ உசிலம்பட்டி பாஸ்ட்டரேட் தலைநகராகிய கவண்டன்பட்டிக்கு சாயந்தரம் $1\frac{1}{2}$ மணிக்கு விஜயஞ்செய்வதாக எங்கள் பாஸ்ட்டரேட் சேர்மன் அவர்கள், கிராமத்தின் பக்தி முயற்சி சங்கத் தலைவர்களும், உபாத்தியாயர்களுமாகிய எங்களுக்கு எடுத்துரைத்தார். அவ்வுரையைக்கேட்ட நாங்கள் எங்கள் பிள்ளைகளைச் சில பாட்டு அப்பியாசங்களில் பழக்கி அப்பியாசித்து ஜூன்மீ 24-ம்உ பக்தி முயற்சி சங்க வீரர்கள் தங்கள் தங்கள் குருக்களுடன், புகை ரதத்தில் வரக்கூடியவர்கள் புகைரதத்திலும், மாட்டுவண்டியில் வரக்கூடியவர்கள் மாட்டுவண்டியிலும், மோட்டார்களில் வரக்கூடியவர்கள் காரிலும் ஏறி குறிப்பிட்ட நேரத்திற்கு உசிலம்பட்டிக்கு வந்து மதிய ஆகாரத்தை உண்டு நான்கு திக்கிலிருந்து 'பல துளி, பெரு வெள்ளம்' போல் உசிலம்பட்டியின் கீழ் திசையில் அமைந்திருக்கும் கள்ளிக்கோட்டை ஓடு ஆபீஸ் முன்னிலையில் தங்கள் தங்கள் சி. ப. கொடிகளை வெவ்வேறுவித வடிவங்களுடனே காற்றில் பறக்க விட்டு வந்தார்கள்.

இப்படி வருவதைக்கண்ட ஜனங்கள் இவர்கள் கிராம பள்ளிப் பாலர்களா! இவ்வளவு சுத்தமாயும், சொகுசாயும் வருகிறார்கள் என்று ஆச்சரியத்துடன் நோக்கிப்பார்த்து நின்றார்கள். இவர்கள் தேன் எடுக்கச்சென்ற தேனீக்கள் போல் தேன் நாடாக குறிப்பிட்ட ஓடு அபீஸ் முன்னிலையில் வெகு ஆத்திரமாயும், முகமலர்ச்சியுடனும், வந்து சேர்ந்து, தேனீக்கள் கூட்டில் சேர்ந்ததும், சமாச்சாரம் விசாரிப்பதுபோல் ஊறும். அது போல அங்கு வந்த சிறுவர்கள் ஒருவரையொருவர், சந்தித்து தங்கள் பிரயாணத்தை அறிந்து கொண்டார்கள். பின்பு அந்த இடங்களில் கூட்டம் கூட்டமாக நின்று காரியதரிசியின் வரவை எதிர்பார்த்து, மழையில்லா பயிர்போலவும், தாயில்லா பிள்ளைபோலவும் காத்துக்கொண்டிருந்தார்கள். இச்சங்கத்தைப்பார்த்த ஊரார் ஆனந்தக்களிப்படைந்தார்கள். இதற்கு ஏற்றவாறு ஒரு காரும் காணுதலும், மலையை ஒத்ததுயான தம்புருவாத்தியங்கள், மேளவாத்தியங்கள், நாட்டுக்கொட்டும் அடித்து, சண்டைக்கு புறப்பட்டுபோகும் சேனைபோல் கொடிகளை (C. E.) பிடித்து கி. மு. சங்க காரியதரிசியை எதிர்கொண்டு அழைத்து செல்ல வெகு ஆவலாய் பெரியோரும், சிறியோரும் கீழ் நோக்கி இருந்தார்கள். துரையவர்கள் வரவும் ரோட்டின் இருமருங்கிலும் நான்கு நான்கு பேராக நின்று கொடிகளை பிடித்து வாத்தியங்கள் முன்னே செல்ல துரைக்கு பூமாலை சூட்டி குதூகலத்துடன் அழைத்து புறப்பட்டனர். புறப்படும்போது பையன்கள் வரிசையாக கி. மு. கொடிகளை கைகளில் ஏந்தியவண்ணமாக ஒரு புகைப்படம் பிடிக்கப்பட்டது. இக்கூட்டத்தோடு இன்னும் மற்ற ஜனங்களும் சேர்ந்தார்கள். ஏறக்குறைய $1\frac{1}{2}$ பர்லாங்கு தூரத்திற்கு ரோட்டில் கல் போட்டால் தரையில் விழாதபடி அவ்வளவு கூட்டமாக மகாயுத்தத்திற்கு கொடிபிடித்து சென்ற வீரர்கள்போல் பக்தி முயற்சி சங்க வீரர்கள் கொடிகளை ஏந்திச்சென்றார்கள்.

வெகு ஆரவாரத்துடன் சென்றதைக்கண்ட கடைக்காரர்களும் தங்கள் இருப்பிடம் விட்டும், இல்லங்களை விட்டும் வந்து வெகு ஆச்சரியத்துடன் சித்திரப்பதுமைபோல் நின்று பார்த்தார்கள். இதுவரைக்கும் இப்படிப்பட்ட கூட்டத்தையும், பள்ளிப் பாலர்களையும், வாத்தியங்களையும், அங்கு வசிப்பவர்கள் பார்த்ததில்லையென்றே புகா

வேண்டும். இச்சிறுவர்களைக்கண்ட கவண்டன்பட்டி உசிலம்பட்டி பஞ்சாயத்தின் தேவமார்கள் நம் ஜாதி சிறுவர்களை உற்சாகப்படுத்த எண்ணி அவர்களுடன் பவனியில் பங்கெடுத்து சேர்ந்து சென்றார்கள். நாலாதிசைகளுக்கும் செல்லுகிறவர்கள் கண்டு களிக்க பவனியை சில நிமிஷநேரங்களாக 5 வீதிக்கு நாணிடம் நிறுத்தினார்கள். அப்போது மும்முரசம் முழங்கினது. இச்சிறுவர்கள் இந்நிலைமைக்கு வரவும், இக்கூட்டத்திற்கு வரவும் காரணர்களாயிருந்த கர்த்தாக்கள், காருண்ய கவர்ன்மெண்டார், அமெரிக்கா சுதேச மிஷனெரிகளும் முதலிய உழைப்பாளிகளுமே. இது உசிலம்பட்டியைவிட்டு கவண்டன்பட்டிக்கு வந்தது. இதில் அவ்வூரிலுள்ள பாலருந்தும் பாலர்கள் முதல் வயோதிபர்வரை வந்தார்கள். கூட்டத்தின் துவக்கம் கவண்டன்பட்டியிலும், கடைசி உசிலம்பட்டியிலுமாக வெற்றிசேனைபோல் கொடிகளைப் பிடித்து வந்தது. இச்சமயம், புகைப்படம் பிடிக்கப்பட்டது.

பின்பு முக்கோணவடிவமாக நிறுத்தி புகைப்படம் பிடித்தார். பின்பு கம்பவுண்டில் அரும்பெரியோர்களால் அமைத்த அலங்காரக்கொட்டகையின் கீழ் அனைவோரும் அமர்ந்தார்கள். அச்சமயம் அரிய அப்பியாசம், ஆட்டம், பாட்டு, கூட்டம் தொடங்கினது. இக்கூட்டத்திற்கு உசிலம்பட்டியிலிருந்து உயர்ந்த உத்தியோகமுடைய மகான்களும், வந்திருந்தனர். ஒவ்வொரு பிரிவுகளும் பங்கெடுத்தனர். பிள்ளைகளுடைய ஆட்டங்களும், அப்பியாசங்களும், பாடல்களும் விஜயம் செய்த துரைக்கும், அம்மாளுக்கும் ஆச்சரியமாயும்; கேட்பவர்களுக்கும், பார்ப்பவர்களுக்கும் வெகு இன்பமாயுமிருந்தது. பின்பு துரையவர்கள் உபந்நியாசம் செய்தார். அது சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும், ஞானமாயும், பிரியமாயும் இருந்தது. இப்போது அதிக விரித்துரைக்காமல் ஒருவாறு கூறுகிறேன். அசுத்த குளத்தில் சேற்றினுள் கடவுளால் உயிர் கொடுக்கப்பட்ட தாமரைப்பூ மொட்டு அசுத்த இடத்திலிருந்து படிப்படியாக வளர்ந்து சேறு, தண்ணீரை விட்டு மேலே வந்து சூரியன் ஒளிபடவே அது மிக்க அழகாயும், வாசனையாயும், பார்ப்பவர்கள் கண்களை கவரத்தக்கதாயும், அந்த அசுத்த இடத்திலிருந்து தோன்றினது. சிலர் கெட்ட குடும்பம், கள்ள ஜாதி, நான் அனியாயம் செய்கிறவர்கள் மத்தியிலிருக்கிறேன், பொய் பேசுகிற குடும்பத்தான், இந்துக்கள் மத்தியிலிருக்கிறேன், கள்ளநாட்டில் வசிக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல. இச்சமயம் ஒரு யந்திரத்தினால் கொட்டகையின் கீழ் 790 பேர் என்று கணக்கெடுத்து அதின் படிப்பினையையும் கூறினார். கள்ள நாட்டில் வசிக்கிற உங்கள் மத்தியிலிருந்துகூட தாமரை மொட்டுகளை ஒத்த மொட்டுகள் உயிருடன் வளர்ந்து யாவரும் விரும்பத்தக்கதாக வருவீர்கள். இப்போது இங்கு வந்துயிருக்கிறீர்கள். வரவும் போகிறீர்கள். சில வருஷங்களுக்கு முன்னிருந்ததற்கும், இப்போது இருப்பதற்கும் வித்தியாசமிருக்கிறது என்றும், கடவுளுடைய கிருபையால் காருண்ய கவர்ன்மெண்டும், சுதேச உழைப்பாளிகளும், அன்னியதேச மிஷனெரிகளும், உங்களை எல்லா விஷயங்களிலும் முன்னேற்றி வருகிறார்கள் என்று கூறினார். இத்தோடு சிறுவர்களுக்கு ஏற்ற மதுவிலக்கு முதலிய அரிய காரியங்களை கூறி முடித்தார்.

முடிவில் கவண்டன்பட்டி மாணவர்கள் இனிய குரலோடு வந்தனோபசாரம் பாட்டுபாடி, வந்த அகில இந்திய கி. மு. சங்கக் காரியதரிசிக்கும், வந்தவர்களுக்கும், பூமாலையும், பூ மாரியும் பொழிந்ததோடு பாமாலையும் சூட்டி பின்பு இந்நாட்டின் உழைப்பாளிகளில் ஒருவராகிய கனம் டட்லி துரையவர்களையும், சிறுவர் சங்கத்தில் உழைத்த துரையவர்களையும் பாட்டினால் வாழ்த்தினார்கள். பின்பு கடவுளை பிரார்த்தித்து கூட்டம் முடிவு பெற்றது. பின்னேரத்தில் சந்தோஷமாக பல வாத்தியங்களுடன் ஊர்கோலம் வந்தார்கள். பள்ளிச் சிறுவர்கள் மாத்திரம் ஏறக்குறைய 450 பேர். அன்று வந்த சிறியோர் பெரியோர் எல்லாருக்கும் ஆகாரம் கொடுக்கப்பட்டது. மேற்படி அமெரிக்கா தேசத்திலிருந்து கனம் அநுகூலம் துரையவர்கள் அனுப்பிய கிராம்போனின் இனிய பாடல்களை கேட்டுக்கொண்டிட தூங்கினர். தேன் எடுக்கச் சென்ற ஈக்கள் சாயந்தரமானதும் தங்கள் இருப்பிடம் வெகு வேகமாய் திரும்பி வந்து சேருவதுபோல காலையில் மாணவர்கள் தங்கள் தங்கள் குருக்களுடன் இருப்பிடமேகினர். நம்முடைய நாடு, தேசம் நாகரீகத்திலும், ஒழுக்கத்திலும், கடவுள் பக்தியிலும், செல்வத்திலும் மென்மேலும் விர்த்தியாகி வரவேணுமென்று சம்பிரானை அனுதினமும் வேண்டிவருவோமாக.

D. James Mayandy, Teacher,
[illegible]uarkulam.

## சுகாதாரம்.

நமது சரீரமானது அதற்கு அவசியமான சாதனங்களைப்பெற்று, ஆரோக்கியமான நிலையில் இருப்பதற்கு சுத்தமான உணவு சிறந்தது என்பதைப்பற்றிக் கூறினோம். இப்பொழுது தொத்து நோய்கள் நம்மைப் பீடிக்காமல் இருப்பதற்கு வேண்டிய சுகாதார முறைகளைச் சற்று விவரிப்போம். சுகாதாரம் என்னும் சொல்லிற்கே, நாம் நோயில்லாமல் சுகமாக வாழ்வதற்கு ஆதாரமாக இருக்கும் முறைகள் என்று அர்த்தமாகும். நாம், அறியாமையால் சுகாதார முறைகளைச் சரியாகக் கையாளாமல், நம்மையும், நம்முடன் வசிக்கும் பிறரையும் வீணே நோய்களுக்கு உள்ளாக்குகிறோம்.

தொத்து வியாதிகள் நான்கு விதங்களில்பரவுகின்றன.
1. வியாதியஸ்தனிடம் இருந்து வேறொரு மூலமுமில்லாமல் மற்றவர்களைப் பீடிக்கும் தொத்துவியாதிகள்: இவைகள், வியாதியஸ்தன் அருகில் இருப்பதாலும், அவன் உபயோகித்த துணிகள், பாத்திரங்கள் இவைகளைச் சுத்தப்படுத்தாமல் பிறர் உபயோகிப்பதாலும் பரவுகின்றன. தட்டம்மை, சுக்குவான், இருமல், க்ஷயம், அம்மை முதலிய நோய்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவைகள்.

2. அநேக நோய்கள் நாம் குடிக்கும் நீர் மூலமாகவும், உணவின் மூலமாகவும் பரவுகின்றன. வாந்திபேதி, சீதபேதி, விஷஜுரம் முதலிய வியாதிகள் இந்த இனத்தைச் சேர்ந்தவைகள்.



3. சில மனிதர்கள் தங்கள் வியாதியால் பீடிக்கப்பட்ட சின்னங்கள் இல்லாமலே, தொத்து நோய்ப் பூச்சிகளைப் பரவும்படி செய்கிறார்கள். வாந்திபேதி, விஷஜுரம் 'டிப்திரியா' என்ற நோய் சில வேளைகளில் இவ்வாறு பரவுகின்றன.

4 பூச்சிகள் மூலமாய் விர்த்தி அடையும் தொத்து வியாதிகள், முறைக் காச்சல், ஆனைக்கால், 'பிளேக்கு' இவைகள் எல்லாம் பூச்சிகள் மூலமாய்ப் பரவுகின்றன. இவைகள் எவ்விதம் பூச்சிகள் மூலமாய்ப் பரவுகின்றன என்பதைப்பற்றியும், இதைத் தடுப்பதற்கு அவசியமான முறைகளைப்பற்றியும் கூறுவோம்.

பூச்சிகள் இரண்டு விதத்தில் தொத்து வியாதிக்குக் காரணமான விஷக் கிருமிகளைப் பரவும்படிச் செய்கின்றன. விஷக் கிருமிகள் இருக்கும் இடங்களில் உட்கார்ந்து, தங்கள் உடம்பில் அவைகள் ஒட்டிக்கொண்ட பிறகு, மற்ற இடங்களுக்குப் பறந்துசென்று அவைகளை விர்த்தியடையும்படி செய்கின்றன. வியாதியஸ்தனைக் கடித்து, அவன் இரத்தத்துடன் விஷக் கிருமிகளை உறிஞ்சி, பிறகு நோயில்லாதவனைக் கடித்து, அவன் இரத்தத்துடன் விஷக் கிருமிகள் கலக்குமாறு செய்கின்றன. ஆகையால், கொசு முதலிய இரத்தத்தை உறுஞ்சும் பூச்சிகள் இரத்தத்தில் இருக்கும் விஷக் கிருமிகள் ஒருவரிடமிருந்து மற்றவர்களிடம் பரவுவதற்கு முக்கிய ஏதுக்களாகயிருக்கின்றன. சில விஷக்கிருமிகள் தங்களை உறிஞ்சின பூச்சிகளின் உடலில் சில மாறுதல்களை அடைந்த பிறகே, ஆரோக்கிய நிலையில் இருப்பவர்களுக்கு நோய்களை அளிக்கும் சக்தியைப் பெறுகின்றன. கொசுக்களின் மூலமாக, முறைஜுரம், ஆனைக்கால், முட்டு முடக்கி ஜுரம் முதலிய வியாதிகள் விர்த்தியடைகின்றன. 'பிளேக்', தெள்ளுப் பூச்சி மூலமாகவும், 'டைபஸ்' 'ரிலாப்ஸிங்' ஜுரம், இவைகள் பேன்களின் ஒத்தாசையாலும், விஷஜுரம், வாந்திபேதி முதலிய நோய்கள் சாதாரண ஈக்களின் மூலமாகவும், மூன்று நாள் ஜுரம், ஐந்து நாள் ஜுரம் முதலிய ஜுரங்கள் மற்றொருவித ஈக்களின் மூலமாகவும் பரவுவதாக மேல்நாட்டு வைத்திய நிபுணர்கள் ஆராய்ச்சிசெய்து கூறுகிறார்கள்.

கொசுக்கள் சாதாரணமாகப் பகல் வேளைகளில் வெளிக்கிளம்புவது இல்லை. செடிகளிலும், புதருகளிலும், மாட்டுக் கொட்டில் குதிரை லாயம் முதலிய இடங்களிலும், நல்ல காற்றில்லாத இருட்டு மூலைகளிலும் இவை பகல் முழுவதும் தங்கியிருந்து, இரவு வேளைகளில் வேட்டைக்குப் புறப்படும். இதில் ஒரு விசேஷம் உளது. ஆண் கொசுக்கள் வியாதிகளைப் பரவச் செய்வதில்லை; இவைகள் சாதாரணமாக தாவரங்களின் ரசங்களைக் குடித்தே ஜீவிக்கின்றன. பெண் கொசுக்கள் தான் இரத்தத்தை உறிஞ்சி ஜீவிக்கும் குணத்தையுடையன.

இந்தக் கொசுக்களை வைத்தியர்கள் மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். இவைகளில் 'ஆனோபிலெஸ்' என்ற ஜாதிக் கொசு 'மலேரியா' என்ற முறைஜுரத்தையும், 'க்யூலெக்ஸ்' என்னும் கொசு ஆனைக்காலையும், 'ஸ்டிகோமியா' என்றது முட்டு முடக்கி ஜுரம், மஞ்சள் ஜுரம், இவைகளையும் பரவச்செய்கின்றன. ஒரு ஆனோபிலெஸ் பெண் கொசுவானது, முறைஜுரத்தால் பீடிக்கப்பட்டிருக்கும் ஒருவனைக்கடித்து அவன் இரத்தத்தை உறிஞ்சுகிறது. இந்த இரத்தத்துடன் முறைக்காய்ச்சலை விளைவிக்கும் விஷக் கிருமிகளையும் அது சேர்த்து உறிஞ்சிவிடுகிறது. இந்தப் பூச்சிகள் கொசுவின் வயிற்றில் சில காலம்தங்கி, அங்கு சில மாறுபாடுகளை அடைந்து மறுபடி கொசுவின் வாயின் அருகில்வந்து, அது மனிதனைக் கடிக்கும். அப்பொழுது அவன் இரத்தத்துடன் கலந்து, அங்கு விர்த்தியடைந்து ஜுரத்தை விளைவிக்கின்றன. இந்த விஷக்கிருமிகள் கொசுவின் வயிற்றில் சிலகாலம் தங்கி மாறுபாடு அடைவதாலேயே, நோயற்ற மனிதனுக்கு வியாதியை விளைக்கும் சக்தியைப் பெறுகின்றன. இந்த முறைக் காய்ச்சலால், நம் தேசத்தில் வருஷா வருஷம் அநேகர் தங்கள் உயிரையே இழக்கிறார்கள். மற்றவர்கள் வாழ்நாள் முழுவதும் வலிவு குன்றி, ஜீவித்திருப்பதிலேயே ஆசை அற்று நோயாளிகளாகத் தங்கள் காலத்தைக் கழிக்கிறார்கள். ஆனைக்கால் வியாதியால் கஷ்டப்படுபவர்களின் துன்பங்களைப்பற்றிக் கூறவேண்டியதே இல்லை.

இவ்வியாதிகளைக் கொசுக்கள் பரவச்செய்யாமல் இருப்பதற்கு நாம் என்ன தடுப்பு முறைகளை அனுசரிக்க வேண்டும்? கொசுக்கள் தண்ணீர் தங்கி இருக்கும் இடங்களிலேயே விர்த்தி அடைகின்றன. தண்ணீரின்மேல் இவைகள் முட்டை இடுகின்றன. ஆகையால், முதலாவதாக, தண்ணீரை வீட்டு அருகில் தேங்கிநிற்க விடக்கூடாது.

கொசுக்கள் நம்மை கடிக்காவண்ணம் கொசு வலைக்குள் தூங்குவதே நலம். கந்தகம், வேப்பிலை, சாம்பிராணி இவைகளைப் புகைப்பதால் கொசுக்களை நசிக்கச் செய்யலாம். சிலர் கற்பூரத் தைலம், சுக்குநாரிப்புல் தைலம் எலுமிச்சைத் தைலம், இவைகளைக் கொசுக்கள் சாதாரணமாகக் கடிக்கக்கூடிய கை, கால், முகம் முதலிய இடங்களில் பூசிக்கொள்ளுகிறார்கள். மண் எண்ணெயைப் படுக்கை அறையில் தெளிப்பதால் கொசுக்கள் வருவதில்லை என்று கூறுகிறார்கள். இவைகள் எல்லாம் அவ்வளவு நிச்சயமான தடைகளாகக் கூறுவதற்கில்லை. முதலாவதாகத் தண்ணீர் தேங்கி இருக்கும் இடங்களைத் தூர்த்தும், கிணறுகள், குளங்கள் முதலிய இடங்களைச் சுத்தம் செய்தும், கொசுவின் முட்டைகளைக் கொல்லக்கூடிய மருந்துகளை தண்ணீரில் கலந்தும், கொசுக்கள் விர்த்தி அடையாமல் செய்யவேண்டும். இதன் பொருட்டு சுகாதார அதிகாரிகள் எவ்வளவோ பாடுபட்டு வருகிறார்கள். பொது ஜனங்களும் தங்களாலானவரை ஒத்தாசை செய்தால் நலமாக இருக்கும். இரண்டாவதாக வீடுகளையும, சுற்றுப்பட்ட லாயம் முதலிய இடங்களையும், காற்றோட்டமுள்ள ஸ்தலங்களாக அமைத்து சுத்தமாக வைக்கவேண்டும். மூன்றாவதாக, கொசுக்கள் தூங்கும்பொழுது நம்மைக் கடியாவண்ணம் கொசுவலைகளை உபயோகிக்கவேண்டும். கொசுக்களின் கடியால் விளையும் வியாதிகளைப்பற்றிச் சொன்னோம். இனி சாதாரண ஈக்களால் விளையும் தீங்குகளைப்பற்றிக் கூறுவோம்.

(சுதேசமித்திரன்.

## மனதைச் சிதறவொட்டாமல் நிலைக்கச் செய்யுமுறை.

நாம் மனோவிருத்தியடைய வேண்டுமானால் மனதைச் சிதறவிடாமல், கற்கிற விஷயத்தில் அதை நிலைநிறுத்துகிறது அவசியம்; இப்படிச் செய்வதற்கான வயணங்களைத் தெரிந்துகொண்டு அவைகளில் பழகி வரவேண்டும். சத்தியத்தை விளங்கப்பண்ணும் திருஷ்டாந்தம் நமக்கு உடனே தோன்றமாட்டாது. அதைப் பலவிசை கவனித்து வருகிறதினால் திருஷ்டாந்தபடும்; இப்படிச் செய்யாமல் அதைப்பற்றி உடனே தீர்மானிக்கிறதினால் நாம் அநேக தப்பெண்ணங்களுக்கு உட்படுகிறோம்; சிலவேளை காரியங்களைக் கண்ட மாத்திரத்திலே ஆத்திரப்பட்டுத் தீர்மானிக்கிறோம்; சிலவேளை மேலெழுந்த வாரியாய் உத்தேசித்து நிச்சயிக்கிறோம். ஒருவன் மாசுக்குள் மறைபட்டுத் தோன்றுகிற மிருகம், விருக்ஷம் முதலிய பொருளைக்கண்டு, ஒன்றையொன்றாக நிதானித்துக்கொண்டு மாசு நீங்கின பிற்பாடு, அவன் சரியாய் அறிகிறதுபோல, காரியம் தெளிவில்லாமல் சிக்குப்பிக்காயிருக்கும்போது, நாம் மாறுட்டமாய் எண்ணி, அதைத்தீர்க்கமாய் ஆராய்ந்த பிற்பாடு, செவ்வையாயும், ஒழுங்காயும் கிரகித்துக்கொள்ளுவோம்.

## மனதை ஒருவழிப்படுத்தும்படிக்கான விதிகள்.

படிக்கிற படிப்பிலும், கற்றுக்கொள்ளுகிற மற்ற அறிவிலும் பிரியமுங் கரிசனமும் கொள்ளவேண்டும்; அறிந்துகொள்ளவேண்டுமென்று நாம் ஆசைப்படுகிற காரியங்களைச் சிந்திக்கிறது வருத்தமாய்த் தோன்றமாட்டாது; பொருள்களை ஆராய்ந்துபார்க்கவும் அவைகளுக்குரிய பலவகையான தன்மைகளையும், அளவிட்டறியவுந்தக்க நல்ல விருப்பத்தையும், நிர்ணயத்தையும் மனதார அடைந்தவர்களாயிருக்கவேணும்; நம்முடைய படிப்பிலாவது அவைகளைப்பற்றி தியானிக்கிறதிலாவது, நாம் பிரியமும், சந்தோஷமும் வைப்போமானால், நம்முடைய மனம் அதில் அதிக லெகுவாய்ச் செல்லும்; ஆகையினால் எண் சாஸ்திரத்துக்கடுத்த நூல்களில், நம்முடைய கண்ணுக்குத் தோன்றுகிற ரேகையும், சக்கர முதலாகிய அட்சரங்களும் இருக்கிறபடியால் நம்முடைய மனதை அவைகளில் அமைக்கவும், பல இடங்களிலும் செல்லவிடாமல் ஒரு நிலைப்படுத்தவும், தக்கவைகளாயிருக்கின்றன; இப்படியே சரித்திரங்களும், அவைகளிலடங்கிய நானுவகையான சங்கதிகளைக்கொண்டு மனதை வசப்படுத்துகின்றன. ஒரு சரித்திரத்தை வாசிக்க ஆரம்பித்தபின் அதை விட்டுவிட மனம் வராது. ஏனென்றால், சங்கதியின் முடிவு இன்னதென்று அறிய மனம் நாடிக்கொண்டேயிருக்கிறது. பிரயாண விருத்தாந்தங்களையும், கப்பல் யாத்திரைகளின் விசேஷங்களையும், நூதனமாய்க்கண்ட தேசங்களினுடைய விவரங்களையும், விநோதமான காட்சிகளையும் பற்றிய நூல்கள், மனஞ்செலுத்தும்படி செய்யும்.

பஞ்ச புலன்களுக்கல்லாமல் மனதுக்கு மாத்திரம் தோன்றக்கூடிய காரியங்களில் புலன்களுக்குத் தோற்றக்கூடிய ஸ்தூலபாவனையான குறிப்புகளைக் கொண்டு மனதை நிலைநிறுத்தலாம். இப்படியே வான சாஸ்திரங்களிலும், தத்துவ நூல்களிலுமுள்ள விஷயங்களை லெகுவாய் அறிந்துகொள்ளும்படிக்கு இயந்திர அடையாளங்களைக் கொண்டு திருஷ்டாந்தப்படுத்தியிருக்கின்றன. சிறு பிள்ளைகளுக்கு பாவ புண்ணியங்களைக் குறித்து மிகுந்த வருத்தப்பட்டு விஸ்தரித்துச் சொல்லுகிறதைவிட அவைகளைக்காட்டும், பட முதலிய சித்திர அடையாளங்களினால் அந்தக் கருத்துக்கள் அதிக லெகுவாய் மனதிற்படும்படி விளையாட்டுப்போல அவைகளை அவர்களுக்கு உணர்த்தலாம். நல்வினை தீவினையாகிய விஷயங்களை இப்படிப்பட்ட சித்திரங்கள் வழியாய்க்காட்டும்போது அவைகளை ஸ்தூலபாவனைகளாக நினையாமல் மனதால்மாத்திரம் உணரத்தக்க காரியங்களென்று எண்ணும்படி அவர்களை எச்சரிக்கவேண்டும். சிறு பிள்ளைகளுக்கு மனஞ்செலுத்தும் பழக்கத்தை உண்டாக்குகிறதற்கு முதல்முதல் மாத்திரம் இப்படி அனுசரிக்கவேண்டுமேயல்லாமல், அந்தகாரணங்களுக்கும், ஆவிக்குமடுத்த எல்லாக் காரியங்களிலும் எப்போதும் இந்த விதியை அனுசரிக்கப்படாது.

விஷயங்கள் தொடர்பானவைகளாயும் ஒன்றுக்கொன்று முன் பின் ஒத்திணங்கியவைகளாயுமிருக்கிற நூல்களைப் படிக்கவேண்டும். எண்சாஸ்திரம், நீட்டலளவைச் சாஸ்திர முதலிய நூல்களும் இந்தப்பிரகாரமாகவே இருக்கின்றன. இவைகளைப் படிக்கும்படி பிரயாசப்படுகிறதினாலே மனதுக்கு மிகுந்த சந்தோஷம் பிறக்கிறதுமன்றி, நம்முடைய மனோதத்துவங்கள் நன்றாய்க் கவனிக்கும்படிக்கேற்ற பழக்கமும் அவைகளுக்கு உண்டாகும்.

நம்முடைய மனதைச் சிதறடிக்கத்தக்க வேடிக்கையுள்ள இடங்களில் நாம் வழக்கமாய்ப் படிக்கக்கூடாது. ஏனென்றால் நாம் ஒரு காரியத்தைக் குறித்து ஆலோசித்துக்கொண்டிருக்கும்பொழுது கண்ணால் பார்க்கத்தக்கவைகளும், காதால் கேட்கத்தக்கவைகளுமான காரியங்கள் தோன்றுமேயானால் அவைகள் நம்முடைய மனதை யோசிக்க ஒட்டாமல் தடைசெய்யும். ஒருவன் ஆடல் பாடல் கொட்டுமுழக்கு முதலிய பலவித வேடிக்கைகள் நடக்கும் இடத்திற்குச் சமீபமான வீட்டில் படித்து வந்தான். தான் படிக்கும்போதெல்லாம், கண்ட கண்ட வேடிக்கைகளில் பார்வை இருந்ததினால், ஏழு வருஷத்துக்குப் பிறகும், படிப்பில் மனஞ்செலுத்தும் பழக்கத்தை அடையாமலும், படித்த படிப்பிலுங்கூட ஒன்றும் தெரியாமலும் போனான்.

மிகவும் முக்கியமானதாயிருக்கிற அருமையான விஷயத்தை அதிக ஆத்திரப்பட்டுத் தீர்மானிக்கப்படாது. அதின் உண்மையைச் சாவகாசமாய் ஆலோசித்தறியவேண்டும். ஒருவன் ஒரு காரியத்தைப் படிக்கிறதற்கு மிகவும் வருத்தமாயிருக்கிறதென்றும், அதை அறிய வெகு காலம் செல்லும் என்றும், எண்ணித் தீர்க்கமாய் ஆராயாமல் உடனே ஒரு தீர்மானஞ்செய்து தான் அறிந்தவனாகக் காட்டுகிறதைப் பார்க்கிலும் அதில் மனஞ்செலுத்தி ஆராய்ந்து கண்டுபிடிக்குமட்டும், அந்தக் காரியத்தில் ஒன்றுந்தெரியாதவனாகவும், சந்தேகப்பட்டவனாகவும் காணப்படுவது நல்லது. சிலபேர் அந்தந்த விஷயங்களைப்பற்றிய காரியங்களையெல்லாம் ஒரேவிசையில் அறிந்துகொள்ளவேண்டுமென்று விரும்பி அவைகளை அறியாமலும் அவைகளைப் பரிஷ்காரமாய் பலமுறையும் தீர ஆராய்ந்து பார்க்கும்படி கொஞ்சமுங்கவனியாமலும் இருந்தாலும், அவைகளைப் பற்றித் துணிகரமாயும் வீண் எடுப்பாயும் பேசுகிறார்கள்.

சிற்றின்ப ஆசைக்கும் பெருந்தீனி முதலியவற்றிற்கும் நாம் இடங்கொடுக்கப்படாது; அவைகள் நம்மைப் படிப்பில் மனம் ஊன்றி வைக்கவொட்டாமல் செய்கிற சத்துருக்களாயிருக்கின்றன. சத்தியத்தை ஆராயும்படிக்கும், அறிவை விருத்தி செய்யும்படிக்கும் முயற்சிக்கிற காலத்தில் சரீர இச்சைகளில் அதிகமாய் மன்று வைக்கப்படாது; ஒருவன் குரோதம், மோகம், அச்சம், துக்கமுதலியவைகளுக்கு இடங்கொடுத்து நடக்கிறவனாயிருப்பானால் தான் சிந்திக்கவேண்டிய காரியத்தில் தன் மனதைச் சரியாய்ச் செலுத்தமாட்டான். அப்படிப்பட்ட குணங்களையுடையவாகள் தாங்கள் படிக்கிற காரியத்தில் மனதை நிலைக்கச் செய்யாமல் அந்தந்த விஷயத்திலே சிதறிப்போக விடுவார்கள். இவைகளுக்கு இடங்கொடுத்து வருவோமானால் கவனியாதவர்களும் நிலைவரமில்லாத மனமுடைவர்களுமாகப் பழகிப்போவோம்.

சத்தியத்தினாலும், அறிவினாலும் வருகிற தெய்வீக சந்தோஷங்கள் படிப்பினால் உண்டாகுமென்று யோசிக்கிறதும், பராபரனுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளை அதினால் நிறைவேற்றுகிறோமென்று உணர்ந்துகொள்ளுகிறதும் அதனால் நமக்கும் பிறருக்கும் இம்மையிலும் மறுமையிலும் மேலான நன்மைகள் உண்டாகுமென்று நம்புகிறதும், எவ்விதமான படிப்பிலும் மனஞ்செலுத்தும்படி நம்மை ஏவும்; இப்படிப்பட்ட எண்ணங்கள் நம்மை அதிகக் கரிசனையுள்ளவர்களாக்குகிறதுமன்றி, நாம் சிந்திக்கவேண்டிய காரியங்களைக் கூர்ந்து கவனிக்கும்படியாகவும் செய்யும் சத்தியத்தை அறியவேண்டும் என்கிற ஆசையும் மேலான மோக்ஷ இன்பத்திலே அவாவும் நமக்கிருக்குமானால் அவைகளை அடைந்துகொள்வதற்கான நம்முடைய அந்தகரணங்களை எல்லாம் சிதறவிடாதபடி செய்வோம்.

(Tamil Quarterly.)

---

## வேலை செய்கின்றவர்களுக்கு மதுபானம் தேவையா?

தற்காலம் நமது நாட்டிலே மதுபானக்குடி நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகின்றது. குடி குடிக்கும் நம் சகோதரர்களை குடியினால் நன்மையுண்டாவென்று வினவினால் அவர்கள் அதற்குப் பல காரணங்கள் நயம்படக் கூறுகின்றனர். அவர்கள் உரைக்கும் விடைகளைக்கூர்ந்து நோக்கினால், அவர்களின் அறியாமையைத் தெள்ளிதின் விளக்கிக்காட்டுகிறது. பலர் பற்பல விதங்கள் கூறினும் நம் நாட்டில் தொழில்புரிந்து ஜீவிக்கும் தொழிலாளிகள் செய்யும் விதத்தை உற்றுநோக்குங்கால் நம்மனம் புண்படச் செய்கிறது. என்னவெனில், வேலை செய்துவிட்டு களைப்புற்றிருக்குங் காலத்து மதுபானம் உண்டால் உடல்வலியும் களைப்பும் நீங்குமென்று கருதி, கடை முறையில் கையாண்டு வருகின்றனர். அந்தோ! இவர்களின் அறியாமையை எண்ணுங்கால், நமக்கு நகைப்பும், ஒருபுறம் துயரமும், ஏற்படுகிறது. ஆனால் நாம் சகோதரர்கட்கு ஒன்று கூற விரும்புகிறோம். மதுபானம் உண்பதால் மனிதனுடைய உடல்வலியோ, களைப்போ மாறுமென நினைப்பது முற்றுந்தவறு. அன்றியும் மதுவை உட்கொள்ள உட்கொள்ள மனிதனுடைய இரத்தத்தைக் கெடுக்கிறது. தவிர நரம்புகளெல்லாம் தளர்ந்து விடுகின்றன. இன்னும் உடலிலுள்ள மற்ற கருவிகளையெல்லாம் கெடுத்து, அறியாமை, சோம்பல், அஜீரணம், பைத்தியம், தரித்திரம், நோய், உடல்வலி, ஊக்கங்குறைதல், நெறிதவறுதல், பிறர்மனைபுகுதல், திருடுசெய்தல், இழிவடைதல், சிறைக்கூடம்செல்லுதல், மனைவிமக்கள் பந்துக்களை அறவேவெறுத்தல்பிறரால்,நையப்புடைக்கப்படுதல், சான்றோரால் ஒதுக்கப்படுதல். முதலான மேலே கூறப்படுகின்றயாவும் அவர்களைப்பிடித்து நசுக்குண்டு கிடப்பார்களேயொழிய, எவ்வாற்றாலும் முன்னேற்றமடையமுடியாதென்பது, நம் குடிகார சகோதரர்கட்கு நினைப்பூட்டுகின்றேன்.

இப்படியிருக்க உழைப்பாளிகளுக்கு மது எவ்வகையில் உதவிபுரிய முடியும். மனிதனுடைய இரத்தமும், நரம்புகளும் கெடும்போது, எப்படி இவர்கள் திடகாத்திரத்துடன் நின்று வேலைசெய்ய இயலும். களைப்பைக்கருதி, கள்ளோ, சாராயமோ, அருந்துமிடத்து மேலும் மேலும், களைப்பும், தேகவலியும்கொண்டு நோய் தொடர்ந்து நாளுக்கு நாளாய் நோய் முற்றி, கட்டிலின் மூலையில் போய் படுத்து, பெண் சாதி பிள்ளைகளைப் பட்டினி கிடக்கச் செய்யுமென்பதை மதுக்குடிக்கும் சகோதரர்கட்குத் தாராளமாக நினைப்பூட்டுகின்றேன்.

இத்தனையங்கங்கொண்ட சென்ற மாதக்கட்டுரையில் மதுவால் விளையும் உடற்கேடும் மானக்கேடும் என்பது பற்றிச் சிறிது வரைந்தேன். அவற்றில் எஞ்சியுள்ளதை இப்பொழுது கீழே தருகின்றேன்.

நமது நாட்டில் மதுபானம் நாளுக்கு நாள் பெருகிவரும் விஷயத்தை உணரவேண்டுமாயின் சர்க்காரால் வருமான வருடாந்திர அறிக்கையிலிருந்து தெள்ளிதின் உணர்ந்துகொள்ளலாம். கேவலம், தினமொன்றுக்கு 0-1-9 பைசா சராசரி சம்பாதிக்கும் ஏழைக் குடிமக்கள் நிரம்பிய இவ்விந்திய நாட்டில் வாழ்கின்ற வீட்டில் சனியன் நுழைந்தால் போல் இம்மதுபானமென்னும் கொடிய அரக்கன் ஏழை மக்களை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வாட்டி வருகின்றானே. என்ன அநியாயம், என்ன கொடுமை ஆனால் இவ்வரக்கனைத் துரத்தவேண்டுமாயின் பகுத்தறிவென்னும் வாளால் வெட்டித் துரத்த இயலுமேயன்றி எளிதாகமுடியாது.

ஆனால் இம்மதுவை உண்ணும் பலர் உடல் வளர்ச்சிக்கே உரியதெனக்கருதி, அருந்தி அல்லலுறுகின்றனர். அந்தோ! பரிதாபம், இராணுவத்தளகர்த்தா இதனைத் தெளிவாய் ஆராய்ச்சி செய்யவேண்டி, தனது இராணுவப்படையிலுள்ள வீரர்களை மூவகையாகப் பிரித்து, ஒரு பிரிவினருக்குச் சாப்பாட்டுடன் கொஞ்சம் பீரும், மற்றொரு பிரிவினருக்கு சாப்பாட்டுடன் கொஞ்சம் பிராந்தியும், மூன்றாவது பிரிவினருக்குத் தனிச்சாப்பாடு மட்

டும் உதவிவந்தார். இவ்வாறு நீண்டநாள் முறையே நடைபெற்றபின் ஒரு சமயத்தில் இம்மூவித வீரர்களும் போர் முனைக்குச் செல்லவேண்டியதாய்விட்டது. அப்படிப் போகும் காலத்தில் மற்றெவ்வித வாகனங்களிலும் ஏறிச்செல்ல மார்க்கமில்லாததால் எல்லோரும் பாதசாரிகளாகப்போக நேர்ந்துவிட்டது. அவ்விதம் போகுங்கால் சாப்பாட்டுடன் பிராந்தி அருந்திய வீரர்கள் விரைவாகவும், சற்று உற்சாகமாகவும், நடந்துசென்றனராம். அவ்விதம் சென்ற பிராந்தி வீரர்கள் நாளடைவில் கைகால்கள் தளர்ந்து, பின்னணிக்கு வந்துவிட்டார்களாம். அப்பால் சாப்பாட்டுடன் பீர் பருகிய வீரர்கள் ஊக்கத்தோடும், தளரா உற்சாகத்தோடும், விரைவுடன் நடந்து சென்றனராம். அவர்களும் நாளடைவில் உடற்றளர்ச்சியுற்றும் சோம்பலும் மேல்கொண்டு வந்து சேர்ந்தார்களாம்.

பின்னர் தனிச்சாப்பாடுமட்டும் கொண்ட வீரர்கள் மேற்சொன்ன இருபகுதியினரைவிட முன்னணியில்சென்று அங்குபோர்களத்தில், அர்ச்சுனன் எப்படித்தன்னோடு எதிர்த்த சத்துராதிகளோடு புறமுதுகு காட்டாமல் போர் புரிந்தானோ, அதே போன்று போர் செய்தார்களென்று, இராணுவத்தலைவர்கள் பரீட்சித்துப் பார்த்து வெளியிட்டுள்ளார். ஆகையால் நமக்கு இதைவிட நற்சாக்ஷியொன்று வேறு வேண்டுமோ? அன்பர்களே! மதுகுடிக்கும் நண்பர்களே அறிமின்; உணர்மின்.

நா. சங்கரையர்,
குன்னத்தூர்.

---

## வர்த்தமானங்கள்

### I. சீவப்பட்ட மூளை

ஒருவனுக்குப் புத்திவன்மை குறையாமலிருப்பதற்கு மூளையின் நடுப்பாகமும், இடது பாரிசமும் சொஸ்தமாயிருந்தால் போதுமென்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். புண் கட்டிகளை அரிந்துபோடவேண்டி, மூளையின் பாதிக்கு மேலான பாகத்தைத் தாம் கத்தரித்து எடுத்துவிட்டதாகவும் அதினால் புத்திவன்மை கொஞ்சங்கூடக் குறையவில்லை என்பதாகவும் அமெரிக்கா தேசத்து வைத்தியர் ஒருவர் கூறுகிறார்.

### ஆன்டிபோடிஸ் தீவிலே அகப்பட்டிருக்கிற ரேடிய மலை.

200 அடி உயரமுள்ள ரேடிய மலையொன்று அகப்பட்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. ரேடியம் ஆக்ஸைடு சுமந்திருப்பதாகவும் ஆப்பிரிக்காவிலேயே கடாங்கோ பிரதேசத்து ரேடியத்தைக் காட்டிலும், மகா சிறந்ததெனக் கண்டுபிடித்து கூறுகிறார். ஒளி வீசும் சக்தியானது, இராக்காலங்களில் இம்மலையிலிருந்து கதிர்கள் ஜொலிக்கச் செய்கிறபடியால் இம்மலைப் பிரதேசத்திலுள்ள ஜனங்கள் இதைப்பேய்மலை என்கிறார்கள். ஆகிரியக்கல் கலந்திருப்பதால் கதிர்கள் ஒரு தீங்கும் செய்வதில்லை. அவதிப்படுகிற கோடி மனிதர்களுக்கு சொஸ்தத்தைத்தர இந்த மலை எவ்வளவு உபகாரமானது.

### விதைகளுக்கு ஆயுசு எவ்வளவு.

விதைகளின் ஜீவ சக்தி பலவிதமாயிருக்கிறது. வில்லோ ஜாதியைச்சேர்ந்த சில விதைகள் சில நாட்களுக்குள் அழிகின்றன. ஆனால் இந்திய தாமரை விதைகளுக்கு ஆயுசு அதிகமாயிருக்கிறது. 200 வருஷம் களிமண்ணிலே புதைந்துகிடந்த தாமரை விதையானது கொஞ்சம் அக்கினி திராவகம்கொண்டு மேல்தோலை மெதுவாக்கினவுடன் வளர்ந்தொடங்கினதாகத் தெரிகிறது. 1902-ம் வருஷத்தில் பல ஜாதி விதைகளின் ஜீவ சக்தியைக் கண்டறிய ஒரு பரீட்சை நடந்தது. 107 வகையான செடிகளின் விதைகளைப் பூமியிலே வித்தியாசமான ஆழங்களில் 20 வருஷம் புதைத்துவைத்தெடுத்ததில் 107 விதைகளிலும் முளைவிட்டன. ஐரோனியம் விதைகள் 50 வருஷம் வாழ்கின்றன. ஆனால் ஆயிரக்கணக்கான வருஷங்கள் வாழ்கின்ற விதைகள் இல்லவே இல்லை. ஆதலால், புதைக்கப்பட்ட கோதுமைக் கதை வெறும் பொய்.

### ஈக்களுக்கு மஞ்சள்நிறம் பிடியாதிருந்தல்.

இங்கிலாந்தின் வடபாகத்திலுள்ள ஒரு ஜாம்பாக்டெரி பழங்களை அழியாதபடி செய்யுமிடத்திலிருந்து ஒரு அருமையான சமாச்சாரம் வந்திருக்கிறது. ஜாமுடைய நிறம் மங்கிப்போகாதபடி மஞ்சள் கண்ணாடிபோட்ட சன்னல்களுடைய ஜாம் கிடங்கில் ஈக்கள் நுழையாததை பலமுறை கவனித்தார்கள். ஈக்களுக்கு மஞ்சள் நிறம் பிடிக்கவில்லை. இதற்குச் சரியானபதிலைச் சொல்லமுடியாதானாலும், ஒருவிதமாக ஊகிக்கலாம். சில பூச்சிகள் வெள்ளை நிறத்தை விரும்புகின்றன. ஏனென்றால், இந்த ஈக்கள் சூரிய வெளிச்சத்தை விரும்புகின்றன. வேறுசில பூச்சிகள் வெள்ளை நிறத்தைக்கண்டு கூசுகின்றன. உதாரணமாக சிவப்பு அல்லது மஞ்சள் நிறமுள்ள கண்ணாடியைக்கொண்டு நாம் அதி ஊதாக்கதிர்களைப் பிரித்துவிட்டால் எறும்புகளுக்கு ஒரு சிறிதும் பாதகமேற்படுவதில்லை. ஈக்களோ, இந்த அதி ஊதாக்கதிர்களை மிகவும் விரும்புகின்றன. இந்த உண்மை ஊர்ஜிதப்படுத்தும் பக்ஷத்தில் பாலுக்கும் மற்ற உணவுகளுக்கும் அதிக கேட்டை விளைவிக்கிற பொல்லாத ஈக்களின் தொல்லையிலிருந்து நாம் தப்புவதற்கு நல்லவழி ஏற்பட்டதாகும்.

### புதுவகையான தூரப்பார்வை.

ரேடியோ என்ஜினீர் சங்கத்தை சேர்ந்த ஒரு கூட்டத்திலே டாக்டர் வ்லாட்மிர் சுவாலிக்கின் ஒரு புது தூரப்பார்வையைப்பற்றிச் சொன்னார். இதற்குமுன்பு அனுப்பப்பட்ட காட்சிகள் இரண்டொருவருக்குத்தான் தெரியும். ஆனால் இப்போது ஒரு அநேக ஜனங்கள் அந்தக் காட்சிகளைக்காணலாம். இந்த தூரப்பார்வையைக் கொண்டு எதாவது முக்கிய சம்பவங்களை உலகத்தாருக்கெல்லாம் கண்முன்னே காட்டமுடியுமென்று நம்புகிறார்கள். இந்தக் காட்சிகள் குரலொலி கூடியவைகளாகவுமிருக்கும்.

(பொக்கிஷபரணி.)

அமெரிக்கன் மிஷன் லினக்ஸ் பிரஸ், பசுமலை,—1930.

413

ஸ்ரீ

REG. NO. M. 2146

# THE Piramalai Reformer

# பிரமலை சீர்திருத்தன்.

23 DEC 1930

"ஒரு கதையைப்போல் இவ்வருஷத்தைக் கழித்துப்போட்டோம்".

Vol. X.] டிசம்பர் 1930 [இலக்கம் 8.

## பஞ்சாங்கம்.

| 1930 | பிரமோதூதஹு கார்த்திகை 16 | | டிசம்பர் | | பிரமோதூதஹு மார்கழி 16 | 1930 |
|---|---|---|---|---|---|---|
| SUNDAY ஞாயிறு | MONDAY திங்கள் | TUESDAY செவ்வாய் | WEDNESDAY புதன் | THURSDAY வியாழன் | FRIDAY வெள்ளி | SATURDAY சனி |
| | 1 16 | 2 17 | 3 18 | *4 19 | 5 ○20 | 6 21 |
| 7 22 | 8 23 | 9 24 | 10 25 | 11 26 | 12 27 | 13 28 |
| 14 29 | 15 30 | 16 மார். 1 | 17 2 | 18 3 | 19 ●4 | 20 5 |
| 21 6 | 22 7 | 23 8 | 24 9 | 25 10 | 26 11 | 27 12 |
| 28 13 | 29 14 | 30 15 | 31 16 | | | |

*Patron.*—M.R.Ry. Rao Bahadur, A. J. Vethanayaga Thevar Avl., Usilampatti.

*Editor.*—Rev. George J. Athishtam, Usilampatti.

*Manager.*—Rev. R. A. Dudley, Tirumangalam.

Subscription—Single copy 14 annas a year (including charges for delivery) payable in advance.

All orders to be sent to the *Manager.*

Articles for insertion should be sent, not later than 15th of each month to the *Editor.*

சம்ரக்ஷகர்.—மகா-ா-ா-ஸ்ரீ ராவ் பகதூர் வேதநாயகத் தேவரவர்கள், உசிலம்பட்டி.

பத்திராதிபர்.—கனம் ஜார்ஜ் அதிஷ்டம் ஐயரவர்கள், உசிலம்பட்டி.

மானேஜர்.—கனம் ஆர். ஏ. டட்லி துரையவர்கள், திருமங்கலம்.

வருஷ சந்தா தபாற்கூலி உட்பட அணா 14. ஒரு வருஷ கையொப்பம் முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பத்திரிகை வேண்டுவோர் மானேஜரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

சமாச்சாரக்குறிப்பு முதலியவை அனுப்ப விரும்புவோர் அந்த மாதம் 15-ம் தேதிக்குள் சுருக்கமாக எழுதி பத்திராதிபருக்கு அனுப்பவேண்டும்.

## பத்திராதிபர் குறிப்புகள்.

1930-ம் வருஷத்தின் கடைசிப்பாகத்தில் வந்திருக்கிறோம். தேசத்திலும், நாட்டிலும் பல நூதனங்களையும் கஷ்டங்களையும் காணவும், கேட்கவும் ஸௌக்கியம் பெற்றோம். சீர்திருத்த விஷயங்களில் எவ்வளவுதூரம் முன்னேறியிருக்கிறோம் என்று பார்த்தால், அந்தந்தக் கிராமத்தாரே சொல்லக்கூடியவர்களாவார்கள். ஆனால், நாம் அதிகமாகக் கவனிக்கவேண்டியது கல்வி விஷயமே. சில கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் எப்போதும்போல பஞ்சாயத்தாரும், உபாத்திமாரும் ஒத்துழைத்து நல்ல முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். பலரை மேல் வகுப்புக்கும் அனுப்பியிருக்கிறார்கள். பல இடங்களில் இன்னும் முயற்சி எடுக்கப்படவேண்டியிருக்கிறது. வரப்போகும் வருஷத்தில் படிப்புவிஷயத்தில் அதிக கவனமாயிருப்பார்களென்று தெரியவருகிறது. ஆஜர் விஷயத்திலும், உபாத்தியார் அந்தந்தக் கிராமங்களில் குடியிருக்கும் விஷயத்திலும் நெடுங்காலமாக சில பிள்ளைகளை ஒரே வகுப்பில் வைத்திருக்கும் விஷயமாகவும் அதிக ஒழுங்கு கையாடப்படுமென்று தெரிகிறது. ஒழுங்கற்ற பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டாலும் படலாம், தற்போது மற்ற எல்லா டிபார்ட்மெண்டைக்காட்டிலும் நமது உபாத்திமாருக்கு அதிகம் சம்பளம் கொடுக்கப்படுகிறபடியால் அதிகமாக உத்தரவாதம் கேட்கப்படுவார்கள். பூராவும் ட்ரயின்பண்ணினவர்களையே வைக்கவேண்டுமென்று உத்தரவும் வந்துகொண்டிருக்கிறது. ஆகையால், எல்லோரும் மேலாவிலிருந்து ரிப்போர்ட்டின்மூலம் காரியங்களை நடப்பிப்பதைக் காட்டிலும், தங்களால் கூடியமட்டும் அன்பினாலும், சாமர்த்தியத்தினாலும், நல்ல முறைகளை கையாடுவதாலும் உபாத்திமாராகிய நீங்கள் கிராமத்தாருக்கு மெய்யான சிநேகிதர் என்ற உணர்வை உண்டாக்கினால், தற்போதிருக்கும் அநேக கஷ்டங்கள் நீங்கும். 'சொல்வது எளிது, செய்வதோ கஷ்டம்' என்று யாவருக்கும் தெரியும். கன்னாட்டு உபாத்திமாரின் கஷ்டங்கள் அவர்களோடு பழகுகிறவர்களுக்கு மட்டுந்தான் தெரியும். கிராமத்தாராலும், ஒழுங்கற்ற பிள்ளைகளாலும், அடிக்கடி நடக்கும் பார்வைகளாலும், வசதியற்ற பள்ளிக்கூடங்களாலும், தங்க வீடற்ற இடங்களுமாகிய பல உபத்திரவங்கள் உண்டு. சீர்திருத்த மெய்யாய் பிரயாசப்படுகிறவர்களுக்கு கஷ்டத்திலூடேதான் சந்தோஷம் வருமென்று உலக சரித்திரத்தில் காணலாம். கடவுளின் தயவைத்தேடி, தங்களால் கூடியமட்டும் சேவைபுரிய விரும்புகிறவர்களுக்கு தெய்வமே துணைபுரியும் என்று அனுபவத்தில்காணலாம்.

கடந்த வருஷத்தில் நமது பத்திரிகைக்கு சகல விதத்திலும் உதவிபுரிந்துவந்த மகா-ா-ா-ஸ்ரீ சூப்பிரண்டு துரையவர்களுக்கும், மற்ற எல்லா சர்க்கார் அதிகாரிகளுக்கும், நிருப நேயர்களுக்கும், இந்நாட்டின் அபிவிருத்தியை உண்மையாய் விரும்புகிறவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகூறுகிறோம்.

வரப்போகும் புதுவருஷம் யாவருக்கும் சகல விதத்திலும் புதுவருஷமாகவே இருக்கக் கடவுள் கிருபை புரிவாராக.

## டர்பார் தினம்.

டிசம்பர்மாதம் பன்னிரண்டாம் தேதி, மாட்சிமைதங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்களும், மேரி ராணியம்மாளும் டில்லிமாநகரில் முடிசூட்டப்பெற்ற வைபவத்தை நினைவுகூரும் தினம். இத்தனை வருஷங்களாக ஐரோப்பாவின் பல ராஜ்யங்களுக்கும், ராஜாக்களுக்கும் எத்தனையோ ஆபத்துகளும், மாறுதல்களும் நேரிட்டும், நமது சக்கரவர்த்தியை இதுகாறும் சுகத்தோடு காத்த கர்த்தனை நன்றியோடு நமஸ்கரிப்போம். நமது சக்கரவர்த்தி மகா பக்தியுள்ளவர். இவர் ராஜாவாயிருந்தும், தினந்தோறும் வேதத்தை ஒழுங்காக வாசிப்பதுமன்றி கோவிலுக்கும் ஒழுங்காகப்போய் முழங்காலூன்றி, தனக்குப் பெரியவரான ராஜசமூகத்தை தரிசித்துத் துதிசெய்வார். இவர் நமக்குப் பெரிய முன்மாதிரி. எத்தனையோபேர் சிறு உத்தியோகம் வர, கொஞ்சம் செல்வாக்கு, சம்பளம் அதிகப்பட தெய்வத்தை, ஆலயத்தை மறந்து, வேததியானம் போய், தங்களை அரசர்களுக்கு மேலாகப்பாவித்து, அண்ணாந்து நடந்து, கடைசியில் தன்னையும் மறந்து சீர்கெட்டலைவதையும் பார்த்திருக்கிறோம். உலகப்பிரகாரமாக எவ்வித குறைவுமற்ற ஜார்ஜ் சக்கரவர்த்தியே தெய்வஅருளைத் தேடி, அவருடைய வேதத்தின்படி நடப்பது நன்மையென்று காண்பாரானால் குறைவுள்ள நாம் எவ்வளவுக்கு அதிகமாகத் தேடக் கடமைப்பட்டிருக்கிறோம்.

டர்பார் தினத்தில் பள்ளிக்கூடமாணவர்களுடன் ராஜா படம் வைத்து ஊர்கோலம் சென்று ராஜ வாழ்த்துப் பாட்டுப்பாடி எல்லாரும் ராஜபக்தி காண்பிப்பது நமது கடமை. ராஜாவைக் கனம்பண்ணுங்கள் என்பது தெய்வகட்டளை. ஈசன் இறைவனைக் காப்பாராக.



## மாணவருக்கு சிறு தூண்டுகோல்.

M. D. Meiyappa.

சில வருஷங்களுக்கு முன்னர் ஒரு பட்டணத்திலுள்ள போர்டிங் பாடசாலையில் 8 வயதுள்ள ஒரு சிறுவன் இருந்தான். அப்பையன் பள்ளிக்கூடங்களுக்கு ஒழுங்காய்ப்போய்ப் பாடங்களைக் கற்றுவந்தான். எப்பொழுதும் பள்ளிகூடத்திலிருந்து சந்தோஷமாய் வருபவன், ஒரு தினம் மிகவும் விசனமான முகத்தோடுவந்து தன்னுடைய புஸ்தகஞ்சிலேட்டுகளைக் கட்டிலின்மேல் எறிந்துவிட்டு, ஆவென்று கதறியலறினன். இதைக்கண்ட தாய் பிரமித்து, பையனை அணைத்து என்னப்பா? யார் உன்னை அடித்தது, உபாத்தினியம்மாள் அடித்தாளா? என்று கேட்டுக்கொண்டிருக்கையில் அப்பையனுடைய அக்காள் கெக்கெக்கென்று சிரித்துக்கொண்டுவந்தாள், தாய் அப்பெண்ணைப்பார்த்து என்னம்மா? என் தம்பி அழுகிறான்? யார் அடித்தது என்று ஆத்திரமாய்க் கேட்டாள்: பின்னும் சிறுமி சிரிக்கத் தாய் சொல்லம்மா, என்ன சங்கதியென்று கேட்டாள். அப்போது சிறுமி தாயைப் பார்த்து, தம்பி எப்போதும் வகுப்பில் முதல் இடத்தில் இருப்பான், இன்றைக்கு ஒரு இடம் பிந்திவிட்டானும்: அதற்காக அப்படி அழுகிறான் என்று சொன்னாள். தாய் மகனைத்தடவி முத்தஞ்செய்து அழாதே, நீ நாளைக்கு முதல் இடத்தில் இருக்கலாம் என்று சொன்னாள். அவன் தன் கடமைகளைத் திட்டமாய்ச் செய்து வந்தபடியால் சீக்கிரம் அறிவில் முன்னேறி அவனுடைய 22-ம் வயதில் பி.ஏ. பரீக்ஷை தேறினான்.

மாணவர் ஒவ்வொருவருக்கும் இவ்வித நோக்கமிருக்க வேண்டும். சிலர் 100க்கு 45, 35 மார்க்கு எடுத்தால் போதும், தேறி அடுத்த வகுப்புக்குப் போகவேண்டியது தான் இலக்கு என்று படிக்கிறார்கள். இவர்கள் அறிவையடையப்போகிறதுமில்லை, இவர்களால் உலகத்துக்கு பிரயோஜனமுண்டாகப் போகிறதுமில்லை. அறிவையடையும்படிக்கே படிக்கவேண்டும். ஒவ்வொருவரும் 100க்கு 100 மார்க்கு எடுக்கக்கூடும். ஒரு மாணவன் ஜெபத்தோடு தன் அன்றாடகக் கடமைகளை ஒழுங்காய்ச் செய்துவந்தால் பூரண அறிவையடையக்கூடும். சிலர் தங்களுக்குப் புத்தியில் குறைவுண்டென்று நினைக்கிறார்கள். சிலர், மற்றவர்களால் மட்டி, மடையசாம்பிராணி, மண்டையில் ஒன்றுமில்லை என்றிகழப்படுகிறார்கள். இவ்விதகுறைவு சிருஷ்டிப்பில் இல்லை. (ஒவ்வொருவனுடைய புத்தி ஒவ்வொன்றில் வசப்பட்டிருக்கிறதேயல்லாமல் புத்தியற்றவனாய் இருக்கிறதில்லை. சமுசாரி, வியாபாரிகளுடைய பிள்ளைகளுக்கு அவர்கள்புத்தி அவ்விஷயங்களில் வசப்பட்டிருக்கும், அதைத்திருப்பி வசப்படுத்தவேண்டும். இது அநுபவம்.) படிப்போர், படிப்பிப்போருடைய கவலைத்தாழ்ச்சியைப்பற்றியதே. ஒரு மாணவன் தான் குறைவுள்ளவனென்று எண்ணினால் அவன் செய்யவேண்டிய காரியங்கள்.

1. ஜெபம் செய்யவேண்டும். யாக். 1:5. கடிந்துகொள்ளாதே (மட்டி மடையனென்றிகழாத) வரிடத்தில் கேட்கவேண்டும்.

2. தெரியாதவைகளை முதலாவது தானே தனிப்பட யோசித்து அறியப் பிரயாசப்படவேண்டும். புலப்படாத பக்ஷத்தில் உபாத்தியாயரிடம் அல்லது அறிவோரிடம் அறிந்துகொள்ளவேண்டும்.

3. ஒவ்வொருநாள் கடமையையும் அந்தந்த நாளில் முடித்துத் தீர்க்கவேண்டும்.

இவ்விதிகளை ஒரு மாணவன் கவனித்து நடந்தால் 100-க்கு 100 மார்க்கு எடுக்கக்கூடுமென்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடும். இவ்விதம் நடக்கும் பையன் அறிவில் தேறி ஞானத்தைக் கண்டடைவான். உபாத்தியாயருக்கும் பள்ளிக்கூடத்துக்கும் கிரீடமாய் விளங்குவான். பெற்றோருக்கு மகிழ்ச்சியையும் கனத்தையும் உண்டாக்குவான். உலகத்துக்கு ஆசீர்வாதமாய் இருப்பான். கொஞ்சத்தில் உண்மையாய் இருப்பவன் அநேகத்தின்மேல் அதிகாரியாக வைக்கப்படுவான்.

ஆகையால் அருமையான சிறுவரே! சோர்ந்து போகாமல் உங்களைக் கரங்களில்அணைக்கிறவரும், உங்கள் தலைகளில் கைவைத்து ஆசீர்வதிக்கிறவரும், உங்களுக்கு வேண்டிய சகல ஞானத்தையும் கொடுக்க ஆசையுள்ளவருமான உங்கள் அன்புள்ள தேவன் உங்கள் சமீபத்திலிருக்கிறார். கேளுங்கள், அப்பொழுது கொடுப்பார்.

பரீக்ஷைகாலத்தில் பரீக்ஷைக்கேள்விக் காகிதம் எங்கே அகப்படும் என்று தேடாதிருங்கள். கேள்விக்காகிதங்களை ஒருவர் கொடுத்தாலும் வாங்காதிருங்கள். சொல்லிக்கொடுத்தாலும் செவிகொடாதிருங்கள். கிறிஸ்தவ வீரராய் உங்கள் கடமைகளில் பின்வாங்காமல் முன்னேறிச்செல்ல நோக்குங்கள்.

சிலருக்குப் பின்வாங்குவதைப்பற்றி விசனமில்லை. அநேகர் ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்வாங்கி உணர்வற்றிருப்பது மிகவும் விசனமான காரியம். கிறிஸ்துவின் அன்பிலும் நற்குணத்திலும் முன்னேறிச்செல்லப் பிரயாசப்படுங்கள்.

(ஐக்யசபைத் தூதிகை.)

# நவ நாகரீகக் குறிப்புகள்.

## பற்கள்.

காசினி எழுதியது.

* * * நீ சொல்வது நிஜந்தான்; எத்தனையோ பேர்கள் பார்வைக்கு மிகவும் அழகாக இருக்கிறார்கள். வாயைத் திறந்துவிட்டால் போதும். விகாரமாக மூன்று அல்லது நாலுவரிசைப் பல்லுகள் முகத்தின் லக்ஷணத்தையே கெடுத்துவிடுகின்றன. இல்லாவிட்டால், மேல் உதடு விற்போல் வளைந்து கீழ்உதடுடன் பொருந்தி, வாய் பார்வைக்கு அழகாக இருப்பதற்குப்பதிலாக, முன் பற்களில் இரண்டு மூன்று தூக்கிக்கொண்டிருப்பதால், வாயின் இயற்கை லக்ஷணம் கெட்டுவிடுகிறது. உதடுகள் பொருந்தி மூடுவதில்லை. 'அவளுக்கா, யானைக் கொம்புபோல் இரண்டு பற்கள் நீட்டிக்கொண்டிருக்குமே!' 'அந்தப் பெண்ணா! நன்றாகத்தான் இருப்பாள் ஆனால் பல், சாண் நீளம் இருக்குமே!' என்ற சொற்கள் நம்தேசத்தில் சகஜமானவைகளே. 'சேதாம்பல் முருகு விரியும் செங்கனி வாய்' என்றும், 'பொன்னைச் சிரிக்கும் பூங்கோயில் புனல் வாவியில், அன்று எங்கள் குல்மன்னைச் சிரித்த செங்கனிவாய் மாறாது இறங்கி அழுது அலற்ற' என்றும் நம் புராணங்களில் வாயின் லக்ஷணத்தை வர்ணித்திருக்கிறார்கள்: மேல்நாட்டுக்-கவிகளும், மன்மதன் விற்போல் வளைந்திருக்கும் வாய் என்றும், ரோஜா மொட்டு விரிவதுபோல் அழகாக இருக்கும் வாய், என்றும் கூறுகிறார்கள்.

வாய், முகத்தின் லக்ஷணத்திற்கு முக்கியமானது. இப்படி இருக்க, பற்கள் வரிசையாக இராததினால், 'பல்லும், பவுஷும் சொட்டுகிறாள்' என்று சொல்லும்படி ஆகிவிடுகிறது. சிறுவயதில் பெற்றோர்கள் சற்று ஜாக்கிறதையாக இருந்தால், பல் வரிசைதப்பி முளைப்பதைச் சுலபமாகத்தடுத்துவிடலாம். குழந்தைகளுக்குச் சாதாரணமாக ஐந்து அல்லது ஆறு வயதிற்குமேல் பால்—பல் ஆடிவிழுந்து, புதுப்பல் முளைக்கஆரம்பிக்கும். இந்தக் காலத்தில் சற்று சிரமம் எடுத்துக்கொண்டால், பற்கள் வரிசையாக முளைக்கும்படிச் செய்துவிடலாம். பல் நன்றாக ஆட ஆரம்பித்ததும், ஒரு பல் வைத்தியன் இடம் சென்று, ஆடும் பல்லைப் பிடுங்கிவிடவேண்டும். சில வேளைகளில் பல் விழுவதற்கு முன்னமேயே புதிய பல் முளைக்கத்துவங்கிவிடுகிறது. ஆகையால் அது ஆடும் பல்லின் பக்கத்தில் கோணலாக முளைத்துவிடுகிறது. பால்—பல் விழுந்துவிட்டபோதிலும், சில சமயங்களில் அதன் வேர் உள்ளே நின்றுவிடுகிறது. இது புதிப்பல்லைத் தடைசெய்கிறது. பல் தெத்திப்பல்லாக முளைத்துவிடுகிறது. ஆடும் பால்—பல்லைப் பிடுங்கி விடுவதால், அது பழைய இடத்தில் வரிசையாகக் கிழம்பும்.

மேலும், தற்காலத்தில் கோணலாகவும், நீட்டிக்கொண்டும் இருக்கும் பற்களை, பல் வைத்தியர்கள் சரிப்படுத்திவிடுகிறார்கள். அதிகமாக நீண்டிருக்கும் பல்லைக் கொஞ்சம் ராவிவிடுகிறார்கள். அதிகப்பல்லை பிடுங்கிவிடுகிறார்கள். லேடி சின்னையாவின் தங்கைப் பெண்ணுக்கு—மூன்று வரிசை பல் என்றால் பொருந்தும். வாய் நிறையக் கோணலும் மாணலுமாகப் பற்கள் இருந்தன. எழுநூறு ரூபாய்கள் செலவுசெய்து அந்தப் பற்களைச் சரிப்படுத்தினார்கள். 'இந்த நாளிலே, பணம் ஒன்று மட்டும் இருந்தால்போதும்; ஈஸ்வர சிருஷ்டிக்கு எதிர் சிருஷ்டி செய்துவிடுகிறார்கள்!' என்று என் பாட்டி சொன்னாள்.

பல் வரிசையாக மட்டும் இருந்தால் போதுமா? அது முத்துப்போல் பிரகாசமாக, சுத்தமாக இருக்கும்படி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இது அதிகக் கஷ்டமில்லை; தந்த சுத்திக்கு என்று விற்கப்படும் மெழுகுகளில் நல்லதான ஒன்றை வாங்கி, காலையிலும் இரவில் படுப்பதற்கு முன்பும், பல்லைப் பிரஷினால் சுத்தம் செய்து வந்தால், பல் வியாதிகள் வராமல் தடுத்து விடலாம்; அதிகமாகப் பல்லைத் தேய்ப்பதும் அவ்வளவு நல்லதில்லை. தற்காலத்தில் தந்த சுத்திக்கு என்று அநேக தினுசு மெழுகுகளையும், பொடிகளையும், விளம்பரம் செய்கிறார்கள் இதுவே எல்லாவற்றையும்விட மேலானது என்று கூறுவதற்கில்லை. அவர் அவர்களுக்கு நல்லது என்று அனுபவத்தால் தோன்றும் பொடியையோ மெழுகையோ உபயோகித்துக் கொள்ளவேண்டியது. பிரஷ் உபயோகிக்க இஷ்டப்படாதவர்கள், ஆலங்குச்சிகளையோ, அல்லது வேலங்குச்சிகளையோ உபயோகிக்கலாம். 'ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி' என்ற வசனம் நீ கேட்டதில்லையா?

சுதேசமித்திரன்.

---



# "குஷ்டம்—ஓர் தொத்து வியாதி"

குஷ்டரோகத்தை மகா வியாதியென்றும், கர்ம வியாதியென்றும் நம் நாட்டார் சொல்லுவார்கள். கற்றறிந்தவர்கள்கூட இவ்வியாதியைப் பரம்பரையான(hereditary) குடும்ப வியாதியென்று கருதுகிறார்கள். இன்னுஞ் சிலர் மண்ணுளிப்பாம்பின் கடியால் ஏற்படுகிறதென்று நினைக்கிறார்கள். நம் நாட்டு வைத்தியர் "மேகம் முற்றினால் குஷ்டம்" என்றும் இந்த வியாதியை ஸ்திரீ ரோகங்களுக்குச் சம்பந்தப்படுத்துகிறார்கள். ஆனால் தற்காலத்திலுள்ள வைத்திய சாஸ்திரிகள், அநுபோகத்தைக் கொண்டும் நவீன சோதனை முறைகளைக்கொண்டும் மேற்சொன்ன மூகாந்திரங்கள் பொய்யென ரூபித்து உண்மையான காரணங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கண்களால் பார்க்கமுடியாத பாவில்லை (Lepra bacilli) என்னும் வெகு அற்பமான பூச்சியே இந்த வியாதிக்குக்காரணம். இந்தப் பூச்சியைப் பார்க்கவேண்டுமானால் அநுதரிசனி என்னும் பூதகண்ணாடியில் வைத்து ஆயிரம் மடங்கு அதைப் பெரிதாக்கவேண்டும். அப்போது அது ஆறில் ஒரு பங்கு ($\frac{1}{6}$ in.) அங்குல நீலமுள்ளதாயிருக்கும். இந்தப் பூச்சி ஒரு வியாதிக்காரனிடத்திலிருந்து பாவி சுகதேகிகளிடத்தில் சார்ந்து இந்த வியாதியை உண்டாக்குகிறது. சுகதேகி திடகாத்திரனும் சுத்தமுள்ளவனுமாயிருந்தால் இந்த வியாதி தொத்துகிறதில்லை. குஷ்டரோகிகளோடு அதிகமாய்ப் பழகுவதினாலும் அவர்கள் படுக்கும் படுக்கைகளில் படுப்பதினாலும் அவர்கள் உடுத்தும் உடையை உடுப்பதினாலும் அவர்கள் தொட்ட பொருள்களை உபயோகிப்பதினாலும் அவர்கள் குடியிருக்கும் வீடுகளில் குடியிருப்பதினாலும் இந்த வியாதி மற்றவர்களுக்கு உண்டாகிறது.

மற்ற மூகாந்திரங்களில்லாமல், இவ்விதப்பூச்சி ஒட்டுவதினால் மாத்திரம் இந்த வியாதி வருகிறதில்லை. மலைச்சுரம் (Malaria) மேகம் (Syphilis) கொக்கிப் பூச்சி (Hook Worm) மூன்றுவாரக் காய்ச்சல் (Typhoid) வயிற்றளைச்சல், அஜீரணம் முதலான வியாதிகளால் பலவீனமடைந்திருக்கும்போது இந்த வியாதி இலேசாய்த்தொத்துகிறது. பக்குவமான உணவும், சுத்தமும், சுறுசுறுப்பும் இல்லாதவர்களுக்கும் இந்த வியாதி இலகுவாயேற்படுகிறது. பொதுவாய் வாலிபர்களுக்கும் குழந்தைகளுக்கும் இந்த வியாதிவருகிறது. குழந்தைப் பருவத்திலிருந்து முப்பதாம் வயதுவரையே இந்த வியாதிக்கு மிகவும் அநுகூலமான வயது. அதற்குப்பிறகு இந்த வியாதி தொத்துவது அரிது. இந்த வியாதி ஒட்டின பிறகு வெளியரங்கமாய்க் காண மூன்று வருஷங்களாகிறது. சிலசமயங்களில் ஒரு வருஷத்திற்குள்ளாகவும், ஏழு அல்லது எட்டு வருஷங்களுக்குப் பிறகும் இந்த வியாதி காண்கிறது.

இந்நோய் தேகத்தின் சருமத்தையும், நரம்புகளையும் தாக்குகிறது. முதலில் நிறம் மங்கிய சிறு பத்தாகவும், அல்லது காதில் தடிப்பாகவும் ஆரம்பிக்கிறது. பிறகு பத்துக்களில் ஸ்பரிச உணர்ச்சி (Sense of Touch) குறைவுபட்டுச் சுரணையே இல்லாமல் போய்விடுகிறது. கைகளிலும், கால்களிலும் மதமதப்பு, அரிப்பு ஊரல் முதலான குணங்கள் ஏற்படுகிறது. வியாதி முற்ற முற்ற ஸ்பரிச உணர்ச்சி முற்றும் அற்றுப்போகையிலும் காலிலும் உள்ள விரல்கள் மடங்கி சில சமயங்களில் புண்கள் உண்டாகி அவ்விரல்களைத் தின்று கோரமாக்குகிறது. அடிக்கடி குஷ்டரோகிகளுக்குப் பாதங்களில் குதிப்புண்கள் உண்டாகி ஆறாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்படியே வியாதிமுற்றினால் ஒருவன் யாதொரு வேலையும் செய்ய முடியாமல் நடை பிணமாகிறான். பொதுவாய்க் குஷ்டரோகப் பத்துக்களில் உணர்ச்சி இராது, நிறம் மங்கலாயிருக்கும், வியர்வை வியர்க்காது, எண்ணெய்ப் பசையுமிராது. மற்றொரு வகை குஷ்டரோகத்தில் பத்துக்கள் தடிப்பாகவும், செந்நிறமாகவும், காது, மூக்கு, நாடி, கன்னங்களில் தடிப்பும் பிறகு கழலை போன்ற காய்களும், ஏற்பட்டு முகத்தை விகாரப்படுத்துகிறது. காய்களும் தடிப்புள்ள பத்துகளும் மிகவும் பயங்கரமானது. ஏனென்றால் அவைகளிலிருந்துதான் இந்த நோய் இலேசாய்ப் பரவுகிறது.

இந்த நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து, சிகிச்சைசெய்தால் இந்த வியாதியை வேரோடறுத்து விடலாம். இந்த வியாதியை முற்றவிட்டால் பிறகு குணமாக்குவது மிகவும் கஷ்டம். யாருக்காவது சந்தேகமான பத்து விசேஷமாய்ச் சுரணை, வியர்வை எண்ணெய்ப் பசை முதலியவை இல்லாதிருந்தால் உடனே ஒரு வைத்தியரிடத்தில் கொண்டுபோய்ச் சோதிக்கவேண்டும். காதில் அல்லது முகத்தில் தடிப்பாயிருந்தாலும் அல்லது தடிப்பான பத்துக்கள் தேகத்தில் ஏற்பட்டாலும், அதைச் சோதித்து குஷ்டரோகந்தானா என்று அறியவேண்டும். ஆரம்பத்தில் இந்த வியாதியை இலேசாய் அகற்றிப்போடலாம். பத்து சிறிதாயிருக்கிறது என்று கவலைத்தாழ்ச்சியாயிருந்தால் திடீரென்று ஒருவனை அறியாமல் வியாதி அதிகரித்து அவனை மேற்கொள்ளுகிறது. அப்போது அவனைச் சுகப்படுத்துவது கூடாதகாரியமாகிறது.

## குஷ்டரோகத்தை அகற்றும் விதிகள்.

1. குஷ்டரோகிகளுக்குள்ள மற்ற வியாதிகளை அதாவது மேகம், மலைச்சுரம், கொக்கிப்பூச்சி, அஜீரணம் போன்ற வியாதிகளை மருந்து கொடுத்துக் குணப்படுத்த வேண்டும். விசேஷமாய் மலச்சிக்கல் (Constipation) இருந்தால் அதைத் தேகாப்பியாசத்தினாலும் அதற்கேற்ற உணவினாலும் நீக்கவேண்டும்.

2. சுத்தமானதும் அன்று சமைத்ததுமான ஆகாரத்தை அருந்தவேண்டும், பால், பழங்கள், நல்ல காய்கறிகளே, விசேஷமானது. வற்றல், கருவாடு, உப்புக்கண்டம் முதலிய பண்டங்கள் இந்த வியாதிக்கு மிகவும் பிரதிகூலமானது. மீன், மாமிசம் மிகவும் சொற்பமாயும் உபயோகிக்கவேண்டும். அவை புதிதானவையாயிருக்க வேண்டும். அதிக இனிப்பான பதார்த்தங்கள் அவ்வளவு நல்லதல்ல. லாகிரி வஸ்துக்களை (கள், சாராயம், அபின்) உபயோகிக்கவே கூடாது.

3. தேகத்தில் சூரியவெளிச்சம்படவேண்டும், சுத்தமானதும், வெளியானதுமான ஆகாயத்தை சுவாசிக்க வேண்டும். நாடோறும் குறைந்தது பத்து மைல் தூரமாகிலும் உலாவவேண்டும். இல்லாவிடில் திறந்த வெளியில் தேகாப்பியாசம் செய்யவேண்டும். கசரத், பஸ்கி, பந்தடித்தல், ஓட்டம், வேளாண்மைக்குரியதொழில்களைச் செய்தல் முதலியவை தேகத்திற்கு நல்ல பலத்தைக் கொடுக்கும். தேகத்தில் பெலன் ஏற்பட்டால் இந்த நோய் இலகுவாய் நீங்கும்.

4. சுத்த ஜீவியம் செய்யவேண்டும். வீட்டையும் அதன் சுற்றுப் பாகங்களையும் சுத்தமாய் வைக்கவேண்டும். தினந்தோறும் ஸ்நானம் செய்து சுத்தமான உடைகளை உடுத்தவேண்டும். துன்மார்க்கமான ஜீவியம் செய்யாமல் விசேஷமாய் இச்சாபத்தியத்தை அனுசரிக்க வேண்டும்.

5. இந்த வியாதியைக் குறித்து அறிந்த வைத்தியரிடத்தில்போய் நோய்க்குத் தகுந்த சிகிச்சைசெய்துகொள்ளவேண்டும். தயாபுரம் என்று சொல்லப்படும் குஷ்டரோக ஆஸ்பத்திரியில் உள்ள ஒவ்வொருவரையும் மேற்சொன்ன நான்கு முறைகளையும் கையாளும்படி நிபந்தனைகள் செய்கிறோம். அவர்களுக்கு ஊசி மருந்து கொடுத்து, பத்துக்கள், தடிப்புகள் முதலானவைகளுக்குத் திராவகம் தடவி உட்கொள்ள மருந்தும் கொடுக்கிறோம். சமயோசிதமாய் அவர்கள் வியாதியின் குணத்திற்குத் தக்கவாறு ரணவைத்தியம் முதலான மற்ற முறைகளையும் கையாடி வருகிறோம்.

6. குஷ்டரோகிகள் ஆணானாலும், பெண்ணானாலும் கலியாணம் செய்துகொள்ளக் கூடாது. கலியாணம் செய்திருந்தால் இந்த வியாதி சௌக்கியமாகுமட்டும், ஒருவரையொருவர் பிரிந்து ஜீவிக்கவேண்டும். முன் சொன்னபடி இச்சா பத்தியத்தைத் தவறாமல் கையாட வேண்டும். இந்நோயுள்ள ஸ்திரீ குழந்தையைப் பெற்றால் அதைப் பிரித்து வளர்ப்பதுதான் விசேஷம். அவ்வாறு இல்லாமல் அக்குழந்தை தாயோடு இருந்து வளர்ந்தால் எப்படியும் குழந்தைக்கு வியாதி தொத்திக்கொள்ளும்.

இந்தப் பெரிய வியாதியை நம் நாட்டை விட்டு அகற்றவேண்டுமானால் குஷ்டரோகத்தைக் குறித்த அறிவு எல்லாருக்கும் பரவவேண்டும். நம்மிடத்தில் சுத்தமான வழக்கங்கள் சுத்தமான ஜீவியம் ஏற்பட்டுச் சோம்பலின்றிச் சுறுசுறுப்பாயிருந்தால் இந்நோய் அணுகாது அவ்வியாதிக்காரருடன் தொட்டுப் பழகாமல் அவர்களை விட்டுவிலகவேண்டும்.

யாதாவதொரு வியாதி வந்தால் அதை முற்றவிடாமல் ஆரம்பத்திலேயே அதற்குத் தகுந்த பரிகாரம் செய்துகொள்ளவேண்டும். இந்த நோய்க்குரிய சந்தேகக் குணங்கள் சரீரத்தில் ஏற்பட்டால் உடனே இந்த வியாதியில் அனுபோகமுள்ள வைத்தியர்களிடத்தில் போய்த் தம்மைச் சோதித்து வியாதி இருந்தால் உடனே சிகிச்சை செய்துகொள்ளவேண்டும். அதிகமான கவலைக்கு இடங்கொடாமல் சஞ்சலமின்றி சந்தோஷமான ஜீவியம் செய்துவருவது இந்த வியாதியை அகற்றுவதற்கு ஓர் முக்கிய முறை.



## வர்த்தமானங்கள்.

நவம்பர் 11-ம்வ.

மகாயுத்தம் நிறுத்தப்பட்ட 12 வது வருஷம் உலகத்தின் சகல இடங்களிலும் கொண்டாடப்பட்டது. நமது நாட்டிலும் பல பாடசாலைகளில் கொண்டாடப்பட்டது. அந்தத் தினம் மகா யுத்தத்தில் மடிந்த குடும்பத்தாரை நினைத்தும், இனிமேல் இப்படிப் பட்ட யுத்தம் நடவாதபடிக்கும் கடவுளை பிரார்த்தித்தார்கள்.

### வட்டமேசை மகாநாடு.

தற்போது இந்தியாவின் பலபாகங்களில் சுயராஜ்ஜிய விஷயமாகப் பேசப்பட்டு வரும்காரியங்கள் யாவருக்கும் தெரியும். இதைப்பற்றி சர்க்காரால் தெரிந்தெடுக்கப்பட்ட பல பிரதிநிதிகள் லண்டன் பட்டணத்திற்குச் சென்று பிரிட்டிஷ் ராஜாங்கத்தோடு சமமாக ஒரே மேசையின் முன் உட்கார்ந்து நமது தேசத்திற்கு எது தேவை என்று ஆலோசிக்கப் போகிறார்கள். அந்த ஆலோசனைசங்கத்தாரில் மிகுதியானவர்கள் எதைத் தீர்மானிக்கிறார்களோ அந்தக் காரியங்கள் பார்லிமெண்ட் சபையால் ஒப்புக்கொள்ளப் பட்டால் நமக்குக் கிடைக்கும். இந்த மகா நாட்டிற்கு இந்தியாவின் மகாராஜாக்களும் மெம்பர்களாய்ப்போயிருக்கின்றனர். இந்தியாவிலிருந்து போயிருக்கும் ஸ்தானபதிகளுக்கு ஆகாக்கான் மகாராஜாவும், மொத்த மகா நாட்டுக்கு பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகிய சங்கைராம்சேமக்டனால்ட் துரையும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மகா நாடு ஜேம்ஸ் அரசர் அரண்மனை என்ற ஒரு பெரிய மாளிகையில் கூடி வருகிறது.

முதல் நாள் கூட்டத்தில் நவம்பர்மீ 12ம்வ மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தி சமுகமாயிருந்து அருமையான பிரசங்கம் செய்தார். அந்தப் பிரசங்கம் 8 நிமிஷம் மாத்திரம் நீடித்ததாம். அங்கத்தினர் பெரிய மேசையைச் சுற்றி அமர்ந்திருந்தனர். தங்கச் சிம்மாசனம் அங்கத்தினர் மத்தியில் போடப்பட்டிருந்ததால் பிரதமமந்திரி அரச பெருமானின் வலது பக்கத்திலும் மற்ற மந்திரிமார் இடது பக்கத்திலும் உட்கார்ந்திருந்தனர். இந்திய பிரதிநிதிகள் அரசபெருமான் முன்னிலையில் அமரப்பெற்றனர். சக்கரவர்த்தியவர்களின் பிரசங்கம் தங்கம் வெள்ளியினால் செய்யப்பட்ட ரேடியோ என்ற கருவியின் மூலமாய் உலகமெங்குமுள்ள ஜனங்கள் கேட்டு ஆனந்தமடைந்தார்கள். உலகசரித்திரத்தில் இந்தியரும், வெள்ளைக்காரரும் ஒரே சமமாக உட்கார்ந்து ராஜாங்க விஷயங்களைப் பற்றிப் பேசப்போயிருப்பது ஒரு நூதன காரியம்தான். இதுவரை பேசப்பட்ட காரியங்களைப் பார்க்கும்போது காரியங்கள் எல்லாருக்கும் திருப்தியான விதமாக முடிவடையுமென்று நிபுணர்கள் ராஜ தந்திரிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இக்காலங்களில் சகலமும் சமாதானமும் ஐக்கியத்திற்கேற்ற விதமான ஒழுங்குக்குவரும்படி கடவுள் அம்மாநாட்டிலுள்ளவர்களுக்குப் போதிய ஞானம் தரும்படி பிரார்த்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

### மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வர தேவஸ்தானம். டிரஸ்டி.

நமது நாட்டில் சப்மேஜிஸ்டிரேட்டாகவும் தாசில்தாராகவுமிருந்த மகா-ள-ள-ஸ்ரீ R. துரைசாமி நாயுடு காரவர்கள் மேற்படி தேவஸ்தானத்து டிரஸ்டியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரை வாழ்த்துகிறோம்.

### பெரும் வெள்ளங்கள்.

அநேக வருஷங்களாக இல்லை காட்டாமலிருந்த பயங்கர வெள்ளங்கள் கடந்த மாதத்தில் பல இடங்களில் பயங்கரமான நாசம் உண்டாக்கிவிட்டது. திருச்சிறாப்பள்ளி, தஞ்சாவூர் பாகங்களில் பல தூரத்திற்கு ரயில் பாதைகளைச் சேதப்படுத்தி இன்னும் திட்டவட்டமான போக்கு வரத்துக் கிடையாது. வண்டிப்பாதைகளும், குளங்களும், ஏரிகளும், கால்வாய்களும் அநேக லட்ச ரூபாய்க்கு நஷ்டப்படுத்தி விடப்பட்டன. இப்படி வெள்ளத்தால் நாசமடைந்த பாகங்களை நேரில் பார்வையிடும்படி நமது சென்னை கவர்னர் ஸர் பிரெடரிக் ஸ்டான்லி ஜாக்சன் திருச்சி, தஞ்சாவூர் பாகங்களைப் பார்வையிட்டு அநேகரைக் கண்டுபேசிப் போனார்.

நமது ரயில் பாதையும், வண்டி ரோடும் பாடிசன் புரத்திற்கு மேற்கேயும், கோவிலாங்குளத்திற்குச் சமீபத்திலும் பலமாக உடைந்து போக்கு வரவு அதிகக் கஷ்டமாகி இப்போது சீர்ப்படுத்தப்பட்டு நடந்துவருகிறது. மழையினால் உடைந்த கண்மாய்களும் நாசமான வயல்களும், காடுகளும் இடிந்து விழுந்த வீடுகளும் கணக்கிலடங்காது.

## யார் புதிய வைசிராய்.

லார்டு இர்வின் பிரபு தமது 5 வருஷகாலம் முடிவாகிறபடியால் புதிதாக யார் நியமிக்கப்படுவாரோ என்று பலமாக யோசிக்கப்படுகிறது. பலருடைய பேர்கள் சொல்லப்படுகிறது. திட்டமான பேச்சு இன்னும் வெளிப்படவில்லை.

---

## பைசைக்கில் பிரயாணம்.

கால் மிதி சைக்கிலில் நான்கு இந்திய வாலிபர்கள் இந்தியாவைச் சுற்றி வருகிறார்களாம். 17 நாளில் 1,300 மைல் தூரம் பிரயாணம் செய்தார்களாம்.

---

## ஜப்பானில் பூகம்பம்.

நவம்பர்மீ 26-ம்வ பெரிய பூகம்பம் உண்டாகி பெருஞ்சேதம் உண்டாக்கிவிட்டதாம். 15 பேர் மாண்டார்களாம். பூகம்பத்திற்குப் பின் நெருப்பும் பிடித்ததாம்.

---

## மங்கையர் சமர்த்து.

ஜெர்மானிய தேசத்தில் 21 வயதுள்ள பெண்ணொருத்தியிருக்கிறாள். இவள் ஒரே சமயத்தில் ஜெர்மன் பாட்டுப்பாடிக்கொண்டு, வலது கையால் ஆங்கிலத்திலும், இடது கையால் பிராஞ்சு மொழியிலும் எழுதுகிறாள். இதுவோடல்லாது ஓரே சமயத்தில் ஒரு மொழியில் ஒரு வாக்கியத்தை இறுதியிலிருந்து ஆரம்பத்திற்கும், மற்றோர் மொழியில் ஆரம்பத்திலிருந்து முடிவுக்கும் வாக்கியம் எழுதுகிறாள். ஒருகையால் கணக்குச்செய்துகொண்டு மற்றொரு கையால் பிறர் சொல்லுவதைப் பின்னுக்கிருந்து எழுதுகிறாள். வாக்கியத்தின் இருகோடியையும் இருகையால் துவக்கி மத்தியில் கொண்டுவந்து முடிக்கிறாள். இம்மட்டோடில்லாது இன்னும் பலவித அற்புதச்செயல்கள் செய்கின்றனளாம்.

## இலையா, காயா?

மரங்களிலும், செடிகளிலும் தோன்றுகிற அரும்புகள் இலையரும்புகளா காயரும்புகளா என்று திட்டமாய்க்கண்டறிய பிரிஸ்டல் யூனிவெர்ஸிட்டியில் அதிக ஆச்சரியகரமான பரீக்ஷைகள் செய்துபார்த்தார்கள். அரும்புகள் முதலிலே ஒரே மாதிரியாயிருந்து பின்பு மரத்தின் இஷ்டப்படி இலையாகவாவது காயாகவாவது மாறலாம். தோட்டக்காரர்கள் மரத்துக்கு வேண்டிய உதவிகளைச்செய்து பழங்களைத்தங்களுக்கு வேண்டியபடி ஏராளமாகவாவது சொற்பமாகவாவது செய்துகொள்ளலாம். ஆனால் இவர்கள் ஒரு வருஷம் முன்னதாகவே தீர்மானஞ்செய்துகொள்ளவேண்டும். சென்ற ஜூன் மாதத்து அரும்புகளிலிருந்து இந்த வருஷத்துப்பழம் உண்டாகிறது. ஜூன், ஆகஸ்டு மாதங்களுக்குள்ளே அரும்புகளை இன்ன அரும்புகளாக ஆக்கவேண்டுமென்று மரம் தீர்மானிக்கிறது. இந்தச்சமயத்தில் மரத்துக்கு நல்ல எருப்போட்டு போஷிப்பு கொடுத்தால், அரும்புகளெல்லாம் காயாகும். மரத்தை ஒட்டறுக்கத் தோட்டக்காரனுக்கு இஷ்டமில்லாவிட்டால் மரத்துக்கு இடுகிற உரத்தைக் குறைக்கலாம். இதனால் மரத்தின் பலன் சிறுத்துப்போம்.

---

## முகரக்கூடிய படங்கள்.

பேசுகிற படங்களோடு நின்றுவிடாமல் ஸினிமாக்காரர்கள் இன்னும் முன்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். சாஸ்திரவறிஞர்கள் வாசனை வீசும் ஒரு யந்திரத்தை ஸினிமாவுக்கென்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். விருந்து நடக்கிறவிடமென்று வைத்துக்கொள்வோம். இதில் ஜனங்கள் சாப்பிடுவதையும் நாம் கண்டு கேட்டு மகிழ்வதோடு, வாசனையையும் நாக்கில் தண்ணீரை ஊறச்செய்கிற மணத்தையும் நாம் முகர்ந்தறியலாம். இந்த மணம் நாடகசாலையிலுள்ள பிற மணங்களையெல்லாம் அமுக்கச்செய்துவிட்டுத் தான் ஓங்கி வீசும். இனிமேல் வாசனைச்சரக்கு செய்கிறவர்கள் பிரசுரிக்கிற அருமையான பிரசுரங்களை நாம் பத்திரிகையில் பார்க்கலாம்.

---

அமெரிக்கன் மிஷன் லினெக்ஸ் பிரஸ், பசுமலை,—1930.